			தகவல் தொழில்நுட்ப அக கட்டமைப்பினை பேணல்	கேட்போர்கூடத்தில் பல்ஊடக வசதிகளினை மேம்படுத்தல்	2.500	2.5				கூட்டங்கள் மற்றும் வெபினார்கள் நடத்துவதற்காக கேட்போர் கூடத்தில் பல்லூடக வசதிகளை மேம்படுத்துதல்.	–	–	–	2022 உடன் ஒப்பிடும்போது குறைவான சிக்கல்கள்	கேடபோர் கூடத்தில் உயர் தரமாக நிறுவப்பட்ட பல் ஊடக வசதி	உயர் தரத்தில் நிகழ்வுகளை நடத்துவதற்கான மேம்படுத்தப்பட்ட வசதிகள்
			மொத்தம்		**70.00**	**11.549**	**28.174**	**21.624**	**8.653**							

செயல்திறன் சிறப்பம்சங்கள்

பௌதீக ரீதியிலான செயல்திறன் சிறப்பம்சங்கள் - 2023

• 2023 ஆம் ஆண்டுக்கான சிறந்த வருடாந்திர அறிக்கைகள் மற்றும் கணக்குகளுக்கான விருது வழங்கும் விழாவில் தேசிய விஞ்ஞான மன்றம் தங்க விருதை வென்றது.

இலங்கையின் பொதுத்துறை பட்டயக் கணக்காளர்களின் பிரிவான இலங்கை பொது நிதிக் கணக்காளர்கள் சங்கம் (APFASL) 2023 ஆம் ஆண்டில் ஏற்பாடு செய்த ஏழாவது சிறந்த வருடாந்திர அறிக்கைகள் விருது வழங்கும் விழாவில், "ஆராய்ச்சி நிறுவனங்கள்" என்ற பிரிவின் கீழ் தேசிய விஞ்ஞான மன்றமானது அதன் 2022 ஆம் ஆண்டு ஆண்டு அறிக்கைக்காக தங்க விருதை வென்றது.இந்தப் போட்டியில் தொடர்ந்து 5 வது ஆண்டாக தேசிய விஞ்ஞான மன்றம் விருதினை வென்று கௌரவிக்கப்படுகிறது. 2022 ஆம் ஆண்டுக்கான தேசிய விஞ்ஞான மன்றத்தின் ஆண்டறிக்கையானது, மன்றம் தொடர்பிலான விபரங்களினை அதன் நிதி மற்றும் பௌதீகவியல் ரீதியிலான செயலாற்றுகைகளின் மூலம் விரிவாகவும் அத்துடன் சுருக்க வடிவத்திலும் பிரதிபலிக்கும்இ அதே நேரத்தில் படங்கள் மற்றும் வரைகலை வடிவங்கள் உள்ளடக்கப்பட்டு சுருக்க வடிவத்தில், சிறப்பான முறையில் தரப்பட்டுள்ளது. அர்ப்பணிப்பு மிகு தேசிய விஞ்ஞான மன்ற ஊழியர்களின் கடின உழைப்பு, அனைத்து பங்குதாரர்களின் ஆதரவு மற்றும் துல்லியமான இறுதி கணக்குகள் ஆகியவை உயர் விருதை வெல்வதற்கு ஏதுவாக இருந்தன. கடுமையான பொருளாதாரம் மற்றும் பிற சவால்களைக் கருத்தில் கொண்டு நோக்குகையில் இந்த சாதனை இன்னும் சிறப்பு மிக்கதாகும்.

• தேசிய விஞ்ஞான மன்றமானது "சிறந்த செயல்திறன் விருதை" வென்றது.

இலங்கையில் உள்ள விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களுக்குள் "சிறந்த செயல்திறன் விருதை" தேசிய விஞ்ஞான மன்றம் பெற்றுகொண்டதன் மூலம் மன்றமானது அங்கீகரிக்கப்பட்டது. தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக் குழுவினால் (NASTEC) மதிப்பீடு செய்யப்பட்ட இந்த அங்கீகாரமானது, இலங்கையில் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பத் துறைகளை வலுப்படுத்துவதில் தேசிய விஞ்ஞான மன்றத்தின் அர்ப்பணிப்புக்கு ஒரு சான்றாகும். 2023 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 23-24 வரை நடைபெற்ற 9 வது ஈராண்டுக்கொருமுறையான விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப மாநாட்டில் (BICOST-IX) கௌரவ கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த அவர்கள் இந்த விருதை வழங்கினார். பாராட்டு விழாவின் போது, தேசிய விஞ்ஞான மன்றத்தின் தலைவர் பேராசிரியர் ரஞ்சித் சேனாரத்ன மற்றும் பணிப்பாளர் நாயகம் கலாநிதி சேபாலிகா சுதசிங்க ஆகியோர் இந்த விருதைப் பெற்றனர்.

• இரண்டு மானியங்கள் வணிகமயமாக்கல் நிலையை அடைந்துள்ளன -

- RG/GAPF/2021/EB/02 - ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் பத்மலால் மானகே, ஆராய்ச்சி திட்டத்தின் முதன்மை ஆய்வாளர் என்ற ரீதியில் குடிநீரில் உள்ள ஜியோஸ்மின், 2-MIB , சயனோடாக்சின்கள் மற்றும் நுண்ணுயிர் எதிரிகளை அகற்றுவதற்காக வீட்டில் பாவிக்கக்கூடிய ஒரு நீர் வடிகட்டியை உருவாக்கி, குடியிருப்பு நீர் வடிகட்டிகளின் விஸ்தரிப்பு மற்றும் வணிகமயமாக்கல் செயற்பாடுகளினை அவர் முன்னெடுத்தார். இது நீரில் இருக்கக்கூடிய ஒருவித வாசனை மற்றும் சுவை கலவைகள், சயனோடாக்சின்கள், பூச்சிக்கொல்லிகள், கன உலோகங்கள் மற்றும் நுண்ணுயிர் எதிரிகளை அகற்ற ஒளிவேதிச் சிதைவு மற்றும் பரப்புக்கவர்ச்சி தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துகிறது. ஆராய்ச்சி குழு தொழில்துறை வடிவமைப்புடன் நீர் வடிகட்டியை வெற்றிகரமாக உருவாக்கியது.
- "இலங்கையின் கிராபைட்டை அதிக மதிப்பு கூடும் வகையில் சுத்திகரித்தல்" என்ற தலைப்பில் நடைபெற்று வரும் மானியம் RG/GAPF/2021/EB/01 ஆகும். இது மூன்று சுத்திகரிப்பு முறைகளை பெறுபேறாக தந்துள்ளது. அவை இயற்பியல் முறை, அமில முறை மற்றும் கார-அமில முறை. என்பனவாகும். குறைந்த தரத்திலான கிராபைட்டை அதாவது 40% இலிருந்து பெரிய அளவில் 98-99% கார்பனாக மாற்றுவதற்கான ஒரு கருவி இந்த திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டுள்ளது.

• இந்த ஆண்டில் மொத்தம் நாற்பத்தொன்பது (49) ஆராய்ச்சித் திட்டங்கள் கண்காணிக்கப்பட்டன, மேலும் 2023 ஆம் ஆண்டில் தேசிய விஞ்ஞான மன்றத்தின் பல திட்டங்களின் கீழ் ஆண்டு இறுதிக்குள் எட்டு (08) புதிய மானியங்கள் வழங்கப்பட்டன. இந்த அனைத்து ஆராய்ச்சி மானியங்களிலிருந்தும் முப்பத்தொரு (31) நிறுவனங்களில் நூற்று தொண்ணூற்றொன்பது (199) ஆராய்ச்சியாளர்கள் (PIs மற்றும் Co-Is) பயனடைந்தனர்.

• NSF-NSFC (தேசிய விஞ்ஞான மன்றம - சீனாவின் இயற்கை விஞ்ஞான மன்றம்) 1 வது கூட்டு ஆராய்ச்சி திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சியின் கண்டுபிடிப்புகளைப் பரப்புவதற்காக ஒரு சிறப்பு நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

• சர்வதேச கூட்டு ஆராய்ச்சியை ஊக்குவிக்கும் நோக்கில், இத்தாலியின் ட்ரைஸ்டேவில் உள்ள சர்வதேச மரபணு பொறியியல் மற்றும் உயிர் தொழில்நுட்ப மையம் (ICGEB) மற்றும் சீனாவின் இயற்கை விஞ்ஞான மன்றம் (NSFC) ஆகியவற்றுடன் தொடர்புகள் வலுப்படுத்தப்பட்டன.

• சிறந்த உற்பத்தி செயல்முறையை மேம்படுத்துதல், பட்டிக் பொருட்களின் தரத்தை நிலைநிறுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் போன்ற செயற்பாடுகளின ஊடாக இலங்கை பட்டிக் துறையின் தரத்தை மேம்படுத்தி அதன் மூலம் தேசிய பொருளாதாரத்திற்கு பங்களிக்கும் நோக்குடன் தேசிய வடிவமைப்பு மையம் (NDC) இலங்கை தரநிலை நிறுவனம் (SLSI) மற்றும் தேசிய கைவினை மன்றம் (NCC) ஆகியவற்றுடன் இணைந்து ஒரு நல்ல உற்பத்தி நடைமுறைகள் (GMP) வழிகாட்டுதலை உருவாக்குவதற்கு NSF ஆதரவளித்தது.

• நாட்டின் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத் துறையில் முதன்மையான மைய நிறுவனமாக விளங்கும் தேசிய விஞ்ஞான மன்றமானது, தேசிய கருவி தரவுத்தளத்தை உருவாக்கியுள்ளது - இது, நிறுவனங்களில் இருந்து கிடைக்கப்பெறகூடியதாகவிருக்கும் அதிநவீன கருவிகளின் டிஜிட்டல் தரவுத்தளமாகும். அதிநவீன கருவிகளின் இந்த தளத்தின் மூலம் உயர்நிலை உபகரணங்களின் சீரான செயற்பாடு உறுதி செய்யப்படும் என்பதுடன் இது, நுண்ணிய,சிறிய மற்றும் இடைநிலை வியாபார முயற்சிகள் உட்பட கல்வி, ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனங்கள் மற்றும் தொழில்துறைக்கு, குறிப்பாக தேவையான ஆய்வக வசதிகள் மற்றும் தொழில்நுட்ப திறன்கள் இல்லாதவர்களுக்கு, பயனர் நட்பு, செலவு குறைந்த, பகுப்பாய்வு மற்றும் சோதனை சேவை மற்றும் ஆராய்ச்சி ஆதரவை வழங்கும். ஆண்டின் இறுதியில், 61 பல்கலைக்கழகங்கள்/ நிறுவனங்கள் மற்றும் 397 பயனர்கள் பதிவு செய்துள்ளனர், 253 தயாரிப்பு வகைகள், 487 ஆய்வகங்கள் மற்றும் கருவிகள் குறித்த 1120 பதிவுகள் உள்ளிடப்பட்டுள்ளன.

• விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்தின் அனைத்துப் பிரிவுகளிலும் ஆராய்ச்சிகளினை மேற்கொண்டு முதுகலைப் பட்டங்களை அடையும் மாணவர்களை மேற்பார்வையிடுவதில் ஈடுபட்டுள்ள விஞ்ஞானிகள்/ பொறியாளர்களை ஊக்குவித்தல், ஆதரித்தல் மற்றும் அங்கீகரிப்பதை நோக்கமாகக் கொண்டு ஆராய்ச்சி பட்டங்களின் மேற்பார்வைக்கான தேசிய விஞ்ஞான மன்றத்தின் ஆதரவுத் திட்டம் (SUSRED) உள்ளது. இந்த ஆண்டு 93 ஆராய்ச்சியாளர்களைக் கொண்ட 42 மேற்பார்வைக் குழுக்கள் (வரைபடம் 22) விருதுகளினை பெறுவதற்கான தகுதியினை பெற்றன.

• 2023 ஆம் ஆண்டு தேசிய புத்தாக்குனர் தின கொண்டாட்டத்தில், தேசிய விஞ்ஞான மன்றத்தின் நிதியுதவியுடன் 40% க்கும் குறைவான அளவிலான கிராபைட்டை பெரிய அளவில் அதாவது 98-99% கார்பனாக மாற்றும் கருவி மற்றும் அதற்கான செய்முறை அதாவது "இலங்கையின் கிராபைட்டை அதிக மதிப்பு ஏற்படும் வகையில் சுத்திகரித்தல" என்ற திட்டமானது DASIS விருதைப் பெற்றது. இது இயற்கை வளங்களுக்கு மதிப்பு கூட்டுவதில் ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லாகும்.

• "சான்றுகள் அடிப்படையிலான முடிவெடுக்கும் திட்டம்: நடைமுறையில் ஆராய்ச்சி" என்ற முன்முயற்சியின் கீழ், டெங்கு ஆராய்ச்சியை மையமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சியின் கண்டுபிடிப்புகளாவன சுகாதார அமைச்சின் தொடர்புடைய அதிகாரிகளுக்கு கையளிக்கப்பட்டன. இந்தக் கூட்டத்தில் தேசிய விஞ்ஞான மன்றத்தின் "ஆய்வகத்திலிருந்து சந்தைக்கு" எனும் மாதிரி அறிமுகப்படுத்தப்பட்டது.

• தேசிய விஞ்ஞான மன்றமானது, கல்வி அமைச்சகத்துடன் இணைந்து, இந்திய-இலங்கை கூட்டு ஆராய்ச்சி திட்டம் குறித்த இரண்டாவது கருத்தரங்கை ஜனவரி 20, 2023 அன்று இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் (SLIDA) சங்கதானி மண்டபத்தில் ஏற்பாடு செய்தது.

• SCIE-யில் பட்டியலிடப்பட்ட இலங்கையின் ஒரே சஞ்சிகையான இலங்கை தேசிய விஞ்ஞான மன்ற இதழானது (JNSF) அதன் 51வது தொகுதியை மார்ச், ஜூன், செப்டம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் நான்கு இதழ்களாக 54 கட்டுரைகளுடன் (52 ஆராய்ச்சி கட்டுரைகள், 01 மதிப்பாய்வு கட்டுரை மற்றும் 01 ஆராய்ச்சி தொடர்புகள்) வெளியிட்டது.

• நிகழ்நிலை அடிப்படையிலான இலங்கையின் இதழ்களின் தளமானது (SLJOL) மார்ச் 2023 இல் தொடங்கப்பட்டது, இது ஒரு குறிப்பிடத்தக்க சாதனை என்பதுடன் இலங்கையில் விஞ்ஞான சமூகத்திற்கு செய்யப்பட்ட ஒரு குறிப்பிடத்தக்க பங்களிப்பாகும், இங்கு 131 ஆய்விதழ்களில் இருந்து 20,000 க்கும் மேற்பட்ட ஆராய்ச்சி கட்டுரைகளுக்கு திறந்த அணுகல் வழங்கப்படுகிறது, இது ஆராய்ச்சிக்கான உலகளாவிய தெரிவுநிலையை மேம்படுத்துகிறது.

• 2020 ஆம் நிதியாண்டில் நடத்தப்பட்ட தேசிய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி ஆய்வின் கணக்கெடுப்பின் அடிப்படையில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி புள்ளிவிவர கையேடு வெளியிடப்பட்டது. உயர்கல்வித் துறை, அரசு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தத் துறை, வணிக நிறுவனத் துறை மற்றும் தனியார் இலாப நோக்கற்ற துறை ஆகிய நான்கு துறைகள் தொடர்பிலும் நாட்டில் முன்னெடுக்கப்பட்ட ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகளினை இந்த புள்ளிவிவர கையேடு பிரதிபலிக்கின்றது

• விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப முகாமைத்துவ தகவல் அமைப்பு (STMIS) என்பது 2004 முதல் தேசிய விஞ்ஞான மன்றத்தினால் உருவாக்கப்பட்டு பராமரிக்கப்படும் ஒரு கணினிமயமாக்கப்பட்ட தகவல் அமைப்பாகும். 2023 ஆம் ஆண்டின் இறுதியில், விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப முகாமைத்துவ தகவல் அமைப்பின் தரவுத்தளத்தில் 7300 பதிவுதாரர்கள் பதிவு செய்யப்பட்டனர், அவர்களில் 163 பேர் அந்த ஆண்டில் புதிதாக பதிவு செய்யப்பட்டவர்கள் ஆவர்.

• தேசிய விஞ்ஞான மன்றத்தினது உலகளாவிய டிஜிட்டல் தளமானது வெளிநாட்டில் வதியும் 90 புலம் பெயர்ந்த இலங்கையர் பதிவுகளுடன் புதிதாக விரிவுபடுத்தப்பட்டது மற்றும் நாட்டின் எல்லையை தாண்டிய ஆராய்ச்சி ஒத்துழைப்பு மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்புக்கான ஒன்பது கூட்டாண்மைகள் நிறுவப்பட்டன.

• நான்காவது தொழில்துறை புரட்சியின் (4IR) பின்னணியில் தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சி (TVET) துறையை வலுப்படுத்த, தேசிய விஞ்ஞான மன்றமானது (NSF), தேசிய பயிலுனர் மற்றும் கைத் பயிற்சி அதிகாரசபையுடன் (NAITA) இணைந்து ஒரு கூட்டாண்மையை ஏற்படுத்தியுள்ளது. இந்த ஒத்துழைப்பு, தரவு விஞ்ஞானம் போன்ற வளர்ந்து வரும் துறைகளில் குறிப்பாக கவனம் செலுத்தி, தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சியின் செயல்திறனை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.இதன் மூலம் டிஜிட்டல் சந்தையில் தொழில் வாய்ப்புக்களுக்கும் பாதை திறக்கப்படுகிறது. அதன்படி தரவு விஞ்ஞானத்தில் தேசிய டிப்ளமா பாடநெறிக்கான விரிவான பாடதிட்டமானதுஇ கோரிக்கைக்கு அமைவுற உருவாக்கப்பட்டு தேசிய பயிலுனர் மற்றும் கைத் பயிற்சி அதிகாரசபைக்கு (NAITA) சமர்பிக்கப்பட்டது.

• UNIVOTEC இன் தகவல், தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்ப விரிவுரையாளர்களை இலக்காகக் கொண்டு இணையத்தின் பொருட்கள் பற்றிய செயற்றின் நிர்மாண நிகழ்ச்சித்திட்டம் நடைபெற்றமை.

• தேசிய விஞ்ஞான மன்றமானது,ஆராய்ச்சியாளர்களின் நலனுக்காக, அதன் "Meeting and Courses programme and Arturo Falaschi Fellowship" திட்டத்தின் கீழ் சர்வதேச மரபணு பொறியியல் மற்றும் உயிரி தொழில்நுட்ப மையத்திலிருந்து (ICGEB) பத்து மில்லியன் ரூபாய்களைப் பயன்படுத்த வசதி செய்து கொடுத்தது.

• ஆராய்ச்சி சமூகத்தின் நலனுக்காக ஒரு மூலோபாய ரீதியிலான நன்மையைக் கொண்ட அதிநவீனஇ நாட்டின் எல்லையினை தாண்டிய அறிவின் பரிமாற்றத்தை எளிதாக்க ஐந்து திட்டங்கள் நடத்தப்பட்டமை.

• இறப்பர் செடிகளின் பொருளாதார அடிப்படையிலான முழு ஆயுட்காலமும் பயன்படுத்தப்படுவதை உறுதி செய்வதற்காக நிலையான முறையில் இறப்பர் பட்டை முகாமைத்துவம் குறித்த புதிய அறிவானது இறப்பர் தோட்டத் துறைக்கு மாற்றப்பட்டது, இதன் மூலம் உற்பத்தித்திறன் மேம்படுத்தப்படல்.

• இறக்குமதி செய்யப்பட்ட டிரிபிள் சூப்பர் பொஸ்பேட்டுக்கு (TSP) பதிலாக காய்கறி பயிர் உற்பத்தித்திறனை மேம்படுத்த பூஞ்சை பாக்டீரியா உயிரி மென்சவ்வு நடவடிக்கை மூலம் எப்பாவாலா பாறை பொஸ்பேட்டினை கலந்து (ERP) ஒரு பயனுள்ள உர கலவையை உருவாக்குவதற்கு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்கான வசதி செய்யப்பட்டது.

• இலங்கையின் கரும்பு மற்றும் பால் துறைகளை மேம்படுத்த பிரேசிலிய ஒத்துழைப்பு நிறுவனத்திலிருந்து (ABC நிறுவனம்) தொழில்நுட்ப ஒத்துழைப்பை வழங்கப்பட்டது.

• சீன விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப சங்கம் (CAST) மற்றும் சீன விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சு ஆகியவை உலக விஞ்ஞான எழுத்தறிவு அமைப்புடன் (WOSL) இணைந்து ஏற்பாடு செய்த Belt and Road Teenager Maker முகாம் மற்றும் ஆசிரியர் பட்டறையில் மாணவர்கள் (10) மற்றும் ஆசிரியர்கள் (03) குழுவொன்று பங்கேற்றது. அதில் அவர்கள் மேற்கொண்ட செயல்பாடுகளுக்காக "சிறந்த குழு", "சிறந்த விளக்கக்காட்சி" மற்றும் "சிறந்த உருவாக்குனர்" ஆகிய பிரிவுகளில் தமக்கான இடங்களை வென்றுள்ளனர்.

• 2023 ஆம் ஆண்டின் இறுதியில், தேசிய விஞ்ஞான மன்றமானது 1,163 பாடசாலை மட்ட விஞ்ஞான சங்கங்கள் (SSS) மற்றும் 55 பல்கலைக்கழக மட்ட விஞ்ஞான சங்கங்களை (USS) பதிவு செய்துள்ளது. கிராம மட்டத்தில் விஞ்ஞான சங்கங்களை நிறுவவும் இந்த முயற்சி எடுக்கப்பட்டுள்ளது.

• தேர்ந்தெடுக்கப்பட்ட 50 பாடசாலைகளில் STEAM அணுகுமுறை மூலம் விஞ்ஞான கல்வியை மேம்படுத்துவதற்கான ஒரு திட்டத்தை தேசிய விஞ்ஞான மன்றம் தொடங்கியுள்ளது. இந்த திட்டம் கல்வி அமைச்சின் (MoE) விஞ்ஞான கிளை மற்றும் இலங்கை கொமர்சியல் வங்கியின் கூட்டுறவு சமூக பொறுப்பு அறக்கட்டளையுடன் இணைந்து செயல்படுத்தப்பட்டுள்ளது.

• இலங்கையின் கல்வி முறைக்கு STEAM கல்வியை அறிமுகப்படுத்தும் தேசிய நிகழ்ச்சி மார்ச் 31 ஆம் தேதி கொழும்பு 07 இல் உள்ள ரோயல் கல்லூரியின் "நவரங்கஹாலா" மண்டபத்தில் நடைபெற்றது, இது கல்வி அமைச்சு (MoE) மற்றும் தேசிய கல்வி நிறுவனம் (NIE) ஆகியவற்றினால் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டது.

• விஞ்ஞான கண்டுபிடிப்புகள்/புத்தாக்கம்/அல்லது வேறு எந்த விஞ்ஞான வளர்ச்சியுடனும் தொடர்புடைய துல்லியமான உண்மைகள் மற்றும் உண்மையான தகவல்களைப் பரப்புவதற்காக, பொதுமக்களுக்கு சிறப்பு கவனம் செலுத்தி, புறநிலை அறிவியல் அறிக்கையிடல் குறித்த ஒரு நிகழ்ச்சி தொடங்கப்பட்டது

• இலங்கையில் Covid-19 ஐ எதிர்த்துப் போராடுவதற்கும் அதன் விளைவுகளைத் தணிப்பதற்கும், தேசிய முன்னுரிமைகளின்படி, தேசிய விஞ்ஞான மன்றமானது "Covid-19 மானியங்கள்" எனும் தலைப்பின் கீழ் போட்டி அடிப்படையில் ஒரு சிறப்பு மானியத் திட்டத்தைத் தொடங்கியது. எட்டு (08) மானியங்களில் ஏழு (07) மானியங்கள் 2023 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டன.

• தொழில்நுட்ப விருத்தி மற்றும் புத்தாக்க பிரிவால் வழங்கப்பட்ட மூன்று (03) மானியங்கள் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டன, அதே நேரத்தில் ஒரு மானியம் அதன் தயாரிப்புகளை தேசிய அளவில் வணிகமயமாக்கியது.

தேசிய விஞ்ஞான மன்றத்தின் ஒட்டுமொத்த செயல்திறன்

2023 ஆம் ஆண்டில், நிறுவனத்தின் செயல்திறனை மதிப்பிடுவதற்காக தேசிய விஞ்ஞான மன்றமானது ஒரு செயல்திறன் Dashboard (முக்கிய தகவல்களை தெளிவான மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் காண்பிக்கும் ஒரு காட்சி கருவி) இனை அறிமுகப்படுத்தியது. செயல்திறன் Dashboard என்பது நிறுவனங்கள் தங்கள் இலக்குகளை நோக்கிச் செல்ல உதவும் ஒரு சக்திவாய்ந்த கருவியாகும். முக்கிய செயல்திறன் குறிகாட்டிகளை (KPIs) அமைப்பதன் மூலமும், அனைத்து ஊழியர்களும் நிர்வாகிகளும் ஒரே இலக்கினை நோக்கி பணியாற்றுவதனை உறுதி செய்வதன் மூலமும், முன்னேற்றத்தை திறம்பட கண்காணிக்கும் திறனை வழங்குவதன் மூலமும் நிறுவனத்தின் செயல்திறன் திறம்பட மதிப்பிடப்படுகின்றது. 2023 நவம்பர் 31 நிலவரப்படி நிர்ணயிக்கப்பட்ட முக்கிய செயல்திறன் குறிகாட்டிகளுக்கு எதிராக தேசிய விஞ்ஞான மன்றத்தின் செயல்திறனானது பின்வருமாறு சித்தரிக்கப்படுகிறது.

பிரிவின் அடிப்படையில் செயல்திறன்

பிரிவு	பௌதீகவியல் முன்னேற்றம்	
ஆராய்ச்சிப்பிரிவு	85.61%	
தொழில்நுட்பவியல் அபிவிருத்தி மற்றும் புத்தாக்க பிரிவு	77.78%	
சர்வதேச விவகாரங்கள் பிரிவு	100%	
விஞ்ஞான தொடர்பாடல் மற்றும் எல்லைக்கடந்த பிரிவு	100%	
விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப கொள்கை ஆராய்ச்சி பிரிவு	71.86%	
இதழ்கள் பிரசுரிப்பு பிரிவு	76.11%	
தேசிய விஞ்ஞான நூலக மற்றும் வள நிலையம	100%	
நிர்வாக பிரிவு	80%	
ஊடக மற்றும் நிகழ்வு முகாமைத்துவ பிரிவு	95.69%	

	அதீத சிறப்பு நிலை (90%)
	மிக மிக நன்று (75% - 89%)
	மிக நன்று (60% - 74%)
	நன்று (50% - 59%)
	திருப்திகரமானது (40% - 49%)
	திருந்த இடமுண்டு (கீழ 39%)

ஒட்டுமொத்த நிறுவன செயல்திறன்: 90%

செயல் திட்டம் 2023 - முக்கிய செயல்திறன் குறிகாட்டிகள் (KPIகள்)

1. இலங்கையின் ஆராய்ச்சித் தளம் வலுப்படுத்தப்பட்ட அளவு (வழங்கப்பட்ட மானியங்கள், பயனடைந்த நிறுவனங்கள், பயனடைந்த விஞ்ஞானிகள், பெற்றுக்கொள்ளப்பட்ட எம்/பில்/பிஎச்டி, அங்கீகரிக்கப்பட்ட விஞ்ஞானிகள் என்ற அடிப்படையில்).
2. புதிய அறிவு உருவாக்கம் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியின் அளவு (இதழ் வெளியீடு, வழங்கப்பட்ட/ சமர்ப்பிக்கப்பட்ட காப்புரிமைகள், வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்ட மானியங்கள், தொழில்நுட்ப மாற்றீடுகள் ஆகியவற்றின் அடிப்படையில்).
3. விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப தகவல் கிடைக்கக்கூடிய தன்மை மற்றும் பயன்பாட்டின் அளவு.
4. விஞ்ஞானஇ தொழில்நுட்ப மற்றும் புத்தாக்க செயல்திறனை பயன்படுத்தல் தொடர்பில் வசதி செய்து கொடுக்கப்பட்ட சர்வதேச கூட்டாண்மைகளின் அளவு (பயிற்சி பெற்ற ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி ஆளணியினர், மூன்றாம் நிலை தொழிற் கல்வி மற்றும் பயிற்சி துறை பணியாளர்கள், நாட்டின் எல்லை தாண்டிய அதிநவீன அறிவு மாற்றீடு மற்றும் சர்வதேச கூட்டு ஆராய்ச்சி ஆகியவற்றின் அடிப்படையில்).
5. கொள்கை உருவாக்கத்தை வலுப்படுத்துவதில் உருவாக்கப்பட்ட/புதுப்பிக்கப்பட்ட விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் புத்தாக்க குறிகாட்டிகளின் அளவு.
6. பாடசாலை சமூகத்திற்கு சிறப்பு கவனம் செலுத்தி STEAM கல்வி விருத்தி செய்யப்பட்ட அளவு.
7. பணியாளர் ஈடுபாட்டின் நிலையினை மேம்படுத்தல்.
8. 2022 ஆம் ஆண்டுடன் உடன் ஒப்பிடும்போது சிக்கல்களினை தீர்த்தல் தொடர்பில் தகவல் தொழில்நுட்ப உபகரணங்களின் பாவனை குறைந்துள்ளமை.

நிதியியல் செயல்திறன் சிறப்பம்சங்கள் – 2023

வரைபடம் 02, ஆனதுஇ 2023 ஆம் ஆண்டில் தேசிய விஞ்ஞான மன்றத்தின் ஆறு பணிப்பாணைகளும் அவை ஒவ்வொன்றிற்கும் செய்யப்பட்ட ஒதுக்கீடுகள் மற்றும் செலவினங்களையும் (ரூ. மில்லியன்களில்) சித்தரிக்கிறது. அதன்படி தேசிய விஞ்ஞான மன்றத்தின் பணிப்பாணை 01 அதிகபட்ச ஒதுக்கீட்டையும் செலவினத்தையும் கொண்டுள்ளது மற்றும் தேசிய விஞ்ஞான மன்றத்தின் பணிப்பாணை 03 மிகக் குறைந்த ஒதுக்கீட்டையும், பணிப்பாணை 06 மிகக் குறைந்த செலவையும் கொண்டுள்ளது.



வரைபடம் 02: 2023 ஆம் ஆண்டில் ஒவ்வொரு பணிப்பாணை பகுதிக்கும் செய்யப்பட்ட ஒதுக்கீடு மற்றும் உண்மையான செலவினம் (ரூபாய் மில்லியன்களில்)

2023 ஆம் ஆண்டில் தேசிய விஞ்ஞான மன்றமானது ரூபாய் 2,537,790.74 இனை வருமானமாக ஈட்டியுள்ளது. அவை உழைக்கப்பட்ட வழிகள் *வரைபடம் 03* இல் தரப்பட்டுள்ளன



வரைபடம் 03: 2023 ஆம் ஆண்டில் தேசிய விஞ்ஞான மன்றம் உழைத்த வருவாய்

நிலையான அபிவிருத்தி இலக்குகள் (SDGs) மற்றும் தேசிய கொள்கை சட்டகம் (NPF) ஆகியவற்றுடன் ஒத்திணங்கும் வகையில் தேசிய விஞ்ஞான மன்றத்தின் செயற்பாடுகளினை திட்டமிடல்

வரைபடம் 04 இல் காட்டப்பட்டுள்ளபடி, ஐக்கிய நாடுகளின் நிலையான அபிவிருத்தி இலக்குகள் (SDGs) மற்றும் இலங்கையின் தேசிய கொள்கை சட்டகம் ஆகியவற்றுடன் ஒத்திணங்கும் வகையில் தேசிய விஞ்ஞான மன்றத்தின் பணிப்பாணையிடப்பட்ட பகுதிகள் வரைபடமாக்கப்பட்டுள்ளன. அதன்படி, தேசிய விஞ்ஞான மன்றத்தின் அனைத்து நடவடிக்கைகளும் ஐக்கிய நாடுகளின் நிலையான அபிவிருத்தி இலக்குகள் மற்றும் தேசிய கொள்கை சட்டகம உடன் இணையாக உள்ளன.



வரைபடம் 04: தேசிய விஞ்ஞான மன்றத்தின் பணிப்பாணையானது தேசிய கொள்கை சட்டகத்துடனும் நிலைபெறுதகு அபிவிருத்தி இலக்குடனும் ஒருங்கிணைகின்றது

2023 ஆம் ஆண்டு செயல்திட்டத்திற்கு எதிரான அடைவுகள

தேசிய விஞ்ஞான மன்ற பணிப்பானை அ) ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியினை ஊக்குவித்தல்

நிகழ்ச்சித்திட்டம்: ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்ப மேம்பாட்டு திட்டங்களை செயல்படுத்துதல்

ஆராய்ச்சிப் பிரிவு (RD) பின்வரும் திட்டங்களின் கீழ் ஆராய்ச்சி மானியங்களை வழங்கி கண்காணிப்பதன் மூலம் இந்த நோக்கத்தை நிறைவேற்றியது. எவ்வாறாயினும், நாட்டின் பொருளாதார நிலைமையால் மானிய நடவடிக்கைகள் கடுமையாக பாதிக்கப்பட்டன.

- போட்டிக்கான ஆராய்ச்சி மானியத் திட்டம் (CRG)
- சர்வதேச கூட்டு ஆராய்ச்சி திட்டங்கள் (ICRP)
- இடைவெளி நிரப்பும் ஆராய்ச்சி மானியங்கள் (GapF)
- சுகாதார விஞ்ஞான ஆராய்ச்சி திட்டம் (RPHS)
- தேசிய கருப்பொருள் ஆராய்ச்சி திட்டம் (NTRP)

இந்த ஆண்டில் மொத்தமாக நாற்பத்தொன்பது (49) ஆராய்ச்சித் திட்டங்கள் கண்காணிக்கப்பட்டன மற்றும் 2023 இல் மேற்கண்ட திட்டங்களின் கீழ் எட்டு (08) புதிய மானியங்கள் ஆண்டு இறுதிக்குள் வழங்கப்பட்டன. இந்த சகல ஆராய்ச்சிகளிலிருந்தும் முப்பத்தொரு (31) நிறுவனங்களினை சார்ந்த நூற்று தொண்ணூற்று ஒன்பது (199) ஆராய்ச்சியாளர்கள் (PIs மற்றும்; Co-Is) பயனடைந்தனர். ஆராய்ச்சி மானியங்களின் பகிர்வு மற்றும் மானியங்களினை பெற்றுக் கொண்டவர்களது விபரங்கள் உரு *05* மற்றும் *06* இல் கொடுக்கப்பட்டுள்ளன.



வரைபடம் 05: 2023 ஆம் ஆண்டில் வேறுபட்ட துறைகளின் கீழ் வழங்கப்பட்ட ஆராய்ச்சி மானியங்களின் எண்ணிக்கை



வரைபடம் 06 : நிறுவனங்களுக்கிடையே மானியம் பெறுனர்களினை பகிருதல்

புதிய, நடைமுறையில் உள்ள மற்றும் நிறைவு செய்யப்பட்ட மானியங்களுக்கான ஆய்வு குழுக்களாவன பலதுறை குழுக்கள் (34 மானியங்கள்), ஒரே திணைக்களத்தினை சேர்ந்த ஆய்வாளர்கள் உள்ளடங்கிய குழு (12 மானியங்கள்) அல்லது ஒரே ஒரு ஆய்வாளர் (11 மானியங்கள் வரைபடம் 07 ஐப் பார்க்கவும்) ஆகியவற்றைக் உள்ளடக்கியதாய் இருந்தன. பெரும்பாலான மானியங்களினை பொறுத்த வரையில், ஆய்வாளர்கள்,கூட்டிணைந்து பணி புரிபவர்களுடன் இணைந்து பணியாற்றினார். 57 மானியங்களில் கூட்டு பணியாளர்கள் 74 பேர் அடங்குவர், இதில் 9 தனியார் துறையினை சார்ந்த கூட்டு பணியாளர்கள் உள்ளடங்கலாக (வரைபடம் 08 ஐப் பார்க்கவும்) 40 பேர் அக ரீதியில் பணியாற்றும் கூட்டு பணியாளர்கள். மற்றும் 34 பேர் வெளிநாடுகளினை சார்ந்த கூட்டு பணியாளர்கள் ஆவர்.



வரைபடம் 07: குழு உறுப்பினர்களின் பகிர்வு



வரைபடம் 08: கூட்டு பணியாளர்களின் பகிர்வு

ஆராய்ச்சி மானியங்களின் ஊடாக வெளி வரு விளைவுகள் எனும் போது அதற்குள் வெளியீடுகள், காப்புரிமைகள் மற்றும் முதுகலை பட்டங்கள் (வரை படம் 09) ஆகியவை அடங்கும். 2023 ஆம் ஆண்டில் அனைத்து ஆராய்ச்சி மானியங்களிலிருந்தும் மொத்தம் எழுபத்திரண்டு (72) வெளியீடுகள் கிடைத்தன, இதில் இருபத்தி ஒன்று (21) SCIE அட்டவணைப்படுத்தப்பட்ட வெளியீடுகள், ஏழு (07) நிபுணர்களால் மீள் நோக்கப்பட்ட வெளியீடுகள் மற்றும் நாற்பத்து நான்கு (44) தகவல்தொடர்புகள் ஆகியவை அடங்கும். மேலும், சுற்றுச்சூழல் மற்றும் பல்லுயிர் மற்றும் சுகாதார விஞ்ஞான துறைகளில் மூன்று (03) காப்புரிமைகள் பெறப்பட்டன. இதனை விட அடிப்படை விஞ்ஞானம், சுற்றுச்சூழல் மற்றும் பல்லுயிர் மற்றும் சுகாதார விஞ்ஞான துறைகளில் வழங்கப்பட்ட மானியங்களிலிருந்து ஐந்து (05) காப்புரிமைகள் 2023 ஆம் ஆண்டில் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்டன. வருட காலப்பகுதியில் ஐந்து (05) பி. எச். டி. பட்டங்களும் இருபது (20) எம்பில் பட்டங்களும் நிறைவு செய்யப்பட்டன.



வரைபடம் 09: ஆராய்ச்சி மானியங்களின் ஊடாக பெற்றுக்கொள்ளப்பட்ட வெளி வரு விளைவுகளின் பகிர்வு

1.1 தேசிய விஞ்ஞான மன்றத்தின் போட்டிக்குரிய ஆராய்ச்சி மானிய திட்டம்

தேசிய விஞ்ஞான மன்றத்தின் போட்டிக்குரிய ஆராய்ச்சி மானியங்கள் (CRG) திட்டமானது, இலங்கையில் உள்ள விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களில் உள்ள நிதி, பௌதீக மற்றும் மனிதவள வளங்களை விஞ்ஞான ஆராய்ச்சிக்காகக் பகிர்ந்து வழங்குவதற்கு உதவி வழங்குகிறது. இது விஞ்ஞானிகளின் சுயாதீனமான, தனிப்பட்ட மற்றும் அறிவுசார் திறன்களைப் பயன்படுத்திக் கொள்ள உதவுவதுடன், நாட்டின் சமூக-பொருளாதார வளர்ச்சியை நோக்கமாகக் கொண்ட உயர்தர ஆராய்ச்சியை மேற்கொள்ள அவர்களை ஊக்குவிக்கிறது. சமூக விஞ்ஞானம் உட்பட விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்தின் அனைத்துத் துறைகளிலும் போட்டிக்கான ஆராய்ச்சி மானியங்கள் வழங்கப்படுகின்றன.

2023 ஆம் ஆண்டில் ஒன்பது (09) புதிய மானியங்கள் வழங்கப்பட்டன (இணைப்பு 03). இருப்பினும், அந்த மானியங்களில் எட்டு (08) ஆண்டு இறுதியில் வழங்கப்பட்டதனால், அந்த மானியங்களின் திட்டப் பணிகள் தொடங்கப்படவில்லை. நாற்பத்தொரு (41) ஊசுபு மானியங்கள் ஆண்டு முழுவதும் கண்காணிக்கப்பட்டன, இவற்றின் சிறந்த முன்னேற்றம் மற்றும் நிதித் தேவைகளின் அடிப்படையில் நிதி வழங்கப்பட்ட, அதே வேளையில் இருபத்தி இரண்டு (22) மானியங்கள் 2023 ஆம் ஆண்டின் இறுதிக்குள் நிறைவு செய்யப்பட்டன. மொத்தம் நூற்று முப்பத்து மூன்று (133) ஆராய்ச்சியாளர்கள் (PIs; மற்றும் Co-Is) CRG மானியங்களால் பயனடைந்தனர். விவரங்கள் இணைப்பு 02 மற்றும் 04 இல் கொடுக்கப்பட்டுள்ளன. வருட காலப்பகுதியில், 11 ஆராய்ச்சி மாணவர்கள் மற்றும் 03 தொழில்நுட்ப உதவியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். 2023.12.31 இல் உள்ளவாறாக ஆராய்ச்சி மானியங்களின் நிலை பற்றிய விபரம் சுருக்கமாக இணைப்பு 05 இல் கொடுக்கப்பட்டுள்ளது.

1.2 ஆராய்ச்சி மானியங்களின் முன்னேற்றத்தை கண்காணித்தல்

இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் சமர்ப்பிக்கப்படும் முன்னேற்ற அறிக்கைகள், முன்னேற்ற மதிப்பாய்வு கருத்தரங்குகள் மற்றும் கள வருகைகள் மூலம் நடப்பு மானியங்களின் முன்னேற்றம் கண்காணிக்கப்பட்டது.

1.2.1 இலங்கை அணுசக்தி சபைக்கு கள விஜயம்

'தேங்காயின் உட்புறத்தில் உள்ள அதன் வெள்ளை மையப்பகுதியினை கொண்டு தயாரிக்கின்ற உற்பத்தி பொருட்களுக்கு சர்வதேச சந்தையில் பாதுகாப்பினையும் ஊக்குவிப்பினையும் வழங்குவதற்கான உரிய அங்கீகாரத்தினை வழங்குவதற்கு சம திரவ அழுத்த கைரேகையினை (Isotopic Fingerprinting) பிரயோகம் செய்தல்' என்ற தலைப்பிலானதும், RG/2021/BS/01 என்ற இலக்கத்தினை கொண்டதுமான நடப்பு ஆராய்ச்சி மானியத்தின் முன்னேற்றத்தைக் கண்காணிக்க, இலங்கை அணுசக்தி சபைக்கு 2023 அக்டோபர் 23 அன்று கள விஜயும் முன்னெடுக்கப்பட்டது.

இந்த மானியமானது அடிப்படை அறிவியல் பணிக்குழுவின் ஆதரவுடன் கண்காணிக்கப்பட்டது. பணிக்குழுவின் தலைவர், மதிப்பாய்வாளர் மற்றும் தேசிய விஞ்ஞான மன்றத்தின் அதிகாரிகள் இந்த கள விஜயத்தில் இணைந்தனர். தேங்காயின் உட்புறத்தில் உள்ள அதன் வெள்ளை மையப்பகுதியினை கொண்டு தயாரிக்கின்ற உற்பத்தி பொருட்களுக்கு சர்வதேச சந்தையில் பாதுகாப்பினையும் ஊக்குவிப்பினையும் வழங்குவதற்கான உரிய அங்கீகாரத்தினை வழங்குவதற்கு சம திரவ அழுத்த கைரேகையினை (Isotopic Fingerprinting) பிரயோகம் செய்தலே இந்த மானியத்தின் நோக்கமாகும். மதிப்பீட்டின் போது 50% பௌதீகவியல் ரீதியிலான முன்னேற்றமும் 66% நிதி ரீதியிலான முன்னேற்றமும் அடையப்பட்டிருந்தன. கருத்திட்டம் மேம்பாடு செய்வதற்கான பரிந்துரைகள் மானியம் பெறுபவர்களுக்கு வழங்கப்பட்டன.

1.2.2 கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவகத்திற்கு வழங்கப்பட்ட மானியம் தொடர்பில் முன்னேற்ற மீளாய்வு கூட்டம்

"இலங்கையின் கிராபைட்டை அதிக மதிப்பு மிக்கதாக சுத்திகரித்தல்" என்ற தலைப்பில் RG/GAPF/2021/EB/01 எனும் இலக்கத்தினை கொண்ட மானியத்தின் முன்னேற்ற மதிப்பாய்வுக் கூட்டம் நவம்பர் 02, 2023 அன்று தேசிய விஞ்ஞான மன்றத்தின் பணிப்பாளர் சபை அறையில் நடைபெற்றது. ஆராய்ச்சி குழுவானது கருத்திட்டத்தின் ஊடாக அடையப்பட்ட சாதனைகள் உள்ளடங்கலாக கருத்திட்டத்தின் முன்னேற்றம் தொடர்பிலான விபரங்களினை விரிவாக வழங்கியது. திட்டத்தின் கீழ் மூன்று சுத்திகரிப்பு முறைகள், அதாவது பௌதீகவியல் முறை, அமில முறை மற்றும் கார-அமில முறை ஆகியவை சோதிக்கப்பட்டன. ஒவ்வொரு சுத்திகரிப்பு முறையின் கீழும் அடையப்பட்ட சாதனைகளுடன் பெறப்பட்ட முடிவுகள் கீழே உள்ள அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன.

சுத்திகரிப்பு முறைகள்	பெறுபேறுகள்/அடைவுகள்
பௌதீகவியல் முறை	தூய்மை நிலை: தொழில்துறை மட்டத்தில் 99% வரை தூய்மையானது வணிகமயமாக்கல் செயல்முறை தொடங்கியது
அமில முறை	தூய்மை நிலை: தொழில்துறை மட்டத்தில் 99.8% வரை தூய்மையானது. தொழில்துறைக்கு மாற்றப்பட்ட தொழில்நுட்ப அறிவு
கார-அமில முறை	தூய்மை நிலை: ஆய்வக மட்டத்தில் 99.97% வரை தூய்மையானது. ஆய்வக சோதனைகள் இன்னும் நடந்து கொண்டிருக்கின்றன



வரைபடம் 10: 40% க்கும் குறைவான குறைந்த தர கிராபைட்டை 98-99% கார்பனாக நிறை அளவில் மாற்றுவதற்கான திட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட கருவி.

நிறைவுசெய்யப்பட்ட மானியங்கள் பற்றிய சிறப்புக்கூறுகள்-

மானிய இலக்கம்: RG/2017/BS/03
முதன்மை ஆய்வாளர்: பேராசிரியர் ஆர். எம். ஜி. ராஜபக்ஷ, இரசாயனவியல்துறை, விஞ்ஞான பீடம் பேராதனைப் பல்கலைக்கழகம்
கருத்திட்ட தலைப்பு : உயிரியல் மருத்துவம் மற்றும் நீர் சுத்திகரிப்பு பிரயோகங்களுக்காக இயற்கையாக தோன்றுகின்ற இலங்கை கனியங்களிலிருந்து பெறுவிக்கப்பட்ட ஹைரொக்கிசப்படைற் நெனோ துணிக்கைகள் மற்றும் அவற்றின் சேர்வைகளின் உயிரியல் பொருத்தப்பாடு மற்றும் நுண்ணுயிர்களுக்கெதிரான பண்புகள் பற்றிய வெளிவாரி மதிப்பீடு.

இலங்கை இயற்கை கனிமங்களைப் பயன்படுத்தி உயிரியல் ரீதியாக ஏற்றத்தன்மை கொண்ட ஹைரொக்கிசப்படைற் (HA) நெனோ துணிக்கைகள் மற்றும் சேர்வைகளின் செலவுச் சிக்கனமான தொகுப்பினை இவ் ஆராய்ச்சி நோக்காக கொண்டது. செயற்கை உடற் பாகங்கள் போன்ற உயிரியல் மருத்துவ பிரயோகங்கள் உயிரியல் ரீதியாக ஏற்ற ஹைரொக்கிசப்படைற் நெனோ துணிக்கைகளிலிருந்து நன்மைபெறுகின்றன. இவ் ஆய்வினூடாக நுண்ணங்கிகளுக்கு எதிரான மற்றும் உயிரியல் பொருத்தப்பாடு பண்புகளுடன் இணைந்த குறைந்த செலவிலான ஹைரொக்கிசப்படைற் நெனோ துணிக்கைகள் மற்றும் சேர்வைகள் ஆராயப்பட்டன. இது உயிரியல் மருத்துவ பிரயோகங்களுக்கும் மாசடைந்த நீரை சுத்திகரிப்பதற்கும் பயன்படுத்தப்படலாம். செலவுச் சிக்கனமான இம்முறைகளுக்காக இயற்கையாக உருவாகின்ற உள்நாட்டு கனிமங்கள் பயன்படுத்தப்பட்டதுடன் மாசாகிய நீரிலிருந்து நச்சுப் பொருட்கள் மற்றும் கனமான உலோகங்களை அகற்றுவதில் அதிகரித்த வினைத்திறன்மிக்க நெனோ சேர்வை உருவாக்கப்பட்டது. உயிரியல் ரீதியாக ஏற்ற ஹைரொக்கிசப்படைற் நெனோ துணிக்கைகளும் நுண்ணுயிர்க்கு எதிரான ஹைரொக்கிசப்படைற் நெனோ பொருட்களும் குடிநீர் பிரச்சினையை செயல்திறன் வாய்ந்த விதத்தில் கையாளுகின்றன. இலங்கைக் கனிமங்களை உபயோகித்தலானது நாட்டின் கனிம வளங்களுக்கு பெறுமதி சேர்ப்பதுடன் இலங்கையில் புதிய கைத்தொழில் ஒன்றை தாபிக்கும் வாய்ப்பினை வழங்கி பொருதாரத்திற்கு பங்களிக்கின்றது. இப்பணி 01 விரிவாக்கப்பட்ட விஞ்ஞான மேற்கோள் சுட்டி (SCIE) வெளியீடு, 01 அத்தியாயம் 11 தொடர்பூட்டல்கள் மற்றும் 01 முதுதத்துவமானி பட்டம் என்பனவற்றை பெறுபேறாக தந்தது.



வரைபடம் 11: நஞ்சு கலப்படமற்ற நெனோ துணிக்கைகள் மற்றும் சேர்வைகள்

மானிய இலக்கம்: RG/2018/BS/02
முதன்மை ஆய்வாளர்: ஆர். செந்தில்நிதி, இரசாயனவியல் திணைக்களம், இயற்கை விஞ்ஞானபீடம, இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
கருத்திட்ட தலைப்பு : புற்றுநோய் குறியீடுகளின் புறந்தோன்றிய திரிபுகளின் செயல்தடுப்பு பற்றிய கணிப்பீடு சார்ந்த ஆய்வு

மரபணுவின் மரபியல் சார்ந்த மற்றும் புறந்தோன்றிய திரிபு இரண்டும் புற்றுநோய்க்கு வழிவகுக்கலாம். Acetyl மற்றும் methyl histone உருமாற்றங்களும் அத்துடன் மரபணு methylation ஆகியன பொதுவான மனித கட்டிகளின் அடையாளமாக அங்கீகரிக்கப்பட்டதும் அதிகம் ஆய்வு செய்யப்பட்டதுமான மேல்மரபியரல் உருமாற்றங்களாகும். இப்பணியில் மருந்து செலுத்தப்படும் நொதியங்களின் அணு/ அணுமூலக்கூறு மட்ட விவரணம் மற்றும் மரபணு அத்துடன் புரதத்துடன் கூடிய மருந்து மற்றும் அணுமூலுக்கூறுகளின் ஒப்பீட்டு ரீதியான பிணைப்பு வலிமை என்பவற்றை ஆய்வுசெய்வதற்கும் கணிப்பு சார்ந்த முறைகளை

உருவாக்குவதற்கும் (அணுமூலக்கூறுகளினை பொருந்தச்செய்தல் மற்றும் அணுமூலுக்கூறு இயக்கவாற்றல்) ஆராய்ச்சிக்குழு முயற்சித்தது. தற்போது புற்றுநோய்க்கெதிரான பல மருந்துகள் சிகிச்சை பரிசோதனைகளில் பல்வேறு மட்டங்களில் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், மருந்து செயல்திறன் வாய்ந்ததா இல்லையா என்பது உறுதிப்படுத்தப்படவில்லை. இவ் ஆராய்ச்சியினூடாக HDLP நொதியம் மற்றும் DNMT நொதியம் என்பவற்றுக்கு எதிரான வினைத்தடுப்பி சேர்வைகளின் வினைத்தடுப்பியின் உச்சவினை கண்டறியப்பட்டது. கண்டறியப்பட்டவைகளின் பிரகாரம் மேலதிக சிகிச்சை ஆராய்சிக்காகவும் சிகிச்சை பரிசோதனைக்காகவும் LBH589, PCI24781 மற்றும் ணநடிரடயசநெ என்பவற்றை பரிந்துரைப்பதற்கு சாத்தியம் காணப்படுகின்றது.

இப்பணி 2 விரிவாக்கப்பட்ட விஞ்ஞான மேற்கோள் சுட்டி வெளியீடுகள், 02 விரிவாக்கப்பட்ட விஞ்ஞான மேற்கோள் சுட்டி அல்லாத வெளியீடுகள், 10 தொடர்பூட்டல்கள் மற்றும் 01 எம்பில் பட்டம் என்பனவற்றை பெறுபேறாக தந்தது.

மானிய இலக்கம்: RG/2018/BS/03
முதன்மை ஆய்வாளர்: பேராசிரியர் ஜி. ஆர். என். குமார, தேசிய அடிப்படையஆய்வுகள் நிறுவனம்
கருத்திட்ட தலைப்பு: மின் உற்பத்திக்காக கைத்தொழில் ரீதியாக வளம்பெறத்தக்க முறைகள் மூலம் உயர் வினைத்திறன்மிக்க மற்றும் சூழல் ரீதியாக உறுதியான பெரோவிசுகைட்டு சூரிய கலங்கள் மற்றும் பெரோவிசுகைட்டு சூரிய பலகங்கள் உருவாக்குதல்.

பெரோவ்ஸ்கைட் சூரிய மின்கலம் (PSC) என்பது பெரோவ்ஸ்கைட் கலவை எனப்படும் சிறப்புப் பொருளைப் பயன்படுத்தும் ஒரு வகை சூரிய மின்கலமாகும். இந்த கலவை பொதுவாக கரிம மற்றும் கனிம கூறுகளின் கலவையாகும், இது முக்கியமாக ஈயம் அல்லது tin halides களை அடிப்படையாகக் கொண்டது. பெரோவ்ஸ்கைட் பொருள் சூரிய ஒளியைப் உயர்ந்த அளவில் உள் வாங்கக்கூடிய அடுக்காகச் செயல்படுகிறது, பாரம்பரியமான சாய-உணர்திறன் கொண்ட சூரிய மின்கலங்களில் பயன்படுத்தப்படும் சாயங்களுக்கு பிரதியீடாகிறது.பெரோவிசுகைட்டு சூரிய கலங்களில் துளை கொண்டுசெல்லும் பொருளாக Spiro-OMETAD பயன்படுத்தப்படுவதுடன் பின்பக்கத் தொடுகையாக தங்கம் (AU) பயன்படுத்தப்படுகின்றது. இப்பொருட்கள் விலை உயர்ந்தவையாகும். அவ்வாறான பொருட்களுக்கான குறைந்த செலவு மாற்றுவழிகள் இந்த ஆய்வில் பயன்படுத்தப்பட்டன.

கிராபைட் சுரங்கங்களில் கைவிடப்பட்டிருந்தனவாக இருந்தனவும் பாறைகளுடன் இணைக்கப்பட்டிருந்தனவுமான சிறிய கற்களை பயன்படுத்தி விரிவாக்கப்பட்ட கிரபைட் உருவாக்கப்பட்டது. இவ் ஆய்வில், விரிவாக்கப்பட்ட கிராபைட் ஆனதுஇ தங்கத்திற்கு பதிலாக பயன்டுத்தப்பட்டதுடன், விலை மதிப்புள்ள பல்பகுதி சேர்மானங்களுக்கு பதிலாக, குறைந்த செலவினத்திலும் எளிய முறைகளாலும் மற்றும் நவீன பவுடர் அழுத்தி முறை ஒன்றின் கீழ் செயல்படுத்தப்பட்ட தெங்கு சிரட்டை கரி (ACSC) மற்றும் உமிக்கரி என்பன (ARHC) பயன்படுத்தப்பட்டது. ACSC பவுடரைப் பயன்படுத்தி தயாரிக்கப்பட்டதும் 950 °C இல் செயல்படுத்தப்பட்டதுமான சூரிய மின்கலங்கள், சுற்றுப்புற நிலைமைகளில் AM 1.5 கீழ் உருவகப்படுத்தப்பட்ட சூரிய ஒளியில் 4.94% என்ற அதிகபட்ச செயல்திறனைக் காட்டின.

சாதனத்திற்கு தேவையான பவுடரினை மாற்றும் திறனையும் நீண்டகால நிலைத்தன்மையையும் மேம்படுத்துவதற்கான அதன் தயாரிப்பு மற்றும் தொகுப்பு முறைகளை மேம்படுத்த ஆராய்ச்சிகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மானிய இலக்கம்: RG/2019/BS/01
முதன்மை ஆய்வாளர்: கலாநிதி கயான் போவத்த, அடிப்படை விஞ்ஞான திணைக்களம் இணைந்த சுகாதார விஞ்ஞான பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம்
கருத்திட்டத் தலைப்பு: கண்டி நகரத்திற்கு 3D காற்று மாசு மாதிரியை உருவாக்குதல்: சுகாதார விளைவுகளை மதிப்பீடு செய்வதற்கான தளம்

இலங்கையில் சூழல் காற்று மாசுப்பாடானது குறைவாகவே ஆய்வு செய்யப்படும் தலைப்பாகும். தரமான முறையில் காற்றின் மாசினை கண்காணிப்பது என்பது செலவுமிக்கதுடன் இலங்கை இவ்வாறான கண்காணிப்பு நிலையங்களை குறைவாகவே கொண்டுள்ளது. குறைந்த செலவுடைய உணரிகள் வலையமைப்புகளை முறையாக தரங்கணித்தல் மற்றும் பராமரித்தல் மூலம், காற்று மாசு கண்காணிப்பில் உள்ள இடைவெளிகளை நிரப்ப சில தீர்வுகளை வழங்க முடியும்.

இக் கருத்திட்டத்தின் கீழ், கண்டி மாநகர சபை பகுதிக்குள் <2.5 µm (PM2.5) ஆற்றலுக்கு குறைவான துகள் காரிகைகளை அளவிட ஒரு சிறிய உணரி வலையமைப்பு பயன்படுத்தப்பட்டதுடன் PM2.5 இனை மதிப்பீடு செய்ய ஒரு உயர் பிரிதிறன் நில பயன்பாட்டு சார்புக்கணிப்பு மாதிரி உருவாக்கப்பட்டது. இவ் ஆராய்ச்சிக்

கருத்திட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்ட கூட்டுமுயற்சிகளின் அடிப்படையில் முழு இலங்கையையும் உள்ளடக்கிய வகையில் ஆராய்ச்சியினை விரிவுபடுத்துவதற்கு சர்வதேச மானியமாக ரூபாய் 36 மில்லியன் பெறுவதில் முதன்மை ஆய்வாளர் வெற்றியடைந்தார். இவ் ஆராய்ச்சி முடிவுகள், கண்டி நகரில் காற்று மாசுபாட்டை கட்டுப்படுத்துவதற்கு மற்றும் காற்று மாசுபாட்டின் முக்கிய இடங்களை அடையாளம் காண்பதற்கு பயன்படத்தப்படலாம். மேலும், எதிர்காலத்தில் காற்று மாசுபாட்டைக் குறைக்க எடுக்கப்படும் நடவடிக்கைகளின் வெற்றியை கண்காணிக்க இக்கருத்திட்டம் பயன்படுத்தப்படலாம். உருவாக்கப்பட்ட நில பயன்பாட்டு சார்புக்கணிப்பு வரைபடம் 26 சதுர கிலோமீட்டர் பரப்பளவுள்ள முழு கண்டி நகரின் காற்று மாசுபாடு தொடர்பான தகவல்களை பெற உதவும். LUR மாதிரியானது முகவரி தொடர்பான புவியியல் இடங்களின் அடிப்படையில் தனிப்பட்ட அளவிலான காற்று மாசுபாடு வெளிப்பாட்டை மதிப்பீடு செய்து, சுகாதார விளைவுகளுடன் தொடர்புபடுத்தவும் பயன்படுத்தலாம்.

மானிய இலக்கம் : RG/2019/BS/02
முதன்மை ஆய்வாளர : வைத்தியர் டப்லிவ். எம். டி. பி விஜேரத்னஈ நுண்ணுயிரியல் துறை, மருத்துவ பீடம், உருகுணை பல்கலைக்கழகம்.
கருத்திட்டத் தலைப்பு : புற்று நோயாளிகளின் வாய்பூஞ்சையிலிருந்து தனிமைப்படுத்தப்பட்ட *Candida* இனங்களின் பண்புகள் மற்றும் இலங்கையில் தேர்ந்தெடுக்கப்பட்ட மருத்துவ மூலிகைகளின் ஆய்வு கூட சோதனை முறையில் anti-candida செயற்பாடும்.

இவ் ஆய்வில், *candida* வுடன் தொடர்புடைய மருத்துவ காரணிகள் மற்றும் மக்கள்தொகை காரணிகள் தீர்மானிக்கப்பட்டன. ப்ளூகோனசோல், வோரிகோனசோல் மற்றும் அம்போடெரிசின் பி ஆகியவற்றிற்கு அனைத்து *candida* தனிமங்களினதும் பூஞ்சை எதிர்ப்பு உணர்திறன்/எதிர்ப்பு ஆய்வு செய்யப்பட்டது. தனிமைப்படுத்தப்பட்ட ஊயனெனைய இனங்களினை இனம் காணும் நிலை வரை நிறைவுசெய்யப்பட்டது. தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்து தாவரங்களினதும் தாவரச் சாறுகளில் *anti-candida* செயற்பாடு மதிப்பீடு செய்யப்பட்டது. வாய்கழுவும் திரவம் உருவாக்குவதற்கு பயன்படுத்தக்கூடிய தாவர சாறுகள் தேர்ந்தெடுக்கப்பட்டன்., உயனெனையவின் மருத்துவ மற்றும் சமூக தனிமங்களின் பூஞ்சை எதிர்ப்பு மற்றும் உணர்திறன் தரவுகள் என்பன மருத்துவர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் சிகிச்சை நுட்பங்களைப் புரிந்துகொள்ளவும், புதிய சிகிச்சை அணுகுமுறைகளைத் தீர்மானிக்கவும் உதவும். இப் பணி 04 தொடர்பூட்டல்களுக்கும் 01 தத்துவ முதுமானி பட்டத்திற்கு வழிவகுத்தது.

மானிய இலக்கம்: ICRP/NSF-NSFC/2019/BS/03
முதன்மை ஆய்வாளர்: பேராசிரியர் கே. பி. எஸ். என் ஜினதாச, சிவில் பொறியியல் திணைக்களம், பேராதனைப் பல்கலைக்கழகம்
கருத்திட்ட தலைப்பு: இலங்கையில் அறியப்படாத காரணங்களால் ஏற்படும் சிறுநீரக நோயினால் (CKDu) பாதிக்கப்பட்ட பகுதிகளில் DOM மற்றும் அதிக கடினத்தன்மையுடன் நிலத்தடி நீரை சுத்திகரிக்கும் உயர் அழுத்த மென்படலச் செயல்முறைகள் (NF/RO) மற்றும் மின்வழிக்கூழ்பிரிப்பு (ED) என்பவற்றின் மென்படல படியவிடல் பொறிமுறைகளும் கட்டுப்பாடும்.

இலங்கையில் அறியப்படாத காரணங்களால் ஏற்படும் சிறுநீரக நோயானது ஒரு தேசிய சுகாதார ஆபத்தாகும். எனினும் நோய்க்கான தீர்க்கமான காரணம் இன்றுவரை அறியப்படவில்லை. ஏதுவியல் அறியப்படாத நாட்பட்ட சிறுநீரக நோயினை தூண்டுகின்ற அனேகமான வெளிவாரி காரணிகள் குடிநீருடன் தொடர்புபட்டிருப்பதனால் அத்தகைய பிரதேசங்களில் பாதுகாப்பான குடிநீரை வழங்குவது மிகவும் முக்கியத்துவமிக்கதாக விளங்குகின்றது. ஏதுவியல் அறியப்படாத நாட்பட்ட சிறுநீரக நோய் பிரதேசங்களின் நிலக்கீழ் நீரை நெனோ வடிகட்டுதல் (NF) மற்றும் மின்வழிக் கூழ்பிரிப்பு புறமாற்றல் (EDR) போன்ற மென்படல தொழில்நுட்பங்களை பயன்படுத்துகின்ற சுத்திகரித்தலை இந்த ஆராய்ச்சி செய்தது. நாட்பட்ட சிறுநீரக நோய் காணப்படுகின்ற பிரதேசங்களில் அனேகமான நிலக்கீழ் நீர் மூலங்கள் கடினத்தன்மை, புளோரைட், இரும்பு மற்றும் கரைந்த சேதன காபன் (DOC) என்பன நிறைந்தவை. அவதானிக்கப்பட்ட இருமாறி மற்றும் பல்மாறி இடைத்தொடர்புகளுடன் கூடிய உயர்வான கரைந்த சேதன காபன் சவ்வு மாசுபடுத்தல்களாக இயங்கக்கூடிய DOC-Ca, DOC-Mg, DOC-Al, DOC- Fe கூட்டுகளை உருவாக்கும் சாத்தியத்தை எடுத்துக்காட்டின. சவ்வு படிச்சலுடன் இணைந்த முக்கிய மட்டுப்பாடுகளிலொன்று சவ்வு மாசாகுதல் என்பதனால் தற்போதைய ஆய்வு னுழுஊ மற்றும் கடினத்தன்மை (கல்சியம்) பிரசன்னமாவதில் சவ்வு மாசாக்கப் பொறிமுறைகளின் தெளிவாக்கம் மீது கவனம் செலுத்தியது. ஆய்வுகூடமட்ட நெனோ வடிகட்டல் மற்றும் மின்கூழ் வேறாக்கல் புறமாற்றல் அமைப்புகளை பயன்படுத்தி மாசாக்கல் ஆய்வுகள் நடாத்தப்பட்டன. நாட்பட்ட சிறுநீரக நோய் காணப்படுகின்ற பிரதேசங்களிலிருந்து பெற்றுக்கொண்ட நிலக்கீழ் நீரிலிருந்து இலங்கை பிரிமிக் அமிலம் (SLFA) மற்றும் ஹியூமிக் அமிலம் (SLHA) பிரித்தெடுக்கப்பட்டு கல்சியம் காணப்படுவதில் வர்த்தக ரீதியான ஹியூமிக் அமிலத்துடன் ஒன்றுசேர்ந்து மாசாக்க பொறிமுறைகளை ஆய்வு செய்வதற்கு பயன்படுத்தப்பட்டன. கல்சியம் காணப்படுகின்றமை சவ்வுத் தொழிற்பாடு குழுக்களுடன் கூடிய முன்னிலை கூட்டமைப்பை உருவாக்குவதன் மூலம் மாற்ற

முடியாத மாசாக்கத்திற்கு கணிசமாக பங்களித்துள்ளது. மாசாக்கப் பொறிமுறைகள் மத்தியில் மாறிகளை பயன்படுத்தி பல்வேறு தூய்மைப்படுத்தல் முகவர்களை பயன்படுத்தி சவ்வு கவர்தல் நீக்க பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. அவற்றின் கட்டமைப்பு சார்ந்த மாறிகளின் காரணமாக SLHAமற்றும் SLFA என்பவற்றுக்கு மாசாக்கப் பொறிமுறைகள் கணிசமாக வேறுபட்டன. மேலும் குடிநீர் சுத்திகரிப்பு தொழில்நுட்பங்கள் பற்றிய நீண்டகால உறுதியான தொழிற்பாடு நடப்புத் துறை புறமாற்றல் சவ்வீடு பரவல் மற்றும் நெனோ வடிகட்டுதல் அலகுகளை ஆய்வுசெய்வதன் மூலமும் அதன் தொடர்ச்சியான தொழிற்பாட்டிற்காக தெரிவுசெய்யப்பட்ட நெனோ வடிகட்டுதல் அலகின் செயலாற்றத்தை பகுப்பாய்வு செய்வதன் மூலமும் பரீட்சிக்கப்பட்டன. நாட்பட்ட சிறுநீரக நோய் காணப்படுகின்ற பகுதிகளில் நிலக்கீழ் நீரை சுத்திகரிப்பதற்கு நெனோ வடிகட்டுதல் செயல்திறன்வாய்ந்த தொழில்நுட்பமாக அமையுமென கண்டறியப்பட்டவைகள் வெளிப்படுத்தின. இப்பணி 4 SCIE வெளியீடுகளுக்கும் 5 தொடர்பூட்டல்களுக்கும் 2 தத்துவ முதுமானி பட்டங்களுக்கும் வழிவகுத்தது.

மானிய இலக்கம் : RG/2019/BT/01
முதன்மை ஆய்வாளர் : பேராசிரியர் ரூபிகா ராஜகருண, விலங்கியல் துறை விஞ்ஞான பீடம் பேராதனைப் பல்கலைக்கழகம
கருத்திட்ட தலைப்பு : மத்திய மாகாணத்தில் உண்ணிகளால் ஏற்படும் புள்ளிக் காய்ச்சல் குழும நுண்ம நச்சுக் **கிருமிகள்:** நோய்க்கிருமிகளின் வகை, நோய்க்கிருமிகளுக்கு இடமளிக்கும் முள்ளந்தண்டுடைய சமூகக் கூட்டமைப்பு மற்றும் பரவலில் ஈடுபடும் உண்ணி இனங்கள் அத்துடன் நோய்உயிரிகளைப் பராமரித்தல்.

உலகளவில் உண்ணி மூலம் பரவும் தொற்றுகள் (TBI) அதிகரித்து வருகின்றன, இதனால்மனிதர்கள் மற்றும் வீட்டு விலங்குகளில் கடுமையான நோய் மற்றும் இறப்பு ஏற்படுகிறது. குறிப்பாக வனவிலங்குகளுடனான தொடர்பு அதிகரிப்பதால் மனித TBIகள் வளர்ந்து வரும் தொற்றுகளாக மாறி வருகின்றன.வீட்டு விலங்குகள் அவற்றின் வாழ்விடங்களின் ஒன்றுடன் ஒன்று மேலணைந்து காட்டு விலங்குகளை எதிர்கொள்ளும்போது, அதனால் உண்ணி மற்றும் TBIகள் மனிதர்களுக்கு ஏற்படுகின்றன. இவ்வாய்வானது மத்திய மாகாணத்தில்இ நோய்க்கிருமிகளுக்கு இடமளிக்கும் முள்ளந்தண்டுள்ள விலங்குகளில் உண்ணியினால் பரவும் நச்சுக்கிருமி தொற்றுக்களையும் உண்ணி உயிரினங்களின் செயற்பாட்டினையும் ஆய்வுசெய்யும் விதத்தில் வடிவமைக்கப்பட்டிருந்தது. மொத்தமாக வீட்டு (n=657) மற்றும் வனவிலங்கு (n=18) அத்துடன் மனிதர்களிருந்து (n=28) என 3,087 உண்ணிகள் மற்றும் வீட்டு மற்றும் வனவிலங்குகளிலிருந்து 920 இரத்த மாதிரிகள் சேகரிக்கப்பட்டன. சந்தேகத்திற்கிடமான நோயாளர் நச்சுக்கிருமிகளின் 06 தோல் உயிர் திசு பரிசோதனை சேகரிக்கப்பட்டன. நச்சுக் கிருமி தொற்றுக்கான உண்ணிகள் ஒன்றுசேர்க்கப்பட்டு குருதி உணவு பகுப்பாய்வுசெய்யப்பட்டது. மிருகங்களில் இருந்து சேகரிக்கப்பட்ட இரத்த மாதிரிகள் ஜீம்சஸஜ்டெயின் சிலைட்டுகளையும் அதனைத் தொடர்ந்து அணுமூலக்கூறு கருவிகளையும் பயன்படுத்தி பகுப்பாய்வுசெய்யப்பட்டன. பிரித்தெடுக்கப்பட்ட மரபணுச் சோதனையானது நச்சுக் கிருமி தொற்றுக்கள் இருப்பதை உறுதி செய்து கொள்வதற்காக பிசிஆர் சோதனைக்கு உட்படுத்தபட்டன. மாதிரிகளில் எதுவும் நச்சுக்கிருமி மரபணு சோதனைக்கு சாதகமாக இருக்கவில்லை. ஆகையினால் மாதிரிகளிலுள்ள உண்ணியினால் பரவும் அனைத்து நோய்த் தொற்றுக்களையும் ஆய்வு செய்வதற்கு குறிக்கோள்கள் விரிவாக்கப்பட்டன. ஜீம்சஸ ஜ்டெயின் ஒத்தி எடுக்கப்பட்ட சோதனை படர்வு மற்றும் அணுமூலக்கூறு பகுப்பாய்வுகளுடாக சேகரிக்கப்பட்ட மிருக மாதிரிகளில் Babesia, Leishmania, *Anaplasma,* Hepatazoons, *filarial, Ehrlichia* போன்ற பல ஹீமோஒட்டுண்ணிகள் இருப்பதை ஆராய்ச்சி வெளிப்படுத்தியது. அவை பல ஒட்டுண்ணிகளுக்கு இடமளித்த போதிலும் அநேகமான மிருகங்கள் விசேடமாக சுதந்திரமாக சுற்றித்திரியும். கலப்புபிறப்பு நாய்கள் மத்தியில் நோய்க்குறிகள் காணப்படவில்லை ஆயினும் நோய் நிர்ணயத்திற்கு ஒத்தி எடுக்கப்பட்ட சோதனை படர்வு மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தால் அது கண்டுபிடிக்கபடாதிருந்தது. இரத்த மாதிரிகளில் நச்சுக்கிருமி மரபணு கண்டுபிடிக்கப்படாமை நோய்த்தொற்று இல்லாமையினை தீர்மானிக்க முடியாமல் இருந்தபோதிலும் பாரியளவு ஒன்றுசேர்க்கப்பட்ட இரத்த மாதிரியொன்றை திருத்தப்பட்ட வழிமுறைகள் மற்றும் பகுப்பாய்வு என்பவற்றை பயன்படுத்தி பகுப்பாய்வு செய்வதற்கு ஆராய்ச்சி முனைந்தது. நோய்த்தொற்றானது பருவகாலமானதாகவும் இருக்கக்கூடியதாகவிருந்ததுடன் மாதிரி சேகரிக்கின்ற போது உச்சகட்ட காலத்தினை ஆராய்ச்சியாளர்கள் தவறவிட்டிருக்கலாம்.

மானிய இலக்கம் : RG/2019/BT/02
முதன்மை ஆய்வாளர் : வைத்தியர் துஷிதா விக்கிரமசிங்க, உயிரியல் இரசாயனவியல் மற்றும் சிகிச்சை இரசாயனவியல் திணைக்களம், மருத்துவ பீடம் களனிப் பல்கலைக்கழகம்
கருத்திட்ட தலைப்பு : SELEX அப்டமெர்களின் (“Aptamers”) தெரிவுக்காக உருமணி அடிப்படையிலான SELEX இன் உகப்பாக்கமும் SELEX I கண்காணிப்பதற்காக நூதனமான நிகழ்நேர PCR அடிப்படையிலான அணுகுமுறையின் படிப்படியான வளர்ச்சியும்.

பிறபொருளெதிரிகளின் பயன்பாடுகளுக்கு மத்தியில், அவற்றின் உற்பத்தி குறிப்பாக வர்த்தக அளவில் செலவுமிக்க செயன்முறையாக காணப்பட்டு பிறபொருளெதிரிகளை விலையுயர்ந்த அணுமூலக்கூறு வினைப்பொருளாக்குகின்றது. "அப்டமெர்கள" என்பது மரபுசார்ந்த பிறபொருளெதிரிகளை உணர்வி செய்வதற்கான அணுமூலக்கூறுகளாக அவற்றின் இயலுமைக்காக அண்மையில் கவனத்தை ஈர்த்துள்ள செயற்கை அணுமூலக்கூறுகளாகும். இயற்கை அணுகுமுறைகள் ஊடாக முழுமையாக உற்பத்தி செய்யப்படுகின்ற வசதியினை கொண்டுள்ள அப்டமெர்கள் அவற்றின் உற்பத்தியினை மிகவும் செலவுச்சிக்கனமாக்குகின்றன. அதேபோன்று இம்மூலக்கூறுகள் நீண்ட தேக்க ஆயுள் கொண்டவையும் வெப்பநிலை வேறுபாடுகளை எதிர்த்து நிற்கக்கூடியவையும் இரசாயனவியல் ரீதியாக மாற்றியமைப்பதற்கு இயலுமையானவையாகவிருந்து மரபு சார்ந்த பிறபொருளெதிரிக்கான பொருத்தமான பிரதியீடாக அவற்றை இடம்பெறச் செய்கின்றன. "அப்டமெர்கள்" சிகிச்சை நோய்நிர்ணயங்கள் தொடக்கம் சுற்றாடல் ரீதியான மாசினை கண்டுபிடித்தல் வரை பல்வேறு நோய்நிர்ணய தளங்களில் பயன்படுத்தப்படுகின்ற பல மில்லியன் டொலர் வியாபாரமாக தோற்றம் பெற்றுள்ளன. பல நாடுகள் இவ் ஆராய்ச்சி துறையில் ஈடுபட்டுள்ளதுடன் அது குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தினை ஏற்படுத்தியுள்ளது. இலங்கையில் தொழில்நுட்பம் கிடைக்கப்பெறுகின்றமைக்கு மத்தியில் அப்டமெர் ஆராய்ச்சியானது அணுகப்படாத துறையாகவே இருந்து வருகின்றது. இக்கருத்திட்டத்தில் இலங்கையில் முதற் தடவையாக அப்டமெர் விருத்தியாக்க தளம் ஒன்றினை உருவாக்குவதற்கு தொடக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இச் செயன்முறையானது ஒவ்வொரு படிமுறையினையும் கண்டிப்பான கணக்காணித்தலை வேண்டுவதுடன் அப்டமெர் விருத்தியாக்கலை நடாத்துவதில் நூதனமான கண்காணித்தல் முறைகளின் ஒன்றிணைப்பொன்றை ஆராய்ச்சியாளர்கள் முன்மொழிந்தும் உள்ளனர். இறுதியாக, கணினி உதவியுடனான கணிப்புகளின் அடிப்படையில் குறிப்பிடத்தக்க பிணைப்புகளுடன் கூடிய அல்பின் இணைகின்ற அப்டமெர் ஒன்றினை ஆராய்ச்சியாளர்கள் அடையாளப்படுத்தினர். கருத்திட்டத்தின் அடுத்த படிமுறையானது தெரிவு செய்யப்பட்ட அப்டமெர் உண்மையான உலகப்பிரயோகங்களில் உபயோகமிக்கதாக இருக்குமென்பதை உறுதிசெய்வதற்கான ஆய்வுகூடம் அடிப்படையிலமைந்த கடுமையான பிணைப்பு முறைகளைச் செய்வதற்கு எத்தனிக்கின்றது. சுருக்கமாக கருத்திட்டம் முதற்தடவையாக இலங்கையில் அடிப்படை அப்டமெர் விருத்தி தளமொன்றினை வெற்றிகரமாக தாபித்துள்ளது. அதனை மேலும் மேம்படுத்துவதற்கும் அப்டமெர்களின் வர்த்தக ரீதியான அபிவிருத்திக்காக அதனை பயன்படுத்தி செலவுமிக்க பிறபொருளெதிரிகளை இறக்குமதி செய்வதற்கான தேவையினை குறைப்பதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

மானிய இலக்கம் : RG/GAPF/2021/EB/02
முதன்மை ஆய்வாளர் : பேராசிரியர் பத்மலால் மானகே, ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகம்
கருத்திட்டத் தலைப்பு: குடிநீரில் உள்ள, 2-MIB, சைனோ டொக்சின்ஸ், மற்றும் நுண்ணுயிர் எதிரிகள் போன்றவற்றை அகற்றுவதற்காக உள்நாட்டில் உருவாக்கப்பட்ட நீர் வடிப்பான்களை மேம்படுத்தல்

உலகின் அதிகரிக்கின்ற சனத்தொகைக்கு சுத்தமான, தூய குடிநீரை வழங்குவதற்கு நீர் முகவராண்மைகள் இடையறாது போராடுகின்றன. நீருடன் தொடர்புடைய ஆரோக்கியமான நலன்கள் மீது முதன்மைக் கவனம் செலுத்தபட வேண்டிய போதிலும் மக்கள் நீரின் தரத்தை அதன் சுவை நலம் சார்ந்த தோற்றத்திலேயே அடிக்கடி மதிப்பிடுகின்றனர். விடாப்பிடியாக காணப்படும் பிரச்சினைகளிலொன்று குடிநீர் மண் நாற்ற சுவை மற்றும் வாசனையினை குறிப்பாக சைனோபக்டீரியா மற்றும் இழைபக்டீரியா போன்ற நீரியல்சார் நுண்ணங்கிகளின் துணை உற்பத்திகளாக காணப்படுகின்ற மண் வாசனை மற்றும் 2 - மெத்திலிசோபோனியோல் (2-MIB), சேர்வைகள் காணப்படுவதாகும். சைனோபக்டீரியா சைனோநச்சு, சின்ரோஸ்பேநொமிசின் (CYN) மைக்ரோசிக்ஸ்டீன் (LR –MC-LR) என்பவற்றை உற்பத்திசெய்து மனித ஆரோக்கியத்திற்கு கணிசமான ஆபத்தினை விளைவிக்கின்றன. 100 பாகை செல்சியலில் சூடாக்குகின்ற போதும் இச்சேர்வைகள் ஹெப்பாடொக்சினஸ் மற்றும் சைட்டோ டொக்சின் ஆக பெயர் குறிக்கப்பட்டுள்ளமைக்கு மத்தியில் அழிக்கப்பட முடியாதவையாக காணப்படுகின்றன. ஆகையினால், குடிநீரில் MC-LR (1.0 g/L) மற்றும் CYN (2.0 g/L) என்பவற்றுக்கான பரிந்துரைக்கப்பட்ட வரையறையொன்றினை உலக சுகாதார அமைப்பு உருவாக்கியுள்ளது. எவ்வாறாயினும், கலத்திற்குபுறம்பான மண்வாசனை> 2-MIB, சைனோடொக்சின் மற்றும் வேறு மாசாக்கிகள், பீடைநாசினிகள கனரக உலோகங்கள் மற்றும் நுண்ணுயிர்கொல்லிகள் போன்ற சுத்திகரிக்கப்படாத நீரில் காணப்படுகின்ற பொருட்களை நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்ற மரபு சார்ந்த நீர் சுத்திகரிப்பு நுட்பங்கள் இல்லாதொழிப்பதில்லை. இலங்கையின் பின்னணியில் ஆவணமாக்கப்பட்ட மற்றும் முன்னெடுக்கப்படுகின்ற ஆராய்ச்சிகளின் அடிப்படையில் மண்வாசனை, 2-MIB, isனோடொக்சின் மற்றும் சேதன மற்றும் அசேதன மாசாக்கிகள் மேற்பரப்பு மற்றும் நிலக்கீழ் நீர் குடிநீர மூலங்களில் காணப்படுகின்றன என்பதனை காண்பித்துள்ளன. ஆகையினால், இவ் ஆய்வானது பல்வேறு நீர் மூலங்களிலிருந்து துர்நாற்றம் மற்றும் சுவைசேர்வைகள், செனோடொக்சின், பீடை கொல்லிகள் கனரக உலோகங்கள் மற்றும் நுண்ணுயிர் கொல்லிகள் என்பவற்றை அகற்றுவதற்கு ஒளிவினையூக்கி தரக்குறைப்பு மற்றும் உறிஞ்சல் தொழில்நுட்பங்களை பயன்படுத்துகின்ற வீட்டு நீர் சுத்திகரப்பான்களை மேம்படுத்தி வர்த்தக மயமாக்குவதை நோக்காக கொண்டுள்ளது. ஆராய்ச்சிக் குழு வடிப்பான்களுக்காக கைத்தொழில் ரீதியான வடிவமைப்பொன்றுடன் உருவாக்கப்பட்ட நீர் வடிப்பான்களை மேம்படுத்தியது.



வரைபடம் 12: விருத்தி செய்யப்பட்ட நீர் வடிப்பான்

மானிய இலக்கம் : RG/2017/EB/03
முதன்மை ஆய்வாளர்: பேராசிரியர் எம். டி. அமரசிங்க, தாவரவியல் திணைக்களம், களனிப் பல்கலைக்கழகம்
கருத்திட்டத் தலைப்பு : புந்தலயில் மானிட மற்றும் உயிர்க்கோள ஈரநில ஒதுக்கில் *Typha angustifolia* இனது சூழலியல் மற்றும் அதன் ஆக்கிரமிப்பை கட்டுப்படுத்துவதற்கு சமுதாயம் அடிப்படையிலான முகாமைத்துவ உபாயமொன்றினை உருவாக்குவதற்கு அதன் தற்போதைய மற்றும் எதிர்கால பயன்பாடுகள்.

புந்தல ஈரநில ஒதுக்கில் எம்பிலிகல மற்றும் மலல ஏரிகள் அண்மைக்காலத்தில் பருவகால உவர்நீர் ஈரநில நிலங்களிலிருந்து நிரந்தர நன்னீர் ஈரநிலங்களாக கண்கூடாக மாற்றமடைந்துள்ளன. இங்கு உவர்நீர் நீரியல்வள தாவரமொன்றான *Typha angustifolia* (Hambu Pan S) பரம்பல் வெளிப்படையாக ஆக்கிரமிப்பு மட்டத்தையடைந்து, புலம்பெயர்ந்த பறவைகள் பணிக்காலத்தில் வந்தடையும் இடங்களை பாதித்து, மீன்பிடி வலைகள் பொறிகள் பயன்படுத்துவதற்கு கிடைக்கப்பெறுகின்ற திறந்த நீர் பகுதிகளின் அளவினை குறைவடையச் செய்கின்றன, இதனுடாக அவர்களின் முக்கிய வாழ்வாதாரத்தை பாதித்து காற்றினால் அடித்துக் செல்லப்படும் பூக்கள்/விதைகள் காரணமாக விசேடமாக சிறுவர்களின் சுவாச ஆரோக்கியத்தினையும் பாதித்துள்ளது. ஆகையினால், வாழ்வுக்கு துணையளிக்கும் செயன்முறைகளையும் ஈரநில தொழிற்பாடுகளையும் பேணுவதற்கு அதனை கட்டுப்படுத்துவது முன்னுரிமையாக கருத்திற்கொள்ளப்படுகின்றது. இவ் ஆய்வானது பரம்பலை கட்டுப்படுத்துவதற்கான நடைமுறை சார்ந்த உபாயமொன்றினை உருவாக்கும் நோக்குடன் இவ் ஈரநிலங்களில் ஆக்கிரமிக்கின்றதாக கருதப்படுகின்ற நீர்வாழ் தாவரங்களான macrophytes விசேடமாக *T. angustifolia* (Typha) மீதான உயிரியல் மாற்றம், அவற்றின் தாக்கம் பற்றிய தூண்டல் காரணிகளை இனங்காண்பதாகும். பூ வாழ்க்கை, தனிப்பட்ட மற்றும் மொத்தமான தோற்றவியல் மட்டம், மகரந்த மற்றும் விதை உயிரியல், இனப்பெருக்க முறைமை மற்றும் சுற்றாடல் மாற்றங்களுக்கு ஏற்றதாகிக் கொள்ளும் தன்மை என்பன உள்ளடங்கலாக மீள் உற்பத்தியாகக் உயிரியல் மற்றும் வாழ்க்கை வட்டம் என்பன மீதான ஆய்வு பற்றி கண்டறியப்பட்டவை மூலம் Typha வின் ஒப்பீட்டளவில் உயர் ஆக்கிரமிப்பு சாத்தியம் வெளிப்படுத்தப்பட்டது. 1988 முதல் 2019 வரையிலான (30 ஆண்டுகள்) தற்காலிக தரவுகளினை பகுப்பாய்வு, செய்து பார்த்தால்இ பூந்தல பகுதியின் மழைப்பொழிவு முறையின் மாற்றப்பட்ட நீர்நிலைக்கு காரணம் மழைப்பொழிவு அதிகரிப்பதால் அல்ல, மாறாக பூந்தல ஈரநிலங்களின் நீரேந்து பிரதேசங்களில் 80களின் நடுப்பகுதியில் இருந்து செயல்படும் நீர்ப்பாசனப் பணிகளிலிருந்து விவசாய வடிகால் வெளியேற்றம் காரணமாகும் என்பதைக் காட்டுகிறது. ஏரிகளிற்குள்ளும் சூழ்ந்துள்ள பிரதேசங்களிலும் *Typha angustifolia* வின் பரம்பலை தடமறிவதற்கு 2005-2019 வரையான ஈரநிலங்களின் உயர் பிறிதிறன் கொண்ட செய்மதி புகைப்படங்கள் பகுப்பாய்வு செய்யப்பட்டன. நன்னீர் நீரியியல் நீர்வாழ் தாவரங்களின் பரம்பல் ஈரநில பிரதேசங்களில் குறைந்துள்ளது என்றும் *Typha angustifolia* ஆனது *Nymphea stellata* என்பதை விஞ்சுகின்ற அளவில் இடம்பிடித்துள்ளது என்றும் இது வெளிப்படுத்தியது. இவ் ஈரநிலங்களில் அயஉசழிலவநள போன்ற நீர்வாழ் தாவரங்கள் பரம்பியும் அதிகமாகவும் காணப்படுவதற்கு நீர்பாசன வடிகானுடாக மலல- எவிலிகல ஏரியினுள் போஷனை உட்செல்கின்றமை முக்கிய தூண்டல் காரணியாக காணப்படுகின்றது என்பதனை இவ்வாய்வில் கண்டறியப்பட்டவை உறுதிப்படுத்தியன. *Typha angustifolia* காணப்படுகின்றமை மீன் வகைகளுக்கும் ஊர்வனவிற்கும் (முதலைகள்) உணவூட்டல், இனப்பெருக்கம் மற்றும் குஞ்சுகளுக்கான வாழ்விடங்கள் என்பவற்றை வழங்குவதற்கு பங்களிக்கின்றன என்பதனை மீன்களின் பல்வகைமை மற்றும் மிகுதியாக

காணப்படுகின்றமை பற்றிய ஆய்வுகள் எடுத்துக்காட்டுகின்றன. ஏரிகளில் ஊட்டச் செறிவை குறைப்பதற்கும் மண்ணில் காபன் ஊட்டமிகச் செய்வதற்கான *Typha angustifolia* வின் பங்களிப்பு குறிப்பிடத்தக்கதாகும். கிராமிய சமூகங்கள் *Typha angustifolia* வினை தற்போது ஏதேனும் வடிவில் பயன்படுத்தப்படாத போதிலும் உணவு மற்றும் மூலப்பொருட்களாக பயன்படுத்தக்கூடிய அதன் வாய்ப்புகள் ஆய்வு செய்யப்பட்டு ஆரோக்கியமான உணவு வகைகளை தயாரித்தல், கைளினால் உருவாக்கப்படும் கடதாசி, பின்னல் செய்யப்படும் பயன்பாடு மற்றும் அலங்காரப் பொருட்கள் மற்றும் திரவ சேதன உரம் போன்ற புதிய வாழ்வாதாரங்களை தொடங்குவதற்கு அது மூலப்பொருட்களாக வழங்கப்படலாம் என்பதை கண்டறிந்தது. மனிதன் மற்றும் உயிர்க்கோள எண்ணக்கருவிற்கு அதாவது மனித நல்வாழ்வூடாக சுற்றாடலை பாதுகாத்தலுக்கான முன்னுதாரணமாக பணியாற்றக்கூடிய இவ் ஈரநிலங்களில் *Typha angustifolia* முறைமை சார்ந்த உபயோகத்தினுடாக அதன் பரம்பலை கட்டுப்படுத்துவதற்கான சமுதாயம் அடிப்படையிலமைந்த முகாமைத்துவ உபாயத்துவமொன்று முன்மொழியப்பட்டது. நீர்ப்பாசன நடைமுறைகள் காரணமாக மாற்றமடைந்த நீரியல் நிலையானதுஇ *Typha angustifolia* இற்கு புதிய வாழிடங்களை ஆக்கபூர்வமாக உருவாக்கியுள்ளது என்பதனையும் தற்போதைய ஆய்வில் கண்டறியப்பட்டவைகள் எடுத்துக்காட்டின. இருப்பினும், நீர்நிலை மாற்றங்களுக்கு உள்ளான இந்த ஈரநிலங்களில் பிற நீர்வாழ் அயஉசழிலவநள அதீத அளவில் இருந்த போதிலும் இந்த *Typha angustifolia* ஆனது பிற நீர்வாழ் macrophytes வினை விட குறைவாகவே உள்ளது. ஆகையினால் *Typha angustifolia* நன்னீரின்/ உவர்நீரின் முறைசார்ந்த முதன்மை குடியேறியாக ஆக்கிரமிப்பு தாவரத்தைவிட மிக நடைமுறைசார்ந்ததாக வகைப்படுத்தப்படலாம். இப்பணி 12 தொடர்பூட்டல்களுக்கு வழிவகுத்திருந்தது.

மானிய இலக்கம் : NSF-PSF/ICRP/2017/EA & ICT/01
முதன்மை ஆய்வாளர்: பேராசிரியர் கே. விக்னரூபன், பௌதீகவியல் திணைக்களம். பொறியியல் பீடம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
கருத்திட்டத் தலைப்பு : இரண்டாம் நிலை சோடியம் - அயனி மின்கலங்களுக்கான புதிய வகையினை சார்ந்த பொருட்களும் புரோத்தன் பரிமாற்று சவ்வு எரிபொருள் கலங்களும்

இது இரண்டாம் நிலை சோடியம் - அயனி மின்கலங்களுக்கான புதிய வகையினை சார்ந்த பொருட்கள் மற்றும் புரோத்தன் பரிமாற்று சவ்வு எரிபொருள் கலங்கள் உருவாக்கம் பற்றிய கருத்திட்டமாகும். சோடியத்தின் ஏராளத்தன்மை காரணமாக சோடியம் அயனி மின்கலங்கள் விலையுயர்ந்த லித்தியம் அயனி மின்கலங்களுக்கான மாற்றுவழி மின்கல இரசாயனவியல் ஒன்றாக தோற்றம்பெற்றுள்ளன. எனினும், நியாயமாக சிறந்த சுற்றுப்புற வெப்பநிலை மின்னல் கடத்தலைக் கொண்டு மின் அயனிகளை உருவாக்குவது லிதியம் அயனிகளுடன் ஒப்பிடுகையில் சோடியம் அயனிகளில் பாரிய அளவு காரணமாக முக்கிய சவாலொன்றாக காணப்படுகின்றது. இக்கருத்திட்டத்தில் ஆராய்ச்சிக் குழு சோடியம் அயனி மின்கலங்களுக்காக பல்பகுதிசேர் மின் அயனிகளை ஒன்றுசேர்த்து வகைப்படுத்தியது. பல்வேறு அனுகூலங்கள் காரணமாக புரோத்தன் பரிமாற்று சவ்வு எரிபொருள் மின்கலங்கள் பிரபல்யமானவை. ஆயினும், பரந்தளவிலான பிரயோகங்களுக்கான முக்கிய தடையாக காணப்படுவது யாதெனில் பிளற்றினம் அடிப்படையிலான வினையூக்கிகளின் உயர்ந்த செலவு காணப்படுகின்றது. ஒட்சிசன் குறைப்பு எதிர்வினையாக்கமும் ஒட்சிசன் பரிமாணவளர்ச்சி எதிர்வினையாற்றலும் புரோத்தன் பரிமாற்று சவ்வு எரிபொருள் மின்கலங்களுக்கு மிகமுக்கிய எதிர்வினையாக்கங்களாகும். இக்கருத்திட்டத்தில் நைதரசன் கலப்பட காபன் நெனோ குழாய்க் கட்டமைப்புகள் சியோலிற்றிக் இமிடைசெரிலேட்டிலிருந்து பெறுவிக்கப்பட்டன. இக்கட்டமைப்புகள் ஒன்று சேர்க்கப்பட்டு இலத்திரனியல் வினையூக்கிகளாக வகைப்படுத்தப்பட்டன. இப்பணி 3 SCIE வெளியீடுகளை உருவாக்கியதுடன் 01 தத்துவ முதுமானி மற்றும் 01 விஞ்ஞான முதுமானி பட்டத்திற்கு வழிவகுத்தது.

மானிய இலக்கம்: NSF-PSF/ICRP/2017/EA & ICT/03
முதன்மை ஆய்வாளர்: கலாநிதி. என். குணவர்தன, பௌதீகவியல் துறை, விஞ்ஞானபீடம் பேராதனைப் பல்கலைக்கழகம்
கருத்திட்ட தலைப்பு: லிதியம் அயனி மின்கலங்கள் மற்றும் சூரிய மின்கலங்கள் என்பவற்றுக்காக புதிய வகையினை சார்ந்த வகையான நெனோ துணிக்கைகள்/ கிரேபேன் அடிப்படையிலான பொருட்கள்

இவ் ஆய்வில் ஒட்சியேற்ற செயன்முறையினை கட்டுப்படுத்தவதன் மூலம் குறைக்கப்பட்ட கிரேபேன் ஒட்சைட்டுக்களின் வேறுபட்ட மாறிலிகளின் ஒன்று சேர்த்தலுக்காக இலங்கையின் இயற்கை கிரைபைற்று வெற்றிகரமாக பயன்படுத்தப்பட்டதுடன் ஒன்றிணைக்கப்பட்ட TiO_2/ கிரேபேன் சேர்வைப் பொருள் லிதியம் அயனி மின்கலங்களின் நேர்முனைப்பொருளொன்றாக வெற்றிகரமாக பயன்படுத்தப்பட்டது. லிதியம் அயனி மின்கலங்கள் உன்னதமான சக்திச் செறிவு பெறுமதிகளுடன் கூடிய மிகவும் முன்னேற்றகரமான மீள் மின்னேற்றம் செய்யத்தக்க மின்கலங்களாகும். லிதியம் அயனி மின்கலங்களின் செயலாற்றத்தினை மேம்படுத்துவதற்கு நெனோ உலோக ஒக்சைட்/ கிரபேன் அடிப்படையிலான மின்முனைகளை உருவாக்குவதற்கு பல்வேறு உலோக ஒக்சைட்டுக்களுடன் கூடிய ஒன்றுசேர்க்கப்பட்ட கிரேபேன் பரீட்சிக்கப்பட்டது. Cu - நனோ

கட்டமைப்புகள் - கலப்படம் செய்யப்பட்ட கிரேபன் என்பவற்றை ஈடுபடுத்துகின்ற புதிய வகையினை சார்ந்த மின் கட்டமைப்பொன்றினை அறிமுகப்படுத்தவதன் மூலம் CdS/CdTe மெல்லிய இழை சூரிய கலங்களை உகப்பாக்கம் செய்வதற்கும் இக்கருத்திட்டம் முனைந்தது. இப்பணி 4 விஞ்ஞான மேற்கோள் சுட்டெண் விரிவாக்க வெளியீடுகள் 7 தொடர்பூட்டல்கள் என்பவற்றுக்கு வழிவகுத்ததுடன் 2 தத்துவ முதுமானி பட்டங்களுக்கும் வழிவகுத்தது.

மானிய இலக்கம்: RG/Covid2020/HS/01
முதன்மை ஆய்வாளர்: பேராசிரியர் பி. பி. ஆர் திசாநாயக, பொறியியல் பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம்
கருத்திட்டத் தலைப்பு: தொற்றுநோய்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட தங்கும் வசதிகளுடன் கூடிய அரை நிரந்தர மருத்துவமனை கட்டடங்களை உருவாக்குதல்

தங்கும் வசதிகளுடன் கூடிய அரை நிரந்தர மருத்துவமனை கட்டடங்கள் மனித உயிர் வாழ்வில் குறிப்பிடத்தக்க தாக்கமொன்றினை கொண்டிருக்கின்றன என்ற உண்மையினை COVID - 19 எடுத்துக்காட்டியிருந்தது. இத்தகைய சுகாதாரப் பராமரிப்பு வசதிகளாவன தொற்று நோயின் ஆரம்பம் முதல் மிதமான அறிகுறிகள் உள்ள நோயாளிகளை அவர்களது குடும்பங்கள் மற்றும் சமூகங்களிலிருந்து தனிமைப்படுத்தவும் மருத்துவ பராமரிப்பு நோய் கண்காணிப்பு, உணவு, தங்குமிடம் மற்றும் சமூக நடவடிக்கைகளை வழங்கவும் பயன்படுத்தப்படலாம். இந்த திட்டத்தின் முதன்மை நோக்கம் தொற்று நோயொன்று பரவுகின்ற ஒரு காலகட்டத்தில் சுகாதாரத் துறையின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் குறுகிய மற்றும் நீண்ட கால அடிப்படையில் பாவிக்க கூடிய வகையிலான மட்டுப்படுத்தப்பட்ட தங்கும் வசதிகளுடன் கூடிய அரை நிரந்தர கட்டிட அமைப்புக்களினை அமைப்பதற்கு புது முறையில் தீர்வுகளை ஆராய்ந்து உருவாக்குவதாகும். காலநிலை நிலைமைகள், அக அடிப்படையில் கிடைக்கக் கூடிய பொருட்கள், செலவுக் கட்டுப்பாடுகள் மற்றும் தளவாடத் தேவைகளை ஒழுங்குபடுத்துதல் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, இலங்கையின் பல்வேறு பகுதிகளில் குறைந்தபட்ச அமைவு நேரத்துடன் அவற்றை அமைப்பதற்கான மட்டுப்படுத்தப்பட்ட தங்குமிட மருத்துவமனை கட்டிடங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. இவ்விடயம் தொடர்பில் ஒரு முன்மாதிரி உருவாக்கப்பட்டது. மற்ற வடிவமைப்புகள் எண்ணியல் மாதிரிகள் மற்றும் பகுப்பாய்வுகளை அடிப்படையாக கொண்டிருந்தன. முன்மொழியப்பட்ட தங்குமிட மருத்துவமனைகள் எந்தவொரு அவசரநிலைக்கும் பயனுள்ளதாக என்ற எதிர்பார்ப்புடன் பணி தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டது.

மானிய இலக்கம் : RG/Covid2020/HS/02
முதன்மை ஆய்வாளர் : கலாநிதி முருகதாஸ் தனிகைசெல்வன், பௌதீகவியல் திணைக்களம், விஞ்ஞான பீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
கருத்திட்டத் தலைப்பு : SARS-CoV-2 மூலம் தோற்றுவிக்கப்படும் COVID-19 துரித நோயினை துரிதமாக கண்டறிவதற்கு இலத்திரனியல் ரீதியான கண்டுபிடிப்பு முறைமையொன்றினை உருவாக்குதல்

நோய்த்தொற்றினை கட்டுப்படுத்துவதற்கு நோயாளர்களின் சுவாச சுற்றோட்டத்தில் கொரோனா வைரசு 2 (SARS- COV 2) அறிகுறி உள்ளதா என்பது பற்றிய துரிதமான கண்டுபிடித்தல் மிக முக்கியமானதாகவிருந்தது. இக்கருத்திட்டத்தில் SARS- COV 2 இனை கண்டுபிடிப்பதற்கு காபன் நெனோ குழாய் (CNT) field-effect transistor (FET) அடிப்படையிலமைந்த உயிரியல் உணரி உருவாக்கப்பட்டது. CNT FETகள் ஒரு நெகிழ்வான Kapton substrate இல் புனையப்பட்டன. உணரியானது SARS- COV 2 இன் RNA - சார்ந்திருக்கும் RNA பல்பகுதிசேர் மரபணுவை CNT வழிமுறைகளினுல் நேர்மாற்றாக தொடராக்குவதை பெயர்ச்சி நுணுக்கம் செய்வதன் மூலம் கட்டமைக்கப்பட்டது. மேலும் உயிரியல் உணரிகள் கலப்பு நேர்கணிய மற்றும் கட்டுப்பாட்டு இலக்கு தொடர்களுக்காக பரீட்சிக்கப்பட்டன. இவ் ஆய்வில் இருந்து கிடைத்த உறுதியான பெறுபேறுகள், SARS- COV 2 கண்டுபிடிப்பதற்கான நோய்நிர்ணய கருவியொன்றாக CNT, FET அடிப்படையிலான உயிரியல் உகரிகள் பயன்படுத்தப்படலாம் என்பதனை பரிந்துரைத்தன. கஹட்டக சுரங்கத்திலிருந்து சேகரிக்கப்பட்ட இலங்கை சிரைகிரைற்றினை (vein graphite) பயன்படுத்தி இதேமாதிரியான உயிரியல் உணரியை கட்டமைப்பதற்கும் முயற்சிக்கப்பட்டது. இத்தொழில்நுட்பத்தை டெங்கு போன்ற வேறு வைரசுகளை கண்டுபிடிப்பதற்கும் மேலும் மாற்றமடையச் செய்து பயன்படுத்தலாம்.

தேசிய விஞ்ஞான மன்றத்தின் தொழில்நுட்ப மானியங்கள்

மானியத் தலைப்பு : "நடுத்தர அளவிலான பொலித்தீன் குகைகள்" மற்றும் வீட்டுத்தோட்ட அலகுகளில் தாழ் நாட்டு பிரதேசங்களில் மலைநாட்டு காய்கறிகளை பயிரிடுவதற்காக ஏற்கனவே உருவாக்கப்பட்ட இணையத்தில் விடயங்கள் அடிப்படையிலமைந்த பாதுகாக்கப்பட்ட வீட்டு தன்னியக்கமாக்க முறையினை தரமுயர்த்தல்
மானிய இலக்கம் : TD/2020/COVID/AG/01
மானியம் பெற்றவர் : கலாநிதி. கே. கே. எல். பி. அதிகாரம், கணினிப் பிரிவு, விவசாய பீடம், ருகுணைப் உருகுணைப் பல்கலைக்கழகம்

இலங்கையில் திருத்தியமைக்கப்பட்ட வளைவு (குவிமாடம்/பீப்பாய் வடிவிலான) பாதுகாக்கப்பட்ட இல்லங்கள் பல பிரதேசங்களில் பயன்படுத்தப்படுகின்றன. நடுத்தர அளவிலான பொலித்தீன் குகைகள்" மற்றும் வீட்டுத்தோட்ட அலகுகளில் தாழ் நாட்டு பிரதேசங்களில் மலைநாட்டு காய்கறிகளை பயிரிடுவதற்காக ஏற்கனவே உருவாக்கப்பட்ட இணையத்தில் விடயங்கள் அடிப்படையிலமைந்த பாதுகாக்கப்பட்ட வீட்டு தன்னியக்கமாக்க முறையினை தரமுயர்த்தலை இக்கருத்திட்டம் இலக்காகக் கொண்டது. முழுமையாக மூடப்பட்ட பொலித்தீன் நாரிழைகள் காரணமாக வெப்பமேற்றப்பட்ட காற்று குடையின் உட்பகுதியில் சுழல்கின்றது. கட்டுப்படுத்தப்பட்ட சூழலின் கீழ் தாழ் நாட்டு பிரதேசங்களில் மலைநாட்டு காய்கறிகளை (சலாது கெக்கரி, கோவா, குடைமிளகாய் மற்றும் பூ கோவா) என்பவற்றை பயிரிடுவதன் மூலம் காய்கறி வழங்கல் சங்கிலிக்கான தீர்வு மற்றும் அறுவடைக்கு பிந்திய இழப்புகளில் ஏற்படும் வீழ்ச்சியில் குறைவு என்பன இந்த கருத்திட்டத்தின் முக்கிய வெளிவரு விளைவாக இனங்காணப்பட்டுள்ளது.

மானியத் தலைப்பு : சூழல் சிநேகமிக்க விவசாயத்தினுடாக காய்கறி உற்பத்திக்கான உயிரியல் வளமாக்கிகள்
மானிய இலக்கம் : TD/2020/COVID/AG/02
மானியம் பெற்றவர் : பேராசிரியர் ஆனந்த குலன்சூரிய, தேசிய அடிப்படை கற்கைகள் நிறுவனம்

தேசிய விஞ்ஞான மன்றமானது முக்கிய உற்பத்திகளாக இரண்டு உயிரியக்க உலைகளை இறக்குமதி செய்யும் செலவில் பாதிக்கும் குறைவான விலையில் உள்நாட்டில் உருவாக்கியுள்ளது, ஒன்று தேசிய விஞ்ஞான மன்றமானது (30லீ) கொள்ளவு மற்றொன்று சாரா புமியில் (300லீ) கொள்ளவு உடன் காணப்படுகின்றன. இவ் உயிரியக்க உலைகள் இரு நிறுவனங்களிலும் உயிரியல் வளமாக்கி உற்பத்தியின் இயலளவை கணிசமாக அதிகரித்தன. தேசிய விஞ்ஞான மன்றம் மூலம் அதிக உற்பத்திகள் சோயா அவரை, பயறு, போஞ்சி மற்றும் நிலக்கடலை போன்ற பருப்பு வகை காய்கறிகளுக்கு தடுப்புமருந்து வழங்குவதற்கும் சாரா புமி பீஎல்சி மூலம் அரிசி, சோளம் மற்றும் பருப்பு அல்லாத பல காய்கறிகளுக்கு நுண்ணுயிரியல் தடுப்பு மருந்தாகவும் மற்றும் பூச்சிகள் மற்றும் நோய்க்கிருமிகளுக்கு எதிரான உயிர்-கட்டுப்பாட்டு முகவர்களுக்கு பல நுண்ணுயிர் தடுப்புமருந்துகளையும் வழங்க அதிக உற்பத்திகள் உதவுகின்றன.

மானிய இலக்கம் : TD/2020/COVID/HS/01
மானியம் பெற்றவர் : பேராசிரியர் காமினி ராஜபக்ஷ, விஞ்ஞான பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம்

முகக்கவசம் மற்றும் வடிக்கும் பொருட்களின் வடித்தல் இயலளவினை அளவிடும் பொருட்டும் COVID - 19 நோய்த்தொற்றினை வெற்றிகொள்வதற்கு பாதுகாப்பாக பயன்படுத்தக்கூடிய முகக்கவச வகைகளை இனங்காண்பதற்கும் குறைந்த செலவில் துணிக்கைகளை வடிக்கும் பகுப்பாய்வினை உருவாக்குவதை இக்கருத்திட்டம் நோக்காக கொள்கின்றது. முகக்கவசங்கள் ஊடாக துணிக்கை வடித்தலை அளவிடுவதற்கு தானியக்கமாக்கப்பட்ட சாதனமொன்று உருவாக்கப்பட்டது. தேவையான அளவின் ஒற்றையாக சிதறிய கூல்மநிலை துணிக்கைகளை பயன்படுத்தி வடித்தல் செம்மையாக அளவிடப்படக்கூடியதாகும்.

காலநிலை மாற்றம் மற்றும் இயற்கை அனர்த்தங்கள் மீதான தேசிய ஆய்வுப் பொருள் சார்ந்த ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டம்

தேசிய ஆராய்ச்சிப் பொருள் சார்ந்த ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டமானது தேசிய அபிவிருத்திக்காக நன்மையடையக்கூடிய மற்றும் பிரயோகிக்கப்படக்கூடிய நன்கு வரைவிலக்கணம் செய்யப்பட்ட ஆராய்ச்சிப் பெறுபேறுகளை உருவாக்குவதற்காக தேசிய ஆராய்ச்சி முறைமையினை இயக்குவதற்கும் தேசிய தேவைகளை நிறைவு செய்யும் நோக்கத்துடனும் பணியை நோக்காக கொண்ட பல்துறைசார் கூட்டு முயற்சி ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டமொன்றாக எண்ணக்கருவாக்கப்பட்டதாகும். அதற்கமைய, 2010 இல் தேசிய விஞ்ஞான மன்றம், தேசிய ஆராய்ச்சி கருப்பொருள் சார்ந்த ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டம் என்ற பெயரில் புதிய ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டத்தினை தொடங்குவதற்கு நடவடிக்கைகளை எடுத்தது. தேசிய முன்னுரிமைகளுக்கமைவாக ஆய்வுக் கருப்பொருட்கள் தீர்மானிக்கப்பட்டன. உணவுப் பாதுகாப்பு, காலநிலை மாற்றம் மற்றும் இயற்கை அனர்த்தங்கள், நீர்ப்பாதுகாப்பு, சக்திப் பாதுகாப்பு மற்றும் சமுத்திரம் மற்றும் கடல்சார் வளங்கள் என்பவற்றை தேசிய விஞ்ஞான மன்றம் அடையாளப்படுத்தியது. அனுபவத்தின் அடிப்படையிலும் நிறைவு செய்யப்பட்ட உணவு பாதுகாப்பு நிகழ்ச்சி திட்டம், காலநிலை மாற்றம் மற்றும் இயற்கை அனர்த்தங்கள் நிகழ்ச்சித்திட்டம் என்பவற்றின் வெற்றியின் அடிப்படையிலும் கணித்தல் மற்றும் ஏற்றதாகிக் கொள்ளல் முன்முயற்சிகள் என்ற இரண்டையும் உள்ளடக்கி 05 ஆராய்ச்சி மானியங்களின் வழங்களுடன் இது 2018இல் தொடங்கப்பட்டது. காலநிலை மாற்ற தாக்கங்கள் நீண்டதூரம் சென்று இலங்கை பொருளாதாரத்தின் பல துறைகளையும் பாதிப்பதுடன் நாட்டின் சனத்தொகையின் ஒவ்வொரு வகுப்பினரையும் தொடுகின்றது. இவ் 05 கருத்திட்டங்களும் வயதடைந்த சனத்தொகை மற்றும் பெருந்தோட்டதுறை, வீட்டுத்தோட்டம், இயற்கை மூலவளங்கள் மற்றும் இலங்கையின் எதிர்கால காலநிலை என்பன மீது காலநிலை மாற்றத்தின் தாக்கத்தினை ஆய்வு செய்வதுடன் பாதிக்கப்படக்கூடியவர்களின் அளவு, இனங்காணப்பட வேண்டிய இடர்நேர்வு மற்றும் கணிப்பு அத்துடன்/ அல்லது ஏற்றதாகிக் கொள்ளும் வழிமுறைகள் என்பவற்றுக்கான சாத்தியமான கொள்கை மட்ட ஆராய்ச்சி பெறுபேறுகளை உருவாக்குகின்றன. இந்நிகழ்ச்சித்திட்டத்தினுடாக நன்மையடையக்கூடிய அறிவியலாளர்களும் நிறுவனங்களும் கீழே காட்டப்பட்டுள்ளனர்.



வரைபடம் 13: தேசிய ஆராய்ச்சி கருப்பொருள் சார்ந்த ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டம் ஊடாக நன்மையடைந்த அறிவியலாளர்களும் நிறுவனங்களும்

இது வரையிலும் 12 சமதகுதியுடையோர் மீளாய்வுசெய்த வெளியீடுகளும் 39 தொடர்பூட்டல்களும் உருவாக்கப்பட்டுள்ளதுடன் 18 பட்டதாரி பட்டம் பெற்றோர் முன்னெடுக்கப்படும் மானியங்களுடாக தமது ஆராய்ச்சிக் கூறுகளை மேற்கொண்டுள்ளனர். இதற்கு மேலதிகமாக, 09 பட்டப்பின்படிப்பு பட்டங்கள் (02 தத்துவமானி மற்றும் 07 தத்துவ முதுமானி) இக்கருத்திட்டங்களுடாக நிறைவு செய்யப்பட்டுள்ளன. கருத்திட்டங்களின் ஏனைய முக்கிய பெறுபேறுகளும் பங்களிப்புகளும் இதுவரை அடையப்பெற்றவையும்:

கருத்திட்ட தலைப்பு :

இலங்கையின் அயன மழைக் காடுகளின் காபன் சமநிலை மற்றும் உயிர் பல்வகைமை மீது எதிர்கால காலநிலை தாக்கத்தின் முன்கணிப்பிற்கான மாறுபடுகின்ற வளிமண்டல வெப்பநிலைக்கு அவற்றின் எதிர்வினை பற்றிய அளவீடு.

வெளிவருவிளைவுகள்/பெறுபேறுகள் :

- இவ் அயன மழைக்காட்டு காணித்துண்டுகளில் காலநிலை மற்றும் மண் நிலைமைகளை தொடர்ச்சியாக கண்காணிக்கும் நிரந்தரமாக மாதிரியெடுத்தல் தொகுதிகள் மற்றும் தானியக்கமாக்கப்பட்ட வானிலை நிலையங்கள் தொடரொன்றினை தாபித்தல். இலங்கையின் அயன மழைக்காடுகளின் அனைத்தையும் உள்ளடக்கிய காலநிலை குணாதிசயங்கள் மற்றும் அதன் எதிர்கால மாறுபாடுகளை கண்காணித்தல் என்பவற்றை இது இயலச் செய்யும்.

- இலங்கையின் அயன மழைக்காடுகளின் சுற்றாடல் ரீதியான மற்றும் தாவர குணதிசயங்கள் மீது அனைத்தையும் உள்ளடக்கிய தரவுத் தொகுதியொன்று உருவாக்கப்பட்டது. இது இறுதியாக தரவுத்தளமொன்றாக அபிவிருத்தி செய்யப்படும். இது கருத்திட்டத்தின் முதன்மை ஆராய்ச்சியாளரின் அனுமதியின் அத்துடன் முன்கூட்டிய அங்கீகாரத்தின் மீது வேறு ஆராய்ச்சியாளர்கள் மற்றும் கொள்கை வகுப்பாளர்கள் மூலம் பயன்படுத்தப்படலாம்.

- இக்கருத்திட்டத்தின் கண்டறியப்பட்டவைகள் எதிர்கால காலநிலை மாற்றத்தின் தோற்றப்பாட்டில் இலங்கையின் எஞ்சியிருக்கின்ற அயன மழைக்காடுகளின் பாதுகாப்பிற்கும் மீளமைப்பிற்கும் உபாயங்களை வகுப்பதை இயலச்செய்யும். முக்கிய ஆறுகளின் தோற்றத்திற்கு மழைவீழ்ச்சி நீரேந்தும் பகுதிகளாக இலங்கையின் மழைக்காடுகள் செயற்படுவதுடன் இதனூடாக சக்தி மற்றும் நீர்ப்பாதுகாப்புக்கான பாரிய பங்களிப்புகளுடன் சேர்த்து தேசிய விவசாய மற்றும் உணவுப் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதில் முக்கிய பங்காற்றுகின்றன. ஆகையினால், இம்முக்கிய சூழல் அமைப்பின் இருப்பினை உறுதிசெய்வதற்கு பங்களிப்பதன் மூலம் கருத்திட்டத்தின் கண்டறியப்பட்டவைகள் இலங்கையின் பரந்த வகையிலான துறைகளுக்கு நன்மை பயக்கும்.

கருத்திட்ட தலைப்பு :

இலங்கையின் வேறுபட்ட விவசாய சூழலியல் பிராந்தியங்களில் வீட்டுத் தோட்ட சூழல் அமைப்பின் காலநிலை - தாக்குப்பிடிக்கும் தன்மை உயிர்பல்வகை பற்றிய ஒப்பீட்டு பகுப்பாய்வு.

வெளிவருவிளைவுகள்/பெறுபேறுகள் :

- இலங்கையின் வேறுபட்ட சூழலியல் பிராந்தியங்களில் வீட்டுத் தோட்ட சூழல் அமைப்பின் காலநிலை தாக்குப்பிடிக்கும் தன்மை உயிர்பல்வகைமை குறிகாட்டிகள் பற்றிய ஒப்பீட்டு பகுப்பாய்வு நிறைவு செய்யப்பட்டது.

- மாதிரி (நிலைபெறத்தக்க மற்றும் தாக்குப்பிடிக்கத்தக்க) வீட்டுத் தோட்ட முறைமைகள் மீது ஆராய்ச்சி கருத்திட்டத்தின் அனைத்து முக்கிய கணக்கெடுப்பு தரவுகள் மற்றும் கண்டறியப்பட்டவைகளை உள்ளடக்குகின்ற திறந்த பெறுவழி தரவுத்தளம் உருவாக்கப்பட்டது. சக ஆராய்ச்சியாளர்கள், கல்வியாளர்கள், மற்றும் பட்டதாரி மாணவர்கள் போன்றோர் பெறுவழிக்கான வாய்ப்பினை கொண்டிருப்பர் என்பதுடன் தமது ஆராய்ச்சி மற்றும் தரவு நோக்கங்களுக்காக இத்தரவுகளை உபயோகிப்பர்.

- இலங்கையில் வீட்டுத் தோட்ட அபிபிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களுக்காக கொள்கை மட்டத்தில் கருத்திட்டத்தில் கண்டறியப்பட்டவைகள் உருவாக்கப்பட்டன.

கருத்திட்டத் தலைப்பு :

இலங்கையில் பெருந்தோட்ட துறை மீது காலநிலை மாற்றத்தின் இடம்சார் தாக்கங்கள் பற்றிய (புவியியல், பொருளாதாரம் மற்றும் சமூகம் பாதிக்கப்படும் தன்மை) மதிப்பீடு.

வெளிவருவிளைவுகள்/பெறுபேறுகள் :

- முழுமையான காரணி உற்பத்தி திறன் மாற்றம், தொழில்நுட்ப வினைத்திறன், விளைச்சல் மற்றும்

இலாபத்தன்மை பற்றிய மிகுந்த பகுப்பாய்வொன்றினை ஈடுபடுத்தி இலங்கையின் தேயிலை மற்றும் தெங்கு பெருந்தோட்டங்களில் காலநிலை மாற்றம் மற்றும் முக்கிய செயலாற்றுகை குறிக்காட்டிகள் என்பவற்றுக்கிடையில் சிக்கலான தொடர்பு ஆய்வு செய்யப்பட்டது.

- தேயிலை கைத்தொழில் மீது விசேடமாக குறைந்தபட்ச மற்றும் உயர்ந்தபட்ச வெப்பநிலை முரண்பாடுகளின் அதேபோன்று மழைவீழ்ச்சி முரண்பாடுகளின் பின்னணியில் காலநிலை மாற்றத்தின் சாத்தியமான தாக்கம் பற்றிய பெறுமதியான உள்நோக்கு கண்டறியப்பட்டது.

- தேயிலைத் துறையில் உயர்ந்தபட்ச வெப்பநிலை மற்றும் மழைவீழ்ச்சி முரண்பாடுகள் மொத்த காரணி உற்பத்தி திறன் மாற்றத்தை எதிர்மறையாக செல்வாக்கு செலுத்துவதில் முக்கிய பங்காற்றுகின்றன என்பதனை பகுப்பாய்வு வெளிப்படுத்தியது.

- தெங்கு துறையில் குறைந்தபட்ச வெப்பநிலை மற்றும் மழைவீழ்ச்சி முரண்பாடுகள் கணிசமாக பங்களித்து மொத்த காரணி உற்பத்தி திறன் மீது ஒட்டுமொத்த எதிர்மறை காலநிலை மாற்ற தாக்கத்தினை கண்டறிந்தது.

கருத்திட்ட தலைப்பு :

இலங்கையின் பருவப் பெயர்ச்சி மாறுபடுதன்மை மீது இந்து சமுத்திர வெப்பக்குளம் மற்றும் இந்தசமுத்திர இருமுனைக் காற்றின் என்பவற்றின் நீண்டகால செல்வாக்கினை புரிந்து கொள்ளுதல.

வெளிவருவிளைவுகள்/பெறுபேறுகள் :

- கடந்த 100,000 ஆண்டுகளில் இந்து சமுத்திரத்தில் கடல் மேற்பரப்பு வெப்பநிலை மாற்றங்களை மீள் கட்டமைத்தல்.
- இந்து சமுத்திர சூடான தொகுதி மற்றும் இந்து சமுத்திர இருதுருவ மாறுபடும் தன்மை இக்காலம் முழுவதும் இனங்காணப்பட்டது.
- இலங்கை தென்மேற்கில் கடந்த 80,000 ஆண்டுகளுக்கு மேல் மழைவீழச்சி வேறுபாடு மீள் கட்டமைக்கப்பட்டது.
- இந்து சமுத்திரத்தில் மழைவீழ்ச்சி மாறுபாடு மற்றும் கடல் மேற்பரப்பு வெப்பநிலை மாறுபாடு என்பவற்றுக்கிடையிலான தொடர்பு இனங்காணப்பட்டது.
- கடந்தகால மாறுபாட்டின் அடிப்படையில் சாத்தியமான எதிர்கால மழைவீழ்ச்சி மாறுபாடு முன்கணிப்பு செய்யப்பட்டது.
- எதிர்கால காலநிலை மற்றும் சமுத்திர மாதிரியமைத்தலுக்காக தரவு தளமாக பயன்படுத்தக்கூடிய தரவுத் தொகுதிகள் உருவாக்கப்பட்டன.
- நாட்டிலும் பிராந்தியத்திலும் எதிர்கால ஆராய்ச்சிக்கான வலுவான தளமொன்றினை இவ்வாய்வின் வெளிவரு விளைவு வழங்குகின்றது. இது இறுதியாக தெற்காசிய பிராந்தியத்தில் பாரிய சனத்தொகை மீது மானிடவியல் உலகளாவிய வெப்பமாதலின் செல்வாக்கினை குறைப்பதற்கு உதவும்.
- இலங்கையில் நுண்புவி உயிரியல் பவளம் மற்றும் பாறை அடிப்படையிலான நுண்புவி உயிரியல் ஆராய்ச்சி தொடங்கப்பட்டது.
- உருகுணைப் பல்கலைக்கழகத்தின் கடல்சார் புவிச்சரிதவியல் துறையில் கடல்சார் புவிச்சரிதவியல ஆராய்ச்சி ஆய்வுகூடம் உருவாக்கப்பட்டது.

கருத்திட்ட தலைப்பு : நகர்பிரதேசங்களில் வாழ்கின்ற வயோதிபர்களின் வெப்ப அழுத்தம், வாழ்க்கைத்தரம் மற்றும்

நலனோம்புகை : கொழும்பு பெருநகர பிராந்தியத்தில் குறைந்த வருமான குடியிருப்புக்களில் இடம்பெறுகின்ற வயதடைகின்றவர்கள் பற்றிய பரீட்சார்த்த ஆய்வு.

வெளிவருவிளைவுகள்/பெறுபேறுகள் :

- இளம் வயதுமுதிர்ந்த (60-74 வருடங்கள்) சனத்தொகைக்கான ஆய்வு மாதிரி தொகுப்பு, விகிதசமம் வகுக்கப்பட்டது.
  (கொழும்பு மாவட்டத்தின் கிராம சேவையாளர் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவுகள்).

- கொழும்பு பிரதேச செயலக பிரிவின் மட்டக்குளி கிராம சேவையாளர் பிரிவில் வாழ்கின்ற 220 வயது முதிர்ந்த பதிலிறுப்பாளர் பற்றிய கட்டமைக்கப்பட்ட தனிப்பட்ட வெளிப்பாடு கணக்கெடுப்பினூடாக தளத்திலான 2 பரீட்சார்த்த ஆய்வுகள் நிறைவுசெய்யப்பட்டன (முன்னோடி ஆய்வு மற்றும் கணக்கெடுப்பு).

- மட்டக்குளி கிராம சேவையாளர் பிரிவில் இளம் வயோதிபர்களின் (அதிகூடிய வயோதிபர் எண்ணிக்கையை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது) இடம்பெறுகின்ற குணாதிசயங்கள் மற்றும் வாழ்க்கைத்தரம் பற்றி மதிப்பிடுவதற்கு தரவுத்தளம்மொன்று உருவாக்கப்பட்டதுடன் இளம் வயோதிபர்கள் மத்தியில் சமூகச் சவால்கள், அணல் சௌகரியம் மற்றும் தோல் தொகுப்பு வெப்பநிலை பற்றிய விரிவான பகுப்பாய்வு.

- வெப்பரீதியாக அசௌகரியத்ததுடன் கூடிய உட்புறங்களுடன் அதாவது 38 பாகை செல்சியஸ் வாயு வெப்பநிலையுடன் கூடிய உள்ளக பகுதிகளைக் கொண்ட மிகவும் வெப்பமான வீடுகளில் வயோதிபர்கள் வாழ்கின்றனர் என்பது இதுவரையிலும் ஆய்வு செய்யப்பட்டதுடன் வயோதிப மக்களின் தோல் வெப்பநிலை 33 செல்சியல் தொடக்கம் 36.9 செல்சியஸ் வரையான ஏற்றுக்கொள்ளத்தக்க வீச்சுக்கு மேல் காணப்படுகின்றது. அவர்கள் வாழ்கின்ற விடுகள் வெப்ப அழுத்தத்துடன் கூடிய சூழலாகும். இதனால் வயோதிபர்கள் குறைந்த மட்டத்திலான வாழ்க்கைத் தரத்தினை அனுபவிக்கின்றனர்.

தேசிய விஞ்ஞான மன்றம் - சீன இயற்கை விஞ்ஞான மன்றம் : முதலாவது இணைந்த ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டம் - ஆராய்ச்சியில் கண்டறியப்பட்டவைகளை பூரணப்படுத்தல் மீதான இணைந்த நிகழ்வு

மேற்குறித்த கூட்டுமுயற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சீன ஒத்துழைப்புடன் ஆரம்பத்தில் 5 மானியங்கள் 2019 இல் வழங்கப்பட்டன. இலங்கையில் நடாத்தப்பட்ட பூரணப்படுத்தப்பட்ட ஆராய்ச்சியின் பாகத்திற்கு தேசிய தேசிய விஞ்ஞான மன்றம் நிதியளித்திருந்ததுடன் சீனாவில் பூரணப்படுத்தப்பட்ட ஆராய்ச்சி பாகத்திற்கு ஒவ்வொரு ஆராய்ச்சி மானியத்திற்குமாக சீனாவின் இயற்கை விஞ்ஞான மன்றத்தினால் நிதியளிக்கப்பட்டிருருந்தது. கூட்டுமுயற்சி ஆராய்ச்சி நிகழ்ச்சிதிட்டத்தை நிறைவுசெய்யும் நோக்கத்திற்காக கலப்பான முறையில் 2023 செப்டெம்பர் 05 அன்று சீனாவின் இயற்கை விஞ்ஞான மன்றத்துடனான ஒத்துழைப்புடன் IAD மற்றும் RD மூலம் இணைந்த நிகழ்வொன்று ஏற்பாடு செய்யப்பட்டது. நிகழச்சிநிரல் பின்வருமாறு அமைந்திருந்தது *(வரைபடம் 14)*.



Joint event on disseminating research findings of the NSF-NSFC
1st Joint research programme

Date: 05 September 2023
Time: 09.00 a.m. to 11.40 a.m.*
Mode: Hybrid meeting

Provisional Programme

09.00 a.m. Welcome and Opening Remarks
(Dr Sepalika Sudasinghe, Director General, NSF, Sri Lanka)

09.05 a.m. Welcome and Opening Remarks
(Prof. Zhang Yongtao, Acting Director General, Bureau of International Cooperation, NSFC)

09.10 a.m. Introductions to this collaborative research programme
(Dr Li Wencong, Director, Division of Asia, Africa and International Organizations, Bureau of International Cooperation, NSFC)

09.15 a.m. Four Presentations by the Principal Investigators of the Joint Research Projects and Remarks (per each project)

1. Enrichment mechanisms of CKDu-risk factors in groundwaters, their uptake pathways and potential remedies (SL Presentation)
2. Corresponding Chinese Presentation
3. Assessment of aquifer quality in relation to chronic kidney disease with unknown aetiology in Dry zone of Sri Lanka through an integrated approach using isotopes and water chemistry
4. Corresponding Chinese Presentation
5. Membrane fouling mechanism and control of high-pressure membrane processes (NF/RO) and electrodialysis (ED) purifying groundwater with DOM and high hardness in CKDu affected areas of Sri Lanka
6. Corresponding Chinese Presentation
7. Novel urinary biomarkers for early detection of Chronic Kidney Disease of Unknown Aetiology (CKDu) in Sri Lanka
8. Corresponding Chinese Presentation

Moderators: Dr Indra Jandisinghe/Ms Sumudu Gunasekara, Scientific Officer, Research Division, NSF, Mr Xiaohe Rong, Programme Officer, Division of Asia, Africa International Organizations, Bureau of International Cooperation, NSFC (20 minutes per project – 10 minutes for the Sri Lankan PI and 10 minutes for the Chinese PI to present on key results/output and the potential impact).]

10.45 a.m. Q and A and Discussion

11.25 a.m. Overall Summary of Projects
(Eng. Mahesh Dissanayake, Head, Research Division, NSF, Sri Lanka)

11.35 a.m. Concluding Remarks
(Dr Shantha Siri, Head, International Affairs Division, NSF, Sri Lanka)

11.40 a.m. Concluding Remarks
(Prof. Zhang Yongtao, Acting Director General, Bureau of International Cooperation, NSFC)

11.45 a.m. End

(*Time mentioned here are Sri Lanka standard time).
Compere: Mr Xiaohe Rongh, Programme Officer, Division of Asia, Africa and International Organizations, National Natural Science Foundation of China)

வரைபடம் 14 : NSF-NSFC கூட்டுத் திட்டத்தின் 1வது கூட்டு நிகழ்வின் நிறைவு அமர்வின் நிகழ்ச்சி நிரல்

இந்த கூட்டுத் திட்டமானது 1 தத்துவ மானி, 7 தத்துவ முதுமானி, 15 SCIE வெளியீடுகள், 4 SCIE அல்லாத வெளியீடுகள், 3 புத்தக அத்தியாயங்கள் மற்றும் 17 தகவல் தொடர்புகள் ஆகியவற்றினை விளைவாக தந்தது. மானியம் ஒன்றில் இருந்து ஒரு காப்புரிமையும் சமர்ப்பிக்கப்பட்டது.



வரைபடம் 15: தேசிய விஞ்ஞான மன்றத்தின் பணிப்பாளர் நாயகம் டாக்டர் செபாலிகா சுதாசிங்க நிகழ்வில் உரையாற்றல்



வரைபடம் 16: சீன ஆராய்ச்சி குழுக்கள் மற்றும் NSFC அதிகாரிகள்

சீனாவின் தேசிய இயற்கை விஞ்ஞான மன்றம் (NSFC) மற்றும் தேசிய விஞ்ஞான மன்றம் ஆகியவற்றுக்கு இடையே சர்வதேச ஒத்துழைப்பை வலுப்படுத்துதல்

இருதரப்பு ஒத்துழைப்பைத் தொடர சீன மக்கள் குடியரசின் தேசிய இயற்கை விஞ்ஞான மன்றம் (NSFC) பெறப்பட்ட அழைப்பின் பேரில், தேசிய விஞ்ஞான மன்றம் சாத்தியமான பங்குதாரர்களுடன் பல நடவடிக்கைகளை ஏற்பாடு செய்தது.

தேசிய இயற்கை விஞ்ஞான மன்றம் மற்றும் தேசிய விஞ்ஞான மன்றம் ஆகியவற்றுக்கு இடையேயான புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ் முதல் இருதரப்பு அழைப்பு செப்டம்பர் 2023 இல் வெற்றிகரமாக முடிவடைந்தது. தேசிய இயற்கை விஞ்ஞான மன்றமானது நிலையான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பில் புதிய பரிமாணத்தில் இருதரப்பு ஒத்துழைப்பைத் தொடர தேசிய விஞ்ஞான மன்றத்திற்கு அழைப்பு விடுத்தது. இதனைத்தொடர்ந்து,தேசிய விஞ்ஞான மன்றமானது தேசிய இயற்கை விஞ்ஞான மன்றத்துடன் இரண்டாவது இருதரப்பு அழைப்பிற்கான புதிய பௌதீக மற்றும் நிதி மாதிரியை உருவாக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது.

புதிய முயற்சிக்கான சாத்தியமான பங்காளிகளை அடையாளம் காண்பதற்காக தேசிய விஞ்ஞான மன்றமானது , இலங்கை முதலீட்டு சபை, இலங்கை, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகால் சபை, தொழில் பங்காளர்கள் மற்றும் சீனாவின் நிபுணர்களுடன் டிசம்பர் 2022 மற்றும் ஜூன் 2023 இல் ஆரம்ப கலந்துரையாடல்களினை நடத்தியது.

சீன அறிவியல் கழகத்தின் (CAS) பேராசிரியர் யுவான்சோங் வெய் மற்றும் பேராசிரியர் தியான் பிங்குய் ஆகியோர் சீனாவில் சுற்றுச்சூழல் தொழில் பூங்காவின் விருத்தி குறித்த தங்கள் நிபுணத்துவத்தைப் பகிர்ந்து கொண்டனர்.

ஆரம்ப கலந்துரையாடலுக்கு பிறகு, இலங்கை சார் பிரதிநிதிகள் அடங்கிய குழு ஒன்று 2023 செப்டம்பரில் சீனாவில் உள்ள பல தொழில் பூங்காக்களுக்குச் விஜயம் செய்தது. இந்த விஜயமானது, தொழில் பூங்காக்களின் நிகழ்நேர செயல்பாடுகள் மற்றும் அவற்றின் மேம்பாடுகளை பற்றி அறிந்துக்கொள்ள பிரதிநிதிகளுக்கு உதவியது. அதன்பிறகு, டிசம்பர் 2023 இல் மேற்கு மற்றும் மத்திய மாகாணங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட முதலீட்டு சபை வலயங்களுக்கு சீன நிபுணர்கள் விஜயம் செய்தனர்.



வரைபடம் 17: சீன அதிகாரிகளுடன் இடம் பெற்ற முதலாவது கலந்துரையாடல்



வரைபடம் 18: சீன அதிகாரிகளின் இரண்டாவது விஜயம்



வரைபடம் 19: சீனாவில் பீஜீங் எனும் நகருக்கு தேசிய விஞ்ஞான மன்ற அதிகாரிகள் விஜயம்



வரைபடம் 20: இலங்கை முதலீட்டு சபை வலயங்களுக்கு கள விஜயம்

தேசிய விஞ்ஞான மன்றத்தின் பங்குடமை திட்டம்

"தேசிய விஞ்ஞான மன்றத்தின் பங்குடமை திட்டம" 2021 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது, தேசிய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி கட்டமைப்பிற்கு இணங்க, பொது மற்றும் தனியார் துறை நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் தேசிய அளவில் முக்கியமான பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட்டது.

இலங்கையில் பத்திக் தொழிலின் தரத்தை மேம்படுத்துதல்

தேசிய வடிவமைப்பு மையம் (NDC), இலங்கை கட்டளைகள் நிறுவனம் (SLSI) மற்றும் தேசிய கைவினை கவுன்சில் (NCC) ஆகியவற்றுடன் இணைந்து இலங்கை பத்திக் துறையின் தரத்தை மேம்படுத்த நல்ல உற்பத்தி வழிகாட்டியை (GMP) உருவாக்க தேசிய விஞ்ஞான மன்றம் ஆதரவளித்தது. பொருளாதாரம். GMP வழிகாட்டுதலானது, SLS 1770:2023 அமைய வெளியிடப்பட்டுள்ளது. இது, இலங்கை பத்திக ஏற்றுமதிச் சந்தையை மேம்படுத்துவதற்கும், சுற்றாடல் பிரச்சினைகளைக் குறைப்பதற்கும், பத்திக் உற்பத்தித் தொழிலில் ஈடுபடும் மக்களின் தொழில் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதற்கும் இந்த வழிகாட்டி உதவும்.

இத்திட்டத்தின் கீழ் பின்வரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

- தேசிய வடிவமைப்பு மையத்துடன் மூளைக்கு வேலை கொடுக்கும் அமர்வு. புயல் (இந்த அமர்வில் SLSI, NCC மற்றும் நுகர்வோர் பொருட்கள் பகுப்பாய்வுஆய்வகங்கள் மற்றும் பத்திக் உற்பத்தியாளர்கள் பங்குதாரர்களாக அடையாளம் காணப்பட்டனர்).
- மேற்கு மாகாணத்தில்வெவ்வேறு உற்பத்தி அளவுகளில். தேர்ந்தெடுக்கப்பட்ட பத்திக் உற்பத்தியாளர்களுக்கான கேள்வித் தொகுப்பு.
- சேகரிக்கப்பட்ட தரவுகளின் பகுப்பாய்வு.
- பத்திக் உற்பத்தியாளர்களுக்கு "பத்திக் தொழிற்துறையில் இரசாயனங்களினை பாதுகாப்பாக பயன்படுத்தல்" குறித்த இரண்டு விழிப்புணர்வு கருத்தரங்குகள்.
- பத்திக் தயாரிப்புகளுக்கான சான்றிதழ் முறையை உருவாக்குவது தொடர்பாக அரச மற்றும் அரசு சாரா நிறுவனங்களுடன் (NDC, NCC, SLSI மற்றும் நிறுவனங்கள்) (இரண்டு முன்னோடி தனியார் தொழில்கள்) நான்கு பங்குதாரர் சந்திப்புகளினை முன்னெடுத்தல்.
- பத்திக் துறையில் பொதுவாகப் பயன்படுத்தப்படும் இறக்குமதி செய்யப்பட்ட சாயங்கள் மற்றும் மெழுகுகள் பற்றிய தகவல் சேகரிப்பு.
- வீடு, நடுத்தர மற்றும் பெரிய அளவில் வெவ்வேறு செயலாக்க நிலைகளை அடையாளம் காண, பத்திக் தொழில்துறைக்கு மூன்று கள விஜயங்கள் மேற்கொள்ளப்பட்டன.


SRI LANKA STANDARD 1770: 2023

GUIDELINES ON GOOD MANUFACTURING PRACTICES (GMP) FOR THE BATIK INDUSTRY

SRI LANKA STANDARDS INSTITUTION

- தேசிய வடிவமைப்பு மையத்துடன் மூளைக்கு வேலை கொடுக்கும் அமர்வு. புயல் (இந்த அமர்வில் SLSI, NCC மற்றும் நுகர்வோர் பொருட்கள் பகுப்பாய்வுஆய்வகங்கள் மற்றும் பத்திக் உற்பத்தியாளர்கள் பங்குதாரர்களாக அடையாளம் காணப்பட்டனர்).



வரைபடம் 21: கள விஜயத்தின் போது அவதானிக்கப்பட்ட பத்திக் உற்பத்தி செயன்முறையின் பல்வேறு கட்டங்கள்

தேசிய கருவிகள் தரவுத்தளம் (NID)

https://nid.nsf.gov.lk



நாட்டின் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பத் துறையில் முதன்மையான மைய நிறுவனமாக தேசிய விஞ்ஞான மன்றமானது, இருப்பதனால் நாடு முழுவதும் உள்ள பல்கலைக்கழகங்கள், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மற்றும் பொதுத்துறை நிறுவனங்களுடன் உள்ள அதன் வலையமைப்பைப் பயன்படுத்தி, அந்த நிறுவனங்களில் கிடைக்கும் கருவிகளின் அதிநவீன டிஜிட்டல் தரவுத்தளத்தை உருவாக்கியுள்ளது இத் தளமானது இக்கருவிகள் உயர்நிலை வினைத்திறனுடன் பயன்படுத்தப்படுவதனை உறுதி செய்வதுடன் தேவையற்ற நகலெடுப்பைத் தவிர்ப்பதோடு மட்டுமல்லாதுஇ பயனர் நட்பு, குறைந்த செலவுஇ பகுப்பாய்வு மற்றும் சோதனை செய்வதற்கான வசதிகளினையும் வழங்குகிறது, அத்துடன் தேவையான ஆய்வக வசதிகள் மற்றும் தொழில்நுட்ப நிபுணத்துவம் இல்லாத கல்வி, ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனங்கள் மற்றும் வணிகங்களுக்கு, குறிப்பாக நுண், சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் ஆகியவற்றிற்கான ஆராய்ச்சி ஆதரவையும் வழங்குகிறது. தற்போது அபிவிருத்தி செய்யப்பட்டு வரும் இந்த தேசிய கருவி தரவுத்தளத்தை (NID) மேம்படுத்த, தனியார் துறை ஆய்வகங்கள் உட்பட பல்கலைக்கழகங்கள் மற்றும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனங்களின் பிரதிநிதிகளுடன் தேசிய விஞ்ஞான மன்றம் இணைந்து பணியாற்றுகின்றது.இன்றுவரை, 61 பல்கலைக்கழகங்கள் மற்றும் நிறுவனங்கள், 397 பயனர்கள் தம்மை இதில் பதிவு செய்துள்ளனர். தரவுத்தளத்தில் 253 தயாரிப்பு வகைகள், 487 ஆய்வகங்கள் மற்றும் 1,120 கருவிகளின் பதிவுகள் பற்றிய தகவல்கள் உள்ளன.



இந்த முயற்சியானதுஇ தேசிய அளவில் அங்கீகரிக்கப்படும் அதே வேளையில், இலங்கையின் வெளிநாட்டு விவகாரங்களுக்கான அலுவலகமானதுஇ 2023 செப்டம்பரில் சனாதிபதி செயலகத்தின் சார்பில் பல அமைச்சுக்களுக்கு கடிதம் ஒன்றை வெளியிட முன்வந்தது. இக்கடிதத்தில், ஒவ்வொரு அமைச்சுகளிடம் உள்ள கருவிகள் பற்றிய விபரங்களினை தேசிய விஞ்ஞான மன்றத்துடன் பகிர்ந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டிருந்தது. தேசிய விஞ்ஞான மன்றத்தின் NID-ஐ வலுப்படுத்துவதற்காக நிறுவனங்களிலிருந்து தேவையான தகவல்களைப் பெறுவதற்கு இந்த மூலோபாய தலையீடு முக்கியமானதாக இருக்கும். மேலும், NID-யின் பயனர் புள்ளிவிவர அறிக்கைகளின்படி, 2023 ஆம் ஆண்டில் ஒன்பது நாடுகளைச் சேர்ந்த மக்கள் தரவுத்தளத்தை அணுகியுள்ளனர். NID-யின் தகவல்களைப் புதுப்பித்தல் மற்றும் மேம்படுத்துதல் பணியானது வெற்றிகரமாகத் தொடர்கிறது.



நாடு	பயனர்
இலங்கை	807
சீனா	74
ஐக்கிய அமெரிக்க அரசு	61
இந்தியா	17
சிங்கப்புர்	17
ஜேர்மனி	11
ஐக்கிய இராஜியம்	11
இந்தோனேசியா	8
யுப்பான்	8

நிகழ்ச்சித்திட்டம் - விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப சிறப்பிற்கான அங்கீகாரத்தை வழங்குதல்

ஆராய்ச்சி திட்டங்களினை கண்காணிப்பதற்கான ஆதரவுத் திட்டம் (SUSRED)

செயற்றிறன் மிக்க ஆராய்ச்சி கலாச்சாரத்திற்குள் பயிற்சி பெற்ற மற்றும் தகுதி வாய்ந்த ஆராய்ச்சி பணியாளர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதன் மூலம் தேசிய ஆராய்ச்சி அமைப்பை வலுப்படுத்தும் எதிர்பார்ப்புடன் தேசிய விஞ்ஞான மன்றமானது 2011 ஆம் ஆண்டில் ஆராய்ச்சி பட்டங்களினை கண்காணிப்பதற்கான ஆதரவு திட்டத்தை (SUSRED) செயல்படுத்தியது, விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்தின் அனைத்துப் பிரிவுகளிலும் ஆராய்ச்சிகளினை மேற்கொள்ளும் மாணவர்களை மேற்பார்வையிடுவதில் ஈடுபட்டுள்ள விஞ்ஞானிகள்/ பொறியாளர்களை ஊக்குவித்தல், ஆதரித்தல் மற்றும் அங்கீகரித்தல் போன்ற செயற்பாடுகளாவன அவர்களுக்கு பட்டப்பின்படிப்பு பட்டங்களினை பெற்றுக்கொள்வதற்கு வழிவகுக்கும் (MPhils மற்றும் PhDs).

நிகழ்ச்சித்திட்டத்தின் குறிக்கோள்களாவன:

முதுகலை ஆராய்ச்சி பட்டங்களை கண்காணிக்க சிரேட்ட ஆராய்ச்சியாளர்களை ஊக்குவித்தல்.

- பல்கலைக்கழகங்கள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களுக்கு பட்டப்பின்படிப்பு ஆராய்ச்சி பயிற்சியை ஊக்குவித்தல் மற்றும் எளிதாக்கல்.
- தரத்திற்கு எதுவித பாதிப்பும் ஏற்படுத்தாது நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் பட்டப்பின்படிப்பு ஆராய்ச்சி பட்டங்கள் தொடர்பிலான செயற்பாடுகளினை நிறைவு செய்ய மேற்பார்வையாளர்களை ஊக்குவித்தல்.

இந்த வருடம் 93 ஆராய்ச்சியாளர்களைக் உள்ளடக்கிய 42 மேற்பார்வைக் குழுக்கள் (வரைபடம் 22) இந்தத் திட்டத்தின் கீழ் விருதுகளுக்கு (பிஎச்டி - 20 விருதுகள், எம்பில் - 22 விருதுகள்) தகுதியுடையவராகின்றனர். விருது வென்றவர்களின் விவரங்கள் இணைப்பு 06 இல் கொடுக்கப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், விருது விண்ணப்பங்களை பரிசீலிக்கும் பணிகள் நிறைவடைந்த போதிலும், இந்த ஆண்டு விருது வழங்கும் விழா இன்னும் நடத்தப்படவில்லை.



வரைபடம் 22: நிறுவனங்களிடையே SUSRED விருது பெற்றவர்களினை பகிர்தல்

ஆராய்ச்சிக்கு புலமை பரிசில்

இலங்கை பட்டதாரிகளுக்கு எம்பில் மற்றும் பிஎச்டி பட்டங்களினை பெறுவதற்காக முழுநேர ஆராய்ச்சியை மேற்கொள்வதற்கு (இலங்கைக்குள்) தேசிய ஆராய்ச்சி மன்றமானதுஇ ஆராய்ச்சிக்கு புலமை பரிசில் திட்டத்தின் ஊடாக நிதி உதவி வழங்குகிறது, 2023 நவம்பரில், இந்தத் திட்டத்திற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டன, அதனைத்தொடர்ந்து பெறப்பட்ட 63 விண்ணப்பங்கள் தற்போது பரிசீலிக்கப்பட்டு வருகின்றன.

நடப்பில் முன்னெடுக்கப்படுகின்ற ஐந்து (05) ஆராய்ச்சி புலமை பரிசில்கள் கண்காணிக்கப்பட்டன (இணைப்பு 02), அவற்றில் மூன்று (03) ஆராய்ச்சி புலமை பரிசில்கள் 2023 ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்பட்டன. (இணைப்பு 04). அவற்றின் மூலம் இரண்டு எம்பில் பட்டங்களும் ஒரு பிஎச்டி பட்டங்கள் பெறப்பட்டன. நிறைவு செய்யப்பட்ட மூன்று ஆராய்ச்சி ஆராய்ச்சி புலமை பரிசில்களிலிருந்து மொத்தம் இருபத்திரெண்டு (22) வெளியீடுகள் (17 தகவல் தொடர்புகள் மற்றும் 05 முழு ஆவணங்கள்) கிடைக்கப்பெற்றன.

இடைவெளயியினை நிரப்பும் ஆராய்ச்சி மானியங்கள் (GapF) புதிய ஆராய்ச்சி மானியத் திட்டம்

மானிய எண் : RG/GAPF/2021/EB/01
முதன்மை ஆய்வாளர் : டாக்டர் ஐ ஆர் எம் கோட்டேகொட, கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம்
கருத் திட்ட தலைப்பு : உயர் மதிப்பு திரவியமாக ஆக்குவதற்கு இலங்கையின் கிராபைட்டை சுத்திகரித்தல்

99.9% க்கும் அதிகமான கிராபைட்டை சுத்திகரிக்கும் தொழில்நுட்பத்தை வணிக ரீதியாக மேம்படுத்துவதையும், பொருளாதார சாத்தியக்கூறுகளைக் கருத்தில் கொண்டு கிராபைட் சுத்திகரிப்பு தொழில்நுட்பத்தின் அறிவை அக மட்டத்திலான தொழில்துறைக்கு மாற்றுவதையும் இந்த திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்த கருத் திட்டம் 2022 சனவரியில் தொடங்கப்பட்டது. திட்டத்தின் முதல் 6 மாதங்களில், கருத் திட்டக் குழு, பௌதீகவியல் முறையைப் பயன்படுத்தி குறைந்த தர கிராபைட்டை 99% க்கும் அதிகமான அளவிற்கு சுத்திகரிக்கும் முறைக்கு மேம்படுத்த உதவியது. குறைந்த தர கிராபைட்டை சுத்திகரிக்க ஒரு கருவியும் அமைக்கப்பட்டதுடன் அந்த முறைக்கு காப்புரிமையும் பெறப்பட்டது. இரண்டாவது 6 மாத காலப்பகுதியில் ,கருவி மேலும் மாற்றியமைக்கப்பட்டதுடன் அந்த புத்தாக்கத்திற்கும் காப்புரிமை பெறப்பட்டது.
“தேசிய புத்தாக்குனர் தினம” 2023 மற்றும் சஹசக் நிமவும் 2023 ஆகிய கொண்டாட்டங்களின் போது ஆராய்ச்சி குழு பின்வரும் விருதுகளைப் பெற்றது

- 40% க்கும் குறைவான குறைந்த தர கிராபைட்டை 98-99% கார்பனாக நிறை அளவில் மாற்றும் கருவி மற்றும் முறைக்கான DASIS விருது - தேசிய புத்தாக்குனர் தின கொண்டாட்டங்கள் 2023.
- மேற்கண்ட கண்டுபிடிப்புக்கான தங்கப் பதக்கம் - சஹசக் நிமவும் 2023.
- சில நிமிடங்களில் கிராப்பின் மற்றும் கிராப்பின் ஆக்சைடைத் குறைத்து அவற்றினை அதிக அளவில் தயாரிக்கும் கருவி மற்றும் முறைக்கான தங்கப் பதக்கம் - சஹசக் நிமவும் 2023.
- உயர்நிலை பயன்பாடுகளுக்கு ஏற்ப 99.99% வரை மதிப்பு கூட்டப்பட்ட ஒரு திரவியமாக இயற்கை கிராபைட்டை சுத்திகரிக்கும் முறைக்கான வெள்ளிப் பதக்கம்.



வரைபடம் 23: 2023 தேசிய புத்தாக்குனர் தின கொண்டாட்டத்தில் DASIS விருதை வென்ற ஆராய்ச்சி குழு.

எல்லைக்கடந்த நிகழ்ச்சித்திட்டங்கள்

இந்திய-இலங்கை கூட்டு ஆராய்ச்சி திட்டம் குறித்த கருத்தரங்கு

தேசிய விஞ்ஞான மன்றமானது, கல்வி அமைச்சுடன் இணைந்து, இந்திய-இலங்கை கூட்டு ஆராய்ச்சி திட்டம் குறித்த இரண்டாவது கருத்தரங்கை ஜனவரி 20, 2023 அன்று இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவனத்தின் சங்கதானி வரவேற்பு கூடத்தில், ஏற்பாடு செய்தது. கல்வி அமைச்சின் செயலாளர் திரு. எம். என். ரணசிங்க மற்றும் இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகராலயத்தின் முதல் செயலாளர் (கல்வி) திரு. விவேக் குப்தா ஆகியோர் நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர். நிறுவனத் தலைவர்கள், அமைச்சக அதிகாரிகள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் தேசிய விஞ்ஞான மன்றத்தின் ஊழியர்கள் அடங்கிய குழுவினரை தேசிய விஞ்ஞான மன்றத்தின் பணிப்பாளர் நாயகமான டாக்டர் சேபாலிகா சுதசிங்க அவர்கள் வரவேற்று, இந்திய-இலங்கை திட்டத்தின் பின்னணி குறித்து ஒரு சுருக்கமான குறிப்பையும் வழங்கினார்.

இந்த கருத்தரங்கானதுஇ 2017 ஆம் ஆண்டு கையெழுத்திடப்பட்ட ஒத்துழைப்புத் திட்டத்தின் (PoC) விளைவாகும், இதில் இந்தியா மற்றும் இலங்கையைச் சேர்ந்த ஆராய்ச்சி குழுக்கள் உணவு தொழில்நுட்பம், தாவர அடிப்படையிலான மருத்துவம், அளவியல், விண்வெளி ஆராய்ச்சி மற்றும் பயன்பாடுகள், மனித எந்திரவியல் மற்றும் தன்னியக்கவாக்கம், தொழில்துறை மின்னணுவியல் மற்றும் கழிவு முகாமைத்துவம் போன்ற தேசிய அளவில் பிரதான இடத்தினை வகிக்கும் ஆராய்ச்சித் துறைகளில் கூட்டிணைந்து செயல்பட்டன. இந்த ஆராய்ச்சி முயற்சிகளின் விளைவாக, 28 சஞ்சிகை வெளியீடுகள், 211 மாநாட்டு ஆவணங்கள் மற்றும் 21 சுருக்கங்களுடன் 17 திட்டங்களாவன வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டன. மேலும் இரு நாடுகளின் விஞ்ஞானிகளும் ஆராய்ச்சியாளர்களும் அறிவு மற்றும் ஆராய்ச்சி அனுபவத்தைப் பகிர்ந்து கொள்வதன் மூலம் பயனடைந்தனர்.

இந்த கருத்தரங்கானது, பெற்றுக்கொள்ளப்பட்ட புதிய அறிவை பங்குதாரர்களுடனும் விஞ்ஞான சமூகத்துடனும் பகிர்ந்து கொள்வதற்கான ஒரு தளத்தை உருவாக்கியது. இந்த கருத்தரங்கில் பதினைந்து விஞ்ஞானிகள் தங்கள் ஆராய்ச்சி முடிவுகளை முன்வைத்தனர், மேலும் இந்த கருத் திட்டங்களின் எதிர்காலம் குறித்து மூன்று பேர் கொண்ட குழு ஒன்று கலந்துரையாடியது. பேராசிரியர் அஜித் டி அல்விஸ் தலைமையிலான இக்குழுவின் ஏனைய உறுப்பினர்கள் பேராசிரியர் தம்மிகா தந்திரிகோடா மற்றும் டாக்டர் ஏ. எம். முபாரக் ஆகியோர் ஆவார்கள். இது தொடர்பிலான தொடர் நடவடிக்கைகள் நடந்து வருகின்றன.



வரைபடம் 24: தேசிய விஞ்ஞான மன்றத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி சேபாலிகா சுதசிங்க அவர்கள் பங்கு பெறுனர்களினை வரவேற்றல்



வரைபடம் 25: கல்வி அமைச்சின் செயலாளர் திரு. எம். என். ரணசிங்க அவர்கள் பங்கு பெறுனர்களுக்கு உரை நிகழ்த்தல்



வரைபடம் 26: இந்திய உயர் ஸ்தானிகராலயத்தின் முதல் செயலாளர் (கல்வி) திரு. விவேக் குப்தா, அவரகள் மானியம் பெறுபவர்களுக்கு சான்றிதழ்களை வழங்குகிறார்.



வரைபடம் 27: அதிதிகள் மற்றும் ஏற்பாட்டுக் குழுவுடன் கருத்தரங்கில் பங்கேற்பாளர்கள்

இலங்கையின் தொழில்துறை துறையில் மதிப்புச் சங்கிலி பகுப்பாய்விற்கான துறை சார்ந்த சந்திப்புக்கள்

2023 ஆம் ஆண்டில் பிளாஸ்டிக் பொருட்கள் உற்பத்தித் தொழில், மட்பாண்டங்கள் மற்றும் பீங்கான் தொழில், உணவுத் தொழில் மற்றும் ஜவுளித் தொழில் ஆகியவற்றின் பிரதிநிதிகளுடன் நான்கு தனித்தனி துறை சார்ந்த சந்திப்புக்கள் நடத்தப்பட்டன.

இது, தேசிய விஞ்ஞான மன்றத்தின் தொழில்நுட்ப அபிவிருத்தி மற்றும் புத்தாக்க பிரிவின் கீழ், தொழில் துறை அபிவிருத்தி குறித்த பணிக்குழுவினது செயல்பாட்டின் தொடர்ச்சியாகும். நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் பெரும் பங்களிப்பை வழங்கும் பல தொழில் துறைகளை பணிக்குழு அடையாளம் கண்டுள்ளது (2021 ஆம் ஆண்டின் மத்திய வங்கி அறிக்கை மற்றும் வேறு சில ஆதாரங்களின் அடிப்படையில்). நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கும் தொழிற் துறைகளை இந்தக் குழு ஆய்வு செய்தது. ஆய்வுக்கு அமைய, தேசிய பொருளாதாரத்திற்கு பங்களிக்க கூடிய தொழிற்துறைகளினை இந்த பணிக்குழு இனம் கண்டதுடன், விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மூலம் தீர்க்கப்படக்கூடிய ஏதேனும் இடைவெளிகள் அல்லது சிக்கல்களை அடையாளம் காண இந்த தொழிற்துறைகளின் மதிப்புச் சங்கிலிகளை இப்பணிக்குழு பகுப்பாய்வு செய்தது, அவ்வாறு செய்வதன் மூலம், தேசிய பொருளாதாரத்திற்கு பயனளிக்கும் வகையில் இந்தத் துறைகளுக்கு மதிப்பைச் சேர்ப்பதை பணிக்குழு தன் நோக்கமாகக் கொண்டுள்ளது. விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்தை முன்னேற்றுவதற்கும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியினை எளிதாக்கவும் தேசிய விஞ்ஞான மன்றம் தன் ஆதரவினை வழங்கும். குறிப்பிட்ட மதிப்புச் சங்கிலிகளில் உள்ள சிக்கல்களைப் பற்றி கலந்துரையாடவும் பகுப்பாய்வு செய்யவும் தீர்வுகளைக் கண்டறியவும் துறை சார்ந்த சந்திப்புக்கள் நடத்தப்பட்டன. மதிப்புச் சங்கிலி பகுப்பாய்வு செயல்முறை பின்வரும் செயல்பாடுகளை உள்ளடக்கியது:

1) பொருளாதாரம் மற்றும் சமூகத்திற்கான பங்களிப்பின் பகுப்பாய்வு
2) ஒவ்வொரு துணைத் துறை சார்ந்த மதிப்புச் சங்கிலியின் பகுப்பாய்வு
3) தமது மூளையின் ஆற்றலினை கொண்டு தீர்வுகளினை கண்டுபிடித்தலும் அவற்றினை பொதுமைப்படுத்துதலும்
4) ஒவ்வொரு துறைக்கும் நிபுணர் கருத்தைப் பெற சந்திப்புக்களினை நடத்துதல்
5) பங்குதாரர் கருத்தரங்குகளை நடத்துதல்
6) நிபுணர்களுடன் தொடர் கூட்டங்கள் (தேவைப்படும்போது)

இறுதி கட்டமாக, இந்தக் சந்திப்புக்கள் மற்றும் முந்தைய ஆண்டில் நடைபெற்ற பிற துறைசார் சந்திப்புக்களின் முடிவுகளிலிருந்து ஒரு அறிக்கை தயாரிக்கப்படும்.

சான்றுகள் அடிப்படையில் தீர்வுகளினை எடுக்கும் நிகழ்ச்சித்திட்டம்: ஆராய்ச்சிகளை செயலில் நடைமுறைப்படுத்தல்

செயலில் நடைமுறைப்படுத்தும் பயிற்சியாளர்களிடம் ஆராய்ச்சியை கொண்டு செல்லும் போது அந்த ஆராய்ச்சி தொடர்பிலான தகவல்களினை பரப்புதல் மிக முக்கியமானது என்பதை தேசிய விஞ்ஞான மன்றம் கண்டறிந்ததனைத் தொடர்ந்து 2023 ஆம் ஆண்டில் சான்றுகள் அடிப்படையில் தீர்வுகளினை எடுக்கும் நிகழ்ச்சித்திட்டம்: ஆராய்ச்சிகளை செயலில் நடைமுறைப்படுத்தும் திட்டத்தைத் தொடங்கியது. இந்த திட்டத்தின்

முதல் அமர்வாக, சுகாதார விஞ்ஞான ஆராய்ச்சி திட்டத்திலிருந்து (RPHS) சில நிறைவு செய்யப்பட்ட திட்டங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன. டெங்கு ஆராய்ச்சியை நோக்கமாகக் கொண்டதும் RPHS இன் கீழ் நிறைவு செய்யப்பட்டதுமான ஐந்து ஆராய்ச்சி திட்டங்கள் செப்டம்பர் 12, 2023 அன்று நடைபெற்ற முதல் சந்திப்பின் போது கலந்துரையாடப்பட்டன. ஆராய்ச்சியாளர்கள் தமது ஆராய்ச்சி தொடர்பில் பெற்றுக்கொள்ளப்பட்ட முக்கிய ஆராய்ச்சி முடிவுகளை சுகாதார அமைச்சக அதிகாரிகளிடம், குறிப்பாக டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு ஊழியர்களிடம் வழங்கினர். கல்வி அமைச்சக அதிகாரிகளும் இந்தக் சந்திப்பில் பங்கேற்றதுடன், இந்தக் கண்டுபிடிப்புகளை எவ்வாறு முன்னோக்கி எடுத்துச் செல்ல வேண்டும் என்பது குறித்து தங்கள் உள்ளீடுகளை வழங்கினர்.

இரண்டாவது சந்திப்பானது, RPHS திட்டத்தின் மானியதாரர்களில் ஒருவரால் உருவாக்கப்பட்ட “செயலூக்கமிக்க டெங்கு முகாமைத்துவ அமைப்பு” (Proactive Dengue Managment System) ஐப் பிரயோகிப்பதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து கலந்துரையாட, டிசம்பர் 12, 2023 அன்று தேசிய விஞ்ஞான மன்றத்தின் கேட்போர் கூடத்தில் டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவுடன் நடைபெற்றது. இவ்விடயம் தொடர்பில் சுகாதார அமைச்சிடமிருந்து கிடைத்த பதில் நேர்மறையானதாக இருக்கவில்லை, எனினும் டெங்குவினை கட்டுப்படுத்தல் மற்றும் டெங்கு முகாமைத்துவம் தொடர்பில் பல சிறப்பம்சங்கள் இந்த அமைப்பில் இருப்பதனால் இந்த அமைப்பானது பயனுள்ளதாக இருக்கும் என தேசிய விஞ்ஞான மன்றம் அபிப்பிராயப்பட்டதனால் முழுமையாக இந்த அமைப்பைப் பயன்படுத்துவது குறித்து மறுபரிசீலனை செய்யுமாறு தேசிய விஞ்ஞான மன்றம் அவர்களுக்கு பரிந்துரைத்தது.



வரைபடம் 28: செப்டம்பர் 12 ஆம் திகதி இடம்பெற்ற முதல் சந்திப்பு - பார்வையாளர்கள் விளக்கக்காட்சிகளைக் அவதானித்தல்.



வரைபடம் 29: புத்தகத்தின் முன்அட்டை



வரைபடம் 30: 2023 செப்டம்பர் 12 ஆம் திகதி இடம்பெற்ற இரண்டாவது சந்திப்பில் பங்கு பெறுனர்கள் கலந்துரையாடல்

கைத்தொழில் மற்றும் பெருந்தோட்டத் தொழில்கள் அமைச்சுகளுடன் கலந்துரையாடல்

செப்டம்பர் 25, 2023 அன்று பெருந்தோட்டத் தொழில்கள் அமைச்சில், "தொழில்துறை விருத்திக்கு விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க தலையீடுகள" எனும் பொருள் குறித்து, தொழில்துறை மற்றும் பெருந்தோட்டத் தொழில்கள் அமைச்சின் கௌரவ அமைச்சர்இஅமைச்சினை சார்ந்த அலுவலர்கள் மற்றும் அமைச்சின் பிரிவுகளினை சார்ந்த நிறுவனத் தலைவர்களுக்கு ஆராய்ச்சிப் பிரிவு ஒரு விளக்கக்காட்சியை வழங்கியது. தொழில் துறையின் ஆராய்ச்சித் தேவைப்பாடுகளுக்கு தேவையான சேவைகளினை வழங்குதல் குறித்தும் மற்றும் ஆராய்ச்சி வெளியீடுகளை வணிகமயமாக்குவதற்கு தேசிய விஞ்ஞான மன்றம் மற்றும் அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களை எவ்வாறு இணைப்பது என்பது குறித்தும் கலந்துரையாடப்பட்டது. பெருந்தோட்டப் பயிர்களிலிருந்து, குறிப்பாக இலங்கை தேயிலையிலிருந்து மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களை விருத்தி செய்வதற்கும் அதன் மூலம், அதிக சர்வதேச சந்தை வாய்ப்புகளைப் பெறுவதற்கும், விஞ்ஞான,தொழில்நுட்ப மற்றும் புத்தாக்கத்தின் தலையீட்டின் தேவையை கௌரவ அமைச்சர் வைத்தியர் ரமேஷ் பத்திரண அவர்கள் வலியுறுத்தினார். தேசிய விஞ்ஞான மன்றத்தினை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் இந்தக் கூட்டத்தில், ஆராய்ச்சிப் பிரிவின் தலைவரும் மற்றும் பொறியாளருமான மகேஷ் திசாநாயக்க மற்றும் திரு. மனுஜ கருணாரத்ன ஆகியோர் கலந்து கொண்டனர்.

பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மையத்தின் (CDRD) அதிகாரிகளுக்கு ஆராய்ச்சி மானிய முகாமைத்துவம் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம்

அனைத்து அமைச்சுக்கள் மற்றும் அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களுக்கு, தேசிய விஞ்ஞான மன்றமானது, ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி துறையில் தேசிய விஞ்ஞான மன்றத்துடன் இணைந்து பணியாற்ற வாய்ப்பளிக்கும் வகையில் அனுப்பப்பட்ட தகவலுக்கு பதிலளிக்கும் விதமாக, ஹோமகம, பிடிபனவில் உள்ள பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மையமானது (CDRD), தங்கள் வளாகத்தில் ஒரு சந்திப்பிற்கு தேசிய விஞ்ஞான மன்றத்தினை அழைத்தது. இந்தச் சந்திப்பானது 2023, அக்டோபர் 3 திகதியன்று நடைபெற்றது, மேலும் தேசிய விஞ்ஞான மன்றத்தினை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் மன்றத்தினை சார்ந்த பொறியாளர் மகேஷ் திசாநாயக்க {தலைவர்/ஆராய்ச்சி பிரிவு (RD)}, திருமதி கிறிஸ்டின் தசநாயக்க (SSO/RD) மற்றும் கலாநிதி இனோகா சந்தநாயக்க (SO/RD) ஆகியோர் கலந்து கொண்டனர். பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மையமானது, அதனால் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள், அவர்களின் சாதனைகள் மற்றும் தேசிய விஞ்ஞான மன்றத்திடமிருந்து அவர்கள் எதிர்பார்ப்பது என்ன என்பவை குறித்து அறிமுகப்படுத்துகை உரையை வழங்கியது. தேசிய விஞ்ஞான மன்றத்தினால் இரண்டு அறிமுகப்படுத்துகை உரைகள் வழங்கப்பட்டன, ஒன்று தேசிய விஞ்ஞான மன்றம் மற்றும் அதன் செயல்பாடுகள் பற்றி திருமதி தசநாயக்கவும், மற்றையது மானிய முகாமைத்துவம், மதிப்பாய்வு மற்றும் மதிப்பீட்டு செயல்முறைகள் குறித்து டாக்டர் சந்தநாயக்கவும் வழங்கினர். பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மையத்தின் பணிப்பாளர் நாயகம் மேஜர் ஜெனரல் ஆர். எல்விடிகலா, தலைமை கட்டுப்பாட்டாளர் ஜிபி. கேப்டன் ஏ. எஸ். எலகொட, முதல் பதவி நிலை உத்தியோகத்தர் லெப்டினன்ட் கேணல் ஏ. எல். ஆர். பி. அமரசிங்க மற்றும் பல அதிகாரிகள் இந்த சந்திப்பில் கலந்து கொண்டனர்.

கலந்துரையாடல் அமர்வுக்குப் பிறகு, மானிய முகாமைத்துவ அறிவு மற்றும் தொடர்புடைய ஆவணங்களை பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மையத்துடன் பகிர்ந்து கொள்ளவும், எதிர்கால ஒத்துழைப்புகளுக்காக தேசிய விஞ்ஞான மன்றம் மற்றும் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மையத்திற்கு இடையே ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட ஏற்பாடு செய்யவும் ஒப்புக்கொள்ளப்பட்டது.



வரைபடம் 31: பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மையத்தினது அதிகாரியால் வழங்கப்பட்ட அறிமுகப்படுத்துகை உரைகள்.



வரைபடம் 32: சந்திப்பில் பங்கேற்கும் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மையத்தினை சார்ந்த சில அதிகாரிகள்.



வரைபடம் 33: பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மையத்தினது பணிப்பாளர் நாயகத்துடனான கலந்துரையாடலின் போது.



வரைபடம் 34: பயிற்சி மையத்தைப் பார்வையிடுதல்

“ஆராய்ச்சி மானியங்களைப் பெற்றுக்கொள்ளும் செயன்முறையில் எவ்வாறு வெற்றி பெறுவது” என்பது குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம்

கம்பஹா விக்கிரமாராச்சி சுதேச மருத்துவப் பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி மன்றத்தின் அழைப்பின் பேரில், பல்கலைக்கழகத்தின் நிரந்தர கல்வி பதவியினருக்கான வெளிப்புற/உள் ஆராய்ச்சி மானியங்களைப் பெறுவதற்கான தரமான முன்மொழிவுகளை உருவாக்குவது குறித்து பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட ஒரு வதிவு திட்டத்திற்கான வள நபராக ஆராய்ச்சிப் பிரிவின் விஞ்ஞானவியல் அதிகாரி கலாநிதி இனோகா சந்தாநாயக்க பங்கேற்றார். இந்த நிகழ்ச்சித்திட்டம் 2023 அக்டோபர் மாதம் 12 ஆம் திகதி கொழும்பு 07 இல் உள்ள ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவகத்தில் நடைபெற்றது.

பல்கலைக்கழக வணிக இணைப்பு அலகுகளுடன் (UBLs) தேசிய விஞ்ஞான மன்றத்தினை இணைப்பதற்கான ஆரம்ப நடவடிக்கைகள்

பல்கலைக்கழக வணிக இணைப்பு அலகுகளுடனான வலையமைப்பில் சேருவதற்கான சாத்தியக்கூறுகளை அடையாளம் காண, பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு (UGC) 2023 நவம்பர் மாதத்தில் கூட்டிய பல்கலைக்கழக வணிக இணைப்பு அலகுகளுடனான நிலைக்குழு கூட்டத்தில் ஆராய்ச்சிப் பிரிவின் பொறியாளர் மகேஷ் திசாநாயக்க மற்றும் கலாநிதி மகேஷ் நடுகல ஆகியோர் இணைந்தனர். பங்கேற்பாளர்களுடன் நிறுவனம் பற்றிய சுருக்கமான அறிமுகத்துடன் மானியத் திட்டங்கள் குறித்த தகவல்களை தேசிய விஞ்ஞான மன்றம் பகிர்ந்து கொண்டது. கலந்துரையாடல்களின் போது பொதுவான ஆர்வமுள்ள பகுதிகள் அடையாளம் காணப்பட்டு கலந்துரையாடப்பட்டன.

இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப பீடத்தில் விழிப்புணர்வு கருத்தரங்கு

ரஜரட்ட பல்கலைக்கழக தொழில்நுட்ப பீடத்தில் பட்டம் பயிலும் மாணவர்கள் மற்றும் கல்வியாளர்களுக்காக தேசிய விஞ்ஞான மன்றத்தினால் வழங்கப்படும் ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்ப மானியங்கள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி 2023 டிசம்பர் 18 மற்றும் 19 ஆகிய திகதிகளில் நடைபெற்றது.

தேசிய விஞ்ஞான மன்றத்தின் பதவியணியினர் பின்வரும் தலைப்புகளில் உரையாற்றினர்.

- தேசிய விஞ்ஞான மன்றத்தினை பற்றிய அறிமுகம் வழங்கப்படல்: தேசிய RDI சுற்றுச்சூழல் அமைப்பு வலுப்படுத்தப்படல். எனும் பொருள் தொடர்பில் உரையானது ஆராய்ச்சிப் பிரிவின் தலைவர் பொறியாளர் மகேஷ் திசாநாயக்க அவர்களால் ஆற்றப்படல்.

- வெற்றிபெறும் வகையில் ஒரு ஆராய்ச்சி முன்மொழிவை எவ்வாறு எழுதுவது: தேசிய விஞ்ஞான மன்றத்தின் போட்டிக்கான ஆராய்ச்சி மானியங்கள், இடைவெளி-F மானியங்கள், ஆராய்ச்சி புலமை பரிசில்கள் எனும் பொருள் தொடர்பில் உரையானது ஆராய்ச்சிப் பிரிவின் விஞ்ஞானவியல் அதிகாரி கலாநிதி இனோகா சந்தநாயக்க அவர்களால் ஆற்றப்படல்.

- வெற்றி பெறும் வகையில் ஒரு தொழில்நுட்ப முன்மொழிவை எவ்வாறு எழுதுவது: தேசிய விஞ்ஞான மன்றத்தின் தொழில்நுட்ப மானியங்கள் - தொழில்நுட்ப-D மற்றும் தொடக்கநிலை எனும் பொருள் தொடர்பில் உரையானது திருமதி சரணி மெனெரிபிட்டிய, விஞ்ஞானவியல் அதிகாரி, ஆராய்ச்சிப் பிரிவு அவர்களால் ஆற்றப்படல்.



- ஆராய்ச்சிகளினை வணிகமயமாக்கல் (ஆய்வகத்திலிருந்து சந்தை வரையில்), TRL; , புத்தாக்கம்/ நிறுவனம், எனும் பொருள் தொடர்பில் உரையானது பொறியாளர் மகேஷ் திசாநாயக்க, ஆராய்ச்சிப் பிரிவின் தலைவர் அவர்களால் அவர்களால் ஆற்றப்படல்.

- தேசிய விஞ்ஞான மன்றத்தில் ஆராய்ச்சியாளர்களுக்குக் கிடைக்கும் வசதிகள் மற்றும் சேவைகள், எனும் பொருள் தொடர்பில் உரையானது ஆராய்ச்சிப் பிரிவின் விஞ்ஞானவியல் அதிகாரி கலாநிதி இனோகா சந்தாநாயக்க அவர்களால், ஆற்றப்படல்.



தொழில்நுட்ப அபிவிருத்தி மற்றும் புத்தாக்க பிரிவின் (TDIA) கீழ் உணவுப் பாதுகாப்பு குறித்த பணிக்குழுவின் "இலங்கையில் உணவு உட்கொள்ளளில் பாதுகாப்பை உறுதி செய்தல்: உணவுமுறை சார்ந்த பழக்கவழக்கங்களும் மற்றும் தொடர்புடைய அபாயங்களும்" என்ற தலைப்பில் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகளினை உள்ளடக்கிய ஒரு அறிக்கையானது தேசிய விஞ்ஞான மன்றத்தின் இணையதளத்தில் வெளியாகியது. ஆவணமானது பின்வரும் தலைப்புகளை உள்ளடக்கியதாக அமைந்தது.

- உணவுப் பாதுகாப்பு மற்றும் இலங்கையின் சூழ்நிலை
- சிக்கல்கள் மற்றும் விசனங்கள்
- பரிந்துரைகள்

நான்காவது தொழில்துறை புரட்சியில் (4IR) கவனம் செலுத்துதல்

நான்காவது தொழில்துறை புரட்சியானது பிரதானமாக அதன் மேம்பட்ட தொழில்நுட்பங்களால் இயக்கப்படுகிறது. இந்த 4IR இனை தமது பண்பாக கொண்ட தொழில்நுட்பங்கள் மக்களின் வாழ்க்கையை மாற்றுவதற்கு காரணமாகின்றன. எனவே, இலங்கை சூழலுக்கு இந்த மேம்பட்ட தொழில்நுட்பங்களின் பொருந்தக்கூடிய தன்மை குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக தேசிய விஞ்ஞான மன்றத்தினால் புனை மெய்யாக்கம்: (AI) மற்றும் வளரும் நாடுகளில் அதன் வாய்ப்புகள்" எனும் பொருள் தொடர்பில் ஒரு இணையக் கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டது. மெல்போர்ன் பல்கலைக்கழகத்தின் மின் இயந்திரவியல் மற்றும் உள்கட்டமைப்பு பொறியியல் பாடசாலையின் இயந்திர பொறியியல் துறையின் பேராசிரியர் சமன் ஹல்கமுகே வளவாளராகப் பணியாற்றினார். 180 க்கும் மேற்பட்ட பங்கேற்பாளர்களின் பங்கேற்புடன் இந்த கருத்தரங்கு வெற்றிகரமாக நடத்தப்பட்டது



புனை மெய்யாக்கம் ("AI மற்றும் வளரும் நாடுகளில் அதன் வாய்ப்புகள்") எனும் பொருள் தொடர்பில் ஒரு இணையக் கருத்தரங்கு

தேசிய விஞ்ஞான மன்றத்தின் பணிப்பானை ஆ) விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப தகவகளினை பரப்புதல்

விஞ்ஞான ஆராய்ச்சிகளின் வெளியீடு

2023 ஆம் ஆண்டில், இதழ்கள் வெளியீட்டுப் பிரிவானது ஐந்து இதழ்களை (04 JNSF இதழ்கள் மற்றும் ஒரு SLJSS இதழ்) வெளியிடுவதன் மூலமும், வருடாந்திர அமர்வின் கருப்பொருள் கருத்தரங்கு கையேடு மற்றும் நடவடிக்கைகளை வெளியிட ஒரு தொழில்முறை அமைப்பை ஆதரிப்பதன் மூலமும் தகவல் பரவல் தொடர்பில் அதன் கட்டாய செயல்பாட்டைத் தொடர்ந்தது.

தேசிய விஞ்ஞான மன்றத்தின் இதழ் (JNSF)

2023 ஆம் ஆண்டில், இதழ்கள் வெளியீட்டுப் பிரிவானது ஐந்து இதழ்களை (04 JNSF இதழ்கள் மற்றும் ஒரு SLJSS இதழ்) வெளியிடுவதன் மூலமும், வருடாந்திர அமர்வின் கருப்பொருள் கருத்தரங்கு கையேடு மற்றும் நடவடிக்கைகளை வெளியிடுவதன் ஊடாக ஒரு தொழில்முறை அமைப்பை ஆதரிப்பதன் மூலமும் தகவல் பரவல் தொடர்பில் அதன் கட்டாய செயல்பாட்டைத் தொடர்ந்தது.

இந்த சஞ்சிகையானது Directory of Open Access Journals (DOAJ), EBSCO பயன்பாட்டு விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் Source Ultimate, Journal TOCs மற்றும் SafetyLit. போன்ற நான்கு புதிய தரவுத்தளங்கள் உள்ளடங்கலாக இப்போது Clarivate Analytics Scientation Index Expanded (SCIE), இரசாயன மற்றும் உயிரியல் சாராம்சங்கள், BIOSIS (வாழ்க்கை முறை) Previews, விலங்கியல் பதிவுகள், SCOPUS, TEEAL,Ulrich's, AGRICOLA, EBSCOhost ஆகியவற்றில் அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது.



வரைபடம் 35: 2023 ஆம் ஆண்டில் தேசிய விஞ்ஞான மன்ற இதழில் காட்டப்பட்ட சிறப்பான விடயங்கள்

திருத்துதல் செயல்முறை பற்றிய கண்ணோட்டம்

திருத்துதல் செயல்முறையின் செலவை ஈடுகட்ட, வெளிநாட்டு எழுத்தாளர்களிடமிருந்து 20 அமெரிக்க டாலர் கட்டுரை செயலாக்க கட்டணம் (APC) உட்பட வெளியீட்டு கட்டணம் 250 அமெரிக்க டாலர்களாக அதிகரிக்கப்பட்டுள்ளது. 2023 ஆம் ஆண்டில், மொத்த சமர்ப்பிப்புகளில் 22% வீழ்ச்சி காணப்பட்டது. குறிப்பாக வெளிநாட்டு சமர்ப்பிப்புகளில் குறிப்பிடத்தக்க குறைவு காணப்பட்டது, இதற்கு, மொத்த கட்டுரை செயலாக்கக் கட்டணம் அறிமுகப்படுத்தப்பட்டதாலும் வெளியீட்டு கட்டணம் 250 அமெரிக்க டாலர்களாக அதிகரித்ததாலும் இது ஏற்பட்டிருக்கலாம். நுண்நோக்களுக்கு பிறகு சக மதிப்பாய்வுக்குத் தகுதியான வெளிநாட்டு கட்டுரை சமர்ப்பிப்புகளின் சதவீதம் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் (முறையே 81 & 82%) அதுபோலவே இருந்தது குறிப்பிடத்தக்கது, கட்டுரை செயலாக்க கட்டணத்தின் அறிமுகம் மற்றும் பக்கக் கட்டணங்கள் அதிகரிப்பு காரணமாக தரமற்ற கையெழுத்துப் பிரதிகளின் சமர்ப்பிப்பு 2023 ஆம் ஆண்டில் குறைந்துள்ளது.



வரைபடம் 36: 2023 ஆம் ஆண்டில் தேசிய விஞ்ஞான மன்ற இதழுக்கு சமரப்பிக்கப்பட்ட கையெழுத்துப் பிரதிகளின் விவரங்கள்



வரைபடம் 37: 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் தேசிய விஞ்ஞான மன்ற இதழுக்கு சமரப்பிக்கப்பட்ட ஆக்கங்களினை ஒப்பிடல்



வரைபடம் 38: தேசிய விஞ்ஞான மன்றத்தின் இதழினது 51 வது தொகுதியினது நான்கு இதழ்கள்

எழுத்தாளர்களின் பகிர்வு

2023 ஆம் ஆண்டில் தேசிய விஞ்ஞான மன்ற இதழில் வெளியிடப்பட்ட எழுத்தாளர்களினது ஆக்கங்கள் 247 இல் 184 (74%) இலங்கை எழுத்தாளர்களினால் எழுதப்பட்டவை. இவற்றுள் 30 ஆக்கங்கள் அக பல்கலைக்கழகங்கள்/ ஆராய்ச்சி நிறுவனங்கள் மற்றும் அரசுத் துறைகளைச் சேர்ந்தவர்களால் எழுதப்பட்டவை. மீதமுள்ள 26% வெளிநாட்டு எழுத்தாளர்கள், அவர்களில் பெரும்பான்மையானவர்கள் ஆசிய கண்டத்தைச் சேர்ந்தவர்கள் (23%). வெளிநாட்டு எழுத்தாளர்களில் இந்திய எழுத்தாளர்களே (11%) ஆதிக்கம் செலுத்துகின்றனர். வெளிநாட்டு எழுத்தாளர்கள் ஒரே வகையான பல்கலைக்கழகங்கள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களுடன் (30) இணைக்கப்பட்டவர்கள் ஆவார்கள், அதே நேரத்தில் அதிக எண்ணிக்கையிலான பங்களிப்பு நிறுவனங்கள் இந்தியாவைச் சேர்ந்தவை ஆகும்.



வரைபடம் 39: தொகுதி 51 தொடர்பில் இன்எழுத்தாளர்களின் புவியியல் பரவல்

இலங்கை எழுத்தாளர்கள் சார்ந்த இடங்களினை கருத்தில் கொள்ளும்போது, அதிக பங்களிப்பை வழங்கியவர்கள் பல்கலைக்கழகங்களைச் (75%) சேர்ந்த எழுத்தாளர்கள் ஆவார்கள். பேராதனை பல்கலைக்கழகம் (15%) இரு்ஹுணு பல்கலைக்கழகம் (14%), ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலைக்கழகம் (12%), மொரட்டுவ பல்கலைக்கழகம் (8%) மற்றும் களனி பல்கலைக்கழகம் (8%). பேராதனை பல்கலைக்கழகம் மற்றும் ரு்ஹுணு பல்கலைக்கழகம் ஆகியவை முன்னணி பங்களிப்பினை செய்யும் பல்கலைக்கழகங்களில் அடங்கும். வெளியிடப்பட்ட மொத்த அக கட்டுரைகளில், 25% கட்டுரைகள் ஆராய்ச்சி நிறுவனங்கள், அரசுத் துறைகள் மற்றும் தொழிற்துறை சார்ந்த எழுத்தாளர்களிடம் இருந்து பெறப்பட்டவை.



வரைபடம் 40: அக பல்கலைக்கழகங்களிலிருந்து எழுத்தாளர்களின் பங்களிப்பு

ஒற்றை மற்றும் பல் எழுத்துரிமை

படம் 05 இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி, தேசிய விஞ்ஞான மன்றத்தின் நான்கு இதழ்களில் வெளியிடப்பட்ட 93% கட்டுரைகள் பல்வேறு வகையான ஒத்துழைப்புகளுடன் பல்-எழுத்தாளர்களால் எழுதப்பட்டவையாக இருந்தன: அவையாவன சர்வதேச ரீதியிலான ஒத்துழைப்புகள் (22%), நிறுவனங்களுக்கு இடையேயான ஒத்துழைப்புகள் (34%), திணைக்களங்களுக்குள் உள்ள பிரிவுகளுக்கு இடையேயான ஒத்துழைப்புகள் (9%), மற்றும் வெவ்வேறு திணைக்களங்களுக்கு இடையேயான ஒத்துழைப்புகள் (28%), என்பனவாகும். வெளியிடப்பட்ட 54 கட்டுரைகளில், 7% ஒற்றை எழுத்தாளரால் எழுதப்பட்டதாக இருந்தன. வெளியிடப்பட்ட

கட்டுரைகளில் அக மற்றும் வெளிநாட்டு எழுத்தாளர் தொடர்பிலான புள்ளிவிவரங்களை பின்வரும் அட்டவணை 02 சித்தரிக்கிறது.

அட்டவணை 02: 2023 ஆம் ஆண்டில் பிரசுரிக்கப்பட்ட ஆக்கங்களில் அவதானிக்கப்பட்ட ஒத்துழைப்புக்கள்

ஒத்துழைப்பு வகை	அங்கீகாரம் பெற்ற ஆக்கங்களின் எண்ணிக்கை (அக)	அங்கீகாரம் பெற்ற ஆக்கங்களின் எண்ணிக்கை (வெளிநாடு)
சர்வதேச ரீதியிலானவை (02 அல்லது அதற்கு மேற்பட்டநாடுகள்)	9	3
திணைக்களங்களுக்குள் உள்ள பிரிவுகளுக்கு இடையேயானவை	5	0
நிறுவனங்களுக்கு இடையேயானவை	15	3
வெவ்வேறு திணைக்களங்களுக்கு இடையேயானவை	12	3
ஒற்றை எழுத்துரிமை	4	0



நிலையான அபிவிருத்தி இலக்குகளுடன் (SDG) இணைத்தல்

வெளியிடப்பட்ட ஒவ்வொரு கட்டுரைக்கும் தொடர்புடைய ஆராய்ச்சி வெளியீடு மற்றும் பிரதான சொற்களினை வரைபட அடிப்படையில் விவரணையாக்கம் செய்யும் போது, 2023 இல் வெளியிடப்பட்ட கட்டுரைகள் 10 நிலையான அபிவிருத்தி இலக்குகளுடன் இணைக்கப்பட்டுள்ளன. மேலும் 72% கட்டுரைகள் நான்கு நிலையான அபிவிருத்தி இலக்குகளுடன் ஒத்துப்போகின்றன: பூஜ்ஜிய பசி நிலை (17%), சிறந்த ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வு (21%), கைத்தொழில், புத்தாக்கம் மற்றும் உள்கட்டமைப்பு (19%), மற்றும் புவியில் வாழ்வு (15%).



வரைபடம் 42: நிலையான அபிவிருத்தி இலக்குகளுடன் (SDG) இணைந்தாய் 2023 ஆம் ஆண்டில் பிரசுரிக்கப்பட்ட ஆக்கங்கள் நூற்றுவீதத்தில்

உள்ளடக்கப்பட்ட விடய பரப்பெல்லையினது வகைகள்

பௌதீக விஞ்ஞானவியலுடன் தொடர்பான பாடங்களுடன் ஒப்பிடும்போது 2023 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட உயிரிவிஞ்ஞானவியல் தொடர்பான கட்டுரைகளில் கிட்டத்தட்ட 2.5 மடங்கு அதிகரிப்பு காணப்பட்டது. 2022 ஆம் ஆண்டுடன் உடன் ஒப்பிடும்போது, வேளாண்மை, மூலக்கூறு உயிரியல் மற்றும் இரசாயனவியல் ஆகிய துறைகள் தொடர்பில் பெறப்பட்ட கட்டுரைகளின் எண்ணிக்கையில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு காணப்பட்டது. 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2023 ஆம்ஆண்டில் பொறியியல், பௌதீகவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறைகளிலிருந்து பெறப்பட்ட கட்டுரைகளின் எண்ணிக்கையில் 50% வீழ்ச்சி காணப்பட்டது.



வரைபடம் 43: 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட ஆக்கங்கள் சார்ந்த துறைகள்

பணி முடிப்பு நேரத்தில் (TAT) {பணி தொடங்கப்பட்ட நேரத்திலிருந்து நிறைவு நிலை வரையிலுமான நேரத்தில்} வீழ்ச்சி

இந்த இதழுக்கு இருந்த முக்கிய சவால், சமர்ப்பிப்பிலிருந்து வெளியீடு வரையிலுமான TAT யினை அதிகரிப்பதாகும், சமர்ப்பிப்பிலிருந்து வெளியீடு வரைக்கும் அத்துடன் ஏற்றுக்கொள்ளலுக்கும் வெளியீட்டுக்கும் இடையிலான TAT (சராசரி மதிப்பு) வீழ்ச்சியானது 2021 ஆம் ஆண்டிலிருந்து முன்னேற்றி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது, மேலும் 2023 ஆம் ஆண்டில், TAT யானது அடிப்படை ஆண்டான 2020 ஆம் ஆண்டை விட 15% வீழ்ச்சியை காட்டுகிறது. SLJOL நிகழ்நிலை தளத்தின் ஊடாக 2020 ஆம் ஆண்டு முதல் சம தரத்தினர் மதிப்பாய்வு செயல்முறையைத் தொடங்கியதும் 2021 ஆம் ஆண்டில் இறுதி திருத்துதல் கட்டங்களில் மொழி மற்றும் உள்ளடக்க ஆசிரியர்களை நியமித்ததும் இந்த முன்னேற்றத்திற்கு பங்களித்துள்ளன.



வரைபடம் 44: பணி தொடங்கப்பட்ட நேரத்திலிருந்து நிறைவு நிலை வரையிலுமான நேரத்தில் (TAT) வீழ்ச்சி (2021-2023)

2022 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட கட்டுரைகள் 2023 ஆம் ஆண்டில் மேற்கோளாக எடுக்கப்படல்

2022 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட JNSF கட்டுரைகளில், 27% மான கட்டுரைகள் 2023 ஆம் ஆண்டில் அமெரிக்கா, கனடா, ஜெர்மனி, ஜப்பான், சீனா, இத்தாலி, இங்கிலாந்து, கென்யா, இந்தியா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்களால் மேற்கோளாக எடுக்கப்பட்டன. இவ்வாறு மேற்கோளாக எடுக்கப்பட்ட கட்டுரைகளாவன, உணவு விஞ்ஞானம் மற்றும் உணவுப் பாதுகாப்பில் விரிவான மதிப்புரைகள் (IF 14.8), (IF 8.9), கழிவு முகாமைத்துவம் (IF 8.1), சுற்றுச்சூழல் விஞ்ஞானம் மற்றும் சுகாதாரத்தில் தற்போதைய கருத்து (IF 8.1), விஞ்ஞானம் அறிக்கைகள் (IF 4.6), மென் கணினி (IF 4.1), மற்றும் கடல்சார் கொள்கை (IF 3.8) போன்ற பல உயர் அங்கீகாரம் பெற்ற இதழ்களிலும் ஏனைய இதழ்களிலும் வெளியிடப்பட்டுள்ளன.



இதழ் தாக்க காரணி

2023 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட கிளாரிவேட் அனலிட்டிக்ஸ் ஜர்னல் சைடேசன் அறிக்கையானது, 2010 ஆம் ஆண்டு முதல் தாக்க காரணியில் அதிகரித்து வரும் போக்கும் மற்றும் 2022 ஆம் ஆண்டு தாக்க காரணி கணக்கீட்டிற்காக மேற்கோள் காட்டக்கூடிய ஆவணங்களில் 9% அதிகரிப்பும் இருந்தபோதிலும், JNSF இனது இரண்டு ஆண்டு தாக்க காரணி 2021 இல் 0.682 இலிருந்து 2022 இல் 0.50 ஆகக் குறைந்துள்ளதாகக் தெரிவித்துள்ளது. Covid-19 தொற்றானது, மருத்துவம் மற்றும் சுகாதார விஞ்ஞானம் தொடர்பான ஆராய்ச்சியைத் தவிர ஏனைய ஆராய்ச்சிப் பகுதிகளை எதிர்மறையாகப் பாதித்துள்ளது என்று கருதப்படுகிறது, இது JNSF ஆல் உள்ளடக்கப்பட்ட பாடப் பிரிவுகள் தொடர்பில் எடுக்கப்படக்கூடிய மேற்கோள்களின் அளவை பாதித்துள்ளது என்று கருதப்படுகிறது.



வரைபடம் 45: JNSF தாக்க காரணி 2010 - 2022

புதிய தரவுத்தளங்களில் தேசிய விஞ்ஞான மன்றத்தின் இதழினை அட்டவணைப்படுத்தல்

2023 ஆம் ஆண்டில் புதிதாக அட்டவணைப்படுத்தப்பட்ட தரவுத்தளங்களில் சேர்க்கப்படுவதற்கு தேசிய விஞ்ஞான மன்றத்தின் இதழ் விண்ணப்பிக்கப்பட்டது. திறந்த அணுகல் இதழ்களின் விபரக்கொத்து (DOAJ), EBSCO பயன்பாட்டு விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப Source Ultimate, இதழ்கள் TOC கள் மற்றும் SafetyLit. ஆகியவற்றில் அட்டவணைப்படுத்தப்பட இந்த தேசிய விஞ்ஞான மன்றத்தின் இதழ பற்றுக்கொள்ளப்பட்டது.

வருமானம் பிறப்பிப்பு



2023 ஆம் ஆண்டில், தேசிய விஞ்ஞான மன்ற இதழானது வெளிநாட்டு எழுத்தாளர்களிடமிருந்து வெளியீட்டு கட்டணமாக USD 1,631 இனை பெற்றுக்கொன்ட்டது. இது இலங்கை ரூபாயில் 497,522.45 ஆகும்.

இலங்கை சமூக விஞ்ஞான இதழ (SLJSS)

இலங்கை சமூக விஞ்ஞான இதழ் (SLJSS) என்பது Scopus மற்றும் ESCI இனால் அட்டவணைப்படுத்தப்பட்டதும் 1978 ஆம் ஆண்டு முதல் தேசிய விஞ்ஞான மன்றத்தினால் வெளியிடப்பட்டதுமான ஒரு கல்வி இதழாகும். இது சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் ஆராய்ச்சி, மதிப்பாய்வு, நடைமுறையில் உள்ள கட்டுரைகள் மற்றும் புத்தக மதிப்புரைகளை வெளியிடுகிறது. இது வருடத்திற்கு இரண்டு முறை (ஜுன் மற்றும் டிசம்பர் மாதங்களில்) வெளியிடப்படுவதுடன் இலங்கை மற்றும/ அல்லது தெற்காசியாவில் சமூக விஞ்ஞானம் தொடர்பான பிரச்சினைகளில் அவதானத்தினை செலுத்துகிறது. அனைத்து கட்டுரைகளும் CC-BY-ND 4.0 Creative Commons உரிமத்தின் கீழ் திறந்த அணுகலுடன் வெளியிடப்படுகின்றன.

திருத்துதல் செயல்முறை பற்றிய கண்ணோட்டம்

2023 ஆம் ஆண்டில், நிகழ் நிலை ஊடான இலங்கையில் இதழ்களின் (SLJOL) நிகழ்நிலை தரவுத்தளம் மூலம் மொத்தம் 242 ஆக்கங்கள் பெறப்பட்டன. இவற்றில் 139 ஆக்கங்கள் நிராகரிக்கப்பட்டன, மேலும் 103 ஆக்கங்கள் மீள்நோக்கள் செயல்முறைக்கு முன்வைக்கப்பட்டன. 2022 ஆம் ஆண்டு முதல் முன்வைக்கப்பட்ட 36 மதிப்பாய்வு கட்டுரைகள் உட்பட 139 கையெழுத்துப் பிரதிகள் 2023 ஆம் ஆண்டில் மீள்பார்வை செயல்முறைக்கு உட்படுத்தப்பட்டன. இதில் 4.3% கையெழுத்துப் பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்பட்டன, 3.6% நிராகரிக்கப்பட்டன. அதன்படி, 92% மதிப்பாய்வு செய்யப்பட்டு வருகின்றன.



வரைபடம் 46: 2023 ஆம் ஆண்டிலிருந்து, இலங்கை சமூக விஞ்ஞான இதழ்களின் சமர்ப்பிப்பு (புள்ளிவிபரஇயுல்)

இலங்கை சமூக விஞ்ஞான இதழின், தொகுதி 46 இதழ் 01 ஆனது 3 மதிப்பாய்வு கட்டுரைகள் மற்றும் 5 ஆராய்ச்சி கட்டுரைகள் உள்ளடங்கலாக மொத்தம் 8 அறிவார்ந்த கட்டுரைகளுடன் வெளியிடப்பட்டது.

எழுத்தாளர்களின் புவியியல் பரவல்

முதல் இதழில் அக எழுத்தாளர்களின் கட்டுரைகளே அதிக பங்களிப்பினை (75%), செய்துள்ளன. இதில் வெளிநாட்டு எழுத்தாளர் பங்களிப்பு 25% ஆகும், இதில் முக்கிய பங்களிப்பு இந்திய எழுத்தாளர்களிடமிருந்து (23.5%) பெறப்பட்டது.



வரைபடம் 47: இலங்கை சமூக விஞ்ஞான இதழின், தொகுதி 46 இதழ் 01: எழுத்தாளர்களின் புவியியல் பரவல்

அக எழுத்தாளர்களினை இணைத்துக்கொள்ளல்

உள்ளூர் எழுத்தாளர்களில் களனி பல்கலைக்கழகம் முக்கிய பங்களிப்பை அளித்தது, அதே நேரத்தில் வவுனியா பல்கலைக்கழகம், ருகுணு பல்கலைக்கழகம் மற்றும் இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவனம் ஆகியவை இரண்டாவது அதிக பங்களிப்பாளர்களாக சமமாக பங்களித்துள்ளன.



வரைபடம் 48: இலங்கை சமூக விஞ்ஞான இதழின், தொகுதி 46 இதழ் 01: உள்ளூர் எழுத்தாளர் இணைப்புகள்

2022 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட ஆக்கங்கள் 2023 ஆம் ஆண்டில் மேற்கோள்களாக எடுக்கப்படல்

2022 ஆம் ஆண்டில் இலங்கை சமூக விஞ்ஞான இதழ்களில் வெளியிடப்பட்ட கட்டுரைகளில் 22% மான கட்டுரைகள் 2023 ஆம் ஆண்டில் மேற்கோள்களாக காட்டப்பட்டன. இவ்வாறு மேற்கோள்களாக காட்டப்பட்ட கட்டுரைகள் பல இதழ்களில் வெளியிடப்பட்டுள்ளன, அவற்றில் உயர் கல்வி (IF 1.1) எனப்படும் ஒரு அட்டவணைப்படுத்தப்பட்ட இதழும் அடங்கும். இது இலங்கை சமூக விஞ்ஞான இதழ்களினை பொறுத்த வரையில் ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லாக இருந்து வருவது, மட்டுமல்லாது அறிவுப் பரவலுக்கு அதன் பங்களிப்பைச் செய்கிறது.



வரைபடம் 49: இலங்கை சமூக விஞ்ஞான இதழின் தொகுதி 46 இதழ் 01.

இதழ் 02 ஆனது பிரசுரிப்பு செயன்முறையின் கீழ் உள்ளது.

தொழில்சார்பியலை சார்ந்த விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைப்பு நடவடிக்கைகளை வெளியிடுவதற்கான ஆதரவு

இந்தத் திட்டத்தின் கீழ், இலங்கை விஞ்ஞான முன்னேற்ற சங்கத்திற்கு (SLAAS) அதனது 79வது ஆண்டு அமர்வுகள் மற்றும் அதன் கருப்பொருள் கருத்தரங்கு புத்தகத்திலிருந்து நடவடிக்கைகள் ஆகியவற்றினை வெளியிட ஆதரவளிக்கப்பட்டது. இந்த ஆண்டின், ஆண்டு அமர்வுகள் மற்றும் கருப்பொருள் கருத்தரங்கானது "தேசிய ஒற்றுமை மற்றும் நாடுகளிடையே நட்பினை பேணுவதற்கான வலுமிக்க சக்தியாக விஞ்ஞான இராஜதந்திரம்" என்ற கருப்பொருளின் கீழ் நடத்தப்பட்டது. மருத்துவம், பல் மருத்துவமும் கால்நடை விஞ்ஞானமும், விவசாயமும் வனவியலும், பொறியியல், கட்டிடக்கலையும் கணக்கெடுப்பும், வாழ்க்கையும் புவி விஞ்ஞான்மும், பௌதீக விஞ்ஞானம், இரசாயனவியல் விஞ்ஞானம், கணினி விஞ்ஞானம் மற்றும் சமூக விஞ்ஞானம் ஆகிய 08 வெவ்வேறு கருப்பொருள்களின் கீழ் மொத்தம் 160 சாராம்சங்களுடன் நடவடிக்கைகள் பிரசுரிக்கப்பட்டன.





நிகழ்நிலையில் அடிப்படையில் இலங்கையில் இதழ்கள் (SLJOL)



இலங்கை ஆராய்ச்சியாளர்களுக்கும் மற்றும் அவர்களின் பணிகளுக்கும் பரந்த அளவிலான கல்வித் துறைகளில் தெரிவுநிலையை வழங்குவதில் இலங்கையின் நிகழ்நிலையில் அடிப்படையிலான (SLJOL) தளம் முக்கிய பங்கு வகிக்கிறது. INASP, UK என்பனவற்றினால் நடத்தப்படும் நிகழ்நிலை அடிப்படையிலான இதழ்கள் (JOL) என்ற கருத் திட்டத்தின் ஒரு பகுதியாக, நிகழ்நிலையில் அடிப்படையிலான இலங்கையில் இதழ்களானது (SLJOL) இலங்கையிலிருந்து 131 அறிவார்ந்த சக மதிப்பாய்வு செய்யப்பட்ட இதழ்களினை கொண்டுள்ளது. தேசிய விஞ்ஞான மன்றத்தின் (NSF) தேசிய விஞ்ஞானம் நூலகம் மற்றும் வள மையத்தால் (NSLRC) முகாமைத்துவம் செய்யப்படுவதுடன், Ubiquity பிரஸ்ஸால் இயக்கப்படும் நிகழ் நிலை அடிப்படையிலான இலங்கையின் இதழ்கள் இலங்கைக்குள் அறிவார்ந்த வெளியீடுகளுக்கான ஒரு குறிப்பிடத்தக்க தளமாக செயல்படுகிறது.

நிகழ்நிலை அடிப்படையிலான இலங்கையின் இதழ்களுக்கு உள்ள பிரதான அனுகூலங்களில் ஒன்று, இலங்கையின் ஆராய்ச்சி வெளியீடுகளுக்கு உலகளாவிய மட்டத்தில் அணுகலை வழங்கும் திறன் ஆகும். இந்த உலகளாவிய தெரிவுநிலையானது, நாட்டிற்குள் நடத்தப்படும் ஆராய்ச்சி மற்றும் அதன் தாக்கம் தொடர்பில், சர்வதேச அளவில் ஒத்துழைப்பினை வளர்ப்பதுடன் கருத்துப் பரிமாற்றத்திற்கும் ஆதரவு வழங்குகிறது.

மேலும், பிரசுரிப்பு செலவுகள் இல்லாமல் ஆராய்ச்சியாளர்களுக்கு அவர்களது பணிகளினை பரப்புவதற்கு, நிகழ்நிலை அடிப்படையிலான இலங்கையின் இதழ்கள் ஒரு பாதையினை வழங்குகிறது, இது மிகவும் குறிப்பிடத்தக்கதொரு விடயமாக இங்கு குறிப்பிடப்படுவதற்கு பிரதான காரணம்இ வெளிநாட்டு இதழ்களில் பிரசுரிக்க முற்படுமிடத்து ஏற்படக்கூடிய நிதி சிக்கல்களே ஆகும். இங்கு இந்தத் தடைகளை நீக்குவதன் மூலம், அக கல்விச் சமூகத்திற்குள்ளும் அதற்கு அப்பாலும் தரமான வெளியீடுகளைப் பரப்புவதற்கு நிகழ்நிலை அடிப்படையிலான இலங்கையின் இதழ்கள் உதவுகிறது.

மொத்தமாக நோக்குமிடத்து, நிகழ்நிலை அடிப்படையிலான இலங்கையின் இதழ்களாவன, அறிவார்ந்தவர்களுடன் தொடர்பை மேம்படுத்துதல், கல்வி ஆராய்ச்சியை ஆதரித்தல் மற்றும் உலக அரங்கில் இலங்கை ஆராய்ச்சி வெளியீடுகளின் தெரிவுநிலையை மேம்படுத்துதல் போன்ற செயற்பாடுகள் தொடர்பில் முக்கிய பங்கு வகிக்கிறது. அதன் அணுகல் மற்றும் மலிவு விலை ஆகியன இலங்கைக்குள் அறிவு மற்றும் புத்தாக்கங்களினை மேம்படுத்துவதற்கு முதலீடு செய்யும் ஆராய்ச்சியாளர்கள், நிறுவனங்கள் மற்றும் பங்குதாரர்களுக்கு ஒரு விலைமதிப்பற்ற வளமாக அமைகிறது.

நிகழ்நிலை அடிப்படையிலான இலங்கையின் இதழ்களினது வளர்ச்சி.

இலங்கையின் விஞ்ஞான சமூகத்திற்கு செய்யப்பட்ட ஒரு குறிப்பிடத்தக்க சாதனை மற்றும் குறிப்பிடத்தக்க பங்களிப்பு, என்ற வகையில் நிகழ்நிலை அடிப்படையிலான இலங்கையின் இதழ்களினது வளர்ச்சிக்கான புதிய தளம் மார்ச் 2023 இல் தொடங்கப்பட்டது, இது விஞ்ஞான சமூகத்தினருக்கு ஆராய்ச்சிக்கான அணுகலை மேம்படுத்துவதற்கும் அவர்களிடையே கூட்டிணைவை வளர்ப்பதற்கும் ஏதுவாக உள்ளது 15 ஆண்டுகளுக்குள் 131 அறிவார்ந்த சஞ்சிகைகளில் இருந்து 20,000 க்கும் மேற்பட்ட ஆராய்ச்சி கட்டுரைகளை களஞ்சியப்படுத்துவதும் அவற்றுக்கான திறந்த அணுகலை வழங்குவதும் ஒரு ஈர்க்கக்கூடிய சாதனையாகும். இது இலங்கையில் நிகழும் விஞ்ஞானம் தொடர்பான விசாரணைகளில் உள்ள செழுமை மற்றும் பன்முகத்தன்மையை எடுத்துக்காட்டுவது மட்டுமல்லாதுஇ ஆராய்ச்சியாளர்கள், கொள்கை வகுப்பாளர்கள், கல்வியாளர்கள் மற்றும் பொது மக்களுக்கு ஆராய்ச்சி முடிவுகளை உடனடியாக கிடைக்கச்செய்யப்படவேண்டியதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது.



வரைபடம் 50: நிகழ்நிலை அடிப்படையிலான இலங்கையின் இதழ்களின் தளத்தின் ஊடாக உள்ளடக்கப்படும் விடய பரப்பெல்லை

உலகளவில் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத் துறைகளின் முன்னேற்றத்திற்கு எழுத்தாளர்கள் தங்கள் நுண்ணறிவுகளைப் பகிர்ந்து கொள்வதற்காக எடுக்கும் முயற்சிகளுக்கான அர்ப்பணிப்பு மிக பிரதானமாக கருதப்படுகிறது. அவர்களின் பங்களிப்புகளை அங்கீகரித்து பாராட்டுவதன் மூலம், மேலும் ஒத்துழைப்பு மற்றும் அறிவுப் பகிர்வு ஊக்குவிக்கப்படுவதால், அது இறுதியில் முன்னேற்றம் மற்றும் புதிய கண்டுபிடிப்புக்களுக்கு பாதை வகுக்கிறது.

இது போன்ற முயற்சிகள் விஞ்ஞான ஆராய்ச்சியை முன்னேற்றுவதிலும் அறிவுப் பரவலை ஊக்குவிப்பதிலும் முக்கிய பங்கு வகிக்கின்றன என்பது தெளிவாகிறது, இது இறுதியில் இலங்கையிலும் மற்றும் அதற்கு அப்பாலும் சமூக-பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிக்கின்றன.

2023 ஆம் ஆண்டில், நிகழ்நிலை அடிப்படையிலான இலங்கையின் இதழ்களுடன் (SLJOL) ஆறு புதிய இதழ்களினை சேர்த்ததன் மூலம் குறிப்பிட்டு சொல்லத்தக்க அளவில் விருத்தியினை இந்த நிகழ்நிலை அடிப்படையிலான இலங்கையின் இதழ்களின் தளம் கண்டது. இந்த சஞ்சிகைகள் நிகழ்நிலை அடிப்படையிலான இலங்கையின் இதழ்களினது (SLJOL) கடுமையான தரநிலைகள் மற்றும் மதிப்பீட்டு அளவுகோல்களை பூர்த்தி செய்தன. இந்த விரிவாக்கமானதுஇ தளத்தின் தரங்களை பேணுவதற்கும் தளத்தில் கிடைக்கும் அறிவார்ந்த வெளியீடுகளின் பன்முகத்தன்மையை மேம்படுத்துவதற்கும் நிகழ்நிலை அடிப்படையிலான இலங்கையின் இதழ்களினது உறுதிப்பாட்டை எடுத்துக்காட்டுகிறது.

நிகழ்நிலை அடிப்படையிலான இலங்கையின் இதழ்களாவன ஆண்டு முழுவதும் 301இதழ்கள் வெளியீடுகளிலிருந்து மொத்தம் 2,550 ஆராய்ச்சிக் கட்டுரைகளை வெளியிட்டது. பல்வேறு கல்வித் துறைகள் தொடர்பில் ஆராய்ச்சி முடிவுகளைப் பரப்புவதற்கு இத் தளம் மேற்கொண்ட முயற்சிக்கான அர்ப்பணிப்பை இந்த வெளியீட்டுத் தொகுதி அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. முக்கியமாக, இந்த வெளியீடுகள் INASP மற்றும் ஆப்பிரிக்க நிகழ்நிலை அடிப்படையிலான இதழ்கள் ஆகியவற்றால் நிறுவப்பட்ட சஞ்சிகை வெளியீட்டு நடைமுறை தரநிலைகளில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள தரங்களுடன் ஒத்துப்போகின்றன, இது அறிவார்ந்த வெளியீட்டில் சர்வதேச ரீதியில் சிறந்த நடைமுறைகளை நிலைநிறுத்துவதற்கு நிகழ்நிலை அடிப்படையிலான இலங்கையின் இதழ்களினது உறுதிப்பாட்டை பிரதிபலிக்கிறது.

தொடர்ச்சியான வளர்ச்சி மற்றும் தர நியமங்களினை தொடர்ந்து கடைப்பிடிப்பது, போன்ற சிறப்பியல்புகள் இலங்கையிலும் அதற்கு அப்பாலும் அறிவார்ந்த தொடர்பு மற்றும் அறிவுப் பரவலுக்கான ஒரு நற்பெயர் பெற்ற தளமாக நிகழ்நிலை அடிப்படையிலான இலங்கையின் இதழ்களினது பங்கை நிரூபிக்கிறது. ஆராய்ச்சி கட்டுரைகளை வழங்குவதற்கும் பரப்புவதற்கும் ஒரு வலுவான உள்கட்டமைப்பை வழங்குவதன் மூலம், நிகழ்நிலை அடிப்படையிலான இலங்கையின் இதழ்களாவன கல்வி ஆராய்ச்சியின் முன்னேற்றத்திற்கு பங்களிப்பதுடன் உலகெங்கிலும் உள்ள ஆராய்ச்சியாளர்கள், நிறுவனங்கள் மற்றும் பங்குதாரர்களிடையே ஒத்துழைப்பை வளர்க்கிறது.



வரைபடம் 51: நிகழ்நிலை அடிப்டையிலான இலங்கையின் இதழ்களினது வளர்ச்சி

நிகழ்நிலை அடிப்படையிலான இலங்கையின் இதழ்களினது வலைத்தளமானது பயனர் நட்பு தேடல் கருவியைக் கொண்டுள்ளது, இது ஆராய்ச்சியாளர்கள் தங்கள் குறிப்பிட்ட ஆய்வுப் பகுதிகளுடன் தொடர்புடைய கட்டுரைகளைக் கண்டறிய உதவும் வகையில் கவனமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த கருவியானது தேடலுடன் தொடர்புடைய அறிவார்ந்த உள்ளடக்கத்தை அணுகும் செயல்முறையை நெறிப்படுத்துகிறது, இதன் மூலம் ஆராய்ச்சி முயற்சிகளின் செயல்திறனானது மேம்படுத்தப்படுகிறது.

2023 ஆம் ஆண்டில், நிகழ்நிலை அடிப்படையிலான இலங்கையின் இதழ்களுக்கான கூகிள் பகுப்பாய்வு புள்ளிவிவரங்களாவன இத்தளத்திற்கு இருக்கும் உயரிய ஈடுபாட்டு விகிதத்தை வெளிப்படுத்தின. அதாவது, உலகளவில் 200 நாடுகளைச் சேர்ந்த 1,597,301 பார்வையாளர்கள் இந்த தளத்துடன் உயர் அளவில் தொடர்பு கொண்டுள்ளனர் என்பதாகும். இந்த பரவலான ஈடுபாடானது, கல்வி சமூகத்திற்குள் இந்த தளத்தின் உலகளாவிய அணுகல் மற்றும் செல்வாக்கை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

நிகழ்நிலை அடிப்படையிலான இலங்கையின் இதழ்கள் உலகளாவிய அளவில் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தி உள்ளது என்பது, இந்தக் காலகட்ட பகுதியில், 192,958 முழு உரை கட்டுரைகள் பதிவிறக்கம் செய்யப்பட்டமையின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. இந்த பதிவிறக்கங்கள், உலகெங்கும் உள்ள பார்வையாளர்களுக்கு அறிவார்ந்த படைப்புக்களினை பரப்புவதின் மூலம் தளத்தின் முக்கிய பங்கு வெளிப்படுத்தப்படுகின்றது. உலகெங்கிலும் உள்ள ஆராய்ச்சியாளர்கள், கல்வியாளர்கள் மற்றும் மாணவர்களுக்கு ஒரு முக்கிய ஆதாரமாக இத் தளம் விளங்குகிறது.

புள்ளிவிபரங்கள் அடிப்படையில் விரிவாக நோக்கின், அவை, ஆராய்ச்சியாளர்களை பெறுமதி மிக்க கல்வி வளங்களுடன் இணைப்பதில் நிகழ்நிலை அடிப்படையிலான இலங்கையின் இதழ்களினது செயல்திறனையும், பல்வேறு ஆய்வுத் துறைகளில் அறிவுப் பரவலை மேம்படுத்துவதில் அதன் பங்களிப்பையும் எடுத்துக்காட்டுகின்றன.

வரைபடம் 03: நிகழ்நிலை அடிப்படையிலான இலய்கையின் இதழ்களினது பாவனையாளர்களின் உலகளாவிய ரீதியிலான பகிர்வு

நிகழ்நிலை அடிப்படையிலான இலங்கையின் இதழ்களினது பாவனையாளர்களின் உலகளாவிய ரீதியிலான பகிர்வு (முதல் முப்பத்தாறு நாடுகள்)	
நாடு	பாவனையாளர்கள்
இலங்கை	88,800
இந்தியா	19,300
ஐக்கிய அமெரிக்கா	9,800
பிலிப்பைன்ஸ்	6,100
பிரித்தானியா	5,400
சீனா	4,800
இந்தோனேஷியா	4,300
நைஜீரியா	3,200
பாகிஸ்தான்	3,100
அவுஸ்திரேலியா	2,700
ஜெர்மனி	4,200
மலேசியா	1,800
கனடா	1,500
எகிப்து	1,300
சிங்கப்பூர்	1,300
ஜப்பான்	1,100
பிரான்ஸ்	1,100
பங்களாதேஷ்	1,000
எகிப்து	1,000
தென் கொரியா	953
நெதர்லாந்து	864
தாய்லாந்து	776
பிரேசில்	741
இத்தாலி	719
ஹொங்கொங்	696
எதியோபியா	689
வியட்னாம்	665
நேபால்	603
மெக்ஸிகோ	563
ஐக்கிய அரபு எமிரேட்ஸ்	491
ஸ்பெயின்	457
தென் ஆப்பிரிக்கா	447
ரஷ்ய சம்மேளனம்	443
சவூதி அரேபியா	424
கென்யா	415
பின்லாந்து	396

நிகழ்நிலை அடிப்படையிலான இலங்கையின் இதழ்களினது பயன்பாடு கணிசமாக அதிகரித்துள்ளதுடன் மேலும் முழு உரை பதிவிறக்கங்களினது அளவும் குறிப்பாக 2015 முதல் 2023 வரையிலான காலகட்டத்தில் அதிக அளவில் உயர்ந்துள்ளன. இக்காலக்கட்டத்தில் இத் தளம் மிகவும் பயனுள்ளதாகவும் அணுகக்கூடியதாகவும் மாறிவிட்டது என்பதை இந்தப் போக்கு காட்டுகிறது.

நிகழ்நிலை அடிப்படையிலான இலங்கையின் இதழ்களினது பயன்பாட்டின் வளர்ச்சியானது, ஆராய்ச்சியாளர்கள், கல்வியாளர்கள் மற்றும் பிற பங்குதாரர்களின் தேவைகளை SLJOL இத்தளமானது திறம்பட பூர்த்தி செய்து, அவர்களுக்கு மதிப்புமிக்க கல்வி வளங்களை வழங்கி, தொடர்புடைய ஆராய்ச்சி கட்டுரைகளை அணுகுவதை எளிதாக்கியுள்ளது என்பதைக் குறிக்கிறது. மேலும், முழு உரை பதிவிறக்கங்களின் அதிகரிப்பானது, இலங்கைக்குள் அறிவு மற்றும் ஆராய்ச்சியின் முன்னேற்றத்திற்கு பங்களிக்கின்றது, என்பதுடன் இலங்கைக்குள் மட்டுமன்றி உலகளாவிய ரீதியில் உள்ள பரந்துள்ள பார்வையாளர்களுக்கு அறிவார்ந்த உள்ளடக்கத்தைப் பரப்புவதில் தளத்தின் பங்கை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.



வரைபடம் 52: நிகழ்நிலை அடிப்படையிலான இலங்கையின் இதழ்களினது பாவனையாளர்கள்



வரைபடம் 53: நிகழ்நிலை அடிப்படையிலான இலங்கையின் இதழ்களிலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்ட ஆக்கங்கள்

நிகழ்நிலை அடிப்படையிலான இலங்கையின் இதழ்களின் தளத்தில் உள்ள ஆக்கங்களின் தரம், வலிமை மற்றும் அவற்றின் நிலைத்தன்மையைப் பேணுவதற்காக அவற்றினை மதிப்பீடு செய்தல்



வரைபடம் 54: நிகழ்நிலை அடிப்படையிலான இலங்கையின் இதழ்களின் ஊடாக இதழ் வெளியீடுகளை வெளியிடுவதில் உள்ள செயல்திறன்

நிகழ்நிலை அடிப்படையிலான இலங்கையின் இதழ்களின் ஒரு முக்கிய பொறுப்பு, அவற்றின் வெற்றியை மதிப்பீடு செய்வதற்கு காலத்திற்கு காலம் மதிப்பீடுகளை முன்னெடுப்பதாகும். இந்த மதிப்பீடுகளாவன சாத்தியமான சவால்களைக் கண்டறிந்து, அதன் பின்னர் இதழ்களின் தரத்தினை மேம்படுத்த உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படுவது அவசியமா என்பதைத் தீர்மானிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளன, இது கல்வி சமூகத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்வதன் மூலம் அத்தேவைப்பாட்டின் மூலம் பெறும் பெறுபேறானது மேலும் வலுவானதாகவும் வெற்றிகரமாகவும் ஆகுகிறது. செயல்திறனைக் கண்காணித்து, முன்னேற்றத்திற்கான பகுதிகளை அடையாளம் காண்பதன் மூலம், நிகழ்நிலை அடிப்படையிலான இலங்கையின் இதழ்களின் தளத்திலிருந்து பெறப்படும் அறிவார்ந்த வெளியீடுகளினை வளர்ந்து வரும் போக்குகள் மற்றும் தரநிலைகளுக்கு ஏற்ப மாற்றியமைக்க முடியும். இந்த மதிப்பீடுகள் மூலம், அத் தளத்தில் வழங்கப்படும்இதழ்களின் தரம் மற்றும் பொருத்தப்பாடானது உறுதி செய்யப்படுவதுடன் இலங்கையிலும் அதற்கு அப்பாலும் உள்ள ஆராய்ச்சியாளர்கள், எழுத்தாளர்கள் மற்றும் வாசகர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் நிகழ்நிலை அடிப்படையிலான இலங்கையின் இதழ்களாவன அதன் செயல்திறனைப் பராமரிக்க முடியும்.

2023 ஆம் ஆண்டில், மேலே குறிப்பிடப்பட்ட பணியை நிறைவேற்றுவதில் நிகழ்நிலை அடிப்படையிலான இலங்கையின் இதழ்களின் தளமானது பின்வரும் முறைகளில் எழுத்தாளர்களினை ஆதரித்தது.

- 18, தழ்களுக்கு நிகழ்நிலை அடிப்படையில் கட்டுரைகளைச் சமர்ப்பிப்பதற்கு வுசதி செய்து கொடுக்கப்பட்டது.இது நிகழ்நிலை அடிப்படையிலான இலங்கையின் இதழ்களினால் செயற்படுத்தப்படும் பத்திரிகை முகாமைத்துவ அமைப்பு மூலம் முழு தலையங்க செயல்முறையையும் டிஜிட்டல் முறையில் நடைபெற அனுமதிக்கிறது.

- நிகழ்நிலை அடிப்படையிலான இலங்கையின் இதழ்களினது தளத்தின் மூலம் தங்கள் தலையங்கம் மற்றும் வெளியீட்டு பணிப்பாய்வுகளை மேம்படுத்த 2023 ஆம் ஆண்டில் நான்கு பத்திரிகைகளுக்கு நிகழ்நிலை அடிப்படையிலான இலங்கையின் இதழ்கள் வசதி செய்தது. நம்பகத்தன்மை மற்றும் நிலைத்தன்மைக்கு பெயர் பெற்ற இந்த அமைப்பு, பல்வேறு புவியியல் பகுதிகளிலிருந்து உயர்தர சமர்ப்பிப்புகளை ஈர்த்தது. இந்த தளம் பதிப்பாசிரியர் குழுவின் ஈடுபாட்டையும், குறைந்தபட்ச ஊழியர்களுடன் ஒட்டுமொத்த அலுவலக செயல்திறனையும் மேம்படுத்தியதோடு மேற்கோளாக காட்டப்பட்ட நிலைகள் மற்றும் பத்திரிகை விழிப்புணர்வை அதிகப்படுத்தியதோடு மட்டுமல்லாது அட்டவணைப்படுத்தல் மற்றும் தரவரிசைப்படுத்தலுக்கும் உதவியது. இது இறுதியில் பத்திரிகைகளின் நற்பெயர் மேம்படலிற்கும் ஆதாரமாக அமைந்தது.

- நிகழ்நிலை அடிப்படையிலான இலங்கையின் இதழ்களினது கோல்ட் ஓபன் அக்சஸ் ஜர்னல்ஸ் (Gold Open Access Journal), "கோல்ட் ஓபன் அக்சஸ் ஜர்னல்" என்ற இந்த சொல்லின் மூலம் குறிக்கப்படுவது யாதெனில், இந்த இதழ் அதன் கட்டுரைகளுக்கு கிரியேட்டிவ் காமன்ஸ் (CC) பண்புக்கூறு 4.0 சர்வதேச பொது உரிமத்தின் (*https://creativecommons.org/licenses/by/4.0/*) கீழ் திறந்த அணுகலை வழங்குகிறது என்பதாகும். இதற்கு ஆதரவாக, நிகழ்நிலை அடிப்படையிலான இலங்கையின் இதழ்களினது தளத்தில் பிரசுரிக்கப்பட்ட 12 பத்திரிகைகளின் பதிப்பாசிரியர்களுக்கு இயந்திரத்தினால் இயந்திரம் படிக்கக்கூடிய வகையிலான CC அறிக்கைகளை உருவாக்குவதில் உதவி வழங்கப்பட்டது. பின்னர் இந்த அறிக்கைகள் பத்திரிகையின் வலைத்தளத்திலும் ஒவ்வொரு கட்டுரையின் முதல் பக்கத்திலும் இணைக்கப்பட்டன, இது வாசகர்களுக்கு உரிமத்தின் விதிமுறைகளுக்கு ஏற்ப உள்ளடக்கத்தை எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதைக் குறிக்கிறது.

- வருட காலப்பகுதி முழுவதும் நிகழ்நிலை அடிப்படையிலான இலங்கையின் இதழ்களீன் பயனர்களுக்கு பயனர் ஆதரவு மற்றும் விழிப்புணர்வு தொடர்ந்து வழங்கப்பட்டது.

- வருட காலப்பகுதியில் 128 பயனர்கள் பதிப்பாசிரியர்களாக, பிரிவு பதிப்பாசிரியர்களாக, எழுத்தாளர்களாக, மதிப்பாய்வாளர்களாக மற்றும் திருத்தும் பதிப்பாசிரியர்களாக இணைக்கப்பட்டனர்.

- பத்திரிகைகளின் முகப்புப் பக்கங்களின் பின்வரும் விடயங்கள் தொடர்பில் தகவல் தெரியப்படுத்துகையினை மேம்படுத்த நூற்று தொண்ணூற்று இரண்டு (192) இணையத்தள புதுப்பிப்புகள் செயல்படுத்தப்பட்டன.

    1. பதிப்பாசிரியர் மற்றும் பதிப்பாசிரியர் குழுக்கள் பற்றிய நாளது வரையிலான மற்றும் துல்லியமான விவரங்கள்
    2. எழுத்தாளர்களுக்கு தெளிவான மற்றும் விரிவான வழிகாட்டுதல்கள்
    3. தலையங்கக் கொள்கைகள், தரவுக் கொள்கைகள் மற்றும் சக மதிப்பாய்வு செயல்முறைகள் பற்றிய விவரங்கள்
    4. நிகழ்நிலை அடிப்படையில் சக மதிப்பாய்வு செயல்முறைகள் செய்யப்படும் போது அதற்கான மதிப்பாய்வு படிவங்கள்
    5. அதிகாரப்பூர்வ உரிம அறிக்கை உட்பட முறையான பதிப்புரிமை அறிக்கைகள்
    6. வெளியீட்டு நெறிமுறைகள் குழுவின் (COPE) உறுப்பினர் தொடர்பான அறிக்கைகள்

- பதிப்பாசிரியர்களால் கோரப்பட்டவாறு நான்கு (04) பத்திரிகைகளின் முகப்புப் பக்கங்களில் "ஆராய்ச்சி ஒருமைப்பாடு" எனும் வகுதியானது புதிதாக சேர்க்கப்பட்டது. மேற்கோள் தரவுத்தளங்களில் அட்டவணைபடுத்தப்படவேண்டியதற்கு தேவையான அளவுகோல்களைப் பூர்த்தி செய்வதற்கு பதிப்பாசிரியர்கள், மதிப்பாய்வாளர்கள், எழுத்தாளர்கள் ஆகியோரினது பொறுப்புகள் தொடர்பான விவரங்கள் மற்றும் நெறிமுறை ஆராய்ச்சி பற்றிய விபரங்கள் ஆகியன இந்தச் சேர்க்கையில் சேர்க்கப்பட்டுள்ளன.

இதழ்களின் ஒவ்வொரு கட்டுரைக்கும் டிஜிட்டல் பொருள் அடையாளங்காட்டிகளை (DOI) வழங்குதல்

வருட காலப்பகுதியில், 301 இதழ்கள் வெளியீடுகளிலிருந்து 2,532 கட்டுரைகளுக்கு, டிஜிட்டல் பொருள் அடையாளங்காட்டிகள் (DOI) வழங்கப்பட்டன. இந்த செயற்பாடானது, தொகுதி கோப்புகளை, தேவையான அளவில் தரவுகளுக்கான தரவுகளுடன் (metadata) உசழளளசநக.ழச க்கு சமர்ப்பிப்பதன் மூலம் முன்னெடுக்கப்பட்டது. ஒரு டிஜிட்டல் பொருள் அடையாளங்காட்டியானது ஒவ்வொரு கட்டுரைக்கும் ஒரு தனித்துவமான அடையாளங்காட்டியை வழங்குகிறது. இது நோக்குனர் அக்குறிப்பிட்ட கட்டுரையின் இருப்பிடம் அல்லது தகவல் மாறினாலும் அதை எளிதாகக் கண்டுபிடித்து மேற்கோள் காட்ட உதவுகிறது. ஒரு கட்டுரைக்கு ஒதுக்கப்பட்ட ஒரு டிஜிட்டல் பொருள் அடையாளங்காட்டிகள் இருப்பிடம் அல்லது தரவுகளுக்கான தரவுகளில் ஏற்படும் மாற்றங்களைப் பொருட்படுத்தாமல், கட்டுரையை நம்பத்தகுந்த முறையில் கண்டுபிடித்து மேற்கோள் காட்ட முடியும் என்பதை உறுதி செய்யும் ஒரு நிலையான தனித்துவமான அடையாளங்காட்டியாக செயல்படுகிறது.

தேசிய டிஜிட்டல் மயமாக்கல் திட்டம் (NDP)

இலங்கை தேசிய விஞ்ஞான மன்றமானது விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப தகவல்களை மேம்படுத்தவும் பரப்பவும் 2011 ஆம் ஆண்டு தேசிய டிஜிட்டல் மயமாக்கல் திட்டத்தை அறிமுகப்படுத்தியது. இந்த திட்டம் நாட்டில் உள்ள நிறுவனங்களின் அறிவார்ந்த சேகரிப்புகளை டிஜிட்டல் மயமாக்குவதையும், நிகழ்நிலை அடிப்படையில் மின்-களஞ்சியங்கள் மூலம் உலகளவில் வளங்களை அணுகுவதையும் நோக்கமாகக் கொண்டது. னுளுயுஉந மென்பொருளைப் பயன்படுத்தி, தேசிய விஞ்ஞான மன்றமானது ஏராளமான களஞ்சியங்களை உருவாக்கியதுடன் 2023 ஆம் ஆண்டில் தேசிய டிஜிட்டல் மயமாக்கல் திட்டத்தின் மூன்றாம் கட்டத்தை (கட்டம் III) வெற்றிகரமாக நிறைவு செய்தது. கடந்த ஆண்டுகளில், டிஜிட்டல் மயமாக்கல் முயற்சிகள் 25 நூலக சேகரிப்புகள் மற்றும் 25 நிறுவன களஞ்சியங்களை (IRs) நிறுவுதல் ஆகியவற்றை உள்ளடக்கியதாக அமைந்தது. 2023 ஆம் ஆண்டின் இறுதியில், இந்த நிறுவன களஞ்சியங்கள் மூலம் சுமார் 144,876 ஆவணங்கள் நிகழ்நிலை அணுகலுக்குக் கிடைத்தன.

2023 ஆம் ஆண்டில், ஆறு நிறுவனங்களின் மின் களஞ்சியங்கள், தேசிய விஞ்ஞான மன்றத்தின் சேவையகத்தைப் பயன்படுத்தியதன் மூலம் 8,289 ஆவணங்களை நிகழ்நிலையில் அணுகக்கூடியதாக இருந்தது. இது இலங்கையின் விஞ்ஞானவியல் சமூகத்தில் அறிவார்ந்த தகவல்களுக்கான அணுகலை மேம்படுத்துவதற்கும் அறிவுப் பகிர்வை ஆதரிப்பதற்கும் தொடர்ச்சியான முயற்சிகளைக் காட்டுகிறது.



வரைபடம்; 55: நிறுவனங்களினால் வெளியிட்ட ஆக்கங்களின் எண்ணிக்கை

கடந்த சில ஆண்டுகளாக, டிஜிட்டல் மயமாக்கல் சேவைகள் மற்றும் தேசிய விஞ்ஞான நூலகம் மற்றும் வள மையத்தினால் (NSLRC) வழங்கப்படும் களஞ்சியங்களை நிறுவுதல் ஆகியவை தொடர்பிலான தேவைப்பாடானது குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்துள்ளது. இந்தக் கோரிக்கைக்கு பதிலளிக்கும் விதமாக, கொழும்பில் உள்ள இலங்கை மருத்துவ நூலகமும், கொழும்பில் உள்ள உள்நாட்டு இறைவரி திணைக்களமும் 2023 ஆம் ஆண்டில் தங்கள் சேகரிப்புகளை டிஜிட்டல் மயமாக்கி களஞ்சியங்களை மேம்படுத்துமாறு கோரிக்கை விடுத்துள்ளன. இந்த இரண்டு திட்டங்களும் 2024 ஆம் ஆண்டில் செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளன, இது டிஜிட்டல் மயமாக்கப்பட்ட வளங்களின் வரம்பை மேலும் விரிவுபடுத்துவதுடன் இலங்கையில் மதிப்புமிக்க தகவல்களுக்கான அணுகலையும் மேம்படுத்துகிறது.

தேசிய விஞ்ஞான மன்ற சேவையகத்தில் நிறுவப்பட்ட மின் களஞ்சியங்களின் அணுகல் தொடர்ந்து கண்காணிக்கப்படுகிறது, மேலும் ஒவ்வொரு ஆண்டும் பதிவிறக்கம் செய்யப்பட்ட கட்டுரைகளின் எண்ணிக்கையிலும், தேடல்களின் எண்ணிக்கையிலும் குறிப்பிடத்தக்க வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. மீளாய்வுக்குட்பட்ட ஆண்டில், 8 மில்லியனுக்கும் அதிகமானோர் இந்த மின் களஞ்சியங்களினை நோக்கினர் என்பதுடன் 359,000 க்கும் மேற்பட்ட முழு உரை ஆவண பதிவிறக்கங்களும் பதிவு செய்யப்பட்டன. பயன்பாட்டின் இந்த குறிப்பிடத்தக்க அதிகரிப்பு, அறிவார்ந்த தகவல்களுக்கு மதிப்புமிக்க அணுகலை வழங்குவதில் இந்த களஞ்சியங்களின் முக்கியத்துவத்தை அடிக்கோடிட்டுக் காட்டுவதுடன் ஆராய்ச்சி மற்றும் அறிவு பரவலை எளிதாக்குவதில் அவற்றின் தாக்கத்தை நிரூபிக்கிறது.

விஞ்ஞானவியல் தகவல்களின் தேசிய தளத்தினை விருத்தி செய்தலும் பேணலும்



வரைபடம் 56: 2023 இல் முன்னெடுக்கப்பட்ட தேடல்களின் எண்ணிக்கை



வரைபடம் 57: 2023 இல் செய்யப்பட்ட பதிவிறக்கங்களின் எண்ணிக்கை

திறந்த மூல நூலக முகாமைத்துவ மென்பொருளைப் பயன்படுத்தி தேசிய விஞ்ஞான மன்றத்திற்கும் மற்றும் பிற விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களுக்கான மின்-களஞ்சியங்கள், நூலியல் தரவுத்தளங்கள், நூலக பட்டியல்களை உருவாக்குதல்/ பராமரித்தல்.

இலங்கை தேசிய விஞ்ஞான மன்றத்தின் தேசிய விஞ்ஞான நூலக மற்றும் வள மையமானது, நிகழ்நிலை அடிப்படையிலான பல மின்-களஞ்சியங்கள், விஞ்ஞான நூலியல் தரவுத்தள தளங்கள் மற்றும் நூலக பட்டியல்களை உருவாக்குவதில் ஈடுபட்டுள்ளது. இந்த முயற்சிகள் தேசிய விஞ்ஞான மன்றம், உறுப்பினர் நூலகங்கள் (இலங்கை விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப தகவல் வலையமைப்பு) மற்றும் பாடசாலைகள் உட்பட பிற நூலகங்கள் உள்ளிட்ட பல்வேறு நிறுவனங்களை உள்ளடக்கியது. இந்த மேம்பாடுகளின் நிமித்தம் Dspace, Koha, Java CDS/ISIS போன்ற திறந்த மூல நூலக முகாமைத்துவ மென்பொருளும், JavaScript, HTML5 மற்றும் jQuery போன்ற உயர் GUI கருவிகளும், தேசிய விஞ்ஞான நூலகம் மற்றும் வள மையத்தில் உள்ள தகவல் தொழில்நுட்ப நிபுணர்களால் பயன்படுத்தப்படுகின்றன.

தேசிய விஞ்ஞான நூலகம் மற்றும் வள மையத்தினால் உருவாக்கப்பட்ட தேசிய விஞ்ஞான தரவுத்தளங்கள் மற்றும் நூலக பட்டியலின் சிறப்பை உறுதி செய்வதற்காக, தரவுத்தளங்களில் உள்ள அனைத்து தரவுகளுக்கான தரவுகளுக்குரிய (metadata) உள்ளடக்கங்களையும் இந்தப் பிரிவு விடாமுயற்சியுடன் சரிபார்த்து வருகிறது. குறிப்பாக, இலங்கை எழுத்தாளர்களினால் வெளியிடப்பட்ட 70,000 க்கும் மேற்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகளைக் கொண்ட இலங்கை விஞ்ஞான குறியீட்டு தரவுத்தளத்தில் (SLSID) ஒவ்வொரு கட்டுரைக்கும் சுருக்கங்களைச் சேர்ப்பதில் தேசிய விஞ்ஞான நூலகம் மற்றும் வள மையத்தினை சார்ந்த அலுவலர்கள் கவனம் செலுத்தியுள்ளனர். 2023 ஆம் ஆண்டில், சுருக்கங்கள் உட்பட மொத்தம் 11,317 பதிவுகள் இந்த தரவுத்தளத்தில் திருத்தப்பட்டன.

மேலும், KOHA ஒருங்கிணைந்த நூலக முகாமைத்துவ மென்பொருளைப் பயன்படுத்தி நூலக பட்டியலில் உள்ள தரவைத் திருத்தவும் புதுப்பிக்கவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. வழங்கப்பட்ட தகவல்களின் துல்லியம் மற்றும் ஏற்புடைமையினை உறுதிசெய்து, 2,225 ஆவணங்கள் திருத்தப்பட்டமையானது ஒரு சிறந்த விருத்தியினை இங்கு பதிவு செய்கின்றது. மேலும், ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்ப மானிய தரவுத்தளத்தில் (RTGRA) 1,034 பதிவுகளும் திருத்தப்பட்டன, இது தரவுத்தளத்தின் முழு மொத்த தரம் மற்றும் நம்பகத்தன்மைக்கு பங்களித்தன.



வரைபடம் 58: தேசிய விஞ்ஞான மன்ற நூலகம் மற்றும் வள நிலையத்தில் சேர்க்கப்பட்ட பதிவுகளின் எண்ணிக்கை

மதிப்பாய்வு செய்யப்பட்ட ஆண்டில், இலங்கை விஞ்ஞான குறியீட்டு தரவுத்தளத்தில் (SLSID) 820 பதிவுகளையும், தேசிய விஞ்ஞான மன்ற நூலகம் மற்றும் வள நிலைய பட்டியலில் 241 பதிவுகளையும், SLAAS (இலங்கை விஞ்ஞான முன்னேற்ற சங்கத்தின் செயல்முறைகளின் சுருக்கங்கள்) தரவுத்தளத்தில் 160 பதிவுகளையும் இணைத்ததன் மூலம் தேசிய விஞ்ஞான மன்றமானது அதன் விஞ்ஞான தகவல் வளங்களை வலுப்படுத்தியது. இவ்வாறு இணைக்கப்பட்ட ஆக்கங்கள் இந்தத் தரவுத்தளங்களின் விரிவான மற்றும் புதுப்பித்த தன்மைக்கு பங்களிக்கின்றன, இதன் மூலம் இலங்கையில் விஞ்ஞான தகவல்களின் நம்பகமான ஆதாரங்கள் என்ற வகையில் அவற்றின் மதிப்பை மேம்படுத்துகின்றன.



வரைபடம் 59: வேறுபட்ட தரவுத்தளங்களில் இணைக்கப்பட்ட பதிவுகளின் எண்ணிக்கை

நிறுவனங்களுக்கு அவர்களது நிகழ்நிலை அடிப்படையிலான வளங்களில்இ விரிவான, துல்லியமான மற்றும் சரியான நேரத்தில் அறிவுசார் பதிவுகளைப் பராமரிப்பதற்கு தேசிய விஞ்ஞான நூலக மற்றும் வள நிலையம் (NSLRC) தொடர்ந்து உதவுகிறது. இந்த முயற்சியை ஆதரிக்கும் வகையில், மென்பொருள் கருவிகள், தளங்களின் தனிப்பயனாக்கம், அத்தியாவசிய இயக்க முறைமைகள், வலையமைப்பு உள்ளமைவு, துணை மென்பொருள் பொறியியல் கருவிகள், பல்வேறு தகவல் வடிவங்கள் மற்றும் தரவு இடம்பெயர்வு போன்ற பல்வேறு அம்சங்களில் நூலகத்திற்கும் மற்றும் தகவல் தொழில்நுட்ப நிபுணர்களுக்கு தொடர்ச்சியான பயிற்சியை வழங்குகிறது. இந்தப் பயிற்சி நிபுணர்கள் தரவை திறம்பட கையாளவும், பயனர்களை ஆதரிக்கவும், நிகழ்நிலை அணுகலை வழங்கவும், உருவாக்கப்பட்ட தரவுத்தளங்களுக்கான தளத்தை சரியான முறையில் முன்னெடுத்து நடத்தவும் உதவுகிறது.

மேலும், இந்த விருத்தி செயற்பாடுகளாவன விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களுக்கிடையில் வளப் பகிர்வுக்கான சாத்தியக்கூறுகளை ஆராய்வதற்கு வழி வகுத்துள்ளன. தேசிய விஞ்ஞான நூலக மற்றும் வள நிலையத்தின் இந்த முன்முயற்சிகள் மூலம் உருவாக்கப்பட்ட நிபுணத்துவம் மற்றும் வளங்களைப் பயன்படுத்துவதன் மூலம், நிறுவனங்களுக்கு அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையில் மிகவும் திறம்பட ஒத்துழைக்கவும், அறிவைப் பகிர்ந்து கொள்ளவும், ஆராய்ச்சி முடிவுகளை மேம்படுத்தவும் முடியும்.

2023 ஆம் ஆண்டில், அனுராதபுரத்தில் உள்ள இலங்கை பிக்கு பல்கலைக்கழகத்திற்கான நூலக பட்டியல் மற்றும் டிஜிட்டல் களஞ்சிய திட்டங்களை செய்வதற்கு தேசிய விஞ்ஞான நூலக மற்றும் வள நிலையமானது ஏற்றுக்கொண்டது. இந்தத் திட்டங்கள் அந்த ஆண்டிற்குள் வெற்றிகரமாக முடிக்கப்பட்டு, 2023 நவம்பர் 17 ஆம் திகதியன்று பிக்கு பல்கலைக்கழகத்தின் துணைவேந்தரான சிரேட்ட பேராசிரியர் கனத்தேகொட சத்தாரதன அனுநாயக்க தேரரால் அதிகாரப்பூர்வமாகத் தொடங்கப்பட்டன.



2023 ஆம் ஆண்டில், திம்பிரிகஸ்கடுவ மேரிஸ் ஸ்டெல்லா கல்லூரிக்கு நூலக பட்டியல் கருத் திட்டத்தையும், ஜனாதிபதி செயலகத்திற்கான டிஜிட்டல் களஞ்சியத்தை தேசிய விஞ்ஞான மற்றும் நூலக வள நிலையம் நிறுவியது. மேரிஸ் ஸ்டெல்லா கல்லூரியினை சார்ந்த நூலக ஊழியர்களுக்கு பயிற்சி அளிக்க தேசிய விஞ்ஞான நூலக மற்றும் வள நிலைய அபிவிருத்தி குழுவானது டிசம்பர் 2023 இல் மேரிஸ் ஸ்டெல்லா கல்லூரிக்குச் சென்றது. மேரிஸ் ஸ்டெல்லா கல்லூரிக்கான திட்டம் இந்த ஆண்டுக்குள் வெற்றிகரமாக முடிக்கப்பட்டு 2024 இல் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும், டிஜிட்டல் களஞ்சிய தாபிப்பு திட்டத்தின் ஒரு பகுதியாக, டிசம்பர் 2023 இல், ஜனாதிபதி செயலக ஊழியர்களுக்கு DSpace மென்பொருள் குறித்த மற்றொரு பயிற்சித் திட்டத்தை தேசிய விஞ்ஞான நூலக மற்றும் வள நிலையம் வழங்க ஏற்பாடு செய்தது.



கோஹா நூலக பட்டிய பயிற்சி நிகழ்ச்சித்திட்டம், மேரிஸ் ஸ்டெல்லா கல்லூரி, திம்பிரிகஸ்கடுவ



ஜனாதிபதி செயலக அலுவலர்களுக்கு Dspace டிஜிட்டல் களஞ்சிய பயிற்சி திட்டமானது தேசிய விஞ்ஞான மன்றத்தில் முன்னெடுக்கப்படல்

இலங்கை நீர்ப்பாசனத் துறை, பட்டியலை சிறப்பாக செயன்முறைப்படுத்துவதற்கு கோஹா ஒருங்கிணைந்த டிஜிட்டல் நூலக மென்பொருள் (Koha Integrated Digital Library Software) குறித்த செயல் விளக்கத்தை தங்கள் அலுவலர்களுக்கு நடத்தும்படி தேசிய விஞ்ஞான நூலக மற்றும் வள நிலையத்திற்கு அழைப்பு விடுத்தது. இந்த செயல் விளக்கமானது 2023 ஜூலை 14 ஆம் திகதியன்று நடைபெற்றது. மற்றும் தேசிய விஞ்ஞான மன்றத்தின் தேசிய டிஜிட்டல் மயமாக்கல் திட்டத்தின் கீழ் தேசிய விஞ்ஞான நூலக மற்றும் வள நிலையத்தினால் உருவாக்கப்பட்ட இலங்கை நீர்ப்பாசனத் துறையின் மின்-களஞ்சியத்தில் மேலும் விருத்திகள் செய்தல் குறித்தும் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன.



இலங்கை நீர்ப்பாசனத் துறையில் டிஜிட்டல் நூலக மென்பொருள் கோஹா மற்றும் Dspace பற்றிய செயல்விளக்கம்

தேசிய விஞ்ஞான நூலக மற்றும் வள நிலையமானது அதன் ஆதரவுடன் தரவுத்தளங்கள் அல்லது களஞ்சியங்களை உருவாக்கிய பிற நிறுவனங்களுக்கு வளமான மற்றும் பயனுள்ள சேவைகளை அதாவதுஇ தொல்லை வீழ்த்துகை, தரவு இடம்பெயர்வு மற்றும் பதிப்பு மேம்படுத்தல் ஆகியவற்றினை தொடர்ந்து வழங்குகிறது. இந்த தளங்கள் பிற நிறுவனங்களால் அல்லது தேசிய விஞ்ஞான மன்றத்தின் சேவையகங்களில் முன்னெடுத்து செய்யப்படுகின்றன. 2023 ஆம் ஆண்டில், தேசிய விஞ்ஞான மன்றத்திற்காகவும் மற்றும் பிற நிறுவனங்களுக்காகவும் 100 க்கும் மேற்பட்ட தொல்லை வீழ்த்துகை அமர்வுகள் முன்னெடுக்கப்பட்டன.

மேலும், இலங்கை மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளியியல் திணைக்களமானது 2023 ஆம் ஆண்டில் தங்கள் மின்-களஞ்சியத்தை பதிப்பு 4.1 இலிருந்து 6.3 ஆக மேம்படுத்தும்படி கோரியது. தரவின் ஒருமைப்பாட்டை உறுதி செய்வதற்காக இந்தப் பணி கவனமாகக் கையாளப்பட்டது, மேலும் திருத்தப்பட்ட புதிய பதிப்பானது செப்டம்பர் 2023 இல் நிறைவடைந்தது.

அட்டவணை 04 : தேசிய விஞ்ஞான நூலக மற்றும் வள நிலையத்தினால் வழங்கப்பட்ட சேவைகள் பற்றிய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளது.

	நிறுவகத்தின் பெயர்	விருத்தி செய்யப்பட்ட வருடம்	விருத்தி செய்யப்பட்ட மென்பொருள்	2023 ஆம் ஆண்டில் இணைத்துக் கொள்ளப்பட்ட மொத்த பதிவுகளின் எண்ணிக்கை
01	அனுராதபுரத்தில் உள்ள இலங்கை பிக்கு பல்கலைக்கழகத்தின் நூலக பட்டியல http://catalogue.busl.ac.lk/	2023	Koha	பட்டியல்கள் - 5963 சுற்றறிக்கைகள் - 901
02	அனுராதபுரத்தில் உள்ள இலங்கை பிக்கு பல்கலைக்கழகத்தின் மின் களஞ்சியம் https://repo.busl.ac.lk/	2023	DSpace	1851
03	மேரிஸ் ஸ்டெல்லா கல்லூரி, திம்பிரிகஸ்-கடுவ நூலக பட்டியல; http://38.242.147.208	2023	Koha	பட்டியல்கள - 5879 நடைமுறையிலுள்ள சுற்றறிக்கைகள்
04	சனாதிபதி செயலகம், மின் களஞ்சியம் https://dlib.presidentsoffice.gov.lk/	2023	DSpace	நடைமுறையில் உள்ளவை
05	A/சுவர்ணபாலி மகளிர் வித்தியாலயம், அனுராதபுரம், Desktop பயன்பாட்டு பொதி	2023	JAVA CDS/ ISIS	நடைமுறையில் உள்ளவை
06	இலங்கை பல்கலைக்கழக மகளிர் சம்மேளம் (SLFUW), கொழும்பு, Desktop பயன்பாட்டு பொதி	2023	JAVA CDS/ ISIS	2192
07	தெங்கு ஆராய்ச்சி நிறுவகம் http://viduketha.nsf.gov.lk/cribib	2022	JAVA CDS/ ISIS	2000



அனுராதபுரத்தில் உள்ள இலங்கை பிக்கு பல்கலைக்கழகத்தின் மின் களஞ்சியம்



அனுராதபுரத்தில் உள்ள இலங்கை பிக்கு பல்கலைக்கழகத்தின் நூலக பட்டியல்

இலங்கை விஞ்ஞான முன்னேற்ற சங்கத்திற்கான (SLAAS) உறுப்பினர் தரவுத்தளத்தை விருத்தி செய்தல்.

2023 ஆம் ஆண்டில், தேசிய விஞ்ஞான நூலக மற்றும் வள நிலையமானது, இலங்கை விஞ்ஞான முன்னேற்ற சங்கத்திற்கு (SLAAS) விரிவான மற்றும் பயனர் நட்புடனான நிகழ்நிலை அடிப்படையிலான உறுப்பினர் தரவுத்தளத்தை வெற்றிகரமாக உருவாக்கியது. இந்த தரவுத்தளம் பாரம்பரிய அடிப்படையிலான முகாமைத்துவ தரவு முறைகளில் சிறந்த மாற்றத்தினை ஏற்படுத்தியதுடன், உறுப்பினை பதிவு தொடர்பில், உடனடியாக உறுப்பினர் பதிவு செயலாக்கத்தை செயல்படுத்த உதவியது மட்டுமல்லாது இலங்கை விஞ்ஞான முன்னேற்ற சங்கத்தில் பதிவுசெய்யப்பட்ட விஞ்ஞானவியல் ஆராய்ச்சி நிபுணத்துவத்தை எளிதாக அணுகுவதற்கு உதவியாக அமைந்தது. ர்னுசு விண்ணப்பதாரர்கள், அரசு நிறுவனங்கள் மற்றும் ஊடகங்களினால் முக்கியத்துவம் கொடுக்கப்படும் நிபுணர்கள் போன்ற முக்கிய வெளிப்புற பார்வையாளர்களை இலக்காகக் கொண்டு, வடிவமைக்கப்பட்ட இந்த தரவுத்தளமானது விஞ்ஞான ஆராய்ச்சி நிபுணர்களினை கண்டறிவதற்கு இலகுபடுத்துவதுடன் கூட்டிணைந்து செயலாற்றுவதற்கான வாய்ப்புகளை வளர்க்கிறது.

இலங்கை விஞ்ஞான முன்னேற்ற சங்கத்தின் தலைவரும் தேசிய விஞ்ஞான மன்ற தலைவருமான பேராசிரியர் ரஞ்சித் சேனாரத்னவின் ஆகியோரின் வேண்டுகோளின் பேரில் உறுப்பினர் தரவுத்தளம் உருவாக்கப்பட்டது. உறுப்பினர் தரவுத்தளமானது உறுப்பினர் மற்றும் ஆராய்ச்சியாளர் சுயவிவரங்களை நிர்வகிக்க உதவவதனுடாக அவர்களின் ஆராய்ச்சியின் தெரிவுநிலை மற்றும் தாக்கத்தை மேம்படுத்துகிறது. தரவுத்தளத்தின் மூலம், ஆராய்ச்சியாளர்கள் தங்கள் தகுதிகள் மற்றும் ஆராய்ச்சி வெளியீடுகளை உள்ளடக்கிய விரிவான சுயவிவரங்களை வெளிப்படுத்த இயலும். இந்த செயல்பாடு ஆராய்ச்சியாளர்கள் தங்கள் நிபுணத்துவத்தை வெளிப்படுத்த அனுமதிப்பது மட்டுமல்லாமல், உலகளவில் சாத்தியப்படக்கூடிய ஒத்துழைப்பாளர்களுடன் வலையமைப்பு மற்றும் ஒத்துழைப்பு வாய்ப்புகளையும் எளிதாக்குகிறது.

2023 டிசம்பர் 10, ஆம் திகதியன்று பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற இலங்கை விஞ்ஞான முன்னேற்ற சங்கத்தின் 79வது வருடாந்திர விஞ்ஞான அமர்வில் இந்த தரவுத்தளம் அதிகாரப்பூர்வமாக வெளியிடப்பட்டது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக பேராசிரியர் மோகன் முனசிங்க,

அவர்களும், இலங்கை விஞ்ஞான முன்னேற்ற சங்கம் மற்றும் தேசிய விஞ்ஞான மன்றம் ஆகியவற்றின் தலைவருமான பேராசிரியர் ரஞ்சித் சேனாரத்ன மற்றும் தேசிய விஞ்ஞான மன்றத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி சேபாலிகா சுதசிங்க ஆகியோர் கலந்து கொண்டனர். மேலும், தேசிய விஞ்ஞான நூலக மற்றும் வள நிலையத்தின் தலைவரும் முதன்மை தகவல் அதிகாரியுமான திரு. மனுஜா கருணாரத்ன மற்றும் உறுப்பினர் தரவுத்தளத்தை தயாரிப்பதற்கு பொறுப்பான தகவல் அதிகாரி திருமதி தஸ்னீம் நியாஸ் ஆகியோரும் இந்த சிறப்பு நிகழ்வில் கலந்து கொண்டனர்.

http://192.248.80.26/slaasmemb



நடத்தப்பட்ட பயிற்சி திட்டங்கள்

தேசிய விஞ்ஞான நூலகம் மற்றும் வள நிலையமானது, 2023, அக்டோபர் 19 மற்றும் 20, ஆம் திகதிகளில் WINISIS நூலக முகாமைத்துவ மென்பொருளின் சமீபத்திய பதிப்பான Java CDS/ISIS (J-ISIS) குறித்த நிகழ்நிலை பயிற்சி பட்டறையை நடத்தியது. டிஜிட்டல் நூலக நிர்வாகத்தில் சமீபத்திய தொழில்நுட்பத்தைப் பின்பற்றுவதற்கும் அவர்களின் பயனர் சமூகத்திற்கு ஸ்மார்ட் நூலக சேவைகளை உருவாக்குவதற்கும் நூலகம் மற்றும் தகவல் தொழில்நுட்ப தொழில்சார்பியலாளர்களின் திறன்களை மேம்படுத்துவதுமே இந்தப் பட்டறையின் நோக்கமாகும். தேசிய விஞ்ஞான மன்றத்தின் தகவல் அதிகாரி திருமதி தஸ்னீம் நியாஸ் அவர்கள் இந்தப் பட்டறைக்கு வள நபராகப் பணியாற்றினார் என்பதுடன் இந்த பட்டறையில் SLSTINET நூலகங்கள் மற்றும் பிற நூலகங்களைச் சேர்ந்த 21 நிபுணர்கள் பங்கேற்றனர். தேசிய விஞ்ஞான நூலகம் மற்றும் வள நிலையமானது, 2023 ஜூலை 19 ஆம் திகதியன்று, தனியார் நிறுவனங்களின் நிறுவன முகாமையாளர்களுக்காகவும் மற்றும் அரசு நிறுவனங்களில் புதிதாக இணைந்தவர்களுக்காகவும், இன்னுமொரு நிகழ்நிலை பயிற்சித் திட்டத்தை ஏற்பாடு செய்ததுடன் இந்க பயிற்சி திட்டமானதுஇ தேசிய கருவி தரவுத்தளம் (NID) பற்றியதாகும். இந்த நிகழ்ச்சிக்கான வள நபராக தேசிய விஞ்ஞான மன்றத்தினை சார்ந்த திருமதி தஸ்னீம் நியாஸ் அவர்கள் பணியாற்றினார் என்பதுடன் இந்த நிகழ்ச்சியில் 20 ஆளணியினர் பங்கேற்றனர்.

தேசிய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி கணக்கெடுப்பு



கணக்கெடுப்பானது, நாட்டின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளின் செயல்திறனை ஆராய்கிறது. 2020 நிதியாண்டிற்காக நடத்தப்பட்ட இந்த கணக்கெடுப்பானது, ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி புள்ளிவிவர கையேடு 2020 என நிறைவு செய்யப்பட்டு வெளியிடப்பட்டது. இந்த புள்ளிவிவர கையேடானது, உயர்கல்வித் துறை, அரசு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி துறை, வணிக நிறுவனத் துறை மற்றும் தனியார் இலாப நோக்கற்ற துறை ஆகிய நான்கு துறைகளுக்கான நாட்டின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளின் செயல்திறனை பிரதிபலிக்கிறது.

இந்த கையேடானது, ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்கான மொத்த செலவு (GERD), ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்கான நிதி ஆதாரங்கள், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்கான விஞ்ஞானிகள் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்களின் எண்ணிக்கை மற்றும் அங்கீகரிக்கப்பட்ட இதழ்களில் உள்ள ஆராய்ச்சி வெளியீடுகளின் எண்ணிக்கை, காப்புரிமைகள் மற்றும் தொழில்துறை வடிவமைப்புகள் பற்றிய தகவல்கள், மற்றும் முதுகலை வெளிவரு விளைவுகள் போன்ற இதர பல ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பற்றிய வெளிவரு விளைவுகள் போன்ற ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி பற்றிய உள்ளீடுகளினை உள்ளடக்கியது. பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்தி அமைப்பு (OECD) வகுத்துள்ள சர்வதேச தரநிலைகளின் அடிப்படையில் இந்த கணக்கெடுப்பு நடத்தப்படுகிறது.

2020 ஆம் ஆண்டின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி கணக்கெடுப்பின் சிறப்பம்சங்கள்

- 2020 ஆம் ஆண்டிற்கான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்கான மொத்த உள்நாட்டு செலவினம் (GERD) அதன் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 0.12% ஆகும்.
- ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்கான நிதியில் அதிக விகிதம் அரசுத் துறையால் வழங்கப்பட்டது (44%).



வரைபடம் 60: நிதியங்களின் மூலம் என்ற அடிப்படையில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்கான செலவினம்

- ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்கான நிதியில் அதிக விகிதம் அரச வியாபார முயற்சிகளினால் செலவிடப்பட்டது (37.94%)



வரைபடம் 61: துறை ரீதியாக ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்கான மொத்த செலவு

- விவசாய விஞ்ஞான துறையினது ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்கு நிதியில் அதிக விகிதம் செலவிடப்பட்டது (27.65%)



வரைபடம் 62: மொத்த செலவினத்தில் விஞ்ஞானம் எனும் துறையில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்கு செலவிடப்பட்ட அளவுகள்



வரைபடம் 63: ஆராய்ச்சியாளர்களின் எண்ணிக்கை

2020 ஆம் ஆண்டின் தேசிய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி புள்ளிவிவரங்களாவன, யுனெஸ்கோ புள்ளியியல் நிறுவனத்திடம் (UIS) அதன் சர்வதேச வாசகர் எண்ணிக்கை மற்றும் பயன்பாட்டினை மேம்படுத்துவதற்காக சமர்ப்பிக்கப்பட்டன. மேலும்,2020 ஆம் ஆண்டின் நிலையான அபிவிருத்தி இலக்குகளுடன் தொடர்புடைய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி புள்ளிவிவரங்களாவன இலங்கையில் நிலையான அபிவிருத்தி இலக்குகளுக்கான தரவுத்தளத்தில் உள்ளடக்கப்பட்டன. 2022 ஆம் நிதியாண்டிற்கான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி கணக்கெடுப்பை நடத்துவதற்கான ஆரம்ப பணிகள் நிறைவடைந்துள்ளன.

விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப முகாமைத்துவ தகவல் அமைப்பு (STMIS)

விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப முகாமைத்துவ தகவல் அமைப்பு (STMIS) என்பது 2004 முதல் தேசிய விஞ்ஞான மன்றத்தினால் உருவாக்கப்பட்டு பராமரிக்கப்படும் ஒரு கணினிமயமாக்கப்பட்ட தகவல் அமைப்பாகும். விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப முகாமைத்துவ தகவல் அமைப்புக்கான தரவுத்தளத்தில் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் தொடர்பான நிறுவனங்கள், விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப ஆளணியினர்கள், விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களில் கிடைக்கும் உயர் தரமான விஞ்ஞானம் உபகரணங்கள், நடந்துகொண்டிருக்கும் ஆராய்ச்சி நடவடிக்கைகள், நிறுவனங்களால் உருவாக்கப்பட்டு மாற்றப்படும் தொழில்நுட்பங்கள், விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்கள் பொதுமக்களுக்காக வழங்கும் சேவைகள் மற்றும் பயிற்சித் திட்டங்கள் மற்றும் தனிப்பட்ட விஞ்ஞானிகளால் செய்யப்படும் ஆராய்ச்சி வெளியீடுகள் பற்றிய தகவல்கள் கிடைக்கப்பெறக்கூடியதாக இருக்கும். இந்த விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப முகாமைத்துவ தகவல் அமைப்பின் ஊடாக சிறந்த சேவையை வழங்கவும் செயல்முறைகளை நெறிப்படுத்தவும் பல்வேறு முயற்சிகள் எடுக்கப்பட்டன.

சம்மந்தப்பட்ட பங்குதாரர்கள் வணிகம் சாரா சட்டபூர்வமான நோக்கங்களுக்காக விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப முகாமைத்துவ தகவல் அமைப்பில் பகிரப்படும் தரவை அணுகுவதற்கான வழிகாட்டுதல்கள் மற்றும் கோட்பாடுகளினை வழங்கும் நோக்குடன், ஒரு தரவு பகிர்வு கொள்கை உருவாக்கப்பட்டுள்ளது. இந்தக் கொள்கை, தரவை அணுக உதவுவதை நோக்கமாகக் கொண்டுள்ள, அதே வேளையில் தேசிய விஞ்ஞான மன்றமானது அதனால் நிர்வகிக்கப்படும் இத் தரவுகளுக்கான உரிமையைப் பாதுகாக்கிறது. இந்த அணுகுமுறை விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப முகாமைத்துவ தகவல் அமைப்பில் தரவை திறம்பட பகிர்ந்து கொள்ள அனுமதிக்கும் என்பதுடன் இந்த பொது நிதியளிக்கப்பட்ட வளத்திலிருந்து எந்தவொரு தகவலும் நகலெடுக்கப்படுவதை தடுக்க உதவும்.

2023 ஆம் ஆண்டின் இறுதிக்குள், விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப முகாமைத்துவ தகவல் அமைப்பின் தரவுத்தளத்தில் 7300 பதிவுதாரர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் 163 பேர் இந்த ஆண்டில் புதிதாக பதிவு செய்யப்பட்ட புதிய பதிவுதாரர்கள் ஆவார்கள்.



வரைபடம் 64: காலத்தோடு விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப முகாமைத்துவ தகவல் அமைப்பில பதிவு செய்த பதிவுதாரர்களின் எண்ணிக்கை

விஞ்ஞான கற்கைகள் மற்றும் நிகழ்வுகள், மானிய அழைப்புகள் மற்றும் பிற தொழில் வாய்ப்புகளை உள்ளடக்கிய தகவல்களை விஞ்ஞான சமூகத்தின் நலனுக்காக விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப முகாமைத்துவ தகவல் அமைப்பின் மூலம் பரப்புதல்

பதிவுசெய்தவர்களின் நலனுக்காக விஞ்ஞான கற்கைகள் மற்றும் நிகழ்வுகள், மானிய அழைப்புகள் மற்றும் பிற தொழில் வாய்ப்புகள் போன்ற முக்கியமான நாளது வரையிலுமான தகவல்களினை பரப்பும் இந்த வசதியானது 2020 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப முகாமைத்துவ தகவல் அமைப்பின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த வசதியானது, வரையறுக்கப்பட்ட வழிகாட்டுதல்கள் மற்றும் நெறிப்படுத்தப்பட்ட செயல்முறைகளை அறிமுகப்படுத்தியது, அறிவியல் நிகழ்வுகளை ஒழுங்கமைக்கும் வெளிப்புற நிறுவனங்கள் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப முகாமைத்துவ தகவல் அமைப்பின் மூலம் பரந்த சமூகத்தினரிடையே தங்கள் நிகழ்வுகள் பற்றிய நாளது வரையிலுமான தகவல்களினை விளம்பரப்படுத்த உதவியது. இந்த வசதியை முறையாக அறிமுகப்படுத்தியதன் மூலம் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப முகாமைத்துவ தகவல் அமைப்பில் பதிவுசெய்தவர்கள் தேசிய மற்றும் சர்வதேச அளவில் தங்களுக்குக் கிடைக்கும் வாய்ப்புகள் குறித்த நாளது வரையிலுமான மிகவும் இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களினை பெற்று பயனடைந்துள்ளனர். தகவல்களாவன சுற்றுக்கு விடும் போது ஒரு பொதுவான சுற்று என்ற ரீதியிலோ அல்லது தனிப்பயனாக்கப்பட்ட சுற்று என்ற ரீதியாகவோ முன்வைக்கப்படுகின்றன. அங்கு தகவல் கோரும் தரப்பினரின் விருப்பம் மற்றும் உள்ளடக்கத்தின் பொருத்தத்திற்கு ஏற்ப முன்னரே தீர்மானிக்கப்பட்ட நிபுணத்துவத் துறைகளுக்கு இடையே தகவல்கள் பரப்பப்படுகிறது.

2023 ஆம் ஆண்டில் மொத்தம் 120 தகவல்கள் சுற்றுகள் விடப்பட்டதன் மூலம் தேசிய விஞ்ஞான மன்றமானது ரூபாய் 127,000/- இனை வருமானமாக பெற்றுக்கொண்டது. இந்த சேவையானது தேசிய விஞ்ஞான மன்றத்தின் தகவல் தொழில்நுட்ப பிரிவினது ஆதரவுடன் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப முகாமைத்துவ தகவல் அமைப்பின் மூலம் வழங்கப்படுகிறது. மேலும் பரந்த மற்றும் பொருத்தமான வாசகர்களினை சென்றடைவதில் நம்பகமான வழிகாட்டி என்ற ரீதியில் நாட்டில் உள்ள விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப சமூகத்தினரிடையே இந்த அமைப்பு பிரபலமடைந்து வருகிறது.



வரைபடம் 65 : விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப முகாமைத்துவ தகவல் அமைப்பில் மூலம் விடப்பட்ட தகவல் சுற்றுக்களின் எண்ணிக்கை மற்றும் பெறப்பட்ட வருமானம்

தகவல் கோரிக்கைகள்

வெவ்வேறு பங்குதாரர்களின் கோரிக்கைகளின் அடிப்படையில் ஆறு தனிப்பயனாக்கப்பட்ட விரிவான அறிக்கைகள் உருவாக்கப்பட்டன.

இந்த அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட விடயங்கள் அந்தந்த துறைகளில் நிபுணத்துவம் பெற்ற 1,000க்கும் மேற்பட்ட நிபுணர்களினால் சரிபார்க்கப்பட்டவை விவரங்கள் ஆகும்.

மேலும், விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப முகாமைத்துவ தகவல் அமைப்பில் *(https://stmis.nsf.gov.lk/)* இந்த ஆண்டு 16,200 கருத்துக்கள் பெறப்பட்டுள்ளதுஇ இது பொதுமக்களிடையே இந்த நிகழ்நிலை அமைப்பின் பயன்பாடு அதிகரித்திருப்பதைக் குறிக்கிறது.



வரைபடம் 66: விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப முகாமைத்துவ தகவல் அமைப்பின் வாசகர்களின் எண்ணிக்கை

ஆசிய சமூக விஞ்ஞான ஆராய்ச்சி மன்ற சங்கத்துடன் (AASSREC) தொடர்பு கொள்ளுதல

ஆசியாவில் உள்ள பல சமூக விஞ்ஞான நிறுவனங்களின் சங்கமான AASSREC இன் உறுப்பினராக தேசிய விஞ்ஞான மன்றம் உள்ளது. சமூகத்துடன் தொடர்புடைய மிக முக்கியமான நடப்பு தலைப்புகளில் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை மாநாடுகளை AASSREC முன்னெடுக்கின்றது. AASSREC இன் 25 வது இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறும் பொது மாநாடு, "ஆசியாவில் சமூக விஞ்ஞானம்: கடந்த காலம், நிகழ்காலம் மற்றும் எதிர்காலம" என்ற கருப்பொருளில், கொரியாவின் சியோலில் 2023 ஆம்ஆண்டு ஜூன் 14 முதல் 16 வரை நடைபெற்றது.

இந்த மாநாட்டிற்கு ஆவண சுருக்கங்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டன. பெறப்பட்ட ஆவண சுருக்கங்களாவன, மதிப்பாய்வாளர்கள் குழுவால் மதிப்பாய்வு செய்யப்பட்டன, மேலும் அதிக மதிப்பெண்களைப் பெற்ற இரண்டு ஆவண சுருக்கங்கள் AASSREC க்கு அனுப்பப்பட்டன. இலங்கை ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் சமூக விஞ்ஞான மற்றும் மனிதநேய பீடத்தின் சுற்றுச்சூழல் முகாமைத்துவ திணைக்களத்தின் தலைவர் பேராசிரியர் ரணகலகேவின் "இலங்கையில் சமூக விஞ்ஞான ஆராய்ச்சியாளர்கள் எதிர்கொள்ளும் தற்போதைய சவால்கள் மற்றும் எதிர்கால வாய்ப்புகள்" என்ற தலைப்பில் மாநாட்டில் சமர்ப்பிக்கப்படவிருந்த சுருக்கத்தை AASSREC தேர்ந்தெடுத்தது.

சமூக விஞ்ஞானத்தில் இரு நிறுவனங்களுக்கிடையில் சில கூட்டு நடவடிக்கைகளைத் தொடங்குவதற்கு, ஆசியாவில் கூட்டு பிராந்திய ஆராய்ச்சித் திட்டத்திற்கான உலகளாவிய அபிவிருத்தி வலையமைப்பு (GDN) கருத்திட்ட திட்ட முன்மொழிவு குறித்து யுயுளுளுசுநுஊ உடன் பல கலந்துரையாடல்கள் செய்யப்பட்டன. AASSREC வினது கொள்கை மற்றும் மூலோபாயக் குழுவிற்கு இலங்கையிலிருந்து ஒரு பெயர் குறிப்பீடு அனுப்பப்பட்டது.



பேராசிரியர் ரணகலகே அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரையினை விருத்தி செய்வதற்கான உள்ளீடுகள் மற்றும் கருத்துகளை வழங்குவதற்காக நிபுணர் குழுவுடனான சந்திப்பு.

சமூக விஞ்ஞானம் தொடர்பில் தேசிய விஞ்ஞான மன்றத்தினால் முன்னெடுக்கப்படும் பணிகளுக்கு புத்துணர்ச்சி அளித்தல்.

சமூக விஞ்ஞானத்தில் பணியாற்ற நியமிக்கப்பட்ட புதிய குழுவானது 2023 நவம்பர் மாதத்தில் அதன் செயல்பாடுகளைத் தொடங்கியது. இந்தக் குழுவானது, பல்வேறு சமூக விஞ்ஞான துறைகளில் நிபுணர்களைக் கொண்டுள்ளது என்பதுடன் குழுவானது, அதன் நோக்கங்களை நிறைவேற்ற அவர்களின் நிபுணத்துவத்தை ஒன்றிணைத்து செயற்படும். நோக்கப்படவேண்டிய விதிமுறைகளைப் (ToR) பின்பற்றி, குழுவானது ஒரு வலுவான சமூக கூறுகளை உள்ளடக்கியதும், அதிக நடைமுறை வெளியீடுகளை தரக்கூடியதுமான பல் துறை ஆராய்ச்சியை கையாளும். மேலும், சமூக விஞ்ஞான தலையிடுகை தேவைப்படும் முக்கியமான நடப்பு பிரச்சினைகளினை இந்தக் குழு கலந்துரையாடி அத்தகைய கலந்துரையாடல்களிலிருந்து எழும் பரிந்துரைகளினை, தீர்மானம் எடுப்பவர்களுக்கு தெரிவிக்கும். இளம் கல்விமான்களின் திறனை விருத்தி செய்தலானது ஆராய்ச்சியினதும் மற்றும் தொடர்புடைய கண்டுபிடிப்புகளினதும் தரத்தை மேம்படுத்தும். இளம் அறிஞர்களின் திறன் மேம்பாடு ஆராய்ச்சி மற்றும் தொடர்புடைய கண்டுபிடிப்புகளின் தரத்தை மேம்படுத்தும். நடப்பு பிரச்சினைகள் குறித்த சமூக விஞ்ஞான கண்ணோட்டங்களைப் பரப்புதலானது, பல்வேறு சமூக மாற்றங்களுக்கு பகுத்தறிவுடன் தகவமைத்துக் கொள்ளும் ஒரு நன்கு அறியப்பட்ட சமூகத்தை உருவாக்கும்.இந்தக் குழுவானது, தொடர்பிணைப்புக்கள் மற்றும் கூட்டு முயற்சிகளை உருவாக்குவதன் மூலம் சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட சமூக விஞ்ஞான அமைப்புகளுடன் தொடர்புகளினை ஏற்படுத்தி கொள்ளும். மேற்கூறிய நோக்கங்களை நிறைவேற்றும் அதே வேளையில், இந்தக் குழுவானது, தேசிய விஞ்ஞான மன்றத்தில் சமூக விஞ்ஞானத்திற்கு ஆராய்ச்சி மற்றும் பல்வேறு முயற்சிகளை மையமாகக் கொண்ட ஒரு வலுவான திட்டத்திற்கு குறிப்பிடத்தக்க உத்வேகத்தை உருவாக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



சமூக விஞ்ஞானம் தொடர்பில் தேசிய விஞ்ஞான மன்றத்தினது செயற்குழுவின் தொடக்கக் கூட்டம்

விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித்திட்டங்கள்

இலங்கை விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப தகவல் வலையமைப்பின் (SLSTINET) மையப் புள்ளி என்ற வகையில், தேசிய விஞ்ஞான நூலகம் மற்றும் வள நிலையமானது (NSLRC), நாடு முழுவதும் உள்ள பல்கலைக்கழகங்கள், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனங்கள் மற்றும் பிற விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நூலகங்களில் உள்ள SLSTINET நூலகங்களுக்கு பல நூலக விழிப்புணர்வு திட்டங்களை ஏற்பாடு செய்தது. 2023 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட நூலக விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களின் போது, தேசிய விஞ்ஞான மன்றத்தினால் வழங்கப்படும் பல்வேறு விஞ்ஞான வளங்கள் தொடர்பிலான விரிவான கண்ணோட்டமும், பல்கலைக்கழகங்கள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களின் ஆராய்ச்சியாளர்கள் இந்த வளங்களிலிருந்து பயனடையக்கூடிய வாய்ப்புகளை எடுத்துக்காட்டுவதிலும் முதன்மை கவனம் செலுத்தப்பட்டது.

மேலும், நூலக விழிப்புணர்வு நிகழ்ச்சிகளாவன தேசிய விஞ்ஞான மன்றத்தின் பணிப்பானை, ஒவ்வொரு பிரிவின் செயல்பாடுகள் மற்றும் தேசிய விஞ்ஞான மன்றத்தின் ஊடாக கிடைக்கக்கூடிய அக மற்றும் உலகளாவிய தரவுத்தளங்களின் வரிசை பற்றிய விரிவான விளக்கங்களை ஆராய்ந்தன. தேசிய விஞ்ஞான மன்றத்தின் மானியத் திட்டங்கள், விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப முகாமைத்துவ தகவல் அமைப்பு (STMIS), உலகளாவிய டிஜிட்டல் தளம் (GDP) தேசிய கருவி தரவுத்தளம் (NID), நிகழ்நிலை அடிப்படையிலான இலங்கை சஞ்சிகை (SLJOL), தேசிய டிஜிட்டல்மயமாக்கல் திட்டம் (NDP), மின்-களஞ்சியங்கள், நூலியல் தரவுத்தளங்கள் என்பனவற்றுடன் தேசிய விஞ்ஞான மன்றம் வழங்கும் பிற சேவைகள் குறித்தும் பங்கேற்பாளர்களுக்குத் தெரிவிக்கப்பட்டது.

இந்த அமர்வுகளின் போது, இது தேசிய விஞ்ஞான மன்றத்தின் வளங்கள் பற்றிய புரிதல் மற்றும் அந்த வளங்களினை பயன்படுத்துதல் என்பவை பற்றிய விளக்கத்தினை மேம்படுத்தும் நோக்குடன் பங்கேற்பாளர்களிடையே நடைமுறை அறிவு மற்றும் உத்திகள் பகிர்ந்து கொள்ளப்பட்டன. வழங்கப்பட்ட தகவல்கள் தற்போதைய ஆராய்ச்சி முயற்சிகளிலும், எதிர்கால திட்டங்களை வடிவமைப்பதிலும் பல்கலைக்கழகங்கள் மற்றும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனங்களுக்கும் பயன்மிக்கதாக இருக்கும் என்று நம்பப்படுகிறது.

நூலக விழிப்புணர்வு நிகழ்ச்சிகளின் போது பங்கேற்பாளர்கள் கேள்விகள் கேட்கவும், தேசிய விஞ்ஞான மன்றத்திடம் விளக்கம் பெறவும் ஊக்குவிக்கப்பட்டனர். இந்த பல தரப்பினரை உள்ளடக்கிய இந்த அணுகுமுறையானது,கலந்துரையாடப்பட்ட தலைப்புகளைப் பற்றிய ஆழமான புரிதலை எளிதாக்குவதை நோக்கமாகக் கொண்டதுடன் கல்வி மற்றும் ஆராய்ச்சி சமூகம் தேசிய விஞ்ஞான மன்றத்திடமிருந்து அதிக அறிவையும் கருத்துக்களினையும் பெற அனுமதித்தது. திறந்த அடிப்படையில் தொடர்பாடல் மற்றும் கலந்துரையாடலினை முன்னெடுப்பதன் லம், பங்கேற்பாளர்கள் தேசிய விஞ்ஞான மன்ற பிரதிநிதிகளுடன் நேரடியாக கலந்துரையாடவும் ஏதேனும் நிச்சயமற்ற தன்மைகளை நிவர்த்தி செய்யவும், தேசிய விஞ்ஞான மன்றத்தின் வளங்களின் பயன்படுத்துகை குறித்து பெறுமதியான நுண்ணறிவுகளைப் பெறவும் முடிந்தது.

அட்டவணை 05: 2023 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட நூலக விழிப்புணர்வு நிகழ்ச்சிதிட்டங்கள்

இலக்கம்	நிறுவகம்	திகதி	பங்கு பெறுனர்களின் எண்ணிக்கை
01	பேராதனைப் பல்கலைக்கழகம்	2023.02.23	34
02	தேசிய விவசாய தகவல் மற்றும் தொடர்பாடல் மையம் (NAICC) இகன்னொறுவ	2023.02.23	127
03	தேசிய விவசாய தகவல் மற்றும் தொடர்பாடல் மையம் (NAICC) இகன்னொறுவ	2023.03.08	41
04	இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் (SLIATE)	2023.06.20	30
05	இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகம் (EUSL)	2023.08.09	39
06	பிரதான நூலகம், ஒலுவில், இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம் (SEUSL)	2023.08.10	47
07	பிரயோக விஞ்ஞான பீடம் நூலகம், சம்மாந்துறை, இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம் (FAS, SEUSL)	2023.08.11	48
08	பிக்குகள் பல்கலைக்கழகம், இலங்கை, அனுராதபுரம்	2023.09.26	14



கன்னொருவை தேசிய விவசாய தகவல் மற்றும் தொடர்பு மையத்தில் (NAICC) விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம்



வந்தாறுமூலை, செங்கலடியில் உள்ள இலங்கை கிழக்குப் பல்கலைக்கழகத்தில் (EUSL) விழிப்புணர்வு நிகழ்ச்சி திட்டம்



அம்பாறையில் உள்ள இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் (SEUSL) பிரதான நூலகத்தில் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம்



இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் பிரயோக விஞ்ஞான பீட (SEUSL,FAS) நூலகத்தில் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம்.

புத்தகங்கள் மற்றும் இதழ்களின நன்கொடை

தேசிய விஞ்ஞான நூலக வள நிலையத்தின் சார்பாக தேசிய விஞ்ஞான மன்றத்தின் அளவை சபையினால் 2018 மற்றும் 2022 க்கு இடையில் புத்தக கணக்கெடுப்பு முன்னெடுக்கப்பட்டது. இதனை அடிப்படையாக கொண்டு அளவை சபையின் பரிந்துரையின் அடிப்படையில், மொத்தம் 486 புத்தகங்கள், 123 தேசிய விஞ்ஞான மன்ற வெளியீடுகள், 377 விஞ்ஞான இதழ்கள் மற்றும் 117 தேசிய விஞ்ஞான மன்ற இதழ்களாவன இரட்டிப்புஇ சேதம், நீடித்து வைத்திருக்க இயலாத தன்மை மற்றும் நிகழ்நிலை ஊடாக அணுகக் கூடிய தன்மை போன்ற காரணங்களால் அகற்றப்படுவதற்கு உத்தேசிக்கப்பட்டது. இந்தப் பொருட்கள் 2023 ஆம் ஆண்டில் தேசிய விஞ்ஞான நூலக வள நிலையத்தினால் அகற்றப்பட்டு மற்றைய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நூலகங்களுக்கு நன்கொடையாக வழங்கப்பட்டன.





சர்வதேச வணிகம் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி (ICBT) வளாகம் மற்றும் இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகம் ஆகியவற்றிக்கு சேதமுற்ற புத்தகங்களை நன்கொடையாக வழங்குதல்.

சந்தா, கையகப்படுத்தல் மற்றும் தகவல் பரவல் சேவைகள்

தேசிய விஞ்ஞான நூலகம் மற்றும் வள நிலையமானது (NSLRC), அறிவார்ந்த சமூகத்தின் தகவல் தேவைகளை கட்டுரை கோரிக்கைகள்இ நேரடி விஜயங்கள், தொலைபேசி அழைப்புகள் அல்லது மின்னஞ்சல் மூலம் பெற்று, பூர்த்தி செய்கிறது. 2023 ஆம் ஆண்டில், பிரிவானது பொது பயனர்களிடமிருந்து 2011 கட்டுரை கோரிக்கைகள் மற்றும் கேள்விக்கணைகளினை பெற்றுக்கொண்டது. இருப்பினும், அனைத்து தேசிய விஞ்ஞான நூலகம் மற்றும் வள நிலைய தரவுத்தளங்களுக்கான நிகழ்நிலை அணுகலில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது, குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான நிகழ்நிலை அணுகல்கள் மற்றும் பதிவிறக்கங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. பௌதீகவியல் ரீதியாக நோக்குமிடத்து பயனர்கள் அக தரவுத்தளங்களில் 271 தேடல்களை நடத்தியுள்ளனர், அதே நேரத்தில் 84 முழு உரை கட்டுரைகள் TEEAL சர்வதேச தரவுத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்பட்டன.

கையகப்படுத்தல் முகாமைத்துவத்தை பொறுத்தவரை, கல்விமான் சமூகத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகப் பிரிவு பல்வேறு சேகரிப்புகளை ஒழுங்கமைத்தது. 2023 ஆம் ஆண்டில், பிரிவு 12 புதிய புத்தகங்களைப் பெற்றது,இவற்றுள் சில வாங்கப்பட்டன, மற்றவை நன்கொடையாக பெறப்பட்டன. இதைவிட, 12 அக இதழ்கள், 6 வெளிநாட்டு இதழ்கள் மற்றும் 22 மாநாட்டு நடவடிக்கைகள் தொடர்பான விபரங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டன. மேலும், 4 ஆய்வறிக்கைகள் மற்றும் 12 இறுதி ஆராய்ச்சி அறிக்கைகள் ஆகியன ஆராய்ச்சி அறிக்கைகளின் பௌதீகவியற்றுறை சேகரிப்பில் சேர்க்கப்பட்டன.

தேசிய விஞ்ஞான நூலகம் மற்றும் வள நிலையத்தில் கிடைக்கும் வளங்கள் மற்றும் சேவைகள் குறித்த விழிப்புணர்வு அமர்வுகள் நடத்தப்படல்

1. கம்பஹா விக்கிரமாராச்சி சுதேச மருத்துவப் பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சி மன்றத்தினால் 2023 அக்டோபர் மாதம் 12 ஆம் திகதி கொழும்பு 07 இல் உள்ள ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட "ஆராய்ச்சி மானியங்களை வழங்குவதற்கான முன்மொழிவுகளை மதிப்பிடுவதற்கான சிறப்புத் திட்டத்தில்" வள நபராக, தேசிய விஞ்ஞான நூலகம் மற்றும் வள நிலையத்தின் தலைவர் திரு. மனுஜ கருணாரத்ன, கலந்துக் கொண்டு ஒரு விழிப்புணர்ச்சி நிகழ்ச்சி திட்டத்தினை நடத்தினார். பல்கலைக்கழகத்தின் கல்வி ஊழியர்களுக்கான இரண்டு நாள் வதிவு நிகழ்வாக நடந்த இந்த நிகழ்ச்சியில், ஆராய்ச்சி சமூகத்தினருக்கு தேசிய விஞ்ஞான மன்றத்தில் கிடைக்கக்கூடிய நூலக வளங்கள் மற்றும் சேவைகள் குறித்து தெரியப்படுத்தியதுடன் ஆராய்ச்சி மானியங்களைப் பெறுவதற்கான தரமான முன்மொழிவுகளை உருவாக்குவது குறித்தும் ஆராய்ச்சி சமூகத்தினருக்கு விழிப்புணர்வு நிகழ்ச்சியை நடத்தினார்.



கம்பஹா விக்கிரமாராச்சி சுதேச மருத்துவப் பல்கலைக்கழகத்தின் கல்விப் பணியாளர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம்

2. இலங்கை தேசிய எந்திரவியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தால் 2023 நவம்பர் 02 ஆம் திகதி பத்தரமுல்லையில் உள்ள வாட்டர்ஸ் எட்ஜ் ஹோட்டலில் ஏற்பாடு செய்யப்பட்ட சர்வதேச பொறியியல் ஆராய்ச்சி கருத்தரங்கிற்கான வள நபராக, தேசிய விஞ்ஞான நூலகம் மற்றும் வள நிலையத்தின் தலைவர் திரு. மனுஜ கருணாரத்ன மற்றும் ஆராய்ச்சிப் பிரிவின் தலைவரும் பொறியாளருமான மகேஷ் திசாநாயக்க ஆகியோர் "ஆராய்ச்சி தொடர்பில் தேசிய விஞ்ஞான மன்றத்தின் வளங்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களுக்கான வாய்ப்புகள்" எனும் பொருள் பற்றி விழிப்புணர்வு நிகழ்ச்சியை நடத்தினர்.



இலங்கை தேசிய எந்திரவியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட சர்வதேச எந்திரவ-யியல் ஆராய்ச்சி கருத்தரங்கில் விழிப்புணர்வு நிகழ்ச்சி.









இலங்கை பல்கலைக்கழக நூலகர் சங்கத்தின் 13வது சர்வதேச மாநாட்டிற்கு சிறப்பு அழைப்பாளராக NSLRC தலைவர் திரு. மனுஜ கருணாரத்ன கலந்து கொண்டார்







2023 நவம்பர் 17, ஆம் திகதியன்று அனுராதபுரத்தில் உள்ள இலங்கை பிக்குகள் பல்கலைக்கழகத்தில் NSLRC ஆல் செயல்படுத்தப்பட்ட மின்-களஞ்சியம் மற்றும் கோஹா நூலக முகாமைத்துவ மென்பொருளின் வெளியீட்டு விழாவில் NSLRC தலைவர் திரு. மனுஜ கருணாரத்ன கலந்து கொண்டார்.



தேசிய டிஜிட்டல் நூலகக் கூட்டமைப்பை செயல்படுத்துவது மற்றும் வெளிநாட்டு நிதியைத் பெற்றுக்கொள்ளல் குறித்து கலந்துரையாட டாக்டர் லிவான் லியனகேவைச் சந்தித்தல்.



கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக அச்சகம் மற்றும் மதிப்பீடு அமைப்பாண்மையானது, இலங்கையில் ஒரு கேம்பிரிட்ஜ் கல்வி மாநாட்டை நடத்தியது, இது நாடு முழுவதிலுமிருந்து கல்வித் துறையைச் சேர்ந்த புகழ்பெற்ற நிபுணர்கள் மற்றும் கல்வியாளர்களை ஒன்றிணைத்துகல்வியின் வளர்ச்சி வரைபடத்தை ஆராய்ந்து அதன் எதிர்காலத்தை கற்பனை செய்து பார்த்தது. இந்த நிகழ்வு 2023 செப்டம்பர் மாதம் 11 ஆம் திகதி கொழும்பில் நடைபெற்றது.







ஆசிய பசிபிக் உயர் வலையமைப்பு (APAN56) மாநாடு 2023 ஆகஸ்ட் மாதம் 21 முதல் 25 வரை இலங்கையின் கொழும்பில் நடைபெற்றது. திரு. மனுஜா கருணாரத்ன மற்றும் டாக்டர் மகேஷா நடுகல ஆகியோர் தேசிய விஞ்ஞான மன்றத்தினை பிரதிநிதித்துவப்படுத்தி இந்த மாநாட்டில் கலந்து கொண்டனர்.மாநாட்டில் திறந்த அணுகல் மூலம் விஞ்ஞான தொடர்பை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு தேசிய விஞ்ஞான மன்றத்தால் செயல்படுத்தப்பட்ட திறந்த விஞ்ஞான திட்டங்களை அவர்கள் முன்னிலைப்படுத்தினர். மேலும், சர்வதேச ஒத்துழைப்புகள் மூலம் பயன்படுத்தக்கூடிய வாய்ப்புகளை அடையாளம் காண நிபுணர்கள் குழுவுடன் தேசிய விஞ்ஞான மன்றத்தில் ஒரு சிறப்பு கூட்டம் நடைபெற்றது.

தேசிய விஞ்ஞான மன்றத்தின் பணிப்பானை இ) விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப திறன் மேம்பாடு

நாட்டின் சவாலான பொருளாதார சூழலுக்கு மத்தியிலும், 2023 ஆம் ஆண்டுக்கான வருடாந்திர செயல் திட்டத்தில் திட்டமிடப்பட்ட செயல்பாடுகளை தேசிய விஞ்ஞான மன்றத்தின் சர்வதேச விவகாரப் பிரிவு வெற்றிகரமாக செயல்படுத்தியது. டிஜிட்டல் கருவிகளை திறம்பட பயன்படுத்துவதன் மூலம், அவர்களால் குறிப்பிடத்தக்க தாக்கத்தை உருவாக்க முடிந்தது. இத்தகைய நடவடிக்கைகள் மூலம் செய்யப்பட்ட செலவின் மூலம் ஏற்பட்ட சேமிப்பினை ஒரு முன்மாதிரியாகக் இங்கு குறிப்பிடப்படலாம்.

கீழே உள்ள விளக்கப்படம் 2023 ஆம் ஆண்டில் சர்வதேச விவகாரப் பிரிவால் அதன் செயல்பாடுகள் மூலம் சேமிக்கப்பட்ட செலவைக் காட்டுகிறது. இங்கு, பிரதானமாக தேசிய விஞ்ஞான மன்றத்தின் உலகளாவிய டிஜிட்டல் தளத்தின் கீழ் பதிவுசெய்யப்பட்ட வளவாளர்களால் இலவசமாக நடத்தப்பட்ட திட்டங்கள் 03 வகைகளின் கீழ் வகைப்படுத்தப்படுகின்றன அவையாவன, பயிற்சித் திட்டங்கள், அறிவு பரிமாற்றத் திட்டங்கள் மற்றும் கூட்டங்கள், மாநாடுகள் மற்றும் பிற திறன் மேம்பாட்டு நடவடிக்கைகள் என்பனவாகும். ஒவ்வொரு 01 மனித-மணி நேரத்திற்கும் மதிப்பிடப்பட்ட செலவு USD 100 ஆகும், இது மனித-மணிநேரங்களின் எண்ணிக்கையால் பெருக்கப்பட்டு இலங்கை ரூபாய்க்கு மாற்றப்படுகிறது. கூட்டங்கள், மாநாடுகள் மற்றும் பிற திறன் மேம்பாட்டு நடவடிக்கைகள் மூலம் அதிக தொகை சேமிக்கப்பட்டுள்ளது.



வரைபடம் 67: 2023 ஆம் ஆண்டில் சர்வதேச விவகாரப் பிரிவின் செயல்பாடுகள் மூலம் சேமிக்கப்பட்ட தொகை (இலங்கை ரூபாயில்)



வரைபடம் 68: டிஜிட்டல் தளங்களின் ஊடாக திறன் மேம்பாடு

- புதிய பதிவுதாரர்களுடன் உலகளாவிய டிஜிட்டல் தளத்தினை விரிவுபடுத்துதல்.

உலகளாவிய டிஜிட்டல் தளத்தில் பதிவு செய்யப்படுவதற்கு மொத்தம் 195 புலம் பெயர்ந்த இலங்கையருக்கு அழைப்புகள் வழங்கப்பட்டன. அதன்படி, 90 புலம்பெயர்ந்த இலங்கையர் புதிதாக பதிவு செய்யப்பட்டனர். இலங்கை ஆராய்ச்சியாளர்களின் திறன் மேம்பாட்டிற்கு சாத்தியமான ஒத்துழைப்புகளை ஆராய்வதற்கும் நிபுணத்துவ தளத்தைப் பயன்படுத்துவதற்கும், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி வெளிவருவிளைவுகளினை மேம்படுத்துவதற்கும் அத்துடன் இலங்கையின் விஞ்ஞான,தொழில்நுட்ப மற்றும் புத்தாக்க நிலப்பரப்பிற்கு உலகளாவிய மட்டத்தில் உள்ள தெரிவுநிலையை மேம்படுத்துவதற்கும், ஆசியா-ஓசியானியா, அமெரிக்கா, கனடா, இங்கிலாந்து மற்றும் ஜப்பான் ஆகியவற்றைப் பிரதிநிதித்துவப்படுத்துபவர்களும் வெளிநாடுகளில் வதிபவர்களுமான புலம்பெயர்ந்த இலங்கை விஞ்ஞானிகள், தொழில் வல்லுநர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களுடன் தொடர்ச்சியாக நிகழ்நிலை ஊடாக கூட்டங்கள் நடத்தப்பட்டன.

- உலகளாவிய டிஜிட்டல் தளத்தின் தகவல் பாதுகாப்பை மேம்படுத்துதல், பராமரித்தல் மற்றும் உறுதி செய்தல்

எழும் சிக்கல்களைத் தீர்க்கவும், செயல்முறைகளை மேம்படுத்தவும், தகவல் பாதுகாப்பை உறுதி செய்யவும், உலகளாவிய டிஜிட்டல் தளத்தின் உருவாக்குனர்கள் மற்றும் இலங்கை மென்பொருள் சேவைகள் நிறுவனங்களின் சங்கத்தின் (SLASSCOM) அதிகாரிகள் ஆகியோருடன் இரண்டு நிகழ்நிலை சந்திப்புகள் நடத்தப்பட்டன. இந்த தொடர்ச்சியான செயல்முறை தீவிரமாக கண்காணிக்கப்பட்டு, தொடர் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

- ஆராய்ச்சி ஒத்துழைப்பு மற்றும் தொழில்நுட்ப கூட்டிணைப்பு தொடர்பில் பங்குடைமைகளினை உலகளாவிய டிஜிட்டல் தளத்தின் மூலம் ஏற்படுத்தல்

சர்வதேச விவகாரப் பிரிவானது, உலகளாவிய டிஜிட்டல் தளத்தின் மூலம் ஆராய்ச்சி ஒத்துழைப்பு மற்றும் தொழில்நுட்ப கூட்டிணைப்பு என்பனவற்றை வழங்கக்கூடிய புலம் பெயர்ந்த இலங்கையர்களை இணைக்கும் நோக்கில் இலங்கை பல்கலைக்கழகங்கள், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனங்கள் மற்றும் பிற பொதுத்துறை நிறுவனங்களின் தேவைகளை ஆராய்ந்து வருகிறது. அதன்படி, இலங்கை கல்விமான்கள் மற்றும் வெளிநாடுகளில் வதியும் புலம் பெயர்ந்த இலங்கை விஞ்ஞானிகள் மற்றும் தொழில்சார்பியலாளர்களிடையே ஒன்பது சர்வதேச தொடர்பிணைப்புக்கள் பின்வருமாறு நிறுவப்பட்டன:

- விவசாய திணைக்களம், ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம் மற்றும் கனடாவின் சஸ்காட்சுவான் பல்கலைக்கழகத்தினை சார்ந்த டாக்டர் மஞ்சுளா பண்டார
- மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களம் மற்றும் கனடாவின் ஆல்பர்ட்டா பல்கலைக்கழகத்தினை சார்ந்த டாக்டர் அனஸ் உசூப்
- இலங்கையின் திறந்த பல்கலைக்கழகம் மற்றும் அவுஸ்திரேலியாவின் மேற்கு சிட்னி பல்கலைக்கழகத்தினை சார்ந்த டாக்டர் லிவான் லியனகே
- இலங்கையின் திறந்த பல்கலைக்கழகம் மற்றும் அவுஸ்திரேலியாவின் சிட்னி பல்கலைக்கழகத்தினை சார்ந்த டாக்டர் அஷானி அமரசிங்க
- மொரட்டுவா பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்தை சார்ந்த டாக்டர் சுபோதா சார்லஸ் மற்றும் அமெரிக்காவில் உள்ள ஹுஸ்டன் பல்கலைக்கழக மருந்து கண்டுபிடிப்பு நிறுவனத்தினை சார்ந்த பேராசிரியர் கோமிகா உடுகமசூரியா
- கொழும்பு பல்கலைக்கழகத்தின் சுதேச மருத்துவ பீடத்தின் பேராசிரியர் சுவர்ணா ஹப்புஆராச்சி மற்றும் பேராசிரியர் கமல் பெரேரா மற்றும் அமெரிக்காவில் உள்ள ஹுஸ்டன் பல்கலைக்கழக மருந்து கண்டுபிடிப்பு நிறுவனத்தினை சார்ந்த பேராசிரியர் கோமிகா உடுகமசூரியா
- கொழும்பு பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தின் பேராசிரியர் சர்மினி குணவர்தன மற்றும் அமெரிக்காவில் உள்ள ஹுஸ்டன் பல்கலைக்கழக மருந்து கண்டுபிடிப்பு நிறுவனத்தினை சார்ந்த பேராசிரியர் கோமிகா உடுகமசூரியா

இந்த சாதனை,திறன் மேம்பாட்டை மேம்படுத்துவதோடு மட்டுமல்லாது ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டில் அபிவிருத்தியில உற்பத்தி திறன் மிக்கதொரு ஒத்துழைப்பையும் வளர்க்கிறது, உலகளாவிய மட்டத்தில் ஏற்படுத்தப்படும் தொடர்பு மற்றும் உலகளாவிய மட்டத்திலான திறமைக் குழுவைப் பயன்படுத்துதல் ஆகியவற்றின் மூலம் அக ரீதியிலான கண்டுபிடிப்புக்குக்கான சுற்றுச்சூழல் அமைப்பில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை ஏற்படுத்துவதற்கு இந்த தொடர்புகள் எதுவாக அமைகிறது.

புலம் பெயர்ந்த இலங்கையரை தேசிய அபிவிருத்திக்காக கூட்டிணைந்த ரீதியில் பூரணத்துவமாக பயன்படுத்துவதற்காக ஜனாதிபதி செயலகத்தின் கீழ் நிறுவப்பட்ட வெளிநாட்டு இலங்கையர்கள் விவகார அலுவலகத்திற்கும் (OOSLA) மற்றும் தேசிய விஞ்ஞான மன்றம் ஆகியவற்றுக்கு இடையே ஒரு மூலோபாய கூட்டு கூட்டாண்மை உருவாக்கப்பட்டது.



பரஸ்பர ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து தேசிய விஞ்ஞான மன்ற அதிகாரிகளுக்கும் வெளிநாட்டு இலங்கையர்கள் விவகார அலுவலகத்திற்கும் (OOSLA) இடையிலான சந்திப்பு (2023.05.04 அன்று நடைபெற்றது)

விஞ்ஞான தொழில்நுட்ப மற்றும் புத்தாக்க ஆளணியினர்களின் திறன் மேம்பாடு

- தேசிய தரவு விஞ்ஞான டிப்ளோமாவிற்கான பாடத்திட்டத்தை உருவாக்குவதற்காக தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபையுடன் (NAITA) இணைதல

உலகளாவிய தொழிலாளர் சந்தையில் நிலவுகின்ற அதிக கேள்வியுள்ள வாய்ப்புகளை பயன்படுத்தி கொள்ளும் வகையில், தரவு அறிவியல் போன்ற வளர்ந்து வரும் துறைகளுக்கு முக்கியத்துவம் அளித்து தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி மற்றும் பயிற்சியின் செயல்திறனை மேம்படுத்துவதற்காக தேசிய விஞ்ஞான மன்றமானது தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபையுடன் (NAITA) ஒரு பங்குடைமையில் இணைந்தது.

அதன்படி, தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபையினது (NAITA) வேண்டுகோளின்படி தரவு விஞ்ஞானத்தில் தேசிய டிப்ளோமா பாடநெறிக்கான விரிவான பாடத்திட்டம் உருவாக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டது. இந்தப் பாடத்திட்ட விருத்திக்கான உயர் ஆதரவானது, வெளிநாட்டு இலங்கை நிபுணர்கள் மற்றும் அக நிபுணர்களான டாக்டர் சாரினி விமன்ஷா (ஆராய்ச்சி உறுப்புரிமை, அவுஸ்திரேலியா தேசிய பல்கலைக்கழகம்), டாக்டர் ரசிகா ராஜபக்ஷ (கலாநிதிக்கு பிந்திய உறுப்புரிமை, அமெரிக்கா, வயோமிங் பல்கலைக்கழகம் மற்றும் சிரேட்ட விரிவுரையாளர், கணினி மற்றும் தொழில்நுட்ப பீடம், களனி பல்கலைக்கழகம்) மற்றும் டாக்டர் லிவான் லியாங்கே (தரவு விஞ்ஞானத்தில் சிரேட்ட விரிவுரையாளர், மேற்கு சிட்னி பல்கலைக்கழகம், அவுஸ்திரேலியா) ஆகியோரிடமிருந்து கிடைத்தது. இந்த மேம்பாட்டின் மூலம், உலகளாவிய தொழிலாளர் சந்தையில் தேவையை நிவர்த்தி செய்யும் புதிய கற்கைகளினை தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபையினால் அறிமுகப்படுத்த முடியும்.



தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபைக்கு (NAITA) தரவு விஞ்ஞானம் தொடர்பான பாடத்திட்ட விருத்தி

- இணையப் பொருள்கள் (IoT) எனும் விடயம் தொடர்பில், தொழிற்கல்வி தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தின் (UNIVOTEC) தகவல் தொழில்நுட்பத் துறையின் ஊழியர்களின் திறனை மேம்படுத்துதல்.

தற்போது, UNIVOTEC இன் ஊழியர்கள் இணையப் பொருள்கள் சார்ந்த விடயங்கள் (IoT) பற்றிய குறைந்த அறிவைக் கொண்டுள்ளனர். இந்த விடயம் தொடர்பில் அறிவை பெற்றுக்கொள்வதற்கு அவர்கள் வெளிப்புற நிபுணர்களை நம்பியுள்ளனர். இந்த இடைவெளியை நிரப்ப, UNIVOTEC இல் தகவல் தொழில்நுட்பத் துறையின் விரிவுரையாளர்களுக்கான பயிற்சித் திட்டமானது முன்னெடுக்கப்பட்டது. இந்தத் திட்டமானது அவுஸ்திரேலியாவில் உள்ள குவால்காம் இன்டர்நேஷனலில் தொலைத்தொடர்பு மற்றும் 5பு வயர்லெஸ் பொறியியல் ஆலோசகரும் வலையமைப்பு தீர்வுகள் பற்றிய சிரேட்ட பொறியாளருமான பொறியாளர் வசந்தா பெரேரா ஆதரவுடன் முன்னெடுக்கப்பட்டது. இந்தத் திட்டமானது, UNIVOTEC அதன் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப பட்டப்படிப்புகளை சுயாதீனமாக வழங்குவதற்கான உள் திறன்களை குறிப்பாக ஐழவு துறையில் வலுப்படுத்தும்

- நான்காவது தொழில்துறை புரட்சியை எதிர்கொள்ளும் வகையில் அரசு சாரா துறையை சார்ந்த மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைய (TVET) நிறுவனங்களை வலுப்படுத்துதல்.

அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட அரசு சாரா துறையைச் சேர்ந்த முன்னணி TVET நிறுவனமான வயம்ப தொழில்நுட்பக் கல்லூரியானது, வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களை, குறிப்பாக தரவு விஞ்ஞானத்தில் இருந்து பலன்களைப் பெற, விருப்பம் தெரிவித்துள்ளது. இதனைத்தொடர்ந்து, வயம்ப தொழில்நுட்பக் கல்லூ ரியின் அதிகாரிகளுக்கும் தரவு விஞ்ஞாவியல் நிபுணர் டாக்டர் ரசிக ராஜபக்ஷ (கலாநிதிக்கு பிந்திய உறுப்புரிமை, அமெரிக்கா, வயோமிங் பல்கலைக்கழகம் மற்றும் சிரேட்ட விரிவுரையாளர், கணினி மற்றும் தொழில்நுட்ப பீடம், களனி பல்கலைக்கழகம்) ஆகியோருக்கு இடையே நிகழ்நிலை அடிப்படையில் ஒரு சந்திப்பை தேசிய விஞ்ஞான மன்றம் ஏற்படுத்திக்கொடுத்தது.வயம்ப தொழில்நுட்பக் கல்லூரி மற்றும் அதன் பயிற்சியாளர்களுக்கான வாய்ப்புகளை மேம்படுத்த தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வரும் அதே வேளையில் இது உலகளாவிய வேலை சந்தையில் வளர்ந்து வரும் வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ள உதவும்.

- ICGEB கூட்டங்கள் மற்றும் கற்கை நெறிகள் திட்டம் மற்றும் ICGEB யுசவரசழ குயடயளஉாஅ நிகழ்ச்சித்திட்டம் ஆகியவற்றின் மூலம் வெளிநாட்டு நிதியைப் பயன்படுத்துவதற்கான வசதி.

ICGEB இனால் பரிசீலிக்கபடுவதற்கு ICGEB கூட்டங்கள் மற்றும் கற்கை நெறிகள் திட்டத்தின் கீழ் இன் கீழ் மூன்று பிரேரணைகள் சமர்ப்பிக்கப்பட்டன. இதனைத்தொடர்ந்து ஒரு ஆராய்ச்சியாளர் இலங்கை ரூபாயில் 4.2 மில்லியன் மதிப்புள்ள மானியத்தைப் பெற முடிந்தது. இந்த திட்டம் இலங்கையில் அடுத்த தலைமுறை வரிசைமுறையை மேம்படுத்துவதில் கவனம் செலுத்தியது இது சர்வதேச மற்றும் தேசிய பங்கேற்பாளர்களுக்கான வதிவு பட்டறையாக அமைந்தது.

2023 ஆம் ஆண்டின் யுசவரசழ குயடயளஉாஅ உறுப்புரிமையின்கீழ், இளம் இலங்கை ஆராய்ச்சியாளருக்கு இலங்கை ரூபாயில் 5.7 மில்லியன் மதிப்புள்ள கலாநிதிக்கு பிந்திய நீண்டகால உறுப்புரிமை வழங்கப்பட்டது. LDPE மைக்ரோபிளாஸ்டிக்ஸை சிதைக்க உதவும் நீண்ட சங்கிலி காரப் பொருட்களை உடைக்கும் Aspergillus flavus நொதியத்தை உருவாக்குவதில் இந்த திட்டம் கவனம் செலுத்தியது எனவே, கடந்த தசாப்தத்தில் தேசிய விஞ்ஞான மன்றத்தின் மதிப்புமிக்க ஒருங்கிணைப்புடன் ICGEB நிதியுதவி மூலம் தேசிய ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு திறன்கள் வலுப்படுத்தப்பட்டுள்ளன என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.



வரைபடம் 69: கடந்த பத்தாண்டுகளில் தேசிய விஞ்ஞான மன்றத்தின் உதவியுடன் ICGEB இலிருந்து இலங்கை ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி சமூகத்தால் பயன்படுத்தப்பட்ட நிதிகள்

4IR உடன் இணைக்கப்பட்ட வுஏநுவு துறையை வலுப்படுத்துதல்

செயற்கை நுண்ணறிவு,மனித எந்திரவியல், இணையத்தின் பொருட்கள் (IoT), தரவு விஞ்ஞானம், கட்டச்சங்கிலி (blockchain) குவாண்டக் கணினியியல் மற்றும் பிற வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களில் விரைவான முன்னேற்றங்களால் இயக்கப்படும் நான்காவது தொழில்துறை புரட்சி (4IR) நிலைபெறும் நிலையில், "திறன் இடைவெளி" குறித்த கவலை அதிகரித்து வருகிறது. 4IR இணை அடிப்படையாக கொண்டு அந்த சூழலில் ஏற்படும் தொழில்நுட்ப முன்னேற்றங்களாவன, இளம் பெண்கள் மற்றும் ஆண்கள் எதிர்கொள்ளும் தொழிலாளர் சந்தை வாய்ப்புகள் மற்றும் சவால்களை மாற்றும் தன்மை கொண்டவை ஆகும். 4IR தொழில்துறை புரட்சியானது குறைந்த மற்றும் நடுத்தர வருமான நாடுகள் தங்கள் வளர்ச்சியை மிக விரைவாக முன்னேற்ற உதவும் ஒரு வழிமுறையாகும். இருப்பினும், இது தொழில் சந்தைகளை சீர்குலைத்து சமத்துவமின்மையை நிலையினை அதிகரிக்கக்கூடும். சர்வதேச தொழிலாளர் அமைப்பின் விவேகமான பகுப்பாய்வின் படி, இளைஞர்கள் புதிய தொழில்நுட்பங்களை ஏற்றுக்கொள்ள மிகவும் விருப்பமுள்ளவர்களாக இருந்தாலும், பலர் தங்கள் எதிர்கால வேலைவாய்ப்பு வாய்ப்புகள் குறித்து ஆழ்ந்த கவலைகளைக் கொண்டுள்ளனர். குறிப்பாக, தொழிற்கல்வி பயிற்சியானது, எதிர்காலத்தில் தானியங்கிமயமாக்கப்படக்கூடிய வேலைகளுடன்இணைக்கப்பட்டுள்ளது.

இலங்கையானது, மனித மூலதன மேம்பாட்டில் செய்யப்படும் முதலீடுகளை ஒட்டுமொத்த நிலையான வளர்ச்சியின் ஒரு முக்கிய தூணாகக் கருதுவதால், TVET நிறுவனங்கள் மிகவும் புத்தாக்கம் மிக்கதாகவும், தொழில்துறை தேவையை நிவர்த்தி செய்ய ஏதுவானதாகவும் இருக்க வேண்டும். இந்தத் தேவையை நிவர்த்தி செய்யும் வகையில், தேசிய விஞ்ஞான மன்றமானது, உலகளாவிய தொழிலாளர் சந்தையில் வளர்ந்து வரும் தேவைகளுக்கு ஏற்புடைய வகையில் ஏற்படும் வாய்ப்புகளுக்கு ஏற்புடைய விநியோகத்தினை செய்யக்கூடிய வகையில் TVET துறை நிறுவனங்களை வலுப்படுத்துவதற்குஇ உலகளாவிய டிஜிட்டல் தளம் (GDP) மூலம் தொடர்புடைய நிபுணத்துவத்தை ஊக்குவித்து ஒருங்கிணைப்பதில் ஈடுபட்டுள்ளது. குறித்த இந்த திட்டமானதுஇ தேசிய விஞ்ஞான மன்றத்தினால் தொடரப்பட்டு முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

நாட்டின் எல்லையினை தாண்டிய அதிநவீன அறிவின் பரிமாற்றம்

புலம் பெயர்ந்த இலங்கையர்கள், முன்னணி பல்கலைக்கழகங்கள், வெளிநாடுகளில் உள்ள உலகத் தரம் வாய்ந்த ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மையங்களில் பணியாற்றுவதால், அவர்கள் எப்போதும் அந்தந்த துறைகளில் அதிநவீன அறிவைப் பெற்றவர்களாக இருக்கின்றனர். எனவே, அறிவு பரிமாற்றத்தில் அவர்களின் சம்பந்தப்படுகையானது மிகவும் முக்கியமானது, இதனால் இலங்கை ஆராய்ச்சியாளர்களும் அதிநவீன அறிவைப் பெற முடியும். அதன்படி, பல்கலைக்கழகங்கள், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனங்கள், தொழில்துறை மற்றும் தனிப்பட்ட ஆராய்ச்சியாளர்கள் ஆகியோரின் தேவைகளை நிவர்த்தி செய்வதற்காக தேசிய விஞ்ஞான மன்றத்தின் ஆதரவுடன் உலகளாவிய டிஜிட்டல் தளம் (GDP) மூலம் வெளிநாட்டு வள நபர்களின் பங்களிப்புடன் ஏழு அறிவு பரிமாற்ற திட்டங்கள் நடத்தப்பட்டன.

- கட்டுநாயக்க பொறியியல் தொழில்நுட்ப நிறுவனத்துடன் (IET) இணைந்து, IET விரிவுரையாளர்கள் மற்றும் இறுதி ஆண்டு மாணவர்களை இலக்காகக் கொண்டு,இணையத்தின் பொருட்கள் (IoT) குறித்த அதிநவீன அறிவு பரிமாற்ற திட்டத்தை நடத்தியமை

- "இரசாயனவியலுக்கு அப்பாற்பட்ட ஞானம்: மருந்து கண்டுபிடிப்பு செயல்முறையை விரைவுபடுத்துவதற்கான புதிய தொழில்நுட்பங்கள்" என்ற தலைப்பில் ஒரு அறிவு பரிமாற்ற அமர்வு நடத்தப்பட்டது, இதில் அமெரிக்காவின் ஹுஸ்டன் பல்கலைக்கழக மருந்து கண்டுபிடிப்பு நிறுவனத்தின் பேராசிரியர் கோமிகா உடுகமசூரியா வளவாளராக கலந்துக் கொண்டார். இது புற்றுநோய் ஆராய்ச்சி மற்றும் மருந்துகள் விருத்தியில் ஈடுபட்டுள்ள ஆராய்ச்சியாளர்களை இலக்காகக் கொண்டது. இந்த அறிவு பரிமாற்ற அமர்வானது வளவாளர் மற்றும் அக ஆராய்ச்சியாளர்களுக்கு இடையே மூன்று இணை பங்குடைமைகளினை நிறுவுவதற்கும் உதவியது.

- "மின்னணுத் தொழில்: ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியிலிருந்து நடைமுறை மற்றும் எதிர்காலக் கணிப்புகள்" என்ற தலைப்பில் அறிவு பரிமாற்றத் திட்டம் நடத்தப்பட்டது, இதில் தொழில்துறை துறையை இலக்காகக் கொண்டு தென் கொரியாவின் சன்சான் தேசிய பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சிப் பேராசிரியர் டாக்டர் சந்தீபா விமலானந்தா வளவாளராக இருந்தார். இந்தத் திட்டம் அக மின்னணுத் துறையின் முன்னணியில் உள்ளவர்களுக்கும் அறிவு பரிமாற்றத்தை வழங்கியது.

- அரசாங்க நிறுவனங்களின் தகவல் தொழில்நுட்ப அதிகாரிகள், மாணவர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களுக்கு "சைபர் அச்சுறுத்தல்கள் மற்றும் தகவல் பாதுகாப்பு" என்ற தலைப்பில் அறிவு பரிமாற்றத் திட்டம் நடத்தப்பட்டது, இதில் வளவாளராக இங்கிலாந்தின் கார்டிப் மெட்ரோபொலிட்டன் பல்கலைக்கழகத்தின் கணினி அறிவியல் துறையினை சார்ந்த டாக்டர் சமிந்த துஷார ஹேவகே கலந்துக்கொண்டார். இன்றைய சவாலான சூழலில் தங்கள் நிறுவனங்களில் தகவல் அமைப்புகளின் பாதுகாப்பை எவ்வாறு உறுதி செய்வது என்பது குறித்த அதிநவீன அறிவைப் பயனாளிகள் புரிந்து கொள்ள கூடியதாக இருந்தது.

- கனடாவின் மனிடோபா பல்கலைக்கழகத்தின் (UoM) செயிண்ட் பால்ஸ் கல்லூரியின் கற்கைகள் பீடாதிபதி பேராசிரியர் டிலந்த பெர்னாண்டோ, அவர்கள் தேசிய விஞ்ஞான மன்றத்திற்கு மேற்கொண்ட விஜயத்தின் போது, ஒத்துழைப்புக்கான வாய்ப்புகள் குறித்த அறிவுப் பகிர்வு அமர்வை நடத்துவதற்கு சர்வதேச விவகாரங்கள் பிரிவானது (IAD) வசதி செய்து கொடுத்தது. இந்த அமர்வின் தொடர்ச்சியாக, கல்வி மற்றும் ஆராய்ச்சி ஒத்துழைப்புகளுக்கான வாய்ப்புகள் குறித்த ஒரு முன்மொழிவு வள நபருடன் பகிர்ந்து கொள்ளப்பட்டது.



2023.12.07 ஆம் திகதியன்று ஐக்கிய இராச்சியத்தின் பொருளாதாரப் பேராசிரியர் தக்ஷிணா டி சில்வா அவர்களினை, தேசிய விஞ்ஞான மன்றத்தில் சந்தித்தபோது

- ஐக்கிய இராச்சியத்தின் லான்காஸ்டர் பல்கலைக்கழகத்தின் பொருளாதாரப் பேராசிரியர் தக்ஷிணா டி சில்வா, தேசிய விஞ்ஞான மன்றத்திற்கு விஜயம் செய்தபோது, ஒத்துழைப்புக்கான வாய்ப்புகள் குறித்த அறிவுப் பகிர்வு அமர்வை நடத்துவதற்கு சர்வதேச விவகாரங்கள் பிரிவு உதவியது. பொருளாதாரத்தில் ஆழமான ஆய்வுகளுக்கு கணிதம் மற்றும் புள்ளிவிவரங்களின் முக்கியத்துவம் குறித்தும் கலந்துரையாடப்பட்டது. இந்த வகையில் ஒரு சாதகமான சூழலை உருவாக்குவதற்கும் திறன் மேம்பாட்டிற்கும் நடவடிக்கை எடுப்பதன் முக்கியத்துவமும் இந்த கலந்துரையாடலின் போது எடுத்துக்காட்டப்பட்டது.

- அமெரிக்காவை தளமாகக் கொண்ட உலகப் புகழ்பெற்ற உயிரி மருத்துவ நிபுணரான டாக்டர் பந்துல விஜய், தேசிய விஞ்ஞான மன்றத்திற்கு விஜயம் செய்த போது ஒத்துழைப்புக்கான வாய்ப்புகள் குறித்து அறிவுப் பகிர்வு அமர்வை நடத்துவதற்கு சர்வதேச விவகாரங்கள் பிரிவு வசதி செய்து கொடுத்தது. இதுஇவ்விடயம் தெடர்பில் சம்மந்தப்பட்ட ஆராய்ச்சியாளர்கள் மற்றும் தொழில்துறையை இலக்காகக் கொண்டது.

- இலங்கை மற்றும் சீனாவைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள், தேசிய விஞ்ஞான மன்றம் (NSF) மற்றும் சீன தேசிய இயற்கை விஞ்ஞான மன்றம் (NSFC) ஆகிய இரண்டுடனும் தொடர்புடைய அதிகாரிகள் மற்றும் பிற தொடர்புடைய பங்குதாரர்கள் ஆகியோரின் பங்கேற்புடன் NSF-NSFC 1வது கூட்டு ஆராய்ச்சி திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சி திட்டங்களின் கண்டுபிடிப்புகளைப் பரப்புவதற்காக, சீன தேசிய இயற்கை விஞ்ஞான மன்றத்துடன் (NSFC) இணைந்து ஒரு அறிவுப் பகிர்வு அமர்வு ஏற்பாடு செய்யப்பட்டது.

- ICGEB உடன் இணைந்து, பயனுள்ள முன்மொழிவு எழுதுதல் குறித்த அறிவுப் பகிர்வு அமர்வு குறிப்பாக ஆரம்பகால ஆராய்ச்சியாளர்களுக்கு சிறப்பு கவனம் செலுத்தி, நடத்தப்பட்டது. இந்த அமர்வின் நோக்கம், ICGEB கூட்டு ஆராய்ச்சி திட்டம் (CRP) 2023 ஆம் ஆண்டிற்கான அழைப்பிற்கு தங்கள் ஆராய்ச்சி முன்மொழிவுகளை எவ்வாறு வெற்றிகரமாக முன்வைப்பது என்பது குறித்து ஆராய்ச்சியாளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துவதாகும், இது அடிப்படை விஞ்ஞானம், மனித சுகாதாரம், தொழில்துறை மற்றும் விவசாய உயிரி தொழில்நுட்பம் மற்றும் உயிரி ஆற்றல் ஆகிய துறைகளில் சம்மந்தப்பட்ட நாட்டிற்கும் பிராந்திய நாடுகளின் நலன்களுக்கும் ஏற்புடைய வகையில் விஞ்ஞான ரீதியிலான சிக்கல்களுக்கு ஏற்ற நிவாரணிகளை வழங்குவதற்கான கூட்டு ஆராய்ச்சியை மேற்கொள்ள ICGEB இலிருந்து நிதி உதவியைப் பெற வாய்ப்பளிக்கிறது. ICGEB விஞ்ஞானம் ஒருங்கிணைப்பாளர் டாக்டர் விட்டோரியோ வெண்டூரி மற்றும் ICGEB இன் வெளி உறவுகள் தலைவர் எம். மரியானா மகுலன் ஆகியோர் CRP அழைப்பு மற்றும் கற்றுக்கொண்ட பாடங்கள் பற்றிய தகவல்களை வழங்கினர். இந்த நிகழ்வு இலங்கை ஆராய்ச்சியாளர்கள் ICGEB இலிருந்து நிதியுதவி பெறுவதை நோக்கமாகக் கொண்ட போட்டி ஆராய்ச்சி முன்மொழிவுகளைத் தயாரிக்க உதவியது.

தேசிய ரீதியில் உயர் முன்னுரிமை அளிக்கப்படும் விடயங்கள் தொடர்பில் தீர்வு நடவடிக்கைகள்

- மனித வலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களத்தின் பதவி நிலை உத்தியோகத்தர்களுக்கான

மனித வலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களத்தின் பதவி நிலை உத்தியோகத்தர்களுக்கு சுவடு ஆய்வுகளை முறையாக எவ்வாறு நடத்துவது என்பது குறித்து திறன் மேம்பாட்டுத் திட்டம் நடத்தப்பட்டது. தரவு பகுப்பாய்வு குறித்து அவர்களுக்கு விரிவான இரண்டு பயிற்சி அமர்வுகளும், அதைத் தொடர்ந்து அப்பயிற்சி அமர்வுகளின் விளக்கங்கள் என்ற ரீதியில் மூன்றாவது அமர்வும் நடத்தப்பட்டன.

பயனுள்ள வினாப்பட்டியல்களினை எவ்வாறு தயாரிப்பது. இந்த அமர்வுகளில் நடைமுறை எடுத்துக்காட்டுகள் மற்றும் நடைமுறை பயிற்சிகள் இடம்பெற்றன, பங்கேற்பாளர்கள் தங்கள் பணிகளில் உடனடியாகப் பயன்படுத்துவதற்கான தத்துவார்த்த அறிவு மற்றும் நடைமுறை திறன்கள் இரண்டையும் பெறுவதை இந்த அமர்வுகள் உறுதி செய்தன.தாக்கத்தை ஏற்படுத்தும் சுவடு காண் ஆய்வுகளை நடத்துவதில் கூறப்பட்ட பதவி நிலை மட்டத்து அதிகாரிகளின் திறனை வளர்ப்பது, திணைக்களத்திற்குள் மேம்பட்ட ஆராய்ச்சி நடைமுறைகளுக்கு பங்களிப்பது, இதன் மூலம் மிகவும் பயனுள்ள மற்றும் நம்பகமான கொள்கை குறிகாட்டிகளை உருவாக்குவது என்பன இந்த அமர்வுகளின் குறிக்கோளாக இருந்தது. இந்த திறன் மேம்பாட்டுத் திட்டத்திற்கான வள நபர்களாக, வெளிநாட்டில் வசிக்கும் இலங்கை விஞ்ஞானிகள் டாக்டர் அனஸ் முகமது உசூப் (கலாநிதி பட்டத்திற்குபின் உறுப்புரிமை பெற்றவர் பட்டதாரி, உயிரியல் விஞ்ஞான துறை, ஆல்பர்ட்டா பல்கலைக்கழகம், கனடா) மற்றும் பேராசிரியர் நிலந்த டி சில்வா (வேளாண் பொருளாதாரத்தில் பேராசிரியர் (தலைவர்) மற்றும் பணியாளர் மேம்பாட்டு மையத்தின் பணிப்பாளர், ரூஹனா பல்கலைக்கழகம்) ஆகியோர் பணியாற்றினர.



மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் பதவி நிலை உத்தியோகத்தர்களுக்கு சுவடு ஆய்வுகளை முறையாக நடத்துவது குறித்த பயிற்சித் திட்டம்

- இலங்கையில் நிலவும் சூழலில் சிவப்பு பயறு வகைகளை வளர்ப்பதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்தல்

விவசாயத் திணைக்களத்தினால் ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்துடன் இணைந்து இறக்குமதிக்கு மாற்றாக இலங்கையில் சிவப்பு பயறு வகைகளை வளர்ப்பதற்கான சாத்தியக்கூறுகளை ஆராயும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. புலம்பெயர்ந்த இலங்கை விஞ்ஞானி டாக்டர் மஞ்சுளா பண்டாரா (துணைப் பேராசிரியர் - வயல் பயிர்கள், சஸ்கெச்செவன் பல்கலைக்கழகம் மற்றும் லீத்பிரிட்ஜ் பல்கலைக்கழகம், கனடா) மற்றும் இந்தியாவின் வறல் வலய பகுதிகளுக்கான சர்வதேச வேளாண் ஆராய்ச்சி மையம் (ICARDA) ஆகியோர் இந்த முயற்சியை ஆதரித்துள்ளனர். மேலும் உகந்த வேளாண்-காலநிலை நிலைமைகளைக் கண்டறிந்து பொருத்தமான காலநிலையினை தெரிவு செய்யும் நோக்கில் முன்னோடி ஆய்வு மட்டத்திலான கள சோதனைகள் நடந்து வருகின்றன.



கள சோதனைகள் மூலம் வளர்க்கப்படும் பருப்பு செடிகள்

- நிலையான மரப்பட்டை முகாமைத்துவம் மூலம் இறப்பர் தோட்டத் துறையின் உற்பத்தித்திறனை மேம்படுத்துவதற்கு புதிய செயல் முறை சார்ந்த அறிவு பரிமாற்றம் செய்யப்பட்டது.

இந்த முயற்சியானது, நாட்டில் இறப்பர் தொழில்துறையின் நீண்டகால நிலைத்தன்மைக்கு பொறுப்பான மற்றும் நிலையான நடைமுறைகளின் முக்கியத்துவத்தை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது நிலையான இறப்பர் அறுவடை நடைமுறைகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் நாடு முழுவதும் நிலையான முறையில் இறப்பர் பால் விளைச்சலை மேம்படுத்துவதே இந்த திட்டத்தின் முதன்மை குறிக்கோளாகும். இந்த முயற்சி, வெளிநாட்டு விசேட பயிற்சி திட்டத்தின் (OSTP) கீழ் ஏற்கனவே வழங்கப்பட்ட தேசிய விஞ்ஞான மன்ற மானியத்தை அடிப்படையாகக் கொண்டது, இது இலங்கை இறப்பர் ஆராய்ச்சி நிறுவனத்தின் (RRISL) பயிர் சாகுபடித் துறையின் தலைவர் டாக்டர் டி. யு. கே. சில்வாவால் வழங்கப்பட்டதாகும்.

இந்த விரிவான முயற்சியானது, இறப்பர் தோட்டத்துறை ஊழியர்களில் கிட்டத்தட்ட 1000 ஊழியர்களுக்கு தாக்கத்தினை ஏற்படுத்தியது.அதாவது அத்தியாவசிய அறிவு மற்றும் தொழில்நுட்பத்தை இறப்பர் தோட்டத்துறை ஊழியர்களில் அடிமட்ட நிலையினை சார்ந்த ஊழியர்களுக்கும் மாற்றப்படுவதனை உறுதி செய்தது. இந்த மூலோபாய அணுகுமுறையின் மூலம், மரங்களின் முழு உற்பத்தி ஆயுட்காலம் முழுவதும் இறப்பர் விளைச்சலை மேம்படுத்துவதையும், பயனுள்ள பட்டை முகாமைத்துவம் மூலம் அதிகரித்த பொருளாதார ஆதாயங்களை பெற்றுக்கொள்வதனையும் நீண்டகால நிலைத்தன்மையையினை உறுதி செய்வதனையும் இந்த திட்டம் நோக்கமாகக் கொண்டிருந்தது. இது நான்கு இறப்பர் வளரும் மாவட்டங்களில் ஒரு முன்னோடி திட்டமாக் நடத்தப்பட்டது: இது களுத்துறை, இரத்தினபுரி, கேகாலை மற்றும் மொனராகலை மாவட்டங்களினை சார்ந்த சிறு உரிமையாளர்கள் மற்றும் பெரிய அளவிலான தோட்ட நிறுவனங்களை இலக்காகக் கொண்டது. மேலும் இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தின் கள ஊழியர்களுக்கும் இந்தத் திட்டத்தின் மூலம் பயிற்சி அளிக்கப்பட்டது.

இலங்கை இறப்பர் ஆராய்ச்சி நிறுவன கருத்திட்டக் குழு வழங்கிய மதிப்பீடுகளின்படி, இந்த திட்டத்தினால் ஏற்படக்கூடிய தாக்கமானது உற்பத்தித்திறனில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுவதுடன் நீண்ட காலத்திற்கு சமூக பொருளாதார நன்மைகளினை சிறந்த அளவில் தக்கூடியது. சிறந்த முறையில் இறப்பர் அறுவடை செய்யும் முறைகள் பற்றிய அறிவை திறம்பட பகிர்ந்து கொள்தலானது, இலங்கையில் இறுப்பர் தோட்டத் துறையின் ஒட்டுமொத்த நல்வாழ்வுக்கு சாதகமாக பங்களிக்கும்.



வெளிநாட்டு விசேட பயிற்சி திட்டத்தின் கீழ் களுத்துறை இறப்பர் தோட்டத்தில் கள கண்காணிப்பு

அட்டவணை 06: இறப்பர் மரத்தில் சிறந்த முறையில் பால் எடுத்தல் மூலம் எதிர்பார்க்கப்படும் பொருளாதார நன்மைகள்

நிலையான அறுவடை முறைகளின் விளைவால் நீட்டிக்கப்பட்ட காலம் (ஆண்டுகள்)	எதிர்பார்க்கப்படும் மகசூல் (கிலோ/ ஹெக்டேர்/ ஆண்டு)	தேறிய விற்பனை சராசரி (ரூ.)	மீண்டும் ஈட்டும் வருமானம் (ரூ. /மில்லியன்/ ஹெக்டேர்)	இது 100 ஹெக்டேரில் நடந்தால் எதிர்பார்க்கப்படும் வருமானம் (ரூ. மில்லியன்)	இது 1000 ஹெக்டேரில் நடந்தால் எதிர்பார்க்கப்படும் வருமானம் (ரூ. மில்லியன்)
1	1000	400	0.4	40	400
2	2000	400	0.8	80	800
3	3000	400	1.2	120	1200
4	4000	400	1.6	160	1600
5	5000	400	2	200	2000



இலங்கையில் இறப்பர் மரத்தில் சிறந்த முறையில் பால் எடுத்தல் குறித்த பயிற்சி நடத்தப்பட்ட பகுதிகளினை காட்டும் வரைபடம்

- காய்கறி பயிர் உற்பத்தித்திறனை மேம்படுத்த பூஞ்சை பாக்டீரியா உயிரிப்படல நடவடிக்கைகளைப் பயன்படுத்தி எப்பாவாலா பாறை பொசுப்பேற்றுடன் (ERP) ஒரு பயனுள்ள உர கலவையை உருவாக்குவதற்கான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்கு வசதி செய்தல்.

2018 ஆம் ஆண்டிற்கான தேசிய பொசுப்பேற்று உரத் தேவையானது 96,000 மெட்ரிக் டொன்களாக இருந்தது, அத்துடன், 2021 ஆம் ஆண்டு இவை தடை செய்யப்படுவதற்கு முன்பு, டிரிபிள் சூப்பர் பொசுப்பேற்று (TSP) மற்றும் சிங்கிள் சூப்பர் பொசுப்பேற்று (SSP) உள்ளிட்ட உரங்களை நாட்டிற்கு இறக்குமதி செய்ய அரசாங்கம் ஆண்டுதோறும் பில்லியன் அளவில் ரூபாய்களை செலவிட்டுள்ளது. இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் முக்கிய பொசுப்பேற்று உரமான இறக்குமதி செய்யப்பட்ட TSP, மிக அதிக சதவீதத்தில் காட்மியம் (Cd) மற்றும் ஆர்சனிக் (As) போன்ற தூய்மையற்ற பதார்த்தங்களினை கொண்டுள்ளது என்பதை ஆராய்ச்சி அறிக்கைகள் இனம் கண்டுள்ளன. இறக்குமதி செய்யப்படும் இந்த உரங்களின் அதிகப்படியான பயன்பாடு சுற்றுச்சூழல் மற்றும் சுகாதார பாதிப்புகளை ஏற்படுத்தியுள்ளது என்பதும் இனம் காணப்பட்டுள்ளது. எப்பாவாலா பொசுப்பேற்று பாறைகள் (ERP) மிகக் குறைந்த அளவு As மற்றும் Cd ஐக் கொண்டிருப்பதாக அடையாளம் காணப்பட்டுள்ளது, ஆனால் இது மெது மெதுவாக அதன் தன்மையினை வெளியிடும் ஒரு

உரமாகும் என்பதனால் இது, வருடாந்திர மற்றும் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறையான பயிர் சாகுபடிக்கு ஏற்றதல்ல. சிட்ரிக் அமிலம், குளுக்கோனிக் அமிலம், லாக்டிக் அமிலம் மற்றும் ஆக்ஸாலிக் அமிலம் போன்ற கரிம அமிலங்களை சுரக்கும் நுண்ணுயிர் உயிரிப்படலங்கள், கரையாத பொஸ்பரசுகளினை விரைவாக கரையக்கூடிய வடிவத்தில் கரைக்கும். எனவே, நாட்டின் பொஸ்பரசு உரத் தேவையைப் பூர்த்தி செய்ய அதன் தரத்தை மேம்படுத்தும் அதே வேளையில், பயனுள்ள உரமாகப் பயன்படுத்த ERP யில் உள்ள குறைபாடுகளைக் குறைப்பதன் மூலம் எப்பாவாலா பொசுப்பேற்று பாறைகளினை திறம்பட பயன்படுத்துவது குறித்த கள சோதனைகளில் இந்த திட்டம் கவனம் செலுத்தியது.

இந்த திட்டமானது, ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் பயன்பாட்டு விஞ்ஞான பீடத்தின், விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பத் திணைக்களத்தின் தலைவர் மற்றும் மூத்த விரிவுரையாளர் பேராசிரியர் அமில ஹெனகமகேவுக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட OSTP மானியத்தின் தொடர்ச்சியாக வழங்கப்பட்டது.

இது தொடர்பிலான ஆரம்ப சோதனை முயற்சிகளாவன நம்பிக்கைக்குரிய முடிவுகளைக் காட்டியுள்ளன, .இறக்குமதி செய்யப்பட்ட பொசுபரஸ் உரத்தில் காணப்படும் பண்புகளுடன் ஒப்பிடும் போதுஇ குறுகிய கால காய்கறி பயிர்களான உருளைக்கிழங்கு மற்றும் கோவா போன்றவற்றிற்கு பொசுபேற்று உரமாக ERP யினை பயன்படுத்தக்கூடிய சாத்தியங்களினை ERP கொண்டுள்ளமை நிரூபிக்கப்பட்டுள்ளது.இதற்கேற்ப நுண்ணுயிரி உயிரிப்படலங்களைப் பயன்படுத்தி அரைத்தல் மற்றும் உயிரியல் மாற்றங்கள் மூலம் துகளின்இ அளவினை குறைத்தல் போன்ற சில இயற்பியல் மாற்றங்களினை செய்வதன் மூலம் ERP யினை பயன்படுத்தலாம்.

இந்த ERP உயிர் உரத்தை வெவ்வேறு காலநிலை நிலைகளின் கீழ் விவசாயிகளின் வயல்களிலும், நெல் போன்ற பிற குறுகிய கால பயிர்களிலும் சோதிப்பது இந்த ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நடவடிக்கையின் அடுத்த கட்ட நடவடிக்கையாக இருக்கும். பயன்பாடு மற்றும் வணிகமயமாக்கலின் வசதிக்காக தொழில்துறை உதவியுடன் பதப்படுத்தப்பட்ட ERP பொடியை சிறுமணி வடிவமாக மாற்றுவது மற்றொரு உற்பத்தி திறன் மிகு விளைவாகும், இது சாத்தியமான பொருளாதார ஆதாயங்களுக்கு வழிவகுக்கிறது.



காய்கறி பயிர் உற்பத்தித்திறனை மேம்படுத்த பூஞ்சை பாக்டீரியா உயிரிப்படல நடவடிக்கை மூலம் எப்பாவாலா பாறை பொசுப்பேற்றுக்களினை , ணைத்து (ERP) ஒரு பயனுள்ள உர கலவையை உருவாக்குவதனால் ஏற்படும் முன்னேற்றத்தைக் கண்காணித்தல்.

- இலங்கையின் கரும்பு மற்றும் பால்வளத் துறைகளை மேம்படுத்த பிரேசிலுடன் தொழில்நுட்ப ஒத்துழைப்பிற்கு வசதி செய்து கொடுத்தல்.

இலங்கையானது, தற்போது அதன் பால் தேவையில் 60% க்கும் அதிகமாக அளவினை இறக்குமதி செய்கிறது, இதற்காக ஆண்டுக்கு இலங்கை ரூபாயில் 56 பில்லியனுக்கும் அதிகமாக செலவாகிறது. 2022 ஆம் ஆண்டில் இலங்கையின் சீனி மற்றும் சீனி சார்ந்த பொருட்களின்இறக்குமதி US$268.66 மில்லியனாக இருந்தது, இது தேசிய தேவையில் 90% க்கும் அதிகமாகும். இத்தகைய சூழலில்,தேசியத் தேவைகளுடன் தொடர்புற்ற வகையில் இலங்கையின் பால் மற்றும் கரும்புத் துறைகள் குறித்த உணவுத் தேவையினை பூர்த்தி செய்வதற்கு தங்கள் உள் திறன்களை வளர்த்துக் கொள்ள அதிக தேவைப்பாடு உடையனவாய் இத்துறைகள் விளங்குகின்றன இந்த இடைவெளியை நிவர்த்தி செய்யும் வகையிலும்,வெளியுறவு அமைச்சின் வேண்டுகோளின்படியும், இலங்கையின் கரும்பு மற்றும் பால் துறைகளை மேம்படுத்துவதற்கான தொழில்நுட்ப ஒத்துழைப்புக்காக தேசிய விஞ்ஞான மன்றம் பிரேசில் நாட்டினை சார்ந்த ஒத்துழைப்பு நிறுவனத்துடன் (ABC நிறுவனம்) கூட்டிணைந்தது. இந்த பயிற்சியில் இரு துறைகளிலும் உள்ள முக்கிய பங்குதாரர் நிறுவனங்களின் குழுக்கள் இணைக்கப்பட்டன, வேளாண்மை மற்றும் தோட்டத் தொழில்கள் அமைச்சின் கால்நடை பிரிவின் உணவு பாதுகாப்பு துறையானதுஇ பால் துறைக்கான மையப் புள்ளியாகவும், கரும்பு ஆராய்ச்சி நிறுவனம் அதற்கான துறைக்கான மையப் புள்ளியாகவும் செயற்பட்டன. பிரேசில் ஒத்துழைப்பு நிறுவனமானது (ABC நிறுவனம்) இரு நாடுகளிலும் உள்ள தொடர்புடைய தூதுவராலயம் மற்றும் அந்தந்த நாட்டின் வெளியுறவு அமைச்சுக்கள் மூலம் இணைக்கப்பட்டுள்ளது

இந்த முயற்சியில் இருதரப்பினரும் ஒன்றிணைந்து சாதகமான வெளிவருவிளைவினை சாதிப்பதற்கு இரு துறைகளினதும் தொழில்நுட்ப ஒத்துழைப்பின் திறனை மதிப்பிடுவதற்காக, 2023 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் பிரேசில் ஒத்துழைப்பு நிறுவனத்தால் இலங்கையில் உண்மை கண்டறியும் பணி நடத்தப்பட்டது. அங்கு இந்த முயற்சியை ஒருங்கிணைப்பதில் தேசிய விஞ்ஞான மன்றம் முக்கிய பங்கு வகித்தது. சாவோ கார்லோஸ் மற்றும் பிரேசில் விசோசா கூட்டாட்சி பல்கலைக்கழகத்தின் நிபுணர்களும் இந்த பணியில் இணைந்தனர். உண்மை கண்டறியும் பணிக்குப் பிறகு, இரு துறைகளும் முன்னேற தெளிவான திட்டங்கள் வரைவு செய்யப்பட்டன. தற்போது இந்தத் வரைவு திட்டங்கள் தொடர்ந்து பின்பற்றப்படுகின்றன.



2023.06.20 அன்று வெளியுறவு அமைச்சில் பிரேசில் பிரதிநிதிகளுடனான சந்திப்பு.

அக ரீதியிலான ஆற்றல்களை வலுப்படுத்த உலகத்துடனான வலையமைப்பு

- ர்வதேச மரபணு பொறியியல் மற்றும் உயிரி தொழில்நுட்ப மையம் (ICGEB) - கூட்டு ஆராய்ச்சி திட்டம் (CRP)

ICGEB அதன் கூட்டு ஆராய்ச்சி திட்டத்தின் மூலம் ஆண்டுதோறும் நிதி வாய்ப்புகளை வழங்குகிறது, இது பொறுப்பெடுத்து நடத்தும் நாட்டினது விஞ்ஞான தொழில்நுட்ப மற்றும் புத்தாக்க துறையின் தேவையை நிவர்த்தி செய்யும் திட்டங்களை விருத்தி செய்வதற்கும் அத்துடன் உறுப்பு நாடுகளிடையேயான பிராந்திய மட்டத்திலான ஆர்வத்திற்கும் பயன்படுத்தப்படுகிறது, தேசிய விஞ்ஞான மன்றமானது, ICGEB இன் தேசிய மைய புள்ளியாக இருப்பதால், விண்ணப்பங்களுக்கான அழைப்பு குறித்து பரந்த விளம்பரத்தை மேற்கொண்டது. இதனைத் தொடர்ந்து 2023 ஆம் ஆண்டில் 23 முன்மொழிவுகளினை தேசிய விஞ்ஞான மன்றம் பெற்றுக்கொண்டது. அதன் முழுமையான மதிப்பீட்டிற்குப் பிறகு, ஐந்து விண்ணப்பங்கள் (இரண்டு ஆரம்பகால தொழில் வருவாய் மானிய விண்ணப்பங்கள் மற்றும் மூன்று நிலையான ஆராய்ச்சி மானிய விண்ணப்பங்கள்) ICGEB க்கு முன்வைக்கப்பட்டன. இவை, நாட்டின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி துறை தேவைகளில் உயர் முன்னுரிமை தேவைகளை நிவர்த்தி செய்யக்கூடியனவாகும். ICGEB இன் இறுதி மதிப்பீடு நடைபெற்று வருகிறது. அதன்படி, ICGEB இன் நிதி ரீதியிலான உதவிகளாவன ICGEB இன் தேசிய மட்டத்திலான தொடர்பு அலுவலகமாக தேசிய விஞ்ஞான மன்றம் இருப்பதனால் அதனால் வழங்கப்பட்ட வசதியின் துணையுடன் இலங்கை விஞ்ஞான மற்றும் ஆராய்ச்சி சமூகத்திற்கு அதிக அளவில் பயனளித்துள்ளன என்பதைக் கவனத்தில் கொள்ளலாம்.



வரைபடம் 70: கடந்த தசாப்தத்தில் தேசிய விஞ்ஞான மன்றத்தின் உதவியுடன் ஐஊபுநுடீ இலிருந்து இலங்கை ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி சமூகத்தால் பயன்படுத்தப்பட்ட நிதிகள்.

- STEM துறைகளில் பாலின அம்சங்களை எளிதாக்குவதற்கான தொடர்பிணைப்புகள்

நிலையான ஆராய்ச்சியை மையமாகக் கொண்ட உலகளாவிய ஆராய்ச்சி மன்றத்தின் ஆசிய பசிபிக் பிராந்தியக் கூட்டத்தில், சமத்துவம், பன்முகத்தன்மை மற்றும் உள்ளடக்கம் (EDI) குறித்த கலப்பின அமர்வை(நேரிடையாகவும் மற்றும் நிகழ் நிலை அடிப்படையிலும்) ஏற்பாடு செய்வதற்கான தலைமைத்துவம் வழங்கப்பட்டது.2023 ஆம் ஆண்டின் பிற்பகுதியில், "இலங்கையில் தொழில்நுட்பத்தால் இயக்கப்படும் நிலையான சுற்றுலாத் துறைக்கு விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப துறையினை சார்ந்த பெண்களின் பங்களிப்பு" என்ற தலைப்பில் ஒரு மாநாடானது, வளரும் நாடுகளில் விஞ்ஞானத்தில் உள்ள பெண்களுக்கான அமைப்பின் இலங்கை தேசிய அத்தியாயம் {(Sri Lanka National Chapter of Organization for Women in Science in Developing Countries (OWSD/SLNC)} மற்றும் தேசிய விஞ்ஞான மன்றம் (NSF) ஆகியவற்றால் இணைந்து ஏற்பாடு செய்யப்பட்டது .இந்த நிகழ்வு, சுற்றுலாத் துறையில், குறிப்பாக நடுத்தர மற்றும் சிரேட்ட முகாமைத்துவ மட்டங்களில், பெண்கள் பங்கேற்பில் உள்ள இடைவெளியை நிவர்த்தி செய்வதில் கவனம் செலுத்தியது.சுற்றுலாத் துறையில், குறிப்பாக இடைநிலை மற்றும் சிரேட்ட முகாமைத்துவ மட்டங்களில், பெண்களின் பங்களிப்பு அவசியமாக கருதப்படுவதன் காரணம் ,விஞ்ஞானத்தில் பெண்களால் ஒரு முக்கிய பங்கை வகிக்க முடியும என்பதனால் ஆகும்.

இந்த இரண்டு செயல்பாடுகளும் (அக மற்றும் பிராந்திய ரீதியாக) சிறந்த நடைமுறைகளைப் பகிர்ந்து கொள்ளவும், STEM துறைகளில் பாலின அம்சங்களில் உள்ள இடைவெளிகளை நிவர்த்தி செய்வதற்கான மேலதிக நடவடிக்கைகளை உருவாக்கவும் வழிகளை வழங்கின.



OWSD/ SLNC உடன் இடம்பெற்ற கூட்டுப் பட்டறையில் பங்கேற்றவர்கள்



நிகழ்வில் விநியோகிக்கப்பட்ட துண்டு பிரசுரங்கள்

தேசிய விஞ்ஞான மன்றத்தின் பணிப்பாளை ஈ) விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப கொள்கை ஆராய்ச்சி

தேசிய உயிர் தொழில்நுட்ப கொள்கையினை மீள் நோக்கல்

வேகமாக விரிவடைந்து வரும் தொழில்நுட்பங்களில் ஒன்றான உயிரி தொழில்நுட்பத் துறையில் புதுப்பித்த கொள்கையை பராமரிக்க வேண்டியதன் முக்கியத்துவத்தை உணர்ந்ததினால், விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பக் கொள்கைக்கான தேசிய விஞ்ஞான மன்ற குழுவின் கீழ் வரும் உயிரி தொழில்நுட்பத்திற்கான தேசிய விஞ்ஞான மன்ற துணைக் குழுவானது, 2009 ஆம் ஆண்டில் தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவுடன் (NASTEC) இணைந்து தேசிய விஞ்ஞான மன்றம் தயாரித்த தற்போதைய தேசிய உயிரி தொழில்நுட்பக் கொள்கையை மறுபரிசீலனை செய்யத் தொடங்கியது.

2022 ஆம் ஆண்டில், இந்தக் கொள்கையானதுஇ நிபுணர்களால் மதிப்பாய்வு செய்யப்பட்டு, சுகாதாரம், விவசாயம், கைத்தொழில், சுற்றுச்சூழல் மற்றும் எரிசக்தி தொடர்பான துறைகள் தொடர்பில் உள்ளீடுகள் பெறப்பட்டன. இவ்வாறு பெற்றுக்கொள்ளப்பட்ட உள்ளீடுகளாவன தொகுக்கப்பட்டு பின்னர், செப்டம்பர் 19, 2023 அன்று தேசிய விஞ்ஞான மன்றத்தில் நடைபெற்ற ஒரு கூட்டத்தின் போது பரந்த அளவிலான பங்குதாரர்களிடமிருந்து உள்ளீடுகளைப் பெற சமர்ப்பிக்கப்பட்டது.

ஆலோசனைகளினை பெற்றுக்கொள்வதற்கு கூட்டப்பட்ட இந்த கூட்டத்தில் நாடு முழுவதிலுமிருந்து கல்வித்துறை, ஆராய்ச்சி நிறுவனங்கள், ஒழுங்குமுறை அமைப்புகள் மற்றும் தொழில்துறையைச் சேர்ந்த 60க்கும் மேற்பட்ட பங்குதாரர்கள் இந்த ஆலோசனையில் பங்கேற்றுள்ளனர். பங்குதாரர்களின் ஆலோசனைகளினை பெறுவதற்கான இந்த நேரடி ஆலோசனை மன்றத்தைத் தவிர, தற்போதுள்ள கொள்கைக்குத் தேவையான குறிப்பிட்ட மேம்பாடுகளைப் பதிவுசெய்ய விரிவான படிவத்தின் மூலம் அவர்களின் கருத்துகள் பெறப்பட்டன.


Stakeholder Feedback Form for Reviewing the National Biotechnology Policy

The Working Committee on Science and Technology Policy, National Science Foundation (NSF), has identified biotechnology as a crucial sector for enhancement in Sri Lanka. Consequently, an expert committee has been appointed to review the existing National Biotechnology Policy to bolster sectoral development. The final recommendations for policy revision will be directed to the National Science and Technology Commission (NASTEC), the authorized body for Science and Technology policy formulation.

In the course of this review, the expert committee has formulated a set of recommendations and now seeks input from stakeholders to further fine-tune these suggestions before submitting them to the NASTEC.

Recognizing your role as a significant stakeholder in this sector, both the Committee and the NSF extend a warm invitation to you to share your thoughts on the proposed modifications and any other alterations necessary to facilitate the advancement of biotechnology sector in the country.

The suggested recommendations have been marked in colored font and/or provided as comments for your reference within the Technical Document. You may include your comments directly within the document itself and utilize the form to share your valuable ideas with us.

Email *

Your email

Next

Clear form

பங்குதாரர்களின் கருத்துப்படிவம்



பங்குதாரர் ஆலோசனையிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட காட்சிகள்



பங்குதாரர் ஆலோசனையிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டவை

இந்தப் பயிற்சிகள் மூலம் தற்போதுள்ள கொள்கை தொடர்பில் முன்மொழியப்பட்ட திருத்தங்கள், தேசிய உயிரி தொழில்நுட்பக் கொள்கையின் அடுத்த பதிப்பில் இணைக்கப்படுவதற்கு இலங்கை தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவிற்கு (NASTEC) சமர்ப்பிக்கப்படும்.

தேசிய விஞ்ஞான மன்றத்தின் பணிப்பானை
உ) விஞ்ஞானத்தினை பிரபலப்படுத்தல்

இலங்கை அணியானது சீனாவில் இடம்பெற்ற 7வது Belt and Road Teenager ஆயமநச முகாம் மற்றும் 2023 ஆம் ஆண்டுக்கான ஆசிரியர் பட்டறையில் பங்கேற்று சிறந்த செயல்திறன் பிரிவுகளில் உரிய இடங்களைப் பெற்றுக் கொண்டது.

உலக விஞ்ஞான எழுத்தறிவு அமைப்புடன் (WOSL) இணைந்து, சீன விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப சங்கம் (CAST) மற்றும் சீன விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப அமைச்சு ஆகியவை ஏற்பாடு செய்த Belt and Road Teenager ஆயமநச முகாம் மற்றும் ஆசிரியர் பட்டறையில் 10 மாணவர்கள் மற்றும் 3 ஆசிரியர்கள் கொண்ட குழு பங்கேற்றது. முகாமில் அவர்கள் மேற்கொண்ட செயல்பாடுகளுக்காக "சிறந்த குழு", "சிறந்த விளக்கக்காட்சி" மற்றும் "சிறந்த புத்தாக்குனர்" ஆகிய பிரிவுகளில் அவர்கள் இடங்களை வென்றுள்ளனர்.

பயிலரங்கில் பங்கேற்ற ஆசிரியர்களுக்கு சிறப்பு பயிற்சி திட்டங்களில் ஈடுபடும் வாய்ப்பும் கிடைத்தது.

நிகழ்ச்சித்திட்டத்தில் பங்கேற்ற குழுவில் பின்வருவோர் அடங்குவர்:

திருவதி அபிமணி ரணதுங்க, விஞ்ஞான அலுவலர், தேசிய விஞ்ஞான மன்றம்
திருவதி உபேக்ஷா தர்ஷனி அபேசேகர, தேஸ்டன் கல்லூரி, கொழும்பு 07
திருவதி துஷாரி நெல்கா முனசிங்க, ஹரிசந்திரா தேசிய பாடசாலை, நீர்கொழும்பு
திருவதி டெக்லா மனோஜா சுதர்ஷனி, தங்கல்ல பாலிகா வித்தியாலயம், தங்கல்ல

அட்டவணை 07: சான்றிதழ்களினை வென்ற வெற்றியாளர்கள்

வெற்றி பெற்ற வகுதி	மாணவரின் பெயர்	பாடசாலை
சிறந்த அணி	நதீஜா பிரதீபனா	தேஸ்டன் கல்லூரி, கொழும்பு 07
சிறந்த விளக்கக்காட்சி	அனுசர வீரகோன்	தர்மராஜ கல்லூரி, கண்டி
	சுஹான் சவின்த பர்னாந்து	புனித ஜோசப் வாஸ் கல்லூரி, வென்னப்புவ
	மேதினி திரிஷால துதஹேவகே	புனித போல்ஸ் பெண்கள் பாடசாலை, மிலாகிரிய, கொழும்பு 05
	ஆமாயா சங்காலனி பண்டார	புனித தோமஸ் பெண்கள் பாடசாலை, மாத்தளை
சிறந்த புத்தாக்குனர	சிலுனி டி சில்வா	மியூசியஸ் கல்லூரி, கொழும்பு 07
	மொகமெட் பஹீஜ் அல் பறா	கின்னியா மத்திய கல்லூரி, கின்னியா
	சதீஷா தேவேந்ரா ரணவீர	மகாமேவ்நவ பௌத்த கல்லூரி, டெமலகம
	சச்சினி கௌசல்யா புலுமுல்ல	மகாமாயா பெண்கள் கல்லூரி, கண்டி
	மகேஷா பியுமி வீரசிங்க	மகாமாயா பெண்கள் கல்லூரி, கண்டி



விஞ்ஞான கல்வியறிவு பெற்ற சமூகத்தை உருவாக்க விஞ்ஞானத்தினை பிரபலப்படுத்துதல

தேசிய விஞ்ஞான மன்றமானது, விஞ்ஞான கல்வியறிவு பெற்ற சமூகத்தை உருவாக்க பின்வரும் விடயங்களில் தன் கவனத்தினை செலுத்துகிறது,

1. STEAM அணுகுமுறை மூலம் விஞ்ஞான கல்வியை மேம்படுத்துவதற்கான திட்டங்களை செயல்படுத்துதல்.
2. சசுமூகத்தின் பல்வேறு பிரிவுகளுக்கு விஞ்ஞான அறிவை எடுத்துச் செல்ல பல்வேறு திட்டங்கள் மற்றும் செயல்பாடுகள் மூலம் விஞ்ஞான அறிவை பிரபலப்படுத்துதல்.

மேற்கூறிய இலக்குகளை பயனுறுதி மிக்க முறையில் செயற்படச் செய்வதற்கு, தேசிய விஞ்ஞான மன்றமானது 2005 ஆம் ஆண்டில் தேசிய விஞ்ஞான மன்றத்தில் விஞ்ஞான தொடர்புகள் மற்றும் பரவல் பிரிவு (SCOD) எனும் ஒரு பிரிவை நிறுவியது.

STEAM அணுகுமுறை மூலம் விஞ்ஞான கல்வியை ஊக்குவித்தல

1.1 விஞ்ஞான சமூக வலையமைப்பினை நிறுவுதல



விஞ்ஞானத்தினை சமூகத்திற்கு வினைத்திறன் மற்றும் பயனுறுதி மிக்க முறையில் எடுத்துச் செல்வதற்காக, 2005 முதல், குறிப்பாக பாடசாலை சமூகத்தை உள்ளடக்கிய ஒரு விஞ்ஞான ரீதியிலான சமூக வலையமைப்பை தேசிய விஞ்ஞான மன்றம் நிறுவியுள்ளது. அதன்படி, 2023 ஆம் ஆண்டின் இறுதியில், தேசிய விஞ்ஞான மன்றமானது 1,163 பாடசாலை மட்டத்திலான விஞ்ஞான சங்கங்களினையும் (SSS) மற்றும் 55 பல்கலைக்கழக மட்டத்திலான விஞ்ஞான சங்கங்களினையும் (USS) பதிவு செய்துள்ளது. கிராம மட்டத்தில் சமூக அடிப்படையிலான விஞ்ஞான சங்கங்களை நிறுவுவதற்கான முயற்சிகளும் எடுக்கப்பட்டுள்ளன.

1.2 சுற்றுச்சூழலை உணரக்கூடிய திறன் மிக்க இயற்கையை நேசிக்கும் எதிர்கால தலைமுறையை உருவாக்குதல்

1.2.1 Kid naturalist நிகழ்ச்சித்திட்டம்

இது 1 - 6 ஆம் வகுப்பு மாணவர்களை இலக்காகக் கொண்டு, 2020 முதல் தேசிய விஞ்ஞான மன்றத்தினால் முன்னெடுக்கப்படும் மற்றொரு திட்டமாகும், இந்த நிகழ்ச்சிச்திட்டத்தின் முக்கிய நோக்கம், மாணவர்கள் தங்களைச் சுற்றியுள்ள இயற்கையை விஞ்ஞானவியல் முறைகளின் அடிப்படையில் கவனிக்க உதவுவதாகும். இதன் மூலம் சுற்றுச்சூழலுக்கு உணர்திறன் கொண்ட மாணவர் சமூகம் ஒன்றினை உருவாக்குவதன் மூலம் அவர்கள், விஞ்ஞானம் மற்றும் விஞ்ஞானவியல் கருத்துக்களை தங்கள் அன்றாட வாழ்வில் பயன்படுத்தக் கற்றுக்கொள்கின்றனர். இந்த திட்டத்தில் பங்கேற்கும் மாணவர்கள் 6 வார காலப்பகுதிக்குள் தம்மால் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புகளின் அடிப்படையில் ஒரு இயற்கை இதழைத் தயாரிக்க வேண்டும். சமர்ப்பிக்கப்பட்ட இயற்கை இதழ்களாவன தேசிய விஞ்ஞான மன்றத்தினால் நியமிக்கப்பட்ட, அக்குறிப்பிட்ட விடயத்தில் நிபுணத்துவம் கொண்ட ஒரு நிபுணர் குழுவால் மதிப்பீடு செய்யப்படுகின்றன, மேலும் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறந்த திட்டங்கள் தேசிய விஞ்ஞான மன்றத்தின் விருது வழங்கும் விழாவில் பாராட்டப்படும். அதன்படி, 2023 ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டத்திற்கு 1,506 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றதுடன் 331 இயற்கை இதழ்களாவன இறுதிச் சுற்று மதிப்பீட்டிற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டன. ஒவ்வொரு தரத்திலிருந்தும் 10 சிறந்த இயற்கை இதழ்களாவன திட்டத்தின் தேசிய வெற்றியாளர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டன.

அட்டவணை 08: 2023 ஆம் ஆண்டின் முனை யேவரசயடளைவ நிகழ்ச்சித்திட்டத்தில் தமது மிகச்சிறந்த ஆற்றல் திறனை வெளிப்படுத்தியோர்

வகுதி: வகுப்பு 1		
இல.	**வெற்றியாளரின் பெயர்**	**பாடசாலை**
01	முரளிதரன் அகரன்	புனித ஜோன் பொஸ்கோஸ் வித்தியாலயம், யாழ்ப்பாணம்
02	W. ஷானுகி ஷெஹன்சா	MR/ கடலஹென K. V.
03	கவினி நிஹின்சா மேனன்	மகாமாயா பெண்கள் கல்லூரி, கண்டி
04	R. ரிஷிகா	J/ பரிசுத்த திருக்குடும்ப கொன்வென்ட், யாழ்ப்பாணம்
05	இமல்ஷா மிஹிசர	MR/ எலமல்டெனியா K. V.
06	S. கவினயா	J/ பரிசுத்த திருக்குடும்ப கொன்வென்ட், யாழ்ப்பாணம்
07	R. டிரோனி	J/ பரிசுத்த திருக்குடும்ப கொன்வென்ட், யாழ்ப்பாணம்
08	S. M. தருஷி லக்ஷனி	R/ எத்தொட வித்தியாலயம், எத்தொட, கல்லெல்ல, றத்தொட
09	S. சுஜாலினி	J/ பரிசுத்த திருக்குடும்ப கொன்வென்ட், யாழ்ப்பாணம்
10	A. S. மரிடா	J/ பரிசுத்த திருக்குடும்ப கொன்வென்ட், யாழ்ப்பாணம்
வகுதி: வகுப்பு 2		
இல.	**வெற்றியாளரின் பெயர்**	**பாடசாலை**
01	நெத்ய பல்லியகே	பெண்கள் உயர்தர பாடசாலை, கண்டி
02	சகிலா கேசர துணுகேபொத	புனித அந்தோனியார் ஆண்கள் கல்லூரி
03	M. G. சுவஹஸ் தியூஷன்	MR/ தியதவ K. V.
04	வாகீஷா பிரபாஸ்வர பண்டார	St/ சில்வெஸ்டர் கல்லூரி – கண்டி
05	J. கஸ்வினி	J/ பரிசுத்த திருக்குடும்ப கொன்வென்ட், யாழ்ப்பாணம்
06	J. V. G. தினுலி செஹன்ச	MR/ றம்புகன கொடிகாரகொட K. V.
07	மேத்ய பல்லியகே	K/ பெண்கள் உயர்தர பாடசாலை, கண்டி
08	D. G. எசந்தி தஹம்ச	MR/ றம்புகன கொடிகாரகொட K. V.
09	T. M. தஷெனி நெதுசாரி	M/ R சியம்பலாகொட மேற்கு ஆரம்ப பாடசாலை
10	T. நஜனிதா	J/ பரிசுத்த திருக்குடும்ப கொன்வென்ட், யாழ்ப்பாணம்

வகுதி: வகுப்பு 3		
இல.	**வெற்றியாளரின் பெயர்**	**பாடசாலை**
01	H. B. இந்தீப கீனுக ஹிடிபண்டார	CP/KOT/ டெல்டா கமுனுபுர ம.வி.
02	W. M. டெனித் மின்ருக வீரசிங்க	தேஸ்டன் கல்லூரி, கொழும்பு 07
03	தேசதி நவீத்ம தேசபிரிய	K/ சீதாதேவி பாலிகா ம.வி.
04	சுதிவ் கித்னுக விதானகே	தேஸ்டன் கல்லூரி, கொழும்பு 07
05	R. சஞ்சனா	J/ பரிசுத்த திருக்குடும்ப கொன்வென்ட், யாழ்ப்பாணம்
06	H. B. சந்தீப கெத்ம ஹிடிபண்டார	MR/ றம்புகன கொடிகாரகொட P. V.
07	N. H. H. சமத்கர ரூசாராணி	CP/KOT/ டெல்டா கமுனுபுர ம.வி.
08	R. K. திசும் தேஜன் நவரத்ன	CP/ ஹனகு மதுரட மத்திய கல்லூரி
09	G. பிரஹர்ஷா கௌஷன் பொன்சேகா	CP/KOT/ டெல்டா கமுனுபுர ம.வி.
10	D. E. நதுலி தமயா	கிங்ஸ்வூட் கல்லூரி, கண்டி
11	K. O. G. ஜயமி மாலித்ய	MR/ றம்புகன கொடிகாரகொட K. V.
வகுதி: வகுப்பு 4		
இல.	**வெற்றியாளரின் பெயர்**	**பாடசாலை**
01	V. A. தேமியா றணுமித சமரவிக்ரம	கண்டி சர்வதேச பாடசாலை, கண்டி
02	K. ரஹேன் செனத் பெரேரா	தேஸ்டன் கல்லூரி, கொழும்பு 07
03	K. சுவர்னி கிரிஷ்மினா	ஹைலண்ட்ஸ் தேசிய கல்லூரி, ஹட்டன்
04	A. V. ஒசண்தி தேவ்துனி	M/ மொறவாக ஆரம்ப பாடசாலை
05	சாந்தகுமார் ஜயஸ்வினி	K/ பெண்கள் உயர்தர பாடசாலை, கண்டி
06	W. G. சத்சிலு வெஹர	CP/KOT/ டெல்டா கமுனுபுர ம.வி.
07	P. G. ஐஸ்லி சர்யா கல்லகே	G/ சங்கமித்த பாலிகா கல்லூரி, காலி
08	T. நெதும் மிஹிசர ரணசிங்க	தேஸ்டன் கல்லூரி, கொழும்பு 07
09	தேடசி நதுல்யா கலுபஹன	G/ சங்கமித்த பாலிகா வித்தியாலயம்
10	ஓகித தனுஜித விதான கமகே	தர்மராஜ கல்லூரி, கண்டி
11	ரண்சிலு கவீஷ்வர வணிகசேகர	MR/ தலபெகும்புர P. V.
வகுதி: வகுப்பு 5		
இல.	**வெற்றியாளரின் பெயர்**	**பாடசாலை**
01	D. A. சதுர தேசன்ஜன தர்மரத்ன	CP/KOT/ டெல்டா கமுனுபுர ம.வி.
02	H. R. L. சானுக தேவ்சிது	MR/ தெனியாய மத்திய வித்தியாலயம்
03	L. டயோன் அபிஷ்க பெரேரா	பபா / கலா சபுகஸ்கந்த சோபித வித்தியாலயம்
04	W. M. சனுதி அஸ்வினி வீரசேகர	விஷன் சர்வதேச பாடசாலை கண்டி
05	யசோதரா தம்சரீ விக்ரமரத்ன சிறிவர்த்தன	புனித. ஜோசப் பாலிகா மகா வித்தியாலயம் - கேகாலை
06	செனுல இன்சித விதானகே	தேஸ்டன் கல்லூரி, கொழும்பு 07
07	M. G. B. Y. C. பண்டார	K/ மஹாநாம கல்லூரி
08	P. G. சதுஷா நிம்நட	CP/KOT/ டெல்டா கமுனுபுர ம.வி.
09	துலிதி நெதும்ச றொட்றிகோ	சுஜாதா வித்தியாலயம், மாத்தறை
10	B. A. சனுதிக சன்தசன் பண்டார	R/ கந்தன்கொட ஆரம்ப கல்லூரி
வகுதி: வகுப்பு 6		
இல.	**வெற்றியாளரின் பெயர்**	**பாடசாலை**
01	T.G. இந்துமினி மேத்மா	MR/ கிருலப்பனை கனிது விதுகல
02	M. I. M. ஆதிவ்	K/ ரணபீம றோயல் கல்லூரி
03	D. K. பாசித திமத் ரத்நாயக	K/ ரணபீம றோயல் கல்லூரி
04	J.G. அசென் நெத்சர	MR/ கிருலப்பனை கனிது விதுகல
05	W. K. J. சிதுமி சேய	MR/ கிருலப்பனை கனிது விதுகல

06	R. K. G. I. உதேஷ் பண்டார	K/ ரணபீம றோயல் கல்லூரி
07	D. L. கேமித சுஹாஸ் லியனகே	K/ ரணபீம றோயல் கல்லூரி
08	மயூரன் அஜய்ராவ்	J/ தாவடி இந்து தமிழ் கலவன் பாடசாலை
09	கனிஷ்கா பாலகுமார்	V/ நெலுக்குளம் கலைமகள் மகா வித்தியாலயம்
10	ஆரண்யா கணேசதேவா	J/ யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி

1.3 பாடசாலை விஞ்ஞான போட்டிகள் (SSC)

பாடசாலை சமூகத்தினரிடையே STEAM அணுகுமுறையுடன் விஞ்ஞானத்தினை பிரபலப்படுத்துவதற்காக விஞ்ஞான தொடர்புகள் மற்றும் பரவல் பிரிவினால் ஆண்டுதோறும் பாடசாலை விஞ்ஞான போட்டிகள் நடத்தப்படுகின்றன. அதன்படி, 2023 ஆம் ஆண்டில் "சிறந்த எதிர்காலத்திற்கான STEAM கல்வி" என்ற கருப்பொருளின் கீழ் ஏழு போட்டிகள் நடத்தப்பட்டன:

1. கட்டுரைப் போட்டி
2. டிஜிட்டல் கதை சொல்லல்
3. விருது போட்டி
4. சுவரொட்டிப் போட்டி
5. விஞ்ஞான ரீதியிலான சிறுகதைகள் (புனை கதை)
6. பாடல் போட்டி
7. கதாபாத்திரம் ஒன்றினை ஏற்று நடிக்கும் நாடகப் போட்டி

அட்டவணை 09: போட்டியின் வெற்றியாளர்கள்

கட்டுரைப் போட்டி			
இல.	**மாணவரின் பெயர்**	**பாடசாலை**	**இடம்**
சிங்கள மொழி மூலம்			
01	D. P. K. G. தருஷி டியூமினி தஸ நாயக	CP/Denu/ ஹந்தெஸ்ச மகா வித்தியாலயம், தெளலகல, பேராதனை	1வது
02	நிபுன் தனன்ஜய பிரேமரத்ன	தர்மராஜ கல்லூரி, கண்டி	2வது
03	W. G. செனுகி லெஹன்ச	டெல்டா கெமுனுபுர மகா வித்தியாலயம், புஸ்சல்லாவ	3வது
ஆங்கில மொழி மூலம்			
01	மொஹமட் நௌசாட் பீனா	KM/ மஹ்முட் மகளிர் கல்லூரி (தேசிய பாடசாலை), கல்முனை	1வது
02	ஆயிஷா மொஹிடீன்	BADI- உடின் மஹமுட் பெண்கள் கல்லூரி, கண்டி	2வது
03	ஆதியா லெசீ	BT/ புனித. செசில்லா பெண்கள் கல்லூரி, மட்டக்களப்பு	3வது
04	M. S. ஷிவா	பிரிட்டிஷ் சர்வதேச கல்லூரி, பொல்கஹவெல	3வது
தமிழ் மொழி மூலம்			
01	பரணிஹா செல்வேந்திரதாஸ்	J/ ஸ்கந்தவரோதயா கல்லூரி, யாழ்ப்பாணம்	1வது
02	தேவசிகாமணி கசந்தனன்	Tk/ ஸ்ரீ ராமகிருஷ்ணா கல்லூரி, அக்கரைப்பற்று	2வது
03	S. லோகலக்ஷன்	Tk/ ஸ்ரீ ராமகிருஷ்ணா கல்லூரி, அக்கரைப்பற்று	3வது
விஞ்ஞான ரீதியிலான சிறுகதைகள் (புனை கதை) விஞ்ஞான ரீதியிலான சிறுகதைகளில் (புனை கதை) சிறந்த கதைகள் 05 தெரிவுசெய்யப்பட்டன			
இல.	**மாணவரின் பெயர்**	**பாடசாலை**	**இடம்**
01	H. W. M ரண்தினி வந்தனு விஜயசிங்க	மஹாமாயா பெண்கள் கல்லூரி, கண்டி	சிறந்த 5 பேரில்
02	ரூபிகா அருந்தவம்	J/ வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலை, யாழ்ப்பாணம்	சிறந்த 5 பேரில்

03	R. M. சாரனி சிபசந்தீ	ஜினராஜ பெண்கள் கல்லூரி, கம்பொல	சிறந்த 5 பேரில்
04	அந்தோனி ரூபசிங்க	மாத்தளை சர்வதேச பாடசாலை	சிறந்த 5 பேரில்
05	பைனல் யெசன்து எக்கநாயக்க	மாத்தளை சர்வதேச பாடசாலை	சிறந்த 5 பேரில்

டிஜிட்டல் கதை சொல்லல்

இல.	மாணவரின் பெயர்	பாடசாலை	இடம்
01	யனீத் ரணபாகு	தேஸ்டன் கல்லூரி	1வது இடம்
02	நெதுனி ஹிமங்க கமகே	புனித. ஜோசப் பாலிகா மகா வித்தியாலயம், கம்பொல	பாராட்டுக்கள்
03	தியூமலி பியதாச	சிறிமாவோ பண்டாரநாயக்க வித்தியாலயம்	பாராட்டுக்கள்

பாடல் போட்டி

இல.	மாணவர் மற்றும் ஆசிரியரின் பெயர்	பாடசாலை	இடம்
01	H. A. தீப் அன்சிதா திருவதி A. அபயசிறிவர்த்த (பாடல் வரிகள் எழுதுனர்)	ஊழு/ராஜசிங்க மகா வித்தியாலயம், கொழும்பு 9	1வது
02	மன்சூர் பாத்திமா ஹஸ்னா ஹரூன் பாத்திமா ஹிஸ்மா சம்சுதீன் அரசாட் சாம்ஸ் ஆரிவ் (பாடல் வரிகள் எழுதுனர்)	KM/AK/அக்கரைப்பத்து முஸ்லிம் மத்திய கல்லூரி, அக்கரைப்பத்து	2வது
03	M. M. D. எய்னா சாவங்கி I. M. வசிதா ஹர்சனா திருமதி. தம்மிகா சந்ரலதா (பாடல் வரிகள் எழுதுனர்)	ஹரிச்சந்திரா கல்லூரி, நீர்கொழும்பு	2வது
04	P. D. துலீமா இந்தீவரி L. W. P. திசாரி சந்தசிலுனி திருமதி. M. S. K. மாரசிங்க (பாடல் வரிகள் எழுதுனர்)	றோயல் மத்திய கல்லூரி, பொலனறுவை	3வது

விருது போட்டி

இல.	மாணவர் மற்றும் ஆசிரியரின் பெயர்	பாடசாலை	இடம்
01	ஆதீக் அஹமட் திரு. A. L. அன்சர் (பாடல் வரிகள் எழுதுனர்)	மக்கன் மாக்கர் தேசிய பாடசாலை, ஏராவூர், மட்டக்களப்பு	1வது
02	ஹெஷான் அத்தபத்து ஹிருஷன் விஜேசிங்க ஹெஷான் அத்தபத்து ஹிருஷன் விஜேசிங்க (பாடல் வரிகள் எழுதுனர்)	தோரனகட தர்மராஜ வித்தியாலயம், எஹலியகொட	2வது
03	ஹசினி சன்சலா தினுக தில்சன் விதான பதிரண ஹாசினி சன்சலா (பாடல் வரிகள் எழுதுனர்)	ஆலபலதெனிய தேசிய பாடசாலை	3வது
04	துலீமா இந்தீவரி திசானி சந்தசிலுனி திருமதி. K. A. தாமரா பிரியதர்சனி(பாடல் வரிகள் எழுதுனர்)	றோயல் கல்லூரி, பொலனறுவை	3வது

கதாபாத்திரம் ஒன்றினை ஏற்று நடிக்கும் நாடகப் போட்டி

இல.	மாணவரின் பெயர்	பாடசாலை	இடம்
01	M. P. பாபிரஹர்சனா உண்டுகொடகே	றோயல் மத்திய கல்லூரி, பொலனறுவை	1வது
02	K. A. நதின் தத்சர	தேஸ்டன் கல்லூரி, கொழும்பு 07	2வது
03	Y. G. பிந்தியா இந்துவரி விஜேசிங்க	புனித. ஜோசப் பாலிகா மகா வித்தியாலயம், கம்பெ-பால	3வது

சுவரொட்டிப் போட்டி

வகுப்பு 13			
01	A. G. W. யாசமி தேனுவர	றோயல் மத்திய கல்லூரி, பொலனறுவை	1வது
02	S. G. W. D. இந்துவர	றோயல் மத்திய கல்லூரி, பொலனறுவை	2வது
03	M. ஷெபா சிமிர்ன	WP/ C/ புனித ஆன்ஸ் பெண்கள் ம.வி., கொழும்பு 13	3வது
வகுப்பு 12			
01	தருஷா செஹான் அமரதுங்க	றோயல் மத்திய கல்லூரி, பொலனறுவை	1வது
02	S. S. சஸ்மிதா வீரசுந்தர	தேஸ்டன் கல்லூரி, கொழும்பு 07	2வது
03	A. சதுஷ்கி நயனதார திஸ்ஸநாயக	KG/ புனித. ஜோசப் பாலிகா ம.வி., கேகாலை	3வது
வகுப்பு 11			
01	D. G. உபேக்ஷா இந்தீவரி அபேசிங்க	றோயல் மத்திய கல்லூரி, பொலனறுவை	1வது
02	G. P. G. M. கல்ஹர	தோரனகட தர்மராஜ வித்தியாலயம்	2வது
03	U. S. பூர்ணிமா	றோயல் மத்திய கல்லூரி, பொலனறுவை	3வது
04	U. G. சதுமினி கௌசல்யா	றோயல் மத்திய கல்லூரி, பொலனறுவை	3வது
வகுப்பு 10			
01	K. D. N. சன்விது	றோயல் மத்திய கல்லூரி, பொலனறுவை	1வது
02	A. G. நேத்மினா தேஜன்	றோயல் மத்திய கல்லூரி, பொலனறுவை	2வது
03	W. H. M. சமீஷா அவிந்தி	CP/ HG/ மதுரத ம.வி.	3வது
வகுப்பு 09			
01	ஹசித் சஸ்மித டி சில்வா	தேஸ்டன் கல்லூரி, கொழும்பு 07	1வது
02	D. M. M. ஹஷார திஸ்ஸநாயக	றோயல் மத்திய கல்லூரி, பொலனறுவை	2வது
03	D. M. P. வத்சலா திஸ்ஸநாயக	றோயல் மத்திய கல்லூரி, பொலனறுவை	3வது
04	U. ஹரிஷ்	C/புனித அந்தோனியார் ஆண்கள் ம.வி., கொழும்பு	3வது
வகுப்பு 8			
01	B. சவிஷ்க	புனித ஆன்ஸ் பெண்கள் ம.வி.	1வது
02	R. M. ராயா ரய்ஹன்	மெர்சி கல்வி நிறுவனம்	2வது
03	M. R. F. ரவாத் ராஷா	ஸ்கூல் ஒப் எக்ஸ்சலன்ஸ்	3வது
வகுப்பு 7			
01	M. ஜினுலக்சயா	Tk/ஸ்ரீ ராமகிருஷ்ணா கல்லூரி, அக்கரைப்பற்று	1வது
02	S. தபூர்ஷான்	Tk/ஸ்ரீ ராமகிருஷ்ணா கல்லூரி, அக்கரைப்பற்று	2வது
03	K. சர்மிதன்	Tk/ஸ்ரீ ராமகிருஷ்ணா கல்லூரி, அக்கரைப்பற்று	3வது
வகுப்பு 6			
01	R. கிருதிகன்	Tk/ஸ்ரீ ராமகிருஷ்ணா கல்லூரி, அக்கரைப்பற்று	1வது
02	P. கிரித்திகா	Tk/ஸ்ரீ ராமகிருஷ்ணா கல்லூரி, அக்கரைப்பற்று	2வது
03	S. சுஜாஸ்திகன்	Tk/ஸ்ரீ ராமகிருஷ்ணா கல்லூரி, அக்கரைப்பற்று	3வது

1.4 விஞ்ஞான ஆராய்ச்சி கருத்திட்ட பயிற்சி திட்டம் மற்றும் போட்டி 2023/24

பாடசாலை சமூகத்தினரிடையே ஒரு ஆராய்ச்சி கலாச்சாரத்தை உருவாக்குவதற்காக பாடசாலை விஞ்ஞான ஆராய்ச்சி திட்டம் (SRP) 2008 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இந்த திட்டம் கீழே குறிப்பிடப்பட்டுள்ளபடி மூன்று முக்கிய கூறுகளைக் கொண்டுள்ளது:

1. விஞ்ஞான ஆராய்ச்சியில் அடிப்படைக் கருத்துக்கள் மற்றும் படிகள் தொடர்பில் ஆசிரியர்களுக்கான பயிற்சித் திட்டங்கள்
2. மாணவர்களுக்கு அவர்கள் ஆராய்ச்சித் திட்டத்தை நடத்துவதற்கு நேரடி அனுபவத்தை வழங்குவதற்கான பயிற்சித் திட்டங்கள்
3. விஞ்ஞான ஆராய்ச்சி கருத்திட்டப் போட்டி (SRPC)

2022.̓.23 ஆண்டுக்கான விஞ்ஞான ஆராய்ச்சி கருத்திட்டப் போட்டியினது கட்டம் 1 ஆனது 2023 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் 125 மாணவர்கள் மற்றும் 60 ஆசிரியர்களின் பங்கேற்புடன் நிறைவடைந்தது. விஞ்ஞான ஆராய்ச்சி கருத்திட்டப் போட்டி 23/24 க்கான விண்ணப்பங்கள் அவர்களின் திட்ட முன்மொழிவுகளுடன்இ ஆகஸ்ட் 2023 இல் இந்த கருத்திட்டத்தில் பங்கேற்பதற்காக அழைக்கப்பட்டன. கருத்திட்ட முன்மொழிவுகளின் மதிப்பீடு நிறைவடைந்தது, மேலும் 2024 ஆம் ஆண்டின் இறுதியில் நடைபெறவுள்ள 2023/24 ஆண்டுக்கான விஞ்ஞான ஆராய்ச்சி கருத்திட்ட போட்டியில் பங்கேற்க 75 திட்ட முன்மொழிவுகள் தேர்ந்தெடுக்கப்பட்டன.

1.5 STEAM அணுகுமுறையுடன் கூடிய தேசிய விஞ்ஞான மன்ற சிறப்புப் பாடசாலை கருத்திட்டம்.

தேர்ந்தெடுக்கப்பட்ட 50 பாடசாலைகளில் STEAM அணுகுமுறை மூலம் விஞ்ஞான கல்வியை ஊக்குவிக்கும் திட்டத்தை தேசிய விஞ்ஞான மன்றம் தொடங்கியுள்ளது. இந்தத் திட்டம் கல்வி அமைச்சின் விஞ்ஞான கிளை மற்றும் இலங்கை கொமர்ஷல் வங்கியின் கூட்டுறவு சமூகப் பொறுப்பு அறக்கட்டளையுடன் இணைந்து செயல்படுத்தப்பட்டது. இந்தக் கருத்திட்ட பயிற்சியானது எட்டு வெவ்வேறு அம்சங்களில் கவனம் செலுத்துகிறது. இந்த முன்னோடித் திட்டம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள 05 பாடசாலைகளில் தொடங்கப்பட்டது:

1. டட்லி சேனநாயக்க வித்யாலயா, நாரஹேன்பிட்ட, கொழும்பு 05
2. அனுருத்த பாலிகா வித்யாலயா, தெமட்டகொட, கொழும்பு 09
3. ராஜசிங்க மகா வித்யாலயா, மாளிகாவத்தை, கொழும்பு 09
4. ஏவ் மரியா வித்யாலயா, மட்டக்குளிய, கொழும்பு 15
5. விஜயபா மகா வித்யாலயா, ஸ்டேஸ் வீதி, கொழும்பு 14

இந்த திட்டத்தின் தொடக்க நிகழ்ச்சி, 2023 மே 16 ஆம் திகதியன்று தேசிய விஞ்ஞான மன்ற கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. தேசிய விஞ்ஞான மன்றத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி சேபாலிகா சுதசிங்க வரவேற்புரை நிகழ்த்தினார். அதே நேரத்தில் SCOD இன் தலைவர் கலாநிதி பி. ஆர். எம். பி. தில்ருக்ஷி கருத்திட்டத்தின் பின்னணியை விளக்கினார். கல்வி அமைச்சின் விஞ்ஞான கிளையின் பணிப்பாளர் திரு. பந்துல சரத் மற்றும் கொமர்ஷல் வங்கியினது, நிலைத்தன்மை, மகளிர் வங்கியியல் மற்றும் CSR பிரிவின் சிரேட்ட முகாமையாளர் திருமதி கமலினி எல்லாவல ஆகியோர் இந்த திட்டத்தின் முக்கியத்துவத்தையும் பங்கையும் எடுத்துரைத்தனர். தேசிய விஞ்ஞான மன்றத்தின் விஞ்ஞானத்தை பிரபலப்படுத்தலுக்கான பணிக்குழுவின் தலைவர் கலாநிதி ஜயந்த வட்டெவிடனகே, கொமர்ஷல் வங்கியின் திட்ட ஒருங்கிணைப்பாளர் திரு. மகேஷ் ரத்நாயக்க, கல்வி அமைச்சின் விஞ்ஞான கிளையின் பிரதி பணிப்பாளர் திரு. விபுல குலதுங்க, கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தின் மூலிகை தொழில்நுட்பப் பிரிவின் பணிப்பாளர் பேராசிரியர். ஆர். எம்.தர்மதாச, களுத்துறை வடக்கினை சார்ந்த கே/சுகதா கே. வி. திரு. ஏ. கே. ஏ. என். கொடித்துவக்கு மற்றும் இலங்கை தொழிற்பயிற்சி அதிகாரசபையின் தொழில் வழிகாட்டுதல் மற்றும் மேம்படுத்தல் பணிப்பாளர் திரு. ஈ. ஏ. டி. சேனாரத்ன ஆகியோர் தொடர்ந்து நடைபெற்ற தொழில்நுட்ப அமர்வில் வளவாளர்களாகக் கலந்து கொண்டனர். தொழில்நுட்ப அமர்வின் இறுதியில் 05 பாடசாலைகளை பிரதிநிதித்துவப்படுத்தும் ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் (30) குழு 2023 ஆம் ஆண்டுக்கான தங்கள் செயல் திட்டங்களை முன்வைத்தது.

1.6 எதிர்கால ளுவுநுயுஆ தொழில் சந்தைக்கு திறமையான மாணவர்களை உருவாக்கும் திட்டம்

21 ஆம் நூற்றாண்டின் வேலைவாய்ப்பு சந்தையின் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் திறன்கள் மற்றும் திறமைகளை வளர்ப்பதற்கான திட்டமானது, கல்வி அமைச்சின் விஞ்ஞான கிளை மற்றும் கொமர்ஷல் வங்கியின் கூட்டுறவு சமூகப் பொறுப்பு அறக்கட்டளை ஆகியவை இணைந்து, 2023 ஆகஸ்ட் மாதம் 16 ஆம் திகதியன்று நாரஹேன்பிட்டி டட்லி சேனநாயக்க வித்தியாலயத்தில் தொடங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் அரசு, கல்வி அமைச்சு மற்றும் பிற அமைப்புகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் அதிகாரிகள் பங்கேற்றனர். இந்த நிகழ்வோடு இணைந்ததாய், கொமர்ஷல் வங்கியின் உதவியுடன் டட்லி சேனநாயக்க வித்தியாலயத்தில் உருவாக்கப்பட்ட STEM வகுப்பறை மாணவர்களின் பயன்பாட்டிற்காகத் திறந்து வைக்கப்பட்டது.

நாராயன்பிடியில் உள்ள டட்லி சேனநாயக்க வித்யாலயம், தெமட்டகொடயில் உள்ள அனுராதா மகளிர் வித்தியாலயம் மாளிகாவத்தையில் உள்ள ராஜசிங்க மகா வித்யாலயம், கொழும்பு 14 இல் உள்ள விஜயபா மகா வித்யாலயம், மற்றும் மட்டக்குளியவில் உள்ள ஏவ் மரியா வித்யாலயம், போன்ற தெரிவு செய்யப்பட்ட ஐந்து பாடசாலைகள் இந்த நிகழ்ச்சிச்திட்டத்தில் பங்கு பற்றின. தேர்ந்தெடுக்கப்பட்ட இந்த பாடசாலைகளைச் சேர்ந்த 300 க்கும் மேற்பட்ட மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்றனர். தொடக்க அமர்வைத் தொடர்ந்து, தொழில் பயிற்சி ஆணைக்குழு (VTA), இலங்கை-ஜெர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவனம் (CGTTI) மற்றும் வானிலை ஆய்வுத் திணைக்களம் ஆகியவற்றால் மாணவர்களுக்கு நேரடி அனுபவத்தை வழங்கும் தொழில்நுட்ப அமர்வுகள் நடத்தப்பட்டன. 15 வயது மற்றும் அதற்கு மேற்பட்ட மாணவர்களுக்கு தொழில் பயிற்சி ஆணைக்குழுவானது ஒரு "திறன் உரையையும்" நடத்தியது. இந்த திறன் உரையில் சுமார் 150 மாணவர்கள் பங்கேற்றனர். கொமர்ஷல் வங்கியின் ஒத்துழைப்புடன், டட்லி சேனநாயக்க வித்யாலயா மாணவர்களுக்கு "குறியீடு" மற்றும் "கையடக்க போன் பழுதுபார்த்தல்" குறித்த இரண்டு பயிற்சித் திட்டங்கள் தொடங்கப்பட்டன. மேலும், நகர்ப்புறத்தில் விவசாயம் செய்வதற்கு மாணவர்களினை ஊக்குவிப்பதற்காக, கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தின் ஆராய்ச்சி பேராசிரியர் ஆர். எம். தர்மதாச அவர்களால் hydroponic culture (மண்ணின்றி அதீத வளமான நீரைப் பயன்படுத்துவது) குறித்த ஒரு அமர்வு நடத்தப்பட்டது, அங்கு மாணவர்களுக்கு அத்தியாவசிய எண்ணெய் பிரித்தெடுத்தல் மற்றும் வீட்டுத் தோட்டக்கலைக்குப் பின்னால் உள்ள விஞ்ஞான அறிவும் வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சித் திட்டம் மூன்று ஆண்டுகளுக்கு தொடரும்.

பொதுக் கல்வி முறைமைக்கு STEAM கல்வி அணுகுமுறையை அறிமுகப்படுத்துவதற்கான தேசிய திட்டம்

இலங்கையின் கல்வி முறைக்கு ளுவுநுயுஆ கல்வியை அறிமுகப்படுத்தும் தேசிய நிகழ்ச்சித்திட்டமானது, கொழும்பு 07 இல் உள்ள, றோயல் கல்லூரியின் "நவரங்கஹாலா" வில், கௌரவ கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த அவர்களின் தலைமையில், 2023 மார்ச் 31 ஆம் திகதியன்று நடைபெற்றது. இந்த நிகழ்வை கல்வி அமைச்சு (MoE), தேசிய விஞ்ஞான மன்றம் (NSF) மற்றும் தேசிய கல்வி நிறுவனம் (NIE) ஆகியவை இணைந்து ஏற்பாடு செய்திருந்தன. இந்த நிகழ்வில் சுமார் 1200 மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள், விஞ்ஞானிகள், கல்வியாளர்கள், வெளிநாட்டு பிரதிநிதிகள் மற்றும் கல்வி அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களினை சார்ந்த அதிகாரிகள் கலந்து சிறப்பித்தனர்.

கௌரவ கல்வி அமைச்சர் டாக்டர் சுசில் பிரேமஜயந்த பிரதம விருந்தினராக கலந்து கொண்டார். தனது உரையில், தற்போதைய கல்வி அமைப்பினை மாற்றும் செயல்முறையின் கீழ் இலங்கைக்கு STEAM கல்வி செயல்முறை அறிமுகப்படுத்தப்படுவதாகக் கூறினார். அறிமுக உரையானது கலாநிதி சந்திரா எம்புல்தேனியா அவர்களால் நடத்தப்பட்டது. மேலும் தேர்ந்தெடுக்கப்பட்ட சில பாடசாலை மாணவர்கள். பாடசாலை சமூக விழிப்புணர்வை அதிகரிக்க "STEAM கல்வி" என்ற தலைப்பில் சிறு நாடக விளக்கக்காட்சிகளை நிகழ்த்தினர். "எங்கும் STEAM" "பாடசாலைக்கு STEAM" மற்றும் "எதிர்காலத்திற்கான STEAM" என்ற தலைப்புகளில் மூன்று குழுக்களுக்கு இடையே கலந்துரையாடல்கள் இடம்பெற்றன. இதில் விஞ்ஞானிகள், கல்வியாளர்கள் மற்றும் குழு உறுப்பினர்களாக செயல்படும் தொடர்புடைய நிறுவனங்களின் அதிகாரிகள் கலந்து கொண்டனர். பாடசாலை காலத்தில் தனது ஆராய்ச்சிக்காக பல விருதுகளை வென்ற திரு. லோச்சனா பெர்னாண்டோ, மற்றும் இரண்டு உலகப் புகழ்பெற்ற இளம் வெளிநாட்டவர்களான பொறியாளர் நிபுனி கருணாரத்ன மற்றும் பொறியாளர் கிரேஷன் பெர்னாண்டோ ஆகியோரும் குழுவில் இணைந்து, பங்கேற்பாளர்களுடன் தங்கள் அனுபவத்தைப் பகிர்ந்து கொண்டனர். இந்த நிகழ்ச்சியில் நிகழ்நிலை மூலம் அனைத்து மாகாணங்களினையும்



STEAM
STEAM
EDUCATION






உள்கட்டமைப்பு அபிவிருத்தியினையும் மற்றும் விஞ்ஞானத்தினை பிரபலப்படுத்தும் திட்டங்களையும் ஆதரிப்பதற்கான தேசிய விஞ்ஞான மன்றத்தின் மானியத் திட்டம்

பாடசாலைகளில் ஆய்வுகூடம் மற்றும் விசேட விஞ்ஞான கல்வி வசதிகள் என்பனவற்றினை மேம்படுத்துவதற்கும், விஞ்ஞானத்தை பிரபலப்படுத்துதல் தொடர்பாக பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்களால் நடத்தப்படும் திட்டங்களை சிறப்பாக முன்னெடுத்துச் செல்வதற்கும் விஞ்ஞான கல்வி மற்றும் பிரபலப்படுத்தும் திட்டம் (SEPP) எனும் மானியத் திட்டத்தை தேசிய விஞ்ஞான மன்றம் செயல்படுத்தி வருகிறது.
2023 ஆம் ஆண்டில் ஆதரிக்கப்பட்ட பாடசாலைகள் மற்றும் கள ஆய்வு மையங்கள்:

1. விஞ்ஞான கள ஆய்வு மையம், தெனியாய
2. சாந்த மேரிஸ் கல்லூரியின் வானியல் ஆய்வு மையம், கேகாலை
3. டட்லி சேனநாயக்க வித்யாலயம், கொழும்பு 05

சமூகத்தின் பல்வேறு பிரிவுகளுக்கு விஞ்ஞானத்தை கொண்டு செல்வதற்கு பல்வேறு திட்டங்கள் மற்றும் செயல்பாடுகள் மூலம் விஞ்ஞானமானது பிரபலப்படுத்துதல் செய்யப்பட்டுள்ளது.

2.1 விதுரவ விஞ்ஞான இதழ்

1978 ஆம் ஆண்டு முதல் விஞ்ஞானவியல் செய்திக்குறிப்பாக வெளியிடப்பட்டு வரும் “விதுரவ” விஞ்ஞான இதழ், விஞ்ஞான அரங்கில் உள்ள மிகப் பழமையான விஞ்ஞான இதழ்களில் ஒன்றாகும். இந்த இதழானது,ஒவ்வொரு காலாண்டிலும் வருடத்திற்கு நான்கு இதழ்கள் என்ற ரீதியில் மூன்று மொழிகளிலும் (சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம்) தயாரிக்கப்பட்டு தேசிய அல்லது உலகளாவிய அளவில் முக்கியத்துவம் வாய்ந்த தேர்ந்தெடுக்கப்பட்ட கருப்பொருளினை மையமாக கொண்டு வெளியிடப்படுகின்றன. அதன்படி, 2023 ஆம் ஆண்டில் பின்வரும் தலைப்புகளில் இதழ்கள் வெளியிடப்பட்டன:

1. கணித மாதிரியாக்கம்
2. பாரம்பரிய விவசாயத்திற்குப் பின்னால் உள்ள விஞ்ஞானம்
3. மிகு எளிமையான வாழ்வு







2.2 சமூக-பொருளாதார ரீதியாக வலுவடைந்த ஒரு தேசத்தில், விஞ்ஞான கல்வியறிவை அதிகரிக்க, சமூக அடிப்படையிலான விஞ்ஞான சமூக வலையமைப்பை நாட்டில் நிறுவுதல்

2.2.1 கிராமத்திற்கும் தேசிய விஞ்ஞான மன்றத்திற்கும் இடையிலான உரையாடல்

தேசிய விஞ்ஞானம் மன்றமானது சமூகத்தின் பல்வேறு பிரிவுகளினை உள்ளடக்கி, சமூக அடிப்படையிலான விஞ்ஞான சங்கங்களை நிறுவத் தொடங்கியதுடன் இதன் நோக்கு விஞ்ஞானத்தினை சமூகத்திற்கு எடுத்துச் செல்வதோடு, அவர்களின் சமூக-பொருளாதார நல்வாழ்வை மேம்படுத்துவதற்கான திட்டங்களையும்

முன்னெடுத்தல் ஆகும். அதன்படி, தேசிய விஞ்ஞானம் மன்றம் அதன் முதல் சமூக அடிப்படையிலான விஞ்ஞான சங்கத்தை குருநாகல் மாவட்டத்தில் உள்ள குளியாப்பிட்டிய எனுமிடத்தில் கனத்தொலுவ கிராமத்தில் சர்வோதய சிரமதான இயக்கத்துடன் இணைந்து நிறுவியது.

இது பற்றிய ஒரு முதற்கட்ட உரையாடலானது கனத்தொலுவ கிராம சமூகத்துடனும், சர்வோதய சிரமதான இயக்கத்தின் தலைவர் டாக்டர் வின்யா அரியரத்ன அவர்களுடனும் நடைபெற்றது. இந்தக் கூட்டமானது , 2023, மே மாதம் 25 ஆம் திகதியன்று அன்று கனத்தொலுவ கிராமத்தில், கிராமத்தில் வசிக்கும் 105 குடும்பங்களின் பங்கேற்புடன் நடைபெற்றது.




2.2.2 தேசிய விஞ்ஞான மன்றத்தின் சமூக அடிப்படையிலான முதலாவது விஞ்ஞான சங்கத்தை நிறுவுதல் (CSS)

முதல் சமூக அடிப்படையிலான விஞ்ஞான சங்கமானது 2023, ஜூலை 26, ஆம் திகதியன்று கனதொலுவ கிராமத்தில் நிறுவப்பட்டது. அ) சமூகத்தின் கல்வி மற்றும் விஞ்ஞான கல்வியறிவு ஆ) சமூக-பொருளாதார நிலை மற்றும் இ) கிராமத்தின் உள்கட்டமைப்பு மேம்பாடு ஆகியவற்றினை மேம்படுத்துவதை இலக்காகக் கொண்டு சமூக திட்டங்கள் தொடங்கப்பட்டுள்ளன. மேலும், சுகாதார நிலைமைகள், சுத்தமான குடிநீர் மற்றும் மின்சாரம் ஆகியவற்றுடன் தொடர்புடைய பிரச்சினைகள் கலந்துரையாடப்பட்டன. மேலும், பாடசாலை செல்லும் வயதில் உள்ள பிள்ளைகள் STEAM அடிப்படையிலான செயல்பாடுகளிலும், இளைஞர்கள் சில பொருளாதார நடவடிக்கைகளிலும் ஈடுபட்டனர். இந்த திட்டம் 3 ஆண்டுகளுக்கு தொடரும்.






ஊடகம் மற்றும் நிகழ்வு முகாமைத்துவ பிரிவு (MEMD)

1.0 பக்கச்சார்பற்ற தரவுகளினை அடிப்படையாக கொண்ட விஞ்ஞான அறிக்கையிடல் திட்டம்

பல ஊடக நிறுவனங்கள் பக்கச்சார்பற்ற தரவுகளினை அடிப்படையாக கொண்ட விஞ்ஞான அறிக்கையிடலைப் பெரும்பாலும் புறக்கணித்து வருவது கவனிக்கப்படுகிறது, அத்தகைய செய்திகளினை வெளியிடுவதற்கு அவர்கள் அதிக ஆர்வம் காட்டாததோடு அச்சுக்களில் மற்றும் மின்னணு ஊடகங்களில் குறைந்த இடமே அவற்றிக்கு அவர்கள் வழங்கி வருகின்றனர்.

பக்கச்சார்பற்ற தரவுகளினை அடிப்படையாக கொண்ட விஞ்ஞான அறிக்கையிடல் என்பது அறிவியல் கண்டுபிடிப்புகள்.்.புத்தாக்கங்கள்.்.அல்லது வேறு எந்த விஞ்ஞான வளர்ச்சியுடனும் தொடர்புடைய துல்லியமான உண்மைகள் மற்றும் மிகச்சரியான தகவல்களை ஒரு செய்திக் கட்டுரை, சிறப்புக் கட்டுரை, ஆவணப்படம் அல்லது வானொலி நிகழ்ச்சியாகப் அறிக்கை செய்தலாகும். விஞ்ஞான ரீதியான அறிக்கையிடல் தனிநபர்களின் விஞ்ஞான கல்வியறிவை மேம்படுத்துகிறது, இதன் மூலம் விஞ்ஞானம் பற்றிய பொது புரிதலை அதிகரிக்கிறது மற்றும் அவர்களின் அன்றாட நடவடிக்கைகளில் தகவலறிந்த முடிவுகளை எடுக்க உதவுகிறது.

இதனால், பின்வரும் நோக்குகளினை நிறைவேற்றம் செய்வதன் ஊடாகஇ ஊடகங்கள் மூலம் விஞ்ஞானமானது தவறாக அறிக்கையிடப்படுதலை குறைப்பதற்கான ஒரு திட்டத்தை தொடங்க தேசிய விஞ்ஞான மன்றம் முன்முயற்சி எடுத்தது.

- விஞ்ஞாவியல் பத்திரிகையாளர்களுக்குப் பயிற்சி அளித்து, பொது மக்கள், கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் பிற அரசு அதிகாரிகளிடம் விஞ்ஞானத்தினை எடுத்துச் செல்லும் திறனை வளர்த்தல்.
- பக்கச்சார்பற்ற தரவுகளினை அடிப்படையாக கொண்ட விஞ்ஞான அறிக்கையிடல் தொடர்பில் ஊடகப் பணியாளர்கள் மற்றும் ஊடக நிறுவனங்களின் நிர்வாகத்தின் திறன்கள் மற்றும் அணுகுமுறைகளை வலுப்படுத்துதல்.
- விஞ்ஞான வளர்ச்சி குறித்த சரியான உண்மைகள் மற்றும் தகவல்களைப் பெறுவதை உறுதி செய்தல்.

இந்தத் திட்டம் இரண்டு முக்கிய வகைகளைக் கொண்டுள்ளது அதாவது “விஞ்ஞானவியல் அறிவுத் தளம்” (பங்குதாரினது விஞ்ஞான அமைப்புகளினை “தொடர்பு கொள்ள கூடிய புள்ளிகளை” உள்ளடக்கியது - ஊடகங்கள் அவர்களை நேரடியாகத் தொடர்பு கொள்ளும், மற்றும் “சுயாதீன விஞ்ஞான குழு” - விஞ்ஞான ரீதியிலான பிரச்சினை தொடர்பான செய்திகளை மேலும் பகுப்பாய்வு செய்வதற்கு) மற்றும் “ஊடகத் தளம்” (“விஞ்ஞான ரீதியிலான நிருபர்களினை” உள்ளடக்கியது).

2023 ஆம் ஆண்டில் ஊடக மற்றும் நிகழ்வு முகாமைத்துவ பிரிவானது, பங்குதாரினது விஞ்ஞான நிறுவனங்களினை சார்ந்த, விஞ்ஞானிகள் மற்றும் விடய துறையில் நிபுணத்துவம் கொண்ட ஓய்வு பெற்றவர்கள் ஆகியவர்களிடமிருந்து “தொடர்பு கொள்ள கூடிய புள்ளிகளை” அடையாளம் கண்டது. திட்டத்தின் நோக்கங்கள், வழிமுறை மற்றும் முன்னோக்கிச் செல்லும் வழி குறித்து அவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த டிசம்பர் 2023 இல் ஒரு “நிகழ்ச்சி அறிமுகப்படுத்துகை அமர்வு” நடத்தப்பட்டது. அடுத்ததாக “சுயாதீன அறிவியல் குழு” க்கான “நிகழ்ச்சி அறிமுகப்படுத்துகை அமர்வு” 2024 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் ஏற்பாடு செய்யப்படும்.

2.0. 2023 மார்ச் 31 அன்று தேசிய விஞ்ஞான மன்றம் மற்றும் கல்வி அமைச்சு ஆகியவை இணைந்து ஒழுங்கமைப்பு செய்த STEAM வெளியீட்டு விழாவை ஒழுங்கமைப்பு செய்வதற்கான பங்களிப்பு

கல்வி அமைச்சு மற்றும் தேசிய கல்வி நிறுவகம் ஆகியவற்றுடன் இணைந்து தேசிய விஞ்ஞான மன்றமானது, STEAM வெளியீட்டு விழாவினை, கொழும்பு 07, ரோயல் கல்லூரியில் உள்ள “நவரங்கஹல” மண்டபத்தில் மார்ச் 31, 2023 அன்று கௌரவ கல்வி அமைச்சரின் தலைமைத்துவத்தின் கீழ் ஒழுங்கமைப்பு செய்தது.

ஊடக மற்றும் நிகழ்வு முகாமைத்துவ பிரிவானது, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஊடாக “இலங்கையின் பொதுக் கல்வியில் STEAM அணுகுமுறையை அறிமுகப்படுத்துதல்” என்ற தலைப்பில் ஒரு “சுபாரதி நிகழ்ச்சித்திட்டத்தினை”, 29 மார்ச் 2023 புதன்கிழமையன்று (காலை 7.00 மணி முதல் காலை 8.00 மணி வரை) இலவசமாக ஏற்பாடு செய்தது. தேசிய விஞ்ஞான மன்றத்தின் பணிப்பாளர் நாயகத்தினை பிரதிநிதித்துவப்படுத்தியவரும் ஊடகங்களுக்கான பணிக்குழுவின் தலைவருமான டாக்டர்

ஜெயந்த வட்டவிதானகே, கல்வி அமைச்சின், தொழில்நுட்ப கல்வியின் பணிப்பாளர் கலாநிதி கித்சிறி முனகம மற்றும் தேசிய கல்வி நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி சுனில் ஜயந்த நவரத்ன ஆகியோர் இந்த நிகழ்ச்சியில் வளக் குழுவாக பங்கேற்றனர்.

இது தவிர, ஊடக மற்றும் நிகழ்வு முகாமைத்துவ பிரிவானது, தேசிய விஞ்ஞான மன்றத்தின் தரவுத்தளங்களை பற்றிய விளக்க காட்சிகள் உட்பட, தேசிய விஞ்ஞான மன்றத்தின் செயல்பாடுகளை சித்தரிக்கும் ஒரு சாவடியினை வளாகத்தில் ஏற்பாடு செய்தது.

3.0 ஊக்கமளிக்கும் STEAM கல்வி சுற்றுலா (ISEE) – பாடசாலை மட்டத்திலான பாடத்திட்டத்திற்கு அப்பாற்பட்டதாய் வடிவமைக்கப்பட்ட திட்டம் 2023 அக்டோபர் 12 14, - வரையில்

தேசிய விஞ்ஞான மன்றம்இ கல்வி அமைச்சு (MoE) இதேசிய கல்வி நிறுவனம் (NIE), மற்றும் மஹரகம தேசிய கல்வியியல் கல்லூரி (NCoE) ஆகியவை இணைந்து "ஊக்கமளிக்கும் STEAM கல்வி சுற்றுலா (ISEE) "பாடசாலை மட்டத்திலான பாடத்திட்டத்திற்கு அப்பாற்பட்டதாய் வடிவமைக்கப்பட்ட திட்டம்" என்ற நிகழ்ச்சித்திட்டத்தினை 2023,அக்டோபர் 12-14, அன்று கௌரவ கல்வி அமைச்சரின் கருதுகோளின் அடிப்படையில் வெற்றிகரமாக ஏற்பாடு செய்தன. STEAM பாடங்களின் பிரிவுகளைப் பின்பற்ற மாணவர்களை ஊக்குவித்தல் மற்றும் ஆர்வத்தை உருவாக்குதல் மற்றும் STEAM பாடப்பிரிவுகளின் அடிப்படையில் நிலவும் உயர்நிலை வேலை சந்தை குறித்து மாணவர்களிடையே விழிப் புணர்வை ஏற்படுத்துதல் ஆகிய நோக்கங்களுடன் இந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டது.

கௌரவ கல்வி அமைச்சரின் வழிகாட்டுதலுடன், திட்டத்தை ஒழுங்கமைப்பதிலும், திட்டத்திற்கான நிதியை அனுசரணைகள் மூலம் பெற்றுக்கொள்வதிலும் தேசிய விஞ்ஞான மன்றம் முக்கிய பங்கு வகித்தது. முழு திட்டத்தின் வடிவமைப்பும் தேசிய விஞ்ஞான மன்றத்தின் ஊடக மற்றும் நிகழ்வு முகாமைத்துவ பிரிவினால் தயாரிக்கப்பட்டது, ஒவ்வொரு மாவட்டத்தையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகள் இந்த நிகழ்ச்சித்திட்டத்திற்கு அழைக்கப்பட்டன (ஒவ்வொரு பாடசாலையிலிருந்தும் 20 மாணவர்கள் மற்றும் 01 ஆசிரியர்). பாடசாலை பிள்ளைகள் மற்றும் ஆசிரியர்கள் ஆகியோரினை உள்ளடக்கிய முழு குழுவும் இரண்டு குழுக்களாகப் பிரிக்கப்பட்டன: குழு யு (13 பாடசாலைகள்) மற்றும் குழு B (12 பாடசாலைகள்). 12 ஆம் வகுப்பு படிக்கும் நானூற்று தொண்ணூற்று ஐந்து (495) பாடசாலை பிள்ளைகள் மற்றும் 25 பாடசாலைகளினை (ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் ஒரு பாடசாலை) பிரதிநிதித்துவப்படுத்தும் 52 ஆசிரியர்கள் இந்த நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

ஊக்கமளிக்கும் STEAM கல்வி சுற்றுலா திட்டத்தின் தொடக்க விழா கௌரவ கல்வி அமைச்சரின் தலைமையில் மஹரகம தேசிய கல்வியியல் கல்லூரி கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. ஐந்து அதிநவீன விஞ்ஞானவியல் நிறுவனங்களான - SLINTEC (இலங்கை நெநோ தொழில்நுட்ப நிறுவனம்), SLIBTEC (ஸ்ரீலங்கா இன்ஸ்டிடியூட் ஒப் பயோ டெக்னோலஜி), NSBM எனப்படும் பசுமை பல்கலைக்கழகம், கொழும்பு துறைமுக நகரம் மற்றும் கொழும்பு பல்கலைக்கழக மருத்துவ பீடம் ஆகியவை இந்த விழாவுக்கு வருகை தந்திருந்தன. ஒவ்வொரு நிறுவனமும் தாங்களாகவே ஒரு குறுகிய பாடத்திட்டத்தை ஏற்பாடு செய்தன, மேலும் அவை மாணவர்களுக்கு புதிய தகவல்களினை வழங்குவனவாகவும் மற்றும் சுவாரஸ்யமாக இருந்தன, ஆதலினால், மாணவர்கள் STEAM பயன்பாடுகளில் புதிய அனுபவத்தைப் பெற முடிந்தது. கொழும்பு பல்கலைக்கழகத்தின் பௌதீகவியல் திணைக்களமானது மாணவர்களுக்காக தேசிய கல்வி நிறுவக விளையாட்டு மைதானத்தில் இரவு வான் கண்காணிப்பு நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தது. நிறைவு விழாவானது 14 ஆம் திகதி மதியம் மருத்துவ பீடத்தின் புதிய கட்டிடத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

வெற்றிகரமான மற்றும் பயனுள்ள வகையில் இந்த நிகழ்ச்சித்திட்டமானது நடைபெறுவதற்கு கிட்டத்தட்ட 13 தனியார் மற்றும் அரசு நிறுவனங்கள் நிதி, பொருட்கள் மற்றும் சந்தர்ப்பத்திற்கு ஏற்ப போக்குவரத்து வசதிகளை வழங்குவதன் மூலம் தங்கள் அதிகபட்ச ஆதரவை வழங்கினர்.

4.0 வாசிப்புப் பகுதிக்கான பூஜ்ஜிய பாதீட்டு திட்டம்

தேசிய விஞ்ஞான மன்றத்தில் எஞ்சியுள்ள 14 தேசிய விஞ்ஞான மன்ற வெளியீடுகளினை தொடர்புடைய அதன் இறுதி பயனர்களுக்கு பின்வரும் நோக்கங்களின் அடிப்படையில் பூஜ்ஜிய பாதீட்டு திட்டமாக விநியோகிப்பதற்கு முகாமைத்துவ சபை தனது அனுமதியினை வழங்கியது.

- புத்தகங்களினை வாசிப்பதன் மூலம் மக்கள் தங்கள் நேரத்தை மிகவும் திறம்பட பயன்படுத்த வாய்ப்புகளை உருவாக்குதல்.

- அச்சிடப்பட்ட பொருட்கள் மூலம் விஞ்ஞானத்தினை பிரபலப்படுத்துவதற்கு பங்களித்தல்.
- தேசிய விஞ்ஞான மன்றத்தில் உள்ள வெளியீடுகளின் அதிகப்படியான இருப்பை அகற்றுதல்.

இரண்டு துண்டுப்பிரசுரங்கள் வடிவமைக்கப்பட்டு தனியார் மருத்துவமனைகள் (எண்ணிக்கையில் 15) மற்றும் விஞ்ஞானவியல் பீடங்களுக்கு (எண்ணிக்கையில் 51) அனுப்பப்பட்டன. மொத்தம் 2599 பிரதிகளில் 1461 பிரதிகள் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள் (விஞ்ஞான பீடங்கள்), தனியார் மருத்துவமனைகள், பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்களிடையே விநியோகிக்கப்பட்டன. 2023 ஆம் ஆண்டில், 1500 பிரதிகளை (97%) விநியோகிப்பதே இதன் இலக்காகும்.

5.0 சாதாரணமான கட்டுரைகளினை தயாரித்தல் பற்றிய பட்டறை

தேசிய விஞ்ஞான மன்றமானது, அது நிதியளிக்கும் ஆராய்ச்சித் திட்டங்களிலிருந்து பல இறுதி அறிக்கைகளைப் பெறுகிறது, மேலும் விஞ்ஞான ரீதியிலான சமூகத்தால் தயாரிக்கப்பட்ட இந்த ஆராய்ச்சிக் கட்டுரைகளின் முடிவுகள் பொது மக்களால் புரிந்து கொள்ள கடினமாக இருக்கும் விஞ்ஞான ரீதியிலான சொற்களைக் கொண்டுள்ளன. எனவே, ஆராய்ச்சியாளர்கள்/விஞ்ஞானிகள் ஆகியோருக்கு தங்கள் ஆராய்ச்சி முடிவுகளைப் பற்றி செய்தித்தாள்களுக்கு கட்டுரைகளைத் தயாரிப்பதிலும், வானொலி மற்றும்/அல்லது தொலைக்காட்சி மூலம் பொதுமக்களிடம் உரையாடுவதில் நேரமும் ஆர்வமும் இல்லாததால், குறைந்தபட்சம் தேசிய விஞ்ஞான மன்றத்தின் விஞ்ஞான ஊழியர்களாவது "விஞ்ஞான கட்டுரைகள்" தயாரிப்பது இந்த சூழ்நிலையில் முக்கியமானதாகும். இது விஞ்ஞான கட்டுரைகளை ஒரு சாதாரண நபரால் எளிதில் புரிந்துகொள்ளக்கூடிய கட்டுரைகளாக மாற்றும் ஒரு செயலாகும்.

2023 நவம்பர் 2 மற்றும் 21 ஆகிய திகதிகளில் தேசிய விஞ்ஞான மன்றத்தில், HARTI மற்றும் கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம் ஆகியவற்றின் விஞ்ஞான ஊழியர்களின் பங்கேற்புடன் ஊடக மற்றும் நிகழ்வு முகாமைத்துவ பிரிவால் இரண்டு நாள் பட்டறை ஏற்பாடு செய்யப்பட்டது. இதில் வள நபர்களாகப் பணியாற்றிய டாக்டர் ஜயந்த வட்டவிதானகே மற்றும் திரு. துசிதா மலலசேகர ஆகியோர், சாதாரணக் கட்டுரைகளைத் தயாரிப்பது குறித்த தங்கள் அறிவைப் பகிர்ந்து கொண்டனர். பங்கேற்பாளர்களுக்கு வழங்கப்பட்ட மாதிரி "சுருக்கத்தினது" அடிப்படையில், அவர்கள் சாதாரணக் கட்டுரைகளைத் தயாரித்து, பட்டறையின் இரண்டாவது நாளில் அவற்றை முன்னிலைப்படுத்தினர்.

6.0 பாடசாலை உட்பட பொது மக்களிடையே தேசிய விஞ்ஞான மன்றத்தின் செயல்பாடுகள் மற்றும் "விஞ்ஞானம் A B C" பற்றிய விழிப்புணர்வு.

ஊடக மற்றும் நிகழ்வு முகாமைத்துவ பிரிவால் தயாரிக்கப்பட்ட "விஞ்ஞானம் A B C" செய்திகளையும் தேசிய விஞ்ஞான மன்றம் தயாரித்த "மிஹிமண்டல" கட்புல காணொளி நிகழ்ச்சிகளையும் பயன்படுத்தி தேசிய விஞ்ஞான மன்றத்தின் செயல்பாடுகளினை விளம்பரப்படுத்தவும், மக்களிடையே விஞ்ஞானத்தினை பிரபலப்படுத்தவும் ஊடக மற்றும் நிகழ்வு முகாமைத்துவ பிரிவானது பின்வரும் கண்காட்சிகளில் தேசிய விஞ்ஞான மன்றத்தின் சாவடிகளினை ஒழுங்கமைப்பு செய்தது.

அட்டவணை 10: கண்காட்சியில் ஒழுங்கமைப்பு செய்யப்பட்ட தேசிய விஞ்ஞான மன்றத்தின் சாவடிகள்

இலக்கம்	கண்காட்சி	திகதிகள்	இடம்	பங்கு பெறுனர்களின் எண்ணிக்கை
01	விஞ்ஞான கண்காட்சி	27 மற்றும் 28 ஜூன் 2023	நுகேகொடை புனித ஜான்ஸ் கல்லூரி	அழைக்கப்பட்டபாடசாலைகளிலிருந்து 350 மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள்
02	தேசிய விஞ்ஞான கண்காட்சி	08-10 நவம்பர் 2023	தேசிய அருங்காட்சியகம	600 பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள்
03	"மஹாபொல" கல்வி கண்காட்சி மற்றும் வர்த்தக சந்கை	13-17 டிசம்பர் 2023	ஜா-எல	1000 பொது மக்கள்
04	"Sathutu Pavula" கல்வி கண்காட்சி மற்றும் வர்த்தக சந்கை	25-31 டிசம்பர் 2023	கிரிந்திவெல மகா வித்தியாலயம்	2000 பொது மக்கள

விஞ்ஞான தலைப்புகள் A B C செய்திகள்:

- வானவில் எவ்வாறு உருவாகிறது.
- காலநிலைக்கும் வானிலைக்கும் இடையிலான வேறுபாடு.
- வானம் ஏன் நீலமாக இருக்கிறது?
- சூரிய ஒளியில் நிறுத்தப்பட்ட வாகனத்தின் உள்ளே வெப்பமாக இருப்பதற்கான காரணங்கள்.
- ஒரு விமானத்தின் புறப்படும் பொறிமுறை.

மூலதன சொத்துக்களை கையகப்படுத்துதல், பராமரிப்பு மற்றும் அமைப்பு நிர்வாகம் மனிதவள அபிவிருத்தி மனித வள அபிவிருத்தி

திறமை மிகு முகாமைத்துவம், என்பது திறன் மிக்க ஊழியர்களை ஈர்ப்பது மற்றும் தக்கவைத்துக்கொள்வது, அவர்களின் திறன்களை வளர்ப்பது மற்றும் அவர்களின் செயல்திறனை மேம்படுத்த தொடர்ந்து ஊக்குவிப்பது ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு நிலையான செயல்முறையாகும். திறமை மிகு முகாமைத்துவத்தின் முதன்மை நோக்கம் எனப்படுவது, நீண்ட காலத்திற்கு நிறுவனத்தில் நீடித்து இருக்கக்கூடிய ஒரு ஊக்கம் மிகு பணியாளர்களை உருவாக்குவதாகும். திறமை மிகு முகாமைத்துவமானது இயற்கையாகவே மனித வளங்களின் பல பொறுப்புகளை உள்ளடக்கியது. இது தொடர்பில், பின்வரும் செயல்பாடுகள் மூலம் ஊழியர்களிடமிருந்து சிறந்த பெறுபேறுகளினை பெற தேசிய விஞ்ஞான மன்றமானது ஒரு திறமை மிகு முகாமைத்துவ உத்தியைக் கொண்டுள்ளது: பணியாளர்களுக்கு பயிற்சிகளினை வழங்குதல். (உள்நாட்டுப் பயிற்சி/பிற நிறுவனங்களின் அறிவுப் பகிர்வு நடவடிக்கைகளில் பங்கு பெறல்/போன்றவை), திறமை மதிப்பாய்வு மற்றும் புது ஆளணியினரை உள்வாங்கல் செயல்முறைகளை தரப்படுத்துதல், செயல்திறனைக் கண்காணித்தல் மற்றும் அளவிடுதல். (அதாவது, செயல்திறன் மதிப்பீடு), கருத்து மற்றும் மதிப்புரைகளை வழங்குதல், சிறந்த செயல்திறன் கொண்டவர்களை அங்கீகரித்தல் மற்றும் வெகுமதி அளித்தல், பணியாளர் ஊக்கத்தை அதிகரித்தல், தொழில் அபிவிருத்தி வழிகளினை எடுத்துக்கூறல். போன்ற செயல்பாடுகளை நிறைவேற்ற 2022 இல் நடத்தப்பட்ட பயிற்சித் திட்டங்கள் *இணைப்பு 07* இல் விரிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப உள்கட்டமைப்பைப் பராமரித்தல்

நிறுவனத்தின் தகவல் தொடர்பாடல தொழில்நுட்ப உள்கட்டமைப்பு வசதிகளைப் பராமரிப்பதற்கும் தேசிய விஞ்ஞான மன்றத்தின் ஊழியர்களுக்கு இறுதிப் பயனர் தகவல் தொழில்நுட்பம் தொடர்பில் எழும் சிக்கல்களுக்கு ஆதரவை வழங்குவதற்கும் தகவல் தொழில்நுட்ப பிரிவு பொறுப்பாகும்.

அச்சிடும் செயன்முறையின் ஊடாக ஆதரவு வழங்கப்படல்

கிடைக்கக்கூடிய வளங்களைக் கொண்டு விஞ்ஞான பிரிவுகளின் அச்சிடும் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் அச்சிடும் பிரிவு தொடர்ந்து அச்சிடும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது. அதன்படி, பங்குதாரர்களின் கவனத்தினை அச்சிடப்பட்ட புதிய விஞ்ஞான தகவல்கள் தொடர்பில் ஈர்க்கும் வகையில் தரமான வெளியீடுகளுடன் பின்வரும் பணிகள் நிறைவு செய்யப்பட்டன. மதிப்பாய்வு செய்யப்பட்ட காலகட்டத்தில் ஒன்பது (09) வெவ்வேறு வகையான வெளியீடுகள் அச்சிடப்பட்டன. விவரங்கள் அட்டவணை 11 இல் கொடுக்கப்பட்டுள்ளன.

அட்டவணை 11: அச்சிடப்பட்ட வெவ்வேறு வகையான வெளியீடுகள் பற்றிய விவரங்கள்

	வெளியீடுகள்	எண்ணிக்கை
விதுரவ		
1.	விதுரவ -ஜனவரி – மார்ச்2020 (சிங்களம்) மீள்பதிப்பு	1200
2.	விதுரவ - ஜனவரி – மார்ச் 2020 (சிங்களம்) மீள்பதிப்பு	300
3.	விதுரவ - ஜனவரி – மார்ச் 2020 (தமிழ்)	600
4.	விதுரவ ஏப்ரல் - ஜூலை 2021 (சிங்களம்)	2000
5.	விதுரவ - ஜூலை - செப்டம்பர் 2021 (சிங்களம்)	2000
6.	விதுரவ - ஜூலை - செப்டம்பர் 2022 (சிங்களம்)	2000
கைந்நூல்கள்		
7.	புள்ளிவிபரவியல் கைந்நூல்கள் 2020	250
ஏனையவை		
8.	வருடாந்த அறிக்கை 2022	02
9.	தேசிய விஞ்ஞான மன்ற கடிதத் தலைப்புக்கள்	1550

மேலும், 2023 ஆம் ஆண்டில் இருபத்தொன்பது (29) பிற அச்சு வேலைகள் மற்றும் பதினேழு (17) பிணைப்பு வேலைகளை மேற்கொள்வதன் மூலம் மன்றத்தின் பிற அனைத்து அச்சிடும் தேவைகளையும் தேசிய விஞ்ஞான மன்றத்தின் அச்சுப் பிரிவு பூர்த்தி செய்தது. மேலும், தற்போது பிரிவில் கிடைக்கக்கூடிய பௌதீக மற்றும் மனித வளங்களை திறம்பட பயன்படுத்தவும், அதற்கேற்ப இந்த வளங்களிலிருந்து நிறுவனத்திற்கு வருமானத்தை ஈட்டுவதற்கான வழிகளை தேடவும் முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. அந்த நோக்கத்துடன், இது தொடர்பாக அரசு அச்சக திணைக்களத்துடன் அவர்களின் கருத்துகளையும் பரிந்துரைகளையும் பெறுவதற்காக அத்திணைக்கள அதிகாரிகளுடன் பல கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டன .

கணக்காய்வு குழு அறிக்கை

2023 பெப்ரவரி மாதம் 21 ஆம் திகதியன்று நடைபெற்ற கூட்டத்தில், தேசிய விஞ்ஞான மன்றத்தின் முகாமைத்துவ (BoM/NSF) குழுவானது, கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவில் (AMC) பணியாற்றுவதற்காக, திறைசேரி பிரதிநிதி உட்பட மூன்று புதிய நிறைவேற்று அல்லாத சபை உறுப்பினர்களை நியமித்தது. அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களுக்கான நிறுவன ஆளுகையில் கூறப்பட்டுள்ள வழிகாட்டுதல்கள் மூலம் வழங்கப்பட்ட உத்தரவுகளின்படி, புதிய முகாமைத்துவ சபை (BoM) நியமிக்கப்பட்டுள்ளது. 2023 மார்ச் 1 முதல் திருமதி ஏ.வை. ஹர்ஷனி அனுருத்தாவின் இடத்தில் திருமதி எம். கே. எஸ். ஜயசேனா பரிந்துரைக்கப்பட்டார். தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் பிரதிநிதி மற்றும் அமைச்சின் தலைமை உள் கணக்காய்வாளர் ஆகியோர் குழுவில் பார்வையாளர்களாக பணியாற்ற அழைக்கப்படுவர்.

புதிய சபை நியமிக்கப்பட்டதனைத் தொடர்ந்து, பேராசிரியர் சம்பத் புஞ்சிஹேவா மற்றும் திரு. டென்சில் இந்திரஜித் பெரேரா ஆகியோரை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவிற்கு (AMC) புதிய உறுப்பினர்களாக முகாமைத்துவ சபை நியமித்தது.

அதன்படி, பின்வரும் உறுப்பினர்கள் இந்த ஆண்டில் பணியாற்றினர்.

- திருவதி எம். கே. எஸ். ஜயசேன (முகாமைத்துவ சபை மற்றும் தேசிய விஞ்ஞான மன்றத்தின் தலைவர் மற்றும் திறைசேரி பிரதிநிதி)
- பேராசிரியர் சம்பத் புஞ்சிஹேவா (முகாமைத்துவ சபை மற்றும் தேசிய விஞ்ஞான மன்றத்தின் உறுப்பினர்)
- திரு. டென்சில் இந்திரஜித் பெரேரா (முகாமைத்துவ சபை மற்றும் தேசிய விஞ்ஞான மன்றத்தின் உறுப்பினர்)
- திருமதி எச். டி. அனுருத்திகா (தலைமை உள் கணக்காய்வாளர் - கல்வி அமைச்சு, திறன் மேம்பாடு, தொழிற்கல்வி, ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்பு பிரிவு)
- திருமதி பி. ஏ. டி. ஆர். கே. விக்ரமதிலகா (தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் பிரதிநிதி)

இந்தக் குழு தனது முதல் கூட்டத்தை 2023 மார்ச் 17, ஆம் திகதியன்று நடத்தியது, பின்னர் 2023 ஆகஸ்ட் 11 மற்றும் டிசம்பர் 27, ஆகிய திகதிகளில் அடுத்த கூட்டங்கள் கூட்டப்பட்டன. கூடியது. தேசிய விஞ்ஞான மன்றத்தின் முகாமைத்துவ சபையினது திறைசேரி பிரதிநிதியான திருவதி, எம். கே. எஸ். ஜயசேனா கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ கூட்டங்களுக்கான தலைவராகப் பணியாற்றினார். கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ கூட்டத்தின் முடிவில் கூட்ட குறிப்புக்களுடன் குழுவானது தனது பரிந்துரைகளை உடனடியாக முகாமைத்துவ சபைக்கு அறிக்கை செய்யும். நிறுவகம் சுமூகமாக செயல்படுவதற்கு தேவையான பொருத்தமான நடவடிக்கைகளினை பிரிவின் தலைவர்கள் எடுப்பதற்காக தேசிய விஞ்ஞான மன்றத்தின் அக கணக்காய்வாளர் குழுவின் பரிந்துரைகளை பிரிவின் தலைவர்களுக்கு வழங்குவார். எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்த முன்னேற்றங்கள் தொடர்பான அறிக்கைகள் அடுத்த கூட்டத்தில் தெரிவிக்கப்படும்.

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ கூட்டத்தின் பரிந்துரைகள் என்ற வகையில் பின்வருவனவற்றிற்கு குழு சிறப்பு கவனம் செலுத்தியது.

- தேசிய கணக்காய்வு அலுவலக வினவல்கள் நிறைவடையும் வரை அவற்றினை பின்தொடர்தல் மற்றும் மீண்டும் மீண்டும் ஒரே வகையினை சார்ந்த வினவல்கள் வருவதைத் தவிர்த்தல்.
- ஆண்டு முழுவதும் தேசிய விஞ்ஞான மன்றத்தின் நியதிச் சட்ட தேவைகள் குறித்து பின்தொடர் நடவடிக்கைகளினை முன்னெடுத்தல்.
- தேசிய விஞ்ஞான மன்றத்தின் செயல்பாடுகளை மதிப்பாய்வு செய்தல் மற்றும் அவற்றினை திருத்தி அமைத்தல் மற்றும் அவற்றினை தடுப்பதற்கான நடவடிக்கைகள் குறித்த பரிந்துரைகளை வழங்குதல்.
- அக ரீதியில் கணக்காய்வு அவதானிப்புகள் மற்றும் வெளிப்புற கணக்காய்வு அறிக்கைகள், முகாமைத்துவ கடிதங்கள் ஆகியவை குறித்த பரிந்துரைகளை வழங்கலும் அவை தொடர்பில் தீர்வு நடவடிக்கை எடுக்க சபைக்கு உதவுதல்.
- வருடாந்திர கணக்காய்வு திட்டத்தை அங்கீகரித்து, அக கணக்காய்வு நடவடிக்கைகளுக்கான மதிப்பாய்வு மற்றும் வழிகாட்டுதல்களை வழங்குதல்.

எதிர்கால கருத்திட்ட அறிக்கை

நிகழ்ச்சித்திட்டம்	தீர்வுகள்	
	குறுந்தவணை	இடைக்கால தவணை
1.தேசிய முன்னுரிமைகளை நிவர்த்தி செய்யும் வகையில் ஆராய்ச்சி நிதி, மானிய நிர்வாகம், முகாமைத்துவம் மற்றும் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப திறன் மேம்பாட்டிற்கான முதன்மையான அமைப்பாக இருத்தல்.	தேசிய ஆராய்ச்சித் தேவைகளுடன் ஒத்துப்போகும் ஆராய்ச்சி, மேம்பாடு மற்றும் புத்தாக்க முயற்சிகளை மேம்படுத்துதல், ஊக்குவித்தல் மற்றும் ஆதரித்தல், வலுவான ஆராய்ச்சி சுற்றுச்சூழல் அமைப்பைத் தக்கவைக்க அடிமட்டத்திலிருந்தே ஆராய்ச்சி யோசனைகளை ஊக்குவித்தல். ஆராய்ச்சி, மேம்பாடு மற்றும் புத்தாக்க முயற்சிகளில் திறம்பட ஈடுபடுவதற்கு ஊக்கமளிக்கவும் ஊக்குவிக்கவும் ஆராய்ச்சியாளர்கள் மற்றும் மேற்பார்வையாளர்களின் ஆராய்ச்சி சிறப்பையும் திறமையையும் அங்கீகரித்தல்.	தேசிய ரீதியில் உயர் முன்னுரிமை பெற்ற விடயங்கள், சிக்கலான சவால்கள் மற்றும் மதிப்பு கூட்டல், பயன்பாடு மற்றும் இயற்கை வளங்களைப் பாதுகாத்தல் ஆகியவை தொடர்பிலான சிக்கல்களினை நிவர்த்தி செய்வதற்காக, பல்துறை.்.வேறுபட்ட துறை சார்ந்த அணுகுமுறை ஆராய்ச்சித் திட்டங்களின் நோக்கம் சார்ந்த கூட்டு ஆராய்ச்சியைத் தொடங்குதல், எளிதாக்குதல் மற்றும் ஆதரித்தல். உள்நாட்டு தொழில்களின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியை ஊக்குவித்தல் மற்றும் ஆதரித்தல் பொது-தனியார் கூட்டாண்மை மூலம் உள்நாட்டு நிறுவனங்களை வலுப்படுத்துதல். உயர்மட்ட ஆராய்ச்சித் திறமையாளர்கள் உள்ளடங்கிய குழாமை உருவாக்க, ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி திறன்கள் படிப்படியாக விருத்தி செய்யப்படுவதற்கு வசதி செய்தல்.
2. தொழில்நுட்ப மேம்பாடு, தொழில்நுட்ப பரிமாற்றம், ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு வணிகமயமாக்கல், அறிவுசார் சொத்துரிமை பாதுகாப்பு மற்றும் வேறொருவர் அதனை உரிமையாக்கி கொள்வதை தடுத்தல் போன்ற செயற்பாடுகள் தொடர்பில் வசதி செய்து கொடுப்பதில் முன்னணியில் நிற்றல்.	நிலையான வளர்ச்சியை நோக்கி, நிறுவனமயமாக்கப்பட்ட வழிமுறைகளுடன் சாத்தியமான தொழில்நுட்பங்கள், தொடக்க நிறுவனங்கள், உரிமம் மற்றும் தொழில்நுட்ப பரிமாற்றங்கள் மற்றும் பரவல்களின் வளர்ச்சியை எளிதாக்குதல். இலங்கையில் விஞ்ஞான,தொழில்நுட்ப தகவல்களினை பயன்படுத்துவதன் மூலம் பொருளாதார மற்றும் சமூக வளர்ச்சிக்கு சிறந்த பங்களிப்பைச் செய்த விஞ்ஞானிகள், பொறியாளர்கள், தொழில்நுட்ப வல்லுநர்கள் மற்றும் தொழில்முனைவோரின் தேசிய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப சாதனைகளை அங்கீகரித்தல்.	அறிவுசார் சொத்துரிமையின் (IP) பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவம் மற்றும் வணிக சுரண்டலுக்கான ஆதரவு சேவையை வலுப்படுத்துதல்.
3.நவீன தகவல் தொடர்பாடல் தொழிநுட்ப தளங்களைப் பயன்படுத்தி, விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் புத்தாக்கம் பற்றிய தகவல்களைச் சேகரித்தல், பகுப்பாய்வு செய்தல், விளக்குதல் மற்றும் பரப்புதல் ஆகியவற்றில் சிறந்து விளங்கும் மையமாக இருத்தல்	பல்கலைக்கழகங்கள், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மற்றும் உயர்கல்வி நிறுவனங்களுக்கிடையே பல்வேறு துறைகளில் உயர்தர, சக மதிப்பாய்வு செய்யப்பட்ட சஞ்சிகைகள், தரவுத்தளங்கள், கட்டுரைகள் மற்றும் மின் புத்தகங்களை அணுகுவதற்கான தேசிய டிஜிட்டல் நூலக கூட்டமைப்பை நிறுவுதல். பரந்த அளவில் பலருக்கு சென்றடையும் வகையில் விஞ்ஞான,தொழில்நுட்ப பற்றும் புத்தாக்கம் பற்றிய தகவல்களையும் பரிந்துரைகளையும் தயாரித்து வெளியிடுதல். தேசிய முன்னுரிமையின் அடிப்படையில் சமூக-பொருளாதார பிரச்சினையை நிவர்த்தி செய்வதற்காக ஆதார அடிப்படையிலான கொள்கை பரிந்துரைகளை வழங்குதல்.	உள்நாட்டு மற்றும் சர்வதேச மட்டத்திலான விஞ்ஞான அறிவு மற்றும் அதனுடன் தொடர்புடைய சேவைகளை நிகழ்நிலை ஊடாக பரப்புவதற்கான மையமாக தேசிய விஞ்ஞான நூலகம் மற்றும் வள மையத்தை (NSLRC) வலுப்படுத்துதல். தேசிய விஞ்ஞான மன்ற இதழ் மற்றும் இலங்கை சமூக விஞ்ஞான இதழ்களை வெளியிடல் மற்றும் சமூக விஞ்ஞான மேற்கோள் குறியீட்டில் தாக்க காரணி 1.2 ஆகும்.மற்றும் இலங்கை சமூக விஞ்ஞான இதழானது ஒரு குறியீட்டு இதழாக அங்கீகரிக்கப்படல்.

4.விஞ்ஞான கல்வியறிவை மேம்படுத்துவதற்கும் விஞ்ஞான கல்வியை ஊக்குவிப்பதற்கும் பாடசாலை சமூகம் மற்றும் பொதுமக்களிடையே விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் புத்தாக்கம் பற்றிய தகவல்களினை பிரபலப்படுத்துவதில் முன்னணியில் இருத்தல்.	"அனைவருக்கும் விஞ்ஞானம்" தொடர்பிலான முயற்சிகளை பல்வேறு வழிமுறைகளைப் பயன்படுத்தி தொடர்ந்து செயல்படுத்துதல். STEAM அணுகுமுறையுடன் விஞ்ஞான கல்வியை தொடர்ந்து ஊக்குவித்து வலுப்படுத்துதல்.	குடிமை விஞ்ஞான கல்வியறிவை அதிகரித்தல் மற்றும் அடுத்த தலைமுறையினரை STEAM கல்வியில் சிறந்தவர்களாக்க உருவாக்க உதவுதல்.
5.உலகளாவிய கூட்டாண்மைகளை ஊக்குவிப்பதிலும், விஞ்ஞான, தொழில்நுட்ப மற்றும் புத்தாக்கம் மேம்பாட்டிற்கான வெளிநாட்டு நிதியைப் பயன்படுத்துவதிலும் முக்கிய நுழைவாயிலாக இருத்தல்.	திறன் மேம்பாடு மற்றும் அதிநவீன கூட்டு ஆராய்ச்சிக்காக பெறப்படும் வெளிநாட்டு நிதியை அதிகரிப்பதற்கான முயற்சிகளினை மேம்படுத்தல். தேசிய விஞ்ஞான மன்றத்தினால் வசதியளிக்கப்படும் கூட்டாண்மைகள் மூலம் இலங்கையிலிருந்து உலகளவில் ஈடுபடும் விஞ்ஞான, தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்க ஆளணியினரின் எண்ணிக்கையை அதிகரித்தல்.	அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கங்களின் உயர் முன்னேற்றத்திற்காக தாக்கத்தை ஏற்படுத்தும், பயனுள்ள உலகளாவிய கூட்டாண்மைகளை அதிகரித்தல்.
6. விஞ்ஞானம் சார்ந்த, மக்களை மையமாகக் கொண்ட கற்றல் அமைப்பின் நிலைமைகளைப் பூர்த்தி செய்ய, நன்கு தேர்ச்சி பெற்ற, திறமையான மற்றும் திருப்திகரமான ஊழியர்களைக் கொண்ட ஒரு படைப்பாற்றல் மிக்க குழுவை உருவாக்குதல்	வெளிப்புற ஆளணியினரின் ஆலோசனை உதவியுடன் செயல்பாடுகளைச் செய்வதற்கு விஞ்ஞான ஆளணியினரின் தொழில்நுட்பத் திறனை வளர்த்துக் கொள்ளல். எல்லா நேரங்களிலும் தேவைக்கு ஏற்ப உகந்த பயிற்சிகளினை வழங்கி அவர்களினை மேம்படுத்துவதன் மூலம் வர்களினை திறமையானவர்களாகவும், திறன் மிக்கவர்களாகவும் பொறுப்புணர்வுள்ளவர்களாகவும, அதிகாரம் பெற்றவர்களாகவும், ஊக்கமளிப்பவர்களாகவும், திருப்தி அடைந்தவர்களாகவும் ஆக்குதல்.	சமூக தொடர்பு நடவடிக்கைகள் மூலம் சமூக மூலதனத்தை மேம்படுத்துதல், நல்லுறவை அடைதல் மற்றும் அனைத்து ஊழியர்களிடையேயும் ஒற்றுமையை ஊக்குவித்தல். 98% க்கும் மேற்பட்ட பணியாளர் பதவிகளை எப்போதும் வகிக்க தகுதியான பணியாளர்களை ஈர்த்து தக்கவைத்தல்

நிதியியல் மீளாய்வு

முந்தைய 10 ஆண்டுகளின் நிதிச் சிறப்பம்சங்கள் (2013-2022)

